

# புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

# புரட்சிக் கவிஞர்
# பாவேந்தர் பாரதிதாசன்


டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
தமிழ்ப்பேராசிரியர் - தமிழ்மொழித் துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005



விற்பனை உரிமை :
பாரி நிலையம்
184, பிராட்வே, சென்னை - 600108

முதற் பதிப்பு: டிசம்பர், 1986.
நறுமலர்ப் பதிப்பக வெளியீடு.
விலை ரூ. 23-00

ஆசிரியரின் பிற நூல்கள் :

தமிழ் இலக்கிய வரலாறு
உருவும் திருவும்
கட்டுரை வளம்
காரும் தேரும்
வாழையடி வாழை
முருகன் காட்சி
மனோன்மணீயம் (பதிப்பு)
இலக்கிய அணிகள்
பெருந்தகை மு. வ.
மலர் காட்டும் வாழ்க்கை
இலக்கியக் காட்சிகள்
சான்றோர் தமிழ்
நெஞ்சின் நினைவுகள்
நல்லோர் நல்லுரை
சங்க கால மகளிர்
ஆண்டாள்
கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்
சேரநாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள்
The Status of Women in Tamilnadu during the Sangam Age
A Study of the Literature of the cera Country
Papers in Tamil Literature

அச்சிட்டோர் : கற்பகம் அச்சகம், சென்னை - 600 002.

# முன்னுரை

இந்த நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞராய், புரட்சிக் கவிஞராய், பாவேந்தராய்ப் பாரதிக்குப்பின் வாழ்ந்த கவிஞர்களுள் தகுதியும் சிறப்பும் மிக்கவராய்த் துலங்குபவர் புதுவைப் புரட்சிக்குயில் பாரதிதாசன் ஆவர். ''நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா'' என்று பாரதியாரைப் பாரதிதாசன் குறிப்பிட்டிருப்பது அவருக்கும் பொருந்தும். தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள், ''எனக்குக் குயிலின் பாடலும், மயிலின் ஆடலும், வண்டின் யாழும், அருவியின் முழவும் இனிக்கும்; பாரதிதாசன் பாட்டும் இனிக்கும்'' என்று குறிப்பிட்டுள்ளார். ''காட்டாற்று வெள்ளத்தின் வேகம் கொண்ட கவிதைகளால் பாவேந்தர் புரட்சி செய்தார்...கீழே அடித்தவுடன் மேலெழும்பும் பந்தென் றிட்டால் அது புரட்சிக் கவிஞருக்கே பொருந்தும்'' என்பர் உவமைக் கவிஞர் சுரதா.

> இலக்கியத்துக் கனிசெய்தாய், இசைக் கலையின்
> வளம் மிகுத்தாய்; நிறைந்தமூடப்
> பழக்கத்தை வேர றுத்தாய்; பைந்தமிழைப்
> புதுப்பித்தாய்; ஒடிந்த நெஞ்சும்
> கிளர்ச்சிபெற முரசொலித்தாய்; உரிமை எனக்
> கிளர்ந்தெழுந்தாய்; தமிழர் எங்கள்
> உளத்தினிலே குடிகொண்டாய், வாழிபுகழ்க்
> குன் றினுச்சி உலவு நீயே''

என்று கவிஞர் குலோத்துங்கன்—இன்றைய அண்ணா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் குறிப்பிடுவர்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் நாற்பதுக்கும் மேற்பட்ட நல்ல நூல்களைத் தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தந்து சென்றுள்ளார். அவருடைய 'அழகின் சிரிப்பு', 'குடும்ப விளக்கு', 'தமிழியக்கம்', 'பாரதிதாசன் கவிதைகள் I', 'எதிர்பாராத முத்தம்', 'அமைதி' ஆகிய நூல்கள் காலங் கடந்தும் வாழும் திறஞ் சான்றனவாகும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழக அரசு பாரதிதாசன் நினைவைப் போற்றும் வகையில் ஓர் அறக் கட்டளையினை நிறுவியுள்ளது. பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளையின் கீழ் 1984 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் தலைமையின் கீழ்ச் சொற்பொழிவு ஆற்றினேன்.

முதல் நாள், ''பாரதிதாசன் பாடல்களில் இயற்கை'' என்ற தலைப்பிலும், இரண்டாம் நாள், ''பாரதிதாசன் பாடல்களில் இலக்கியம்'' என்ற தலைப்பிலும், மூன்றாம் நாள், ''பாரதிதாசன் பாடல்களில் இயக்கம்'' என்ற தலைப்பிலும் மூன்று நாள்கள் தொடர்ந்து சொற் பொழிவுகள் ஆற்றினேன்.

பாரதிதாசன் அவர்கள் சென்னையில் வாழ்ந்து கொண்டிருந்த அவர்தம் இறுதிக் காலத்தில் அவரோடு நெருங்கிய தொடர்பு கொள்ளும் வாய்ப்பு வாய்த்தது. 'உலகத் தமிழ்க் கவிஞர் மன்றம்' என்று அவர்தம் வீட்டில் அவர்தம் முயற்சியால் தொடங்கப்பெற்ற அவ்வமைப் பின் பொருளாளராய் இருந்து தொண்டாற்றினேன். அப்பொழுதெல்லாம் அவர்தம் பெருமித உணர்வினையும் கவிதைப் பெருக்கினையும், தமிழுணர்வினையும், இன மானக் கிளர்ச்சி உள்ளத்தினையும் அறிய முடிந்தது. அவருடைய நூல்களையெல்லாம் பன்முறை படித்துத் துய்த்திருந்த பாங்கு, அறக்கட்டளைச் சொற்பொழிவினை நிகழ்த்துதற்கு உதவியது.

மேலை நாட்டு இயற்கைக் கவிஞர் வேர்ட்ஸ் வொர்த் என்னும் கவிஞர்பெருமகனைப் போல, 'அழகின் சிரிப்பு' என்னும் நூலில் இயற்கை வழங்கும் இன்பக் காட்சிகளைக்

கவிதைகளில் வடித்த திறம் வியத்தற்குரியது. காலை யிளம் பருதியிலும், கடற்பரப்பிலும், ஒளிப்புனலிலும், சோலையிலும், மலர்களிலும், தளிர்களிலும், மாலையில் மறையும் மாணிக்கச் சுடரிலும், ஆலஞ்சாலையிற் கிளை தோறும் வீற்றிருக்கும் கிளிகளிலும் அழகென்பாள் கவிஞருக்குக் கவிதை தந்ததாகக் குறிப்பிட்டிருப்பது இயற்கையில் ஈடுபாடு கொண்ட சங்க காலத் தமிழர் மரபின் தொடர்ச்சியே யன்றோ! எனவே, புரட்சிக் கவிஞர் இயற்கையில் தோய்ந்து நின்று அதன் வெளிப் பாடாய் வெளிவந்திருக்கும் 'இயற்கை' பற்றிய செய்தி களையெல்லாம் முதல் நாட் சொற்பொழிவில் தொகுத் துரைத்தேன்.

சிறந்த சொற்களைச் சிறந்த இடங்களிற் பயன்படுத்திச் சிறந்த இடங்களில் அடுக்கி அமைத்த நிலையில் சிறந்த கவிதை உருவாகின்றது. பாரதிதாசன் பாடல் உயிரோவிய மாய் உயர்ந்த இலக்கியமாகத் துலங்குகின்றது. மேலும் இலக்கியம் வாழ்விற்குப் பயன்படவேண்டும். ஓர் உயர்ந்த உட்கோள் கொண்டு கவிதையை வடிப்பது புரட்சிக் கவிஞரின் வாடிக்கையாகும்.

''வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரிகுவதா?
மகராசர்கள் உலகாளும் நிலையாம் எனும் நினைவா?
கொலைவாளினை எடடா, மிகு கொடியோர் செயலறவே!
குகைவாழ் ஒரு புலியே! உயர்குண மேவிய தமிழா!
இலையே உணவிலையே, கதிஇலையே, எனும் எளிமை
இனிமேலிலை, எனவேமுர சறைவாய்''

என்று புரட்சிக் கவிஞர், இலக்கியம் கற்பது வாழ்க்கைப் பயன்பாட்டிற்காக என நிறுவுவதனைக் காணலாம்.

மூன்றாம் நாள் சொற்பொழிவில் 'இயக்கம்' என்ற தலைப்பில் யான் ஆற்றிய சொற்பொழிவில் பாரதிதாசன் அவர்களைப் புரட்சிக் கவிஞராகப் படம்பிடித்துக் காட்டி யுள்ளேன். புரட்சிக் கவிஞர் என்றவுடனே அவருடைய தமிழ்ப்பற்றும், இனப்பற்றும், தன்மானவுணர்வும்,

சீர்திருத்த நோக்கும் விளக்கமுறும். "திங்களொடும் செழும்பருதி தன்னோடும், விண்ணோடும் உடுக்களோடும் மங்குல் கடல் இவற்றோடும் பிறந்தது தமிழ்" என்றும், அந்தத் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர் தமிழர் என்றும் குறிப்பிட்டுள்ளார். திங்கள் போலும், ஞாயிறு போலும், கடல் போலும் மிகப் பழமையுடையவை தமிழும் தமிழினமும் என்று குறிப்பிடும் பாரதிதாசன் அவர்களின் புதுமை நோக்கைக் காணலாம். "முழுமை நிலா அழகு நிலா முளைத்தது விண்மேலே, அது பழமையிலே புது நினைவு பாய்ந்தெழுந்தாற் போலே" என்று பாரதிதாசன் அவர்களே பிறிதோர் பாடலில் குறிப்பிட்டிருப்பது அவர்தம் புதுமை நோக்கினைப் புலப்படுத்தும்.

"காதல் ததும்பும் கண்ணாளன்தனை, கோதை ஒருத்தி கொச்சைத் தமிழால் புகழ்ந்தாள் என்று பொறாமல் சோர்ந்து வீழ்ந்தான்" எனும் பாடலடிகள் அவர்தம் தமிழ்ப் பற்றினை விளக்கும்.

" இழந்த பழம்புகழ் மீளவேண்டும் நாட்டில்
எல்லோரும் தமிழர்களாய் வாழவேண்டும்
வழிந்தொழுகும் அவைத்தமிழே பெருகவேண்டும்
மாற்றலர்கள் ஏமாற்றம் தொலையவேண்டும்
விழுந்த தமிழ்நாடு தலைதூக்க என்றன்
உயிர்தனையே வேண்டினும் தருவேன்"

என்று பாவேந்தர் பாடியிருப்பது உன்னி உணரத்தக்கது.

பெண்ணுரிமை பாடிய பெருங்கவிஞர் பாரதிதாசன் ஆவர். "பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே" என்று பெண்ணுரிமை பாடி, "கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால் மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர் கடுகாம்" என்று காதலின் சிறப்புரைத்து, "கோட்டைப் பவுன் உருக்கிச் செய்த குத்து விளக்கினைப் போன்ற குழந்தைகள்" என்று குழந்தை நலம் கூறி, "எனை மணந்தார் இறந்தார், என் குற்றமல்ல, இறந்தவுடன்

மங்கல நாண், நல்லாடைகள், புனைமலர், குங்குமம், அணிகள் போனதுண்டு. பெண்ணுடலும் இன்னுயிரும் போனதுண்டோ?... வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள் மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ? பாடாத தேனீக்கள், உலவாத் தென்றல், பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ?'' என்று கைம்மைத் துயரைக் குறிப்பிட்டு, ''இருட்டறையில் உள்ளதடா உலகம்—சாதி இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே'' என்று சாதிக் கொடுமையைச் சாடி, ''ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர் உதையப்பராகிவிட்டால் ஓர் நொடிக்குள் ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ'' என்று பொதுவுடைமைத் தத்துவத்தினை விளக்கி, ''புதியதோர் உலகம் செய்வோம், கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்'' என்று புத்துலகம் காண விழைந்த அவாவினையும் புலப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களைப் பற்றிய எண்ணங்களை இந்நூலில் விரித்துள்ளேன். நூலிற்கு இசைவு வழங்கிய துணைவேந்தர் பேராசிரியர் டாக்டர் பொ. பா. சுந்தரேசன் அவர்கட்கும் பேர்சால் ஆட்சிக் குழுவினர்க்கும் நன்றி. தமிழுலகு ஏற்று எனக்கு ஊக்கம் நல்குவதாக!

— சி. பா.

24-12-1986.

# உள்ளுறை


1. பாரதிதாசன் பாடல்களில் இயற்கை ... 33
2. பாரதிதாசன் பாடல்களில் இலக்கியம் ... 95
3. பாரதிதாசன் பாடல்களில் இயக்கம் ... 193

# புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன்

## முன்னுரை

பாரதம் அந்நியர் ஆட்சியால் அல்லலுற்ற நேரம் அது. பல தலைவர்கள் தாய்த் திருநாட்டின் அடிமைத்தளையை அகற்ற அயராது பாடுபட்டுக் கொண்டிருந்த நேரமும் கூட. பாவலர்களும் நாவலர்களும் ஆர்வலராய் உழைத்த காலமும் கூட. கார்கால மேகத்தில் குளிர்நிலா மறைந்ததைப் போன்று, அமரர் பாரதியார் புதுவை நகரில் உறைந்து அந்நியர் ஆட்சிக்கு எதிராகக் கந்தகக் கவிதைகளை எழுதித் தள்ளினார். தமிழகத்தின் தலைசிறந்த கவிக்கோமானாய் வாழ்ந்திருக்க வேண்டிய அவரை ஆங்கிலேயர் ஆட்சி புதுவையில் சில காலம் தங்கச் செய்தது. அவ்வாறு அவர் புதுவையிலே வாழ்ந்திருந்த காலத்தில் தமிழின் பேரேட்டில் புதிய வரவொன்று பதிந்தது. அவ்வரவு புரட்சிப் புயலாய், பூகம்பமாய், புது வெள்ளமாய்ப் பின்னாளில் உருமாற்றம் பெற்றது.

பாரதியார் புதுச்சேரியிலிருந்த இலக்கிய அன்பர் வேணு (வல்லூறு) நாயகர் வீட்டுத் திருமணத்திற்குச் சென்றிருந்தார். திருமண விருந்து முடிந்து அனைவரும் மகிழ்ச்சியோடு உட்கார்ந்திருந்தார்கள். அப்பொழுது ஒருவர், அங்கிருந்த பதினெட்டு வயது இளைஞரைப் பார்த்துப்

பாடும்படி வேண்டினார். அந்த இளைஞர் ஒரு புலவர். புலவர் தேர்வில் மாநில முதன்மை பெற்றுத் தமிழறிவால் தம் புகழ் நிறுவிக் கொண்டவர். கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் உணர்ச்சிக்கு உயிரூட்டிக் கவிதை பாடக் கூடியவர். பாரதியார் பாடல்களில் நெஞ்சைப் பறி கொடுத்தவர். அவற்றை இசையோடு பாட வல்லவர். ஆனால் பாரதியாரைப் பார்த்ததில்லை. அவர் திருமண வீட்டிற்கு வந்திருப்பதும் இளம் புலவர் அறியார்.

கேட்டவுடன் இன்பம் சேர்க்க இளைஞர் பாடினார். அவர் தேமதுரத் தமிழில் இசைத்தவை பாரதியாரின் பாடல்கள். அந்த இசையமுதைக் கேட்டு அங்கிருந்தவர்கள் கிறுகிறுத்துப் போனார்கள். மகாகவியும் பண்ணாக வடிவெடுத்த தமது பாட்டால் மகிழ்ந்தார். அதை விடவும் பாட்டே தாமாகி, பாடும் பொருளாகி, உணர்வின் வெளிப் பாடாகிப் பாடிய இளைஞரைக் கண்டு வியந்தார்.

இசை விருந்து முடிந்தவுடன் பாரதியாருக்கு அந்த இளம் புலவரைக் 'கனக சுப்புரத்தினம்' என்று அறிமுகப் படுத்தினார்கள். அங்கு இரண்டு கவி உள்ளங்கள் கலந்தன. புதிய உறவு—குரு—சீடர் என்ற தொடர்பு தொடங்கியது.

கனக சுப்புரத்தினம், பாரதியார் 'பாடு' என்று கூறிட, பலர் வியந்து போற்றப் பின்வரும் பாடலைப் பாடினார்:

எங்கெங்குக் காணினும் சக்தியடா—தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா—அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியண்டம்—அந்தத்
தாயின் கைப் பந்தென ஓடுமடா—ஒரு
கங்குலில் ஏழு முகிலினமும்—வந்து
கர்ச்சனை செய்வது கண்டதுண்டோ?—எனில்
மங்கை நகைத்த ஒலியெனலாம்—அவள்
மந்த நகையங்கு மின்னுதடா.

காளை ஒருவன் கவிச்சுவையைக்—கரை
காண நினைத்த முழுநினைப்பில்—அன்னை
தோளசைத் தங்கு நடம்புரிவாள்—அவன்
தொல்லறிவாளர் திறம் பெறுவான்—ஒரு
வாளைச் சுழற்றும் விசையினிலே—இந்த
வைய முழுதும் துண்டு செய்வேன்—என
நீள இடையின்றி நீ நினைத்தால்—அம்மை
நேர் படுவாள் உன்றன் தோளினிலே.

பாடலைக் கேட்டவர்கள் திகைப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார்கள். பாரதியின் பாடலில் மூழ்கித் திளைத்த அப்பெருமக்களுக்கு அவர் பாணியிலே அமைந்த இப்புதிய பாடல் பேருவகை அளித்ததில் வியப்பில்லை.

பாரதியாருக்கு மிகுந்த உற்சாகம். பாடலைப் படி எடுக்கச் செய்து "சுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக சுப்புரத்தினம் எழுதியது" என்ற குறிப்புடன் சுதேசமித்திரன் இதழுக்கு அனுப்பி வைத்தார். பாரதியார் அன்று தொடங்கிய புதிய தமிழ்க் கவிதைப் பண்ணையின் ஓர் உழவராக, சுப்பிரமணிய பாரதியின் அணியிலே சேர்ந்தார் சுப்புரத்தினம். கனக சுப்புரத்தினம் என்ற அவரது இயற்பெயர் மாறி, பாரதிதாசன் என்னும் புனைபெயரே நாளடைவில் அவருடைய பெயராக நிலைபெற்றது.

ஆங்கில அரசின் சிறைப்படுத்த எண்ணிய கைகளிலிருந்து தப்பிப் புதுச்சேரியில் குடியேறி வாழ்ந்த பாரதியார் அடைந்த இன்னல்கள் ஏராளம். பாரதியார் அடைந்த இடுக்கண்களின் பயனாகத் தமிழ் உலகிற்குப் பாரதிதாசன் அறிமுகம் கிடைத்தது.

"கேட்டினும் உண்டோர் உறுதி"[1] என்பது திருக்குறள். "தேசியக்கவி பாரதியார் புதுவை சென்று தங்கியிருந்ததே பாரதிதாசனை வெளிக்கொணர்வதற்குரிய வாய்ப்பை

நல்கியது. மற்றொரு வகையாகக் கூற வேண்டுமானால் பாரதியால் பாரதிதாசனும், பாரதிதாசனால் பாரதியாரும் பயன் அடைந்தனர் என்றே சொல்லலாம்''[2] என்று பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் கூறுவதும் இங்கு நினைவுகூரத்தக்கது.

பாரதியாரால் இனங்கண்டு கொள்ளப்பட்ட கனகசுப்பு ரத்தினம் பாரதிதாசனாக மாறினார். புரட்சிக் கருத்து களைப் புதிய தமிழில் பாடியதால் புரட்சிக் கவிஞர் என்றும், பாவேந்தர் என்றும் அழைக்கப்பட்டுத் தமிழ் நெஞ்சங்களில் எல்லாம் குடிபெயர்ந்தார்.

பாவேந்தர் பாரதிதாசனின் பாடல்களில் இயற்கை, இலக்கியம், இயக்கம் என்று அமைந்துள்ள ஆய்வுரைகளின் முன்னுரையாகப் பாவேந்தரின் வாழ்க்கை வரலாறு, அவரைப் பற்றிய பாராட்டுரைகள் முதலிய துணைத் தலைப்புகளின் தொகுதியே இப்பகுதி.

### வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

மகாகவி பாரதியாருக்கு எட்டாண்டுகள் பின்னால் பிறந்தவர் பாரதிதாசன். பாரதியாருக்குப் பிறகு 43 ஆண்டுகள் வாழ்ந்து தமிழ்த் தொண்டால் தன்னிகரற்று விளங்கியவர் பாவேந்தர் பாரதிதாசன். தமிழியக்கத்திற்குப் பாரதியார் வித்திட்டார்; பாரதிதாசன் தாமே தமிழியக்க மாக மாறி, தமிழரின் வாழ்வும் வளமும் தமிழில் இருப்பதை உணர்த்தி, தமிழினத்தை எழுப்பி, இணைத்து வெற்றிக் கொடி நாட்டினார்.

### பிறப்பு

பாவேந்தர் பாரதிதாசன் 1891ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 29ஆம் நாள் புதன்கிழமை இரவு 10-15 மணிக்குப் புதுச்சேரியில் பிறந்தார். இவரது பெற்றோர் கனகசபை முதலியார் — இலக்குமி அம்மையார் ஆவர். இவரது

தந்தையார் முதலில் கடல்மூலம் வாணிபமும், பின் பலசரக்குக் கடையும் வைத்து நடத்திய சமயப்பற்று உடையவர். இவருடைய பெற்றோர்கள் இவருக்கு இட்டு அழைத்த பெயர் சுப்புரத்தினம். இவரது குருவின் பெயர் சுப்பிரமணிய பாரதியார். சுப்பிரமணியத்தின் ரத்தினம் என்று குறிப்பால் உணர்த்துவது போல இயல்பாகவே பெயர் அமைந்தது நினைவிற்குரியது.

**கல்வி**

பாவேந்தர் பாரதிதாசன் முறைப்படி தமிழ் கற்றவர். அவருக்குத் தொடக்கக் கல்வி அளித்தவர் திருப்புளிச்சாமி அய்யா என்பவர். அவர் பாரதிதாசன் உள்ளத்தில் தமிழ்க்காதல் அரும்பச் செய்தார். அவர் தமிழை இலக்கண இலக்கிய அடிப்படையில் முதலில் முதுபெரும் புலவர் பு.அ. பெரியசாமியிடமும், பின்னர்ப் பெரும்புலவர் பங்காரு பத்தரிடமும் ஆழ்ந்தும் அகன்றும் கற்றுக் கொண்டார். "என் தமிழ்ப் புலமையில் எனக்கு எப்போதும் நம்பிக்கையும் உறுதியும் உண்டு. எனக்குத் தமிழ் பயிற்றிய மூன்று ஆசிரியர்களும் பெரும்புலமை பெற்றவர்கள்" என்று பாரதிதாசனே குறிப்பிட்டுள்ளார்.

பாவேந்தர் புலவர் தேர்வில் புதுவை மாநிலத்தில் முதல் மாணவராகத் தேறினார். அப்பொழுது அவருக்கு 17 வயதுதான். அவர் இலக்கண இலக்கியத்தில் ஆழ்ந்த புலமை பெற்றிருந்ததால் பாரதியாருக்கு இலக்கணத் தெளிவைக் கொடுக்குமளவிற்குச் சிறந்து விளங்கினார்.

"பாரதிதாசனார் தமிழ் இலக்கியத்தில் பாரதியாரை விட ஆழ்ந்து பயின்றிருக்கின்றார். இவ்வாறு சொல்வதால் பாரதிக்குத் தமிழ் இலக்கியப் பயிற்சி இல்லையோ என்று எவரும் ஐயுறவேண்டா. கம்பன், வள்ளுவன் ஆகிய இருவரிலும் பாரதி ஈடுபட்டது போல் சங்கப் பாடல்களில் ஈடுபட்டிருந்ததாகத் தெரியவில்லை. அதற்குரிய வாய்ப்பு

களும் அவர்க்கில்லை. இதன் எதிராக வடநாட்டில் சென்று வடமொழியையும் வேறு உபநிடதங்களையும் கற்று அவற்றுள் மூழ்கும்படியான வாய்ப்புப் பாரதிக்குக் கிடைத்தது. பாரதிதாசனுக்கோ புதுவையை விட்டு வெளிச்செல்ல வாய்ப்பு ஏற்படாமையின், தமிழ் இலக்கியச் சுனையில் ஆழ்ந்து மூழ்கித் திளைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இருவருடைய வாழ்க்கையிலும் நிகழ்ந்த இந்த நிகழ்ச்சி இருவரையும் திசை திருப்பி நேர் எதிர் எதிரான பாதைகளில் செலுத்திவிட்டது'' என்று அ.ச. ஞானசம்பந்தன் கூறுகிறார்.[3]

இளமையிலேயே பாரதிதாசன் தமது தகுதியாலும் தனித் திறமைகளாலும் புதுச்சேரி மக்களுக்கு அறிமுக மாகிவிட்டார். அவரது குரல் இனிமையானது. இசை யோடு அவர் பாடவல்லவராதலால் பள்ளி நாடகங்களில் நெஞ்சங்களை அள்ளும்படி நடித்தார். ஆறாம் வயதிலேயே பாடல் புனையும் ஆற்றல் பெற்ற அவர் அவ்வப்போது எழுதிய கவிதைகளின் மூலம் புதுவை இலக்கிய வட்டாரத் தில் தமது முத்திரையைப் பதித்துக் கொண்டார். பின்னாளில் அவர் இசைப்பாடல்கள் எழுத இந்த இளமை வாழ்க்கை அடித்தளம் அமைத்தது.

### 'தராசின்' வாழ்த்து

பாவேந்தரின் வாழ்க்கை தென்றலாய்த் தொடங்கிப் புயலாய்ப் பரவியது. 1908-ல் பாரதியாரைக் கண்டு பழகியது அவரது வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது. பாரதியாரின் இலக்கியத் 'தராசு' சுப்புரத்தினத்தைப் பற்றி, ''இன்று நமது கடைக்கு ஒரு தமிழ்க்கவிராயர் வந்தார்; கைக்கோள ஜாதி; ஒட்டக்கூத்தப் புலவர் கூட அந்தக் குலத்தானென்று நினைக்கிறேன்'' என்று தொடங்கி, ''நல்ல தொண்டை'' என்று கூறுவதும், ''புலவரே, தமிழ் யாரிடம் படித்தீர்?'' என்று வினவுவதும்,

இறுதியில் ‘‘எழுக! நீ புலவன்’’ என்று வாழ்த்துவதும்‘ பாவேந்தர் தமது இலக்கியப் பணிகளைத் தொடங்கும் முன்பே அதற்குத் தகுதி பெற்றிருந்ததை உணர்த்து கின்றன.

## கல்விப்பணியும் கவிதைப்பணியும்

பாவேந்தர் 1904-ல் காரைக்காலைச் சார்ந்த நிரவியில் ஆசிரியர் பணி ஏற்றார். ஒரு பக்கம் பள்ளி ஆசிரியர் பணியும், மறுபக்கம் நாட்டுத் தொண்டும் தொடர்ந்தன.

அவருக்குப் புதுவையில் வந்து தங்கியிருந்த விடுதலை வீரர்களான வ.வே.சு. ஐயர். டாக்டர் வரதராசலு, அரவிந்தர் போன்றோருடன் பழகுகின்ற வாய்ப்புக் கிட்டியது. அவர்களுக்கு இயன்ற அளவு உதவினார்.

23-1-1916-ல் பாவேந்தரின் தந்தை மறைந்தார். கவிஞருக்குக் குடும்பப் பொறுப்பு ஏறியது. ஆனால் அவரது பொதுப் பணிகளும் எழுத்துப் பணிகளும் தொடர்ந்து நடைபெறலாயின.

1919-ல் அவர் திருபுவனையில் ஆசிரியராகப் பணி யாற்றிக் கொண்டிருந்த வேளையில் பிரெஞ்சு அரசுக்கு எதிராக அவர் செயல்படுவதாகக் குற்றஞ்சாட்டி அரசு அவரை 1½ ஆண்டு சிறைப்படுத்தியது. ஆனால் குற்றம் உறுதிப்படா நிலையில் விடுதலை செய்தது. பாவேந்தர் இழந்த வேலையை மீண்டும் பெற்றார். 1920-ல் பாவேந்தர் புவனகிரி பெருமாத்தூர் பரதேசியார் மகள் பழனியம்மை யைத் திருமணம் செய்து கொண்டார்.

கவிஞன், காலத்தின் குழந்தையாகின்றான். அவனே புதிய காலத்தைப் படைப்பாலும் பணியாலும் உருவாக்கு கின்றபொழுது மகா கவிஞனாகின்றான். இதனைப் பாவேந்தரின் வாழ்க்கை உறுதிப்படுத்துகின்றது. அவர் கவிஞராக இருந்த காலத்தில் அக்காலத் தேவைகளாக

வளர்ந்த தேசபக்தியிலும் தெய்வ பக்தியிலும் தோய்ந்தார். அவற்றின் இதய ஒலிகளாகப் பாடல்களை இயற்றினார். பின்னால் மகாகவியாக வளர்ந்த நிலையில் காலத்தின் தேவையால் புதுமைகளைப் படைத்து அளித்தார்.

பாவேந்தரிடம் இருந்த இறை பக்தியின் வெளிப்பாடே அவரது ''ஸ்ரீமயிலம் சுப்பிரமணியர் துதியமுது''. இந்நூல் 1926-ல் எழுதப்பட்டது. இந்நூலில் உள்ள 'கீர்த்தனங்கள்' கீர்த்தனாசிரியர்கட்கும் வழிகாட்டும் சிறப்புடையன. கவிஞரின் சிந்து பாடும் திறனுக்கு இஃதோர் அருமையான சான்று.

பாவேந்தரின், 'சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்', 'தொண்டர் நடைப்பாட்டு', 'கதர் இராட்டினப் பாட்டு' ஆகிய சிறுசிறு நூல்கள் அவரது தேசபக்தியின் கனிகள். இவை எழுந்த காலம் 1930. கைகளில் கதர் தூக்கித் தெருத் தெருவாக விற்ற காலம் இது பாவேந்தரின் கதர்ப்பாட்டுகளைப் போல இதுவரை யாரும் பாடிய தில்லை.

பாரதிதாசனின் தேசிய, தெய்வப்பாடல்கள் புதுவை, தமிழக ஏடுகளில் வெளிவந்தன. அவர், 'கே.எஸ்.ஆர்', 'கண்டெழுதுவோன்', 'கிறுக்கன்', 'கிண்டல்காரன்', 'கே.எஸ். பாரதிதாசன்' என எழுதிக் குவித்துக் கொண் டிருந்தார். கருத்துகள் நிறைந்து கவிதை பொங்கும் உள்ளம் கொண்ட பாவேந்தரின் பேனா இறுதிவரை இயங்கிக் கொண்டே இருந்தது.

### சுயமரியாதைப் பாதையில்

தேசபக்தியும், தெய்வபக்தியும் நிரம்பிய பாடல்களைப் பாடிக் கொண்டிருந்த பாவேந்தர் வாழ்க்கையில் 1928-ம் ஆண்டில் திருப்புமுனை ஏற்பட்டது. பாரத நாட்டில் விடுதலையைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்த கவிஞர்

தமிழர்களின் தமிழின் விடுதலையைப் பற்றி எண்ணத் தொடங்கினார்.

சேரமாதேவி குருகுலத்தில் வ. வே. சு. அய்யர். பிராமணர்க்குத் தனியாக உணவும், பிராமணரல்லாத மாணவர்க்குத் தனியாக உணவும் வழங்கியதை எதிர்த்து, காங்கிரசில் கிளர்ச்சி செய்த ஈ.வெ. இராமசாமிப் பெரியார், டாக்டர் வரதராசுலு நாயுடு முதலியவர்களது முயற்சிகள், தோல்வியுற்றமையால் அவர்கள் சுயமரியாதை இயக்கமென்று தனித்ததோர் இயக்கம் தொடங்கினர். சாதி சமயப் பூசல்களை அறவே களைவதாக ஆர்ப்பரித்தது சுயமரியாதை இயக்கம். சாதி சமய பேதங்கள் ஒழிந்தால் தான் நாட்டிற்கு நலமென நினைத்த பலரைச் சுயமரியாதை இயக்கம் கவர்ந்தது. இம்மாதிரி கவரப் பட்டவர்களுள் பாவேந்தரும் ஒருவர்.

தந்தை பெரியார் அவர்களின் சுயமரியாதைப் பாதையில் நடக்கலானார் பாவேந்தர். பகுத்தறிவுக்கு ஏற்காதவற்றை அவர் 'குப்பைக் களமென' ஒதுக்கினார். சமயச் சடங்குகளும், கண்மூடிப் பழக்க வழக்கங்களும், கட்டியளந்த புராணக் கதைகளும் அவரின் கண்டனக் கணைகளுக்கு ஆட்பட்டன.

ஈரோட்டுப் பாசறையில் உருவாகி வளர்ந்து கொண்டிருந்த குத்தூசி குருசாமி, மா. சிங்காரவேலர், ப. ஜீவானந்தம், சாமி. சிதம்பரனார் போன்றவர்களிடமும் தமிழறிஞர்களான மயிலை சீனி. வேங்கடசாமி போன்றவர் களுடனும் நெருங்கிப் பழகினார்.

பாவேந்தர் சுயமரியாதை இயக்கத்தில் கொண்ட ஈடுபாட்டைப் போன்றே பொதுவுடைமை இயக்கத்திலும் நாட்டங்கொண்டார். பொதுமைக் கருத்துத் தமிழர் களின் பழம்பெரும் சொத்து. வள்ளுவர் காலத்திற்கு முன்பே தமிழகத்தில் பேசப்பெற்ற கருத்து. இக்கருத்து,

சோவியத்து நாட்டில் செயலாக மலர்ந்தபொழுது பாரதியார் வரவேற்றார். தன்மான வாழ்விற்குப் பொதுமைச் சமுதாய அமைப்பு வேண்டுமென்பதைக் கண்டுகொண்ட பாவேந்தர், 'எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம் நோக்கி நடக்கின்ற திந்த வையம்' என்பதனை உலகிற்கு உணர்த்தத் தனிக் கவிதைகளையும், காவியங்களையும் படைத்துக் கொண்டிருந்தார். இது பற்றிப் 'பாவேந்தர் பாடல்களில் இயக்கம்' என்னும் தலைப்பில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

## தொட்டு மணந்த துறைகள்

மேலை நாட்டிலே, ஜான்சன் என்னும் பேரறிஞரைக் குறிப்பிட்டுக் 'கோல்டு சுமித்து' என்னும் கவிஞர் பேசும் பொழுது 'அவர் தொடாத துறை ஒன்றுமில்லை; தொட்ட துறைகளை அழகுபடுத்தாமல் விட்டதில்லை' என்றோர் அருமையான கருத்தினை வெளியிட்டார். இது போன்று பாரதிதாசனார் கவிதைக்கலை நன்கு கைவரப் பெற்றவர். கலைகளிலே நுண்மையானதொரு கலை கவிதைக் கலையாம். அக்கவிதைக் கலையிலே தன்னேரில்லாத் தமிழ்ப் பெருங்கவிஞராய்ப் பாரதிதாசனார் உலவினார். அவர் எழுதுகோல் கவிதையின் வண்ணத்தினையெல்லாம் கவினுறக் காட்டியது. இயற்கை, காதல், பெண்கள், சமூகம், நாடு, மக்கள், மொழி, இனம், தொழிலாளர் உள்ளிட்ட எல்லாத் துறைகளிலும் அவர் சிந்தனை படர்ந்தது. அவ்வெண்ணத்தின் விளைவாகக் கவிதைப் பூங்காவில் வண்ண வண்ண மலர்கள் நித்த நித்தம் பூத்துக் குலுங்கின''.[5] பாவேந்தர் பத்திரிகைத்துறை, திரைப்படத் துறை போன்றவற்றுடனும் தொடர்பு கொண்டிருந்தார்.

'வ. வே. சு. ஐயர் நடத்திய 'தேசபக்தன்' பத்திரிகையில் கட்டுரைகள் எழுதினார். 'தேச சேவகன்' என்னும் பத்திரிகையை இவரே ஐந்து ஆண்டுகள் நடத்தினார். தொடர்ந்து ஆத்மசக்தி, டூப்ளேக்ஸ்,

தாய்நாடு, புதுவை முரசு முதலிய பத்திரிகைகளையும் நடத்தினார். பிற்காலத்தில் நடத்திய 'குயில்' போன்ற ஒரு கவிதைப் பத்திரிகையைத் தொடக்க நாளிலேயே நடத்தினார். அரசியல் கலவாமல் கலைக்காகவே நடத்தப்பட்ட இதழ் 'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்'. சுத்தானந்தர், தேசிக விநாயகம் போன்றவர் களெல்லாம் அதில் கவிதை எழுதினார்கள். கவிதா மண்டலத்தில் புத்தக மதிப்புரை கூட கவிதையிலேதான் வந்தது'.[6] இப்பொழுது பாவேந்தர் அவர்களின் மகனார் திரு. கோபதி என்னும் மன்னர்மன்னன் அவர்களின் திருமகனார், பாட்டனார் பாவேந்தர் நினைவாகக் 'குயில்' இதழைத் தொடங்கிப் புதுவையிலிருந்து நடத்தி வருகிறார்.

பாவேந்தர் தமிழ்த் திரைப்படத் துறையுடனும் உறவு கொண்டிருந்தார். ''தமிழ்த் திரைப்படத்துறையில் வட மொழியின் பித்து ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது. 1937-ல் பாவேந்தர் நடிப்புச் செல்வர் தி. க. சண்முகம், தி. க. பகவதி நடித்த 'பாலாமணி அல்லது பாக்தாத் திருடன்' திரைப்படத்திற்குக் கதை, உரையாடல், பாடல் எழுதினார். பின்னால் அவரது பல இனிய பாடல்கள் கருத்தழகோடும், சொல்லழகோடும் திரையரங்குகளில் ஒலித்தன. அவரது 'எதிர்பாராத முத்தம்', 'பொன்முடி யாக'ப் படமாகி உலா வந்தது.[7]

''இவரே காளமேகம், வளையாபதி முதலிய படங் களுக்கு வசனமும் பாடல்களும் எழுதி அத்துறையில் உள்ளவர்களுக்கு வழிகாட்டியானார்''.[8] மகாகவி பாரதியார் வாழ்க்கையைப் படமாக்க இறுதிக்காலத்தில் பாவேந்தர் முயற்சிகள் மேற்கொண்டும் பயனில்லை.

### மக்கட் செல்வங்கள்

1920-ல் பழனி அம்மையாரைத் திருமணம் செய்து கொண்ட பாவேந்தர் அவர்களுக்கு 12-9-1921-ல் தலை

மகளாகப் பிறந்த சரசுவதி கவிஞருக்குத் தோன்றாத் துணையாக இருந்து அவரது எழுத்துப் பணிகளில் உதவி செய்தார். இவரே 'குடும்ப விளக்கு' தோன்றக் காரண மாக இருந்தார்.

1928-ல் அவரது மகன் கோபதி என்ற மன்னர் மன்னனும், 1931-ல் இரண்டாம் மகள் வசந்தாவும், 1933-ல் மூன்றாம் மகள் ரமணியும் பிறந்தனர்.

## பாவேந்தர் பரம்பரை

**கனகசுப்புரத்தினம் பழனியம்மாள்**

| மக்கள் | மருமக்கள் | பேரர் | கொள்ளுப் பேரர் |
|---|---|---|---|
| சரசுவதி | கண்ணப்பர் | புகழேந்தி | சுப்புரத்தின பாரதி |
| | | பாரி | பரமநாதன் |
| | | மல்லிகை | |
| | | இளமுருகு | |
| கோபதி | சாவித்திரி | செல்வம் | |
| | | தென்னவன் | |
| | | பாரதி | |
| | | அமுதா | |
| வசந்தா | தண்டபாணி | தமிழ்ச் செல்வம் (பெண்) | அருட் செல்வம் |
| | | பாண்டியன் | புகழ் வடிவு (பெண்) |
| | | சேரன் | வெண்ணிலா (பெண்) |

| மக்கள் | மருமக்கள் | பேரர் | கொள்ளுப் பேரர் |
|---|---|---|---|
| ரமணி | சிவசுப்பிர மணியம் | செங்குட்டுவன்<br>வீரமணி<br>மணிமேகலை<br>முல்லைக்கொடி<br>சுப்புரத்தினம் (பெண்)<br>மணியரசு | |

பாவேந்தரின் பெற்றோர் ; கனகசபை — இலக்குமி
சகோதரர் ; சுப்பராயன்
சகோதரிகள் ; சிவகாமசுந்தரி, இராசாம்பாள்

### பொற்கிழி பெற்றார் புரட்சிக்கவிஞர்

நான்கு மக்களைப் பெற்ற பாவேந்தர் அவர்களை வறுமை விட்டு வைக்கவில்லை. அவருக்கு ஆசிரியப் பணியில் ஊதியம் கிடைத்தாலும் அவரது தாளாண்மைக்கும் செலவினங்களுக்கும் அது போதவில்லை.

புரட்சிக்கவிஞருக்குப் பணமுடிப்பு அளிப்பதென்று அவரது நண்பர்கள் முடிவு செய்து நல்லபாளையம் திரு. என். கிருஷ்ணராசு அவர்கள் தலைமையில் நிதிக்குழு நிறுவப்பட்டு ரூபாய் ஏழாயிரம் வரை நிதி சேர்த்தனர். பெரியார் அவர்கள் இந்நிதிக்கு நூறு ரூபாய் அளித்தார். பின்னர்ச் சென்னையில் இந்நிதிக்குழு விரிவுபடுத்தப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். புதிய நிதிக் குழுவின் முயற்சியால் ரூபாய் 25,000 சேர்க்கப்பட்டது. 28-7-46-ல் நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் சென்னைப் பச்சையப்பன் திடலில் பேரறிஞர் அண்ணா ரூபாய் 25,000 கொண்ட பணமுடிப்பைப் புரட்சிக்

கவிஞருக்கு அளித்தார். இந்நிகழ்ச்சியில் சிலம்புச்செல்வர் ம. பொ. சி., ரா. பி. சேதுப்பிள்ளை, ப ஜீவானந்தம், டாக்டர் மு. வ., கி. வா. ஜ. முதலிய தமிழறிஞர்களும் கலந்து கொண்டனர்.

புரட்சிக் கவிஞருக்குப் பண முடிப்புக் கொடுத்த அன்று அவருக்கும் தமக்கும் நடந்த உரையாடலை அறிஞர் அண்ணா கீழ்வருமாறு கூறுகின்றார்.

''புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு இருபதாண்டுகளுக்கு முன்னாலே பரிசளிப்பு நடத்தி அவரிடத்திலே பணமுடிப்பும் கொடுத்தான பிறகு அந்தப் பணமுடிப்பை எடுத்துக்கொண்டு ஒரு குதிரை வண்டி ஏறி, திருவல்லிக்கேணியில் அவர் தங்கியிருந்த இடத்திற்குப் போய்க் கொண்டிருந்தோம். அந்த நேரத்தில் எனக்கும் பெரியாருக்கும் ஓரளவுக்குச் சிறு மனத்தாங்கல்; அதைப் போலவே பாரதிதாசன் அவர்களுக்கும் பெரியாரிடத்தில் ஓரளவு மனத்தாங்கல் இருந்த நேரம். அந்த இரண்டு சூழ்நிலைக்கிடையில் பாரதிதாசன் வண்டியிலே போய்க் கொண்டிருந்த நேரத்தில் என்னிடம் சொன்னார்: நீ கொடுத்திருக்கிற இந்தப் பணத்தை வைத்துக் கொண்டு நாம் தமிழர்களுக்கென்று ஓர் அரசியல் கட்சி தொடங்கலாம். நீயும் நானும் இருந்து நடத்தலாம் என்று என்னிடத்தில் சொன்னார். நான் அவரிடத்திலே சொன்னேன்: ''ஐயா, அரசியலுக்கு வர வேண்டாம். நீங்கள் கவிதை உலகத்திலே நடமாடுங்கள்; கவிதை உலகத்திலே நீங்கள் நடமாடுகின்ற உயரத்திற்கு எந்த அரசியல்வாதியும் வர முடியாது. அரசியல்வாதியின் மத்தியில் வந்து இருந்துகொண்டு கவிதை எழுதுவது என்றால் அது அரசியல் கவிதையாகத்தான் இருக்கும்; அதற்கு வயது ஆறுமாதம்தான் இருக்கும். ஆகையினால் நீங்கள் இந்த அரசியல் காரியத்தில் ஈடுபட வேண்டும் என்று கருதாமல், நாங்கள் கொடுத்திருக்கின்ற இந்தப் பணத்தை

வைத்துக் கொண்டு இந்தியாவில் உள்ள பெரிய மலைகளுக்கெல்லாம் சென்று வாருங்கள்; நதிகளுக்கு எல்லாம் சென்று வாருங்கள்; பொழில் எல்லாம் கண்டு வாருங்கள்; மக்களை எல்லாம் பார்த்து வாருங்கள்; அவைகளை எல்லாம் பார்த்துப் பார்த்து நீங்கள் பெறுகின்ற நல்ல கருத்துகளைக் கவிதை வடிவத்திலே கொடுங்கள். அதற்குத்தான் இந்த விழா நடந்தது'' என்று நான் சொன்னேன். என்னை அரசியலுக்கு வர வேண்டாம் என்று அண்ணாதுரை தடுத்து விட்டானே என்று அவர் வருத்தப்பட்டார். இந்த அரசியலிலே இருந்துகொண்டு நான் படுகின்ற அல்லலை அவர் பார்த்திருப்பாரானால் அவருக்கு சொன்னதை — அது எவ்வளவு நல்லது என்பதை உணர்ந்திருப்பார்.[9]

### பாவேந்தரின் படைப்புகள்

தொடக்க காலத்தில் பாவேந்தர் தேசிய தெய்வத் தொடர்பான கவிதைகளை இயற்றினார். பகுத்தறிவு இயக்கத்தில் ஈடுபட்ட பின்னர் அவரது பார்வை தமிழ் மொழி, தமிழினம், சமய மறுப்பு, கைம்பெண் மறுமணம், தொழிலாளர் நிலை முதலியவற்றின் மீது சென்றது.

பாரதிதாசன் முதல் கவிதைத் தொகுதி (குஞ்சிதம் குருசாமி வெளியிட்டது) 1938-ல் வெளிவந்தது. பண்டிதர் உலகம், புதிய இலக்கியவாணர் உலகம், சீர்திருத்த உலகம் ஆகிய அனைத்துப் பகுதியினரின் பாராட்டையும் ஒருங்கே பெற்றது. பெரியார் இராமசாமி, வ. ரா., ஆர். கே. சண்முகம், ந. மு. வேங்கடசாமி நாட்டார், கே. சுவாமிநாதன், மறைமலையடிகள், வையாபுரிப்பிள்ளை, அண்ணாதுரை, சாரநாத ஐயர் போன்ற பெருமக்கள் யாவரும் இப்புதிய கவிதைத் தொகுதியைப் பாராட்டி மகிழ்ச்சி தெரிவித்தார்கள். புதிய இலக்கிய உலகில் இக்கவிதைத் தொகுதி ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது.

இதைத் தொடர்ந்து எதிர்பாராத முத்தம், தமிழச்சியின் கத்தி, இசையமுது, பாண்டியன் பரிசு, காதலா? கடமையா? அழகின் சிரிப்பு முதலான கவிதை நூல்கள் வெளிவந்தன. பாவேந்தரின் நூல்களைப் பல பதிப்பகங்கள் வெளியிட்டுள்ளன.

செக் நாட்டு அறிஞர் பேராசிரியர் கமில் சுலபில் செக் மொழியில் பாவேந்தரின் பாடல்களை 1961-ல் மொழி பெயர்த்தார்.

பாவேந்தர் வரலாற்று அடிப்படையில் தம் கற்பனைத் திறம் கொண்டு எழுதியுள்ள 'பிசிராந்தையார்' என்னும் நாடகம் 196 ஆம் ஆண்டுக்கான தில்லி சாகித்திய அகாடமியின் பரிசைப் பெற்றது.

**பாவேந்தரின் மறைவும் நினைவும்**

வாழ்நாள் முழுவதும் உணர்ச்சிப் பிழம்பாய் எரிமலையாய்ப் புரட்சிக் கருத்துகளை வாரி இறைத்த பாவேந்தருக்கு உடல்நலம் குன்றியதால் 19-4.64-ல் சென்னை அரசாங்க மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். 21-4-1964 அன்று அவர் இவ்வுலக வாழ்வை நீத்தார். 22-4-1964-ல் புதுவைக் கடற்கரையில் அடக்கம் செய்யப் பட்டார்.

1965 ஏப்பிரல் 21 அன்று புதுவைக் கடற்கரை சார்ந்த பாப்பம்மா கோயில் இடுகாட்டில் பாரதிதாசனின் நினைவு மண்டபம் புதுவை நகராட்சியினரால் எடுக்கப்பட்டது.

இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது (2-1-1967) சென்னைக் கடற்கரையில் புரட்சிக் கவிஞரின் முழு உருவச் சிலையை முதலமைச்சர் அண்ணா தமிழக அரசின் சார்பில் நிறுவினார்; சிலையை டாக்டர் மு. வ. திறந்து வைத்தார்.

1971 ஏப்பிரல் 29 அன்று புதுவை அரசால் பாவேந்தர் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. பாவேந்தர்

வாழ்ந்த பெருமாள் கோயில்தெரு 95ஆம் எண் இல்லத்தைப் புதுவை அரசு வாங்கிப் புரட்சிக் கவிஞர் நினைவு நூலகமும் காட்சிக் கூடமும் நடைபெற வழி செய்தது. ஒவ்வோராண்டும் புதுவை அரசு பாவேந்தர் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடி வருகிறது.

1972 ஏப்பிரல் 29 அன்று பாவேந்தரின் முழு உருவச் சிலையைப் புதுவை அரசு திறந்து வைத்தது.

**பாவேந்தரின் அடிச்சுவட்டில்**

பண்டிதர்களிடமும் மடங்களிடமும் அடிமைப் பட்டிருந்த தமிழைப் பாமரர்களிடையே கொண்டு வந்தார் பாரதியார். அவரது அடியொற்றித் தோன்றிய பாவேந்தர் சமூக அவலங்களைப் பாடித் தமிழுலகிற்குப் புதிய துறைகளைக் கண்டார். பட்டுக்கோட்டைக் கலியாண சுந்தரம், கண்ணதாசன், கம்பதாசன் ஆகியோர் திரைப் படத்துறையில் பாவேந்தரின் அடிச்சுவட்டைப் பின் பற்றினர்.

"பாரதியார் இன்று நமக்கு வைத்து விட்டுப் போன சொத்துக்கள் பல. அவற்றில் முக்கியமானவற்றைக் குறிப்பிட வேண்டின் ஞானரதம், குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், கனகசுப்புரத்தினம் என்ற பாரதிதாசன் என்று சொல்ல வேண்டும்" என்று வானொலியில் விமரிசனம் செய்தார் புதுமைப்பித்தன்.

பாவேந்தரின் பாட்டுத் தாக்கத்தால் உருப்பெற்று வளர்ந்தவர்களெனக் கவிஞர்கள் கண்ணதாசன், சுரதா, முடியரசன், வாணிதாசன், முருகுசுந்தரம், பட்டுக் கோட்டையார் போன்றவர்களைச் சுட்டலாம்.

15-9-1961-ல் சென்னையில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கட்சியின் முதல் மாநாட்டில் பாவேந்தரின் தலைமையில் பாடிய கவியரங்கில் கவிஞர் கண்ணதாசன்,

தாம் பாவேந்தரைப் பின்பற்றிக் கவிதை எழுதியவர் என்பதை ஒரு பாடலால் குறிப்பிடுகின்றார்:

**ஏடெடுத்துக் கவியெழுத நினைக்கும் போதில்**
**என்னெதிரே நின்னுருவம் ஏறு போன்று]**
**'பாடுதமிழ்' என்றுரைக்கக் கேட்பேன்! அந்தப்**
**பக்தியிலே பண்ணூறு கவிதை யாப்பேன்**
**கூடலிறைப் பாண்டியன் போல் நிமிர்ந்து நிற்கும்**
**குலத்தலைவா! யான்பெற்ற கல்வி கொஞ்சம்**
**நாடெனையும் நோக்கும் வகைநாள் வளர்ந்தேன்**
**யாவுமுனைக் கற்றதனால் பெற்றபேறு.**

இப்பொழுது புதுக்கவிதை எழுதுகின்றவர்களுக்குச் சமூகப் பாடுபொருள்களை அமைத்துக் கொடுத்தவர் பாவேந்தரே என்பது நினைவு கூரத்தக்கது.

## பாரதிதாசன் பல்கலைக் கழகம்

'தகுந்த குடும்பம் சர்வகலாசாலை' என்ற தலைப்பில் பாவேந்தர் அவர்கள் 1936-ல் ஒரு கவிதை இயற்றியுள்ளார். இப் பாடலின் பரிணாமமே 'குடும்பவிளக்கு' என்பர் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன்.

தமிழியக்கப் பல்கலைக்கழகமாக விளங்கிய பாவேந்தர் அவர்களின் நினைவாக ஒரு பல்கலைக்கழகம் நிறுவத் தமிழக அரசு நினைத்தது. அதன்படி திருச்சியில் அமைக்கப் பட்டுள்ள பல்கலைக்கழகத்திற்குப் 'பாரதிதாசன் பல்கலைக் கழகம்' என்று பெயர் சூட்டியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களால் 30-4-1982-ல் தொடங்கப்பட்ட பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கு மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

## அறிஞர் பாராட்டுரைகள்

### மறைமலையடிகள்

"இக்காலத்திற் பல துறைகளிலுஞ் சீர்திருத்தம் வேண்டி நிற்கும் நம் தமிழ் மக்கட்குப் புதுமுறையிற் பாடப் பட்டிருக்கும் பாரதிதாசனின் பாட்டுகள் கிளர்ச்சியினையும் மகிழ்ச்சியினையும் பயந்து, சீர்திருத்தங்கள் பலவற்றிற்கு வழி காட்டும்".[10]

### பெரியார்

"மனித சமுதாயத்தின் ஒற்றுமைக்கும் இன்றியமையாத புரட்சியான பல சீர்திருத்தங்களை ஆதரிப்பது மட்டுமன்றி, அவைகளை ஜனசமூகத்தில் பல வழிகளிலும் பரப்ப வேண்டுமென்ற ஆசையைக் கொண்டவர். சிறப்பாகவும் சுருக்கமாகவும் கூற வேண்டுமானால் பாரதிதாசன் அவர்கள் 'சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற கவி' என்றுதான் கூற வேண்டும்".[11]

### திரு. வி. க.

'கடவுள் பாட்டு, கருணைப் பாட்டு, வெண்மதிப் பாட்டு, ஞாயிறு பாட்டு, திங்கள் பாட்டு, நானிலப் பாட்டு, எல்லாம் பாட்டு — பாட்டே!

எல்லாவற்றையும் பாட்டாக நோக்கும் நெஞ்சில் பாட்டு முகிழ்க்கும். அதனை எழுத்தோவியமாக அமைக்கும் பேறு பலர்க்கு வாய்ப்பதில்லை. தோழர் பாரதிதாசனுக்கு அப்பேறு எளிதில் வாய்த்தது. இது கருவில் பெற்ற திருவேயாகும்.

புதுவைத் தமிழ் வைப்பு கனகசுப்புவினிடத்திருந்து பொங்கி வழிந்த பாமணிகள் பலப்பல. அவற்றுள் கருத்து வேற்றுமை உண்டு. வேற்றுமை என் நெஞ்சைக் கவர்வதில்லை; பாட்டே என் நெஞ்சைக் கவரும். இது சுப்புவின் பாட்டுத்திறம் என்று கூறாது வேறென்ன கூறுவது."[12]

**கவிமணி**

''கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமிழ் நாட்டின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவர்; காலஞ்சென்ற பாரதியாரின் பிரதம சீடராவர்; பாரதியாரின் பாடல்கள் தமிழ் மக்களின் உள்ளத்தில் சுதந்திர உணர்ச்சியை உண்டு பண்ணினது போல ,பாரதிதாசனுடைய பாடல்கள் சமூகச் சீர்திருத்த உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டி வருகின்றன என்றால் மிகையாகாது. இனிய எளிய நடையிலுள்ள இவரது பாக்கள் படிப்போருக்கு இன்பம் பயக்கும் என்பதில் யாதும் ஐயமில்லை. மதங்களிலும் பழைய ஆசாரங்களிலும் ஊறிக்கிடந்த மக்களிடையே இவருடைய பாடல்கள் பெரிய மாற்றத்தை உண்டு பண்ணியிருக்கின்றன. ஆதலால் இவர் ஒரு புரட்சிக்கவி. அமெரிக்கப் புரட்சிக் கவிஞர் வால்ட் விட்மன்; தமிழ்நாட்டுப் புரட்சிக்கவி பாரதிதாசன் இக்கவிஞரைப் பல துறைக்கும் பாராட்ட வேண்டியது தமிழ் மக்களின் முதற்கடமையாகும்''.[13]

**கி. ஆ. பெ. விசுவநாதன்**

''கதைக்காக ஒருமுறை, கவிதைக்காக ஒருமுறை, கருத்திற்காக ஒருமுறை, கொள்கைக்காக ஒருமுறை, உணர்ச்சிக்காக ஒருமுறை, இனிமைக்காக ஒருமுறை, எழிலுக்காக ஒருமுறை படித்தேன். ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு கவிதையும் ஒரு படித்தேனாகவே இனித்தது.''[14]

''பாரதிதாசனின் தோற்றமே தமிழனின் தோற்றம். அவரது வீரம் தமிழனின் வீரம். அவரது உடம்பில் ஓடிய இரத்தமும் தமிழ் இரத்தம். அவரது உணர்ச்சி தமிழுணர்ச்சி.''[15]

''அறிவுக் கோயிலைக் கட்டி அதில் நம்மைக் குடியேற்ற விரும்புகின்ற பேரறிஞர் பாரதிதாசன்'' என்று புதுமைப் பித்தனும், ''பாரதிதாசன் தமிழ்ப் பற்றுக்கு எல்லையில்லை. அவர் தம் பாடல்களைப் படிக்கின்ற அந்நியனும் தமிழனாகி

விடுவான்'' என்று டாக்டர் சிதம்பரநாத செட்டியாரும், ''பாரதிதாசனாருடன் பழகுவதன் மூலம் பாரதியைப் பார்க்கவில்லையே? அவருடன் பழகவில்லையே? என்ற குறை எனக்கு நிவர்த்தியிற்று'' என்று கல்கியும், ''பாரதிதாசன் கவிதையில்வேகம் உண்டு; விடுதலைத் தாகம் உண்டு, பண்பும் உண்டு, பயனும் உண்டு'' என்று திரு. ரா. பி. சேதுப்பிள்ளையும், ''பாரதியார் சொல்லும் வீரத் தமிழ்ச் சொல் இன்பத்தைப் பாரதிதாசனின் பாடல் களில் காணலாம்'' என்று பரலி சு. நெல்லையப்பரும்,

> '' **விடுதலை எல்லாம் கிளர்ச்சியால் வெல்லும்**
> **விடுதலை வேட்கைவெறி கொண்ட வீரன்''**

என்று நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளையும், ''ஆவேசத் தையும் உணர்ச்சியையும் வெள்ளமாகக் கொட்டும் உயிர்க் கவி'' பாரதிதாசன் என்று வ. ரா. வும், ''பாரதிக்குப் பிறகு தமிழ்நாட்டில் ஒரு உண்மையான கவி இருக்கிறார்'' என்று கு.ப.ரா. வும், ''உலகெங்கும் உள்ள நவயுகக் கவிஞர்களிலே பாரதிதாசனும் ஒருவர்'' என்று தி. ஜ ர. வும் குறிப்பதாகத் தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடுவர்.[16]

**பேரறிஞர் அண்ணா**

''முகிலைக் கிழித்து வெளிக்கிளம்பும் ஒரு முழுமதி போலத் தமிழ்நாட்டில் தோழர் பாரதிதாசன் கவிதை தோன்றியுள்ளது. புரட்சிக் கருத்துக்கள் அவரது உள்ளத்தில் பொங்கிப் பூரித்துப் புதுமைக் கவிகளாக வெளி வருகின்றன. இயற்கையின் எழில், கலை நுணுக்கம் முதலியவை பற்றி அவர் இயற்றியுள்ள கவிதைகள் படிப்போரைக் களிப்புக் கடலில் ஆழ்த்தும்.''[17]

**டாக்டர் மு. வ.**

''புரட்சிக் கவிஞர் என்றாலே இந்த நூற்றாண்டிலும் இதற்கு முந்தைய நூற்றாண்டிலும் வேறு யாரையும்

குறிக்காமல் பாரதிதாசன் ஒருவரையே குறிக்குமாறு தமிழிலக்கிய வரலாற்றிலே அவர் சிறப்பிடம் பெற்று விட்டார்.''[18]

**கி. வா. ஜகந்நாதன்**

**கதுவியசீர் திருத்தமெனும் புயல்வ ளர்க்கக்**
**கவிபாடி னானதெள்ளத் தெளிந்த நீர்போல்**
**புதுமைபொலி தருநடையைக் கவியிற் காட்டிப்**
**பொலிவுற்றான் தமிழ்த்தாயின் மகனா நின்றான்.**[19]

**டாக்டர் ந. சஞ்சீவி**

''இன்றைய நிலையில் பாரதியார் தேசிய இயக்கத்தின் பரிசாகவும், பாரதிதாசன் திராவிட இயக்கத்தின் பரிசாகவும் கொள்ளப்படுகின்றனர்.''[20]

**டாக்டர் மா. செல்வராசன்**

''தமிழ் இலக்கிய வரலாற்றில் பாரதிதாசனே முதல் புரட்சிக் கவிஞர். இந்த முடிவே என் முதல்.''[21]

**டி. என். சுகி. சுப்பிரமணியம்**

''முன்னாள் கவிதைத் தமிழுக்கு 'கதி' (கம்பனும் திருவள்ளுவரும்) என்று சிறப்பாகக் கூறியது போன்று இந்நாள் கவிதைத் தமிழுக்குக் கதியானவர் இருவர் பாரதியும் பாரதிதாசனும் என்று துணிந்து கூறலாம்.''[22]

**சாலை இளந்திரையன்**

''எதையும் சரியான நோக்கில் பார்ப்பதும், அதை எவருக்கும் அஞ்சாமல் எடுத்துரைப்பதும் பாரதிதாசனின் இயல்புகள்.''[23]

## அடிக்குறிப்புகள்

1. திருக்குறள், 796.
2. அ. ச. ஞானசம்பந்தன், 'இன்றைய இலக்கியம்', ப. 79.
3. மேற்படி, ப. 79.
4. மகாகவி பாரதியார் 'தராசு' கட்டுரைகள், பக். 39-41.
5. சி. பாலசுப்பிரமணியன், 'வாழையடி வாழை', பக். 65-66.
6. 'சுடர்' பாரதிதாசன் மலர், தில்லித் தமிழ்ச் சங்கம், ப. 26.
7. பாவேந்தர் ஒரு பல்கலைக்கழகம், பாவேந்தர் மன்றம், திருச்செந்தூர், ப. 26.
8. 'சுடர்', பாரதிதாசன் மலர், தில்லித் தமிழ்ச் சங்கம், ப. 27.
9. மா. செல்வராசன், பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர், ப. 51-52.
10. முருகுசுந்தரம் (தொகு.), அரும்புகள் மொட்டுகள் மலர்கள், ப. 28.

11. மேற்படி, ப. 27.

12. முல்லை பி. எல். முத்தையா (தொகு.), பாவேந்தர் பாரதிதாசன் பெருமை, ப. 26.

13. முருகுசுந்தரம் (தொகு.), அரும்புகள் மொட்டுகள் மலர்கள், ப. 35.

14. மேற்படி, ப. 93.

15. மேற்படி, ப. 95.

16. சி. பாலசுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வரலாறு, பக். 274-275.

17. 'சுடர்' பாரதிதாசன் மலர், தில்லித் தமிழ்ச் சங்கம், ப. 95.

18. அணுக்கதிர், பாவேந்தர் நினைவு மலர், ப. 8.

19. 'சுடர்' பாரதிதாசன் மலர், தில்லித் தமிழ்ச் சங்கம், ப. 6.

20. பாரதியும் பாரதிதாசனும் ஓர் ஒப்பியல் அறிமுகம்: வ. சுப்பையா பிள்ளை பவள விழா மலர், ப. 214.

21. மா. செல்வராசன், பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர், ப. 6.

22. 'சுடர்', பாரதிதாசன் தில்லித் தமிழ்ச் சங்கம், ப. 28.

23. மேற்படி, ப. 25.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களை மூன்று நிலைகளில் நின்று இனிக் காண்போம்:

I

# பாரதிதாசன் பாடல்களில் இயற்கை

கலைகள் அறுபத்து நான்கனுள் உணர்ச்சிக்கு மொழி வடிவம் கொடுக்கும் கலை இலக்கியக்கலை. இலக்கியமே உணர்ச்சியின் வெளிப்பாடுதான். கவிஞன் உணர்ச்சிப் பிண்டமாக இருப்பவன். அறிவின் துணையை மட்டுமே கொண்டு கவிதையை ஆயத் தொடங்கினால், அங்கே கவிதை தோன்றுவதில்லை. உணர்ச்சியில் மூழ்கி, அனுபவித்து, அந்த அனுபவத்தைப் பிறருக்கு வழங்க வேண்டுமென்ற கருத்துடன் உணர்ச்சிப் பெருக்குடையோன் தன் உணர்ச்சிக்குச் சொல்லின் மூலம் கொடுக்கும் வடிவமே கவிதை எனப்படும். எனவே, கவிதை என்பதே கவிஞருடைய உணர்ச்சியைச் சொற்களின் மூலம் நமக்குத் தருகின்ற ஒரு கருவி என்பது பெறப்படும். உணர்ச்சியில் பிறந்து, உணர்ச்சியில் வளர்ந்து, உணர்ச்சி வடிவாகவே வெளிவரும் கவிதை, கற்போர் மனத்தில் உணர்ச்சியை யூட்டும் என்பதில் ஐயமில்லை.

ஒரு கவிதை எவ்வளவு தூரம் கற்பவர் மனத்தில் உணர்ச்சியை ஊட்டும் என்பதற்கு அக்கவிஞனுடைய உணர்ச்சியின் ஆழமும் அந்த உணர்ச்சி ஆழத்தை வெளியிட அவன் பயன்படுத்தும் சொல் ஆற்றலுமே சிறப்பான காரணங்கள் ஆகும். சாதாரண நிகழ்ச்சிகளைக் கூடக் கவிஞன் காண்கிற முறையே வேறு. நம் போன்றவர்கள் ஒரு நிகழ்ச்சியில் எவ்வளவு ஈடுபட்டாலும், 'நாம்' என்ற முனைப்பையும் ஈடுபடுகிறோம் என்ற நினைப்பையும் மறப்பதில்லை. ஆனால், கவிஞன் ஈடுபடும்போது அவன் தன்னை மறந்து உணர்ச்சியில் ஈடுபட்டுத் தான் வேறு,

அது வேறாக நில்லாமல், தானே அதுவாய் ஓர் அத்துவித நிலையையடைகிறான். பின்னர் அதிலிருந்து வெளிப்பட்டு அந்த அனுபவத்தை மறுபடியும் சிந்தித்துப் பார்த்துச் சொற்களின் உதவிகொண்டு அனுபவத்தை வடிக்கத் தொடங்குகிறான்.

அங்ஙனம் தொடங்கும்பொழுது இதுவரை அடங்கியிருந்த அறிவாற்றலின் துணையும் தேவைப்படுகிறது. இவ்வறிவாற்றலின் துணைகொண்டு அவ்வுணர்ச்சியை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தித் தேவையான அளவு வெளியிடுகிறான். ஒரு சில கவிஞர்கள் குடத்தில் உள்ள நீரைக் குழாய்மூலம் வெளிப்படுத்துவது போலத் தம் உணர்ச்சியை ஓரளவு கட்டுப்படுத்தி வெளியிடுகின்றனர். இன்னும் சிலர் குடத்து நீரை அப்படியே கவிழ்ப்பது போலக் காட்ட முற்படுகின்றனர். இரண்டுமே நீரை வெளிப்படுத்துகின்ற இயல்பைப் பெற்றிருப்பினும், குழாய் மூலம் வெளியிடுவது போல் அப்படியே கவிழ்ப்பது விரும்பிய பயனையளிப்பதில்லை.

இந்த அடிப்படையை மனத்தில் கொண்டு பாரதி, பாரதிதாசன் என்ற இருவருடைய கவிதைகளையும் ஆர அமர நினைந்து பார்ப்போமேயானால், இருவருடைய உணர்ச்சிக்கும் அதிக வேறுபாடு இல்லை என்பதை அறிய முடியும். இருவருடைய ஆற்றலும் பேராற்றல் என்பதில் ஐயமில்லை. பலவிடங்களில் வாழும் மக்களிடம் பழகிய காரணத்தால் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் குழாய் மூலம் நீர் சொரிவது போலப் பாரதியின் கவிதைகள் வெளிப்பட்டன. புரட்சிக் கவிஞரின் பாடல்கள் குடத்தைக் கவிழ்த்து நீரைச் சொரிவது போல உணர்ச்சியை அப்படியே கொட்டிவிடுகின்றன. இங்ஙனம் வெளியிடுவது பாரதிதாசனுடைய தனிச் சிறப்பாகும். உணவுப் பண்டங்களுள் இருவேறு சுவையுடைய பொருள்கள் இருப்பதனால் ஒன்றைவிட ஒன்று உயர்வு என்றோ தாழ்வு என்றோ

யாரும் கருதத் தேவையில்லை. அந்தந்தச் சுவை அந்தந்தப் பண்டத்திற்குத் தனிச் சிறப்பை நல்குகிறது. அதேபோல் உணர்ச்சியை அப்படியே கொட்டி நம்மையும் அதில் மூழ்கடித்துத் திளைக்குமாறு செய்தது புரட்சிக் கவிஞரின் தனிச் சிறப்பாகும்.[1]

இவ்வாறு உணர்ச்சிப் பிழம்பாக உள்ள பாரதிதாசன் தம் நூல்களில் இயற்கையைப் பற்றிப் பாடியுள்ள நிலையைப் பார்ப்போம்.

## இயற்கை

இயற்கைக்கு அறிமுகம் தேவையில்லை. அதன் நியதிப்படி பிறந்து, அதன் மடியிலே வளர்ந்து, இறுதியில் அதனோடு கலக்கும் நாம்தான், நம் பிறப்பால் இயற்கைக்கு நம்மை அறிமுகம் செய்து கொள்கிறோம். நமக்கும் இயற்கைக்கும் இடையேயுள்ள நீங்கா நட்பில் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள நாம் செய்யும் முயற்சியைத் தான் வாழ்க்கை என்கின்றோம். அறிவும் உணர்ச்சியும் இணைந்த மனித வாழ்வில் இயற்கையை அறிந்து சொன்னவன் அறிஞன்; உணர்ந்து சொன்னவன் கவிஞன். இந்தப் 'பூக்கொய் படலத்தில்' பறித்த மலர்களைத் தொடுத்து வைத்த நாராகக் காலம் இழைகிறது. காலம் செல்லச் செல்ல வளர்ந்த இம்மாலை, சிதறுண்டு கிடந்த இயற்கைக்கு ஒரு தெளிவான வடிவம் தந்து செல்கிறது. இதன்மூலம் ஒவ்வொரு கால நிலையிலும் இயற்கை, மனிதனுக்குப் புதிராய், இறையாய்த் தாயாய்த், தோழனாய்ப் பல தோற்றங்கள் காட்டியிருப்பதை அறிய முடிகிறது. அறிவியல் வளர்ச்சியால் அடிமை நிலைக்கும் இயற்கை கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மனிதனின் கண்டுபிடிப்புகளிலேயே மிகவும் வியக்கத் தக்க, இணையற்ற பொருள் மொழிதான் என்பர். கலைகளின் அரசியாகிய கவிதையின் அரியாசனம் அது

தான். காதலில் இயற்கையோடு இரண்டறக் கலந்து போகாத கவிஞன் இல்லை. காலத்தின் ஓட்டத்தில் அறிவியல் மதிப்பீடுகள் மாற்றம் கொள்வதைப் போலவே கலையிலும் மதிப்பீடுகள் மாற்றங்களை ஏற்கின்றன. ஆகவே கவிஞர்களின் பார்வையிலும் இயற்கை பற்றிய கொள்கைகள் இம்மாற்றங்களை ஏற்கத் தவறவில்லை.

'செய் கை' என்பது செய்கை என்றாதல் போல 'இயல் கை' — இயற்கை ஆயிற்றெனலாம். இயல் — இயலுதல் (கை — தொழிற்பெயர் விகுதி).

சங்க காலத்திலோ காவிய காலத்திலோ இச்சொல் இன்று நாம் கொள்ளும் பொருள் குறித்ததாக இல்லை. சங்கப்பாடல்களில் இயல்பு என்ற பொருளிலேயே இச்சொல் வழங்குகின்றது.[2] முன்பு நுண்பொருளுணர்த்திய இச் சொல் இப்போது பருப்பொருட்பேறு பெற்று (Concretion) 'இயற்கை' யென்ற பொருளில் வழங்குகிறது. தொல் காப்பியம் கூறும் முதல், கருப்பொருட்களை இன்று நாம் இயற்கையுள் அடக்கலாம்.

தொல்காப்பிய உரையில் சேனாவரையர் இயற்கைப் பொருள் என்பதற்குத் 'தன்னியல்பிற் றிரியாது நின்ற பொருள்' என்று பொருள் கூறித தன்னியல்பில் திரியாதன நிலம், நீர், தீ, வளி என்பவற்றைக் காட்டுகிறார்.

இயற்கை பற்றிய கல்வி மனிதனோடு இயைந்த தொன்மையுடையது ஆகும். அறிஞர் பிளாட்டோ நிலம், நீர், நெருப்பு, காற்று எனும் நான்கின் இயல்பில் இயற்கை யைக் கண்டார்.

காட்வெல் ''மனிதன், மனிதனைச் சூழ்ந்துள்ள இயற்கைப் படைப்பு, மனிதனுக்கும் இயற்கைச் சூழலுக்கு முள்ள உறவு'' என மூன்று பகுதிகளாக இயற்கையை உணர்கிறார்.

பொருட்களிலும் உயிர்களிலும் பொலியும் எழிலை விரும்பிப் போற்றும் மக்கள் அவை அனைத்திலும் அழகிற் சிறந்தவர். அவரே அழகமரும் மாண்புமிக்க கோவில்களாவர் என்றார் மில்டன். ஆயினும் மக்களை இயற்கைப் பொருளாகச் சிலர் ஏற்பதில்லை. இக்கருத்துகளையெல்லாம் மறுத்து ஒயிட் பீல்டு "நம் காட்சி அறிவிற்குத் தென்படுவதே இயற்கை" என வரையறுத்தார்.

தனிநாயக அடிகள் இதனை மேலும் "புலன்களால் அறியக்கூடியது இயற்கை; அது மனிதனோ அல்லது அவன் படைப்போ அன்று" என்றார். மனிதனை இயற்கையாகக் கொள்ளாத நிலையையே பல அறிஞர்களின் கூற்றும் தெளிவுறுத்துகின்றன.

"ஒரு பக்கம் இயற்கையும், இயற்கை நிகழ்வும், மற்றொரு பக்கம் மனிதனும், மனித இயக்கமும் அமைந்து ஒற்றுமையுடையனவனாகத் தோன்றுகின்றன." ஆயினும் இயற்கை மனிதனினின்றும் வேறுபட்டது.

"மனிதனின் தோற்றம் இயற்கை. உலக உயிர்களை ஊட்டி வளர்ப்பதும் இயற்கை. மனிதனின் உள்ளத்தைச் செப்பனிடுவதும் இயற்கை" என்ற பொதுவான கருத்தும் நிலவி வருகின்றது.

கிரேக்கர்கள் இயற்கையின் ஒவ்வொரு கூறும் ஒவ்வொரு கடவுள் எனக் கண்டு வழிபட்டனர். இவ்வாறு இயற்கையை வெறும் இயற்கையாகக் கருதாமல் அதனைப் பெரும் ஆற்றல் படைத்ததாகக் கருதுவது ஒரு கொள்கை. அவ்வியற்கையைத் தெய்விக வடிவாகக் கருதுதல் வேறொரு கொள்கை.

இயற்கையை இறைவனின் முகமாகக் கண்டார் சால்ஸ் கிங்ஸ்லி. "இயற்கையை இறைவனின் கலை" என்றார் சர்தாமஸ் பிரௌன். இறைவனின் பிரதிபலிப்பே இயற்கை என்றும், இயற்கை வாழக் கூடியது, அது இறைவனின்

ஆடை போன்றதென்றும் அறிஞர் குறிப்பிடுகின்றனர். மேலும் மனிதனை நல்வழிப்படுத்தும் நூலாகவும் போதகனாகவும் ஆசிரியனாகவும் இயற்கையைக் கண்டனர். பாரதியார் பராசக்தியின் தோற்றமாக இயற்கை அழகினைக் கொள்கிறார். இயற்கையை இறையோடு ஒத்துக் காணும் நோக்கிற்கு எதிரானவர் பாரதிதாசன்.[3] உலகின் புறத்தோற்றம் காட்டும் காட்சி அழகை இயற்கை யாகக் கண்டு அதனை முருகனோடு இணைத்துக் காண்கிறார் திரு. வி. க.

இயற்கையின் ஒவ்வொரு காட்சியும் மனிதனின் ஐயங்களையும் கவலைகளையும் போக்கி அவன் உள்ளத்திற்கு அலையா அமைதி அளிக்கிறது. அறிவு எதைக் கூறுகிறதோ அதை இயற்கையும் கூறுகின்றது. ''நாம் இயற்கையின் எழிலிலே இன்பத்தையே காண் கிறோம்; அழகையே காண்கிறோம்; உண்மையையே தரிசிக்கிறோம். இயற்கை உலகிலும் ஒழுக்க உலகிலும் நாம் அழகின் ஒருமையையே கண்டு இன்புறுகிறோம்'' என்கிறார் வி ஆர். எம். செட்டியார்.

இவற்றையெல்லாம் நோக்குங்கால் இயற்கை என்பது மனிதனைச் சூழ்ந்துள்ள சூழல்; அது அவனது ஈடுபாட்டுக்கு இடமளிப்பது; அவனுக்கு ஆசிரியனாகவும் வழிபடுத்தும் நூலாகவும் அமைவது; புலன்களால் அறியக் கூடியதும் மனிதனோ அவன் படைப்போ அல்லாததும் என்று அறிகிறோம். பொதுவாகத் தொல்காப்பியம் கூறிய முதல், கருப்பொருள்களே இயற்கையுள் பெரிதும் அடங்கக் காணலாம்.

வானம், வானின் பயனாம் மழை, அம்மழையின் பயனாம் செழிப்பு, அருவி, ஆறு, கடல், நெருப்புக் கோளமாய் மேனின்று உலகை ஆட்சி செலுத்தும் கதிர்வேந்தன், இரவின் இருள் தகிப்பைத் தண்மைய மாக்கும் திங்கட்செல்வன், நாகரிகத்தின் நாட்டம் நாடும்

சிற்றூர், அங்குத் தன் நிலையை உணர்த்தி அமைகின்ற மணல் வடியும் ஓடை, அவ்வோடையிலே நீந்திவரும் தென்றற் காற்று, தென்றல் பட்டுச் சிலிர்த்து நிற்கும் உயர்ந்த மலை, அம்மலையிலே தவழ்ந்து செல்லும் மஞ்சுப் புகை இவை போன்றனவெல்லாம் இயற்கையின் இயல்பழகை எடுத்துணர்த்தி நிற்பதனை நாம் கண்டு மகிழ்கிறோம்; கவிஞர்களும் மகிழ்ந்தனர். அம்மகிழ்ச்சியை, இன்பத்தை, உணர்வை மொழியாக்கித் தருகின்றனர். அம்மொழி கவிதை மொழி. கவிதை நம்மைமேலும் அதில் ஈடுபடச் செய்து மகிழ்விக்கிறது.

## இலக்கியத்தில் இயற்கை

மேலைநாட்டுக் கவிஞர்களின் இலக்கியப் படைப்புக் களை ஆயும்போது, ஒவ்வொருவருக்கும் இயற்கை பற்றிய ஒரு தனிக்கொள்கை இருப்பதை உணர முடிகிறது. வில்லியம் பிளேக், இயற்கையை இறைவனாகிய பரம் பொருளின் முகத்திரையாகக் கண்டான். வேர்ட்ஸ் வொர்த்தோ அழகுணர்ச்சி தந்து அறிவையும் புகட்டும் ஒரு தோழியாகக் காண்கிறான். உணர்வுக் கவிஞர்களாகிய ஷெல்லி, கீட்ஸ், பைரன் போன்றோர் உணர்வைத் தூண்டிப் புலன்இன்பந் தரும் காதல் நிலையில் இயற்கையைக் காண்கின்றனர். ஜப்பானியக் கவிதைகளில் 'ஹைகூ' போன்ற குறுகிய வடிவப் பாடல்களில் உணர்ச்சி பாவத்தை வெளியிடும் முகமாகவே இயற்கையைக் கையாளுகின்றனர்.

இப்போக்கில் தமிழ்க்கவிதையை ஆய்ந்தால், சங்க இலக்கியங்களில் மட்டுமே, 'இயற்கை' பற்றிய இலக்கியக் கொள்கை' வரையறுக்கப்பட்டதாகவும், பிற நாட்டுக் கொள்கைகளையும் விஞ்சுவதாகவும் அமைந்திருக்கக் காண லாம். முதல் கருப்பொருட்கள் இயற்கைப் பொருட்களே. அவை உணர்ச்சி வெளிப்பாட்டைக் கூர்மைப்படுத்தித் தெளிவாக்கும் பின்புலமாக ஆளப்படுகின்றன. சங்க

இலக்கியத்தின் 'நடப்பியல்' தன்மைக்கு (Realism) இதுவே காரணமாம்.[4]

இயற்கையியல் விருந்தியல் (Naturalism and Romanticism) ஆகிய இரண்டும் சங்க இலக்கியத்தின் பண்புகளாக உள்ளன. சங்கப் புலவர்களுக்கு அமைந்திருந்த நுட்பமான புலனுணர்வு அளவிறந்த சிறப்புடையது. மலரீட்டங்களின் மாய வண்ணங்களை அவர்களின் காட்சிப்புலன் ஊடுருவிச் செல்லும்; அசைந்தாடும் பூங்கொடியின் அருமைப்பாடலிலே அவர்களின் செவிப் புலன் திளைக்கும்; விரிந்த மலர்களின் பட்டிதழ்களின் மென்மையைத் தொடாமல் தொட்டுணரும் அவர்கள் பொறியும் புலனும்; கனிகளின் மணத்திலே, மலர்களின் மணத்திலே, இன்னும் இயற்கை அன்னை வழங்கும் எண்ணற்ற இன்ப விருந்துகளிலே திளைக்கும் அவர்களின் புலமை நெஞ்சம். மனித இனத்தின் பேராற்றல்களாகிய காதல் வீரம் ஆகிய இரண்டையும் ஊடுருவிப் பாய்ந்து பரந்து கிடக்கச் செய்யும் அளவுக்கு இயற்கையினிடத்து அவர்கள் எல்லையற்ற காதல் கொண்டிருந்தனர். இத்துணையளவு இயற்கைக்கு இலக்கியத்தில் இடம் அளித்தும், 'இயற்கை' என்ற சொல்லோ அதற்கு இனமான பிறிதொரு சொல்லோ ஓர் இடத்தும் குறிக்கப் படவேயில்லை. உலக வாழ்வில் மனிதவாழ்வு ஒரு கூறு என்றால், அவனுக்குப் புறத்தே உள்ளவற்றைப் பிறிதொரு கூறு என்பர். அப்புற வாழ்வின் குறியீடு என்ற அளவில்கூட இயற்கை என்ற சொல்லைச் சங்க இலக்கியம் குறிக்கவில்லை.[5]

பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் இயற்கையைத் தனியொரு பொருளாகக் கருதிப் பாடினாரல்லர். காதல், வீரம் என்பவற்றைத் தலைமைக் கூறுகளாகக் கொண்டு பிற பல கூறுகளையும் துணையாகப் பெற்றுள்ளது மனித வாழ்க்கை. அத்தகைய மனித வாழ்க்கையின் பல்வேறு கூறுகளையும் வருணித்துத் தெளிவுபடுத்துவதற்காகவே

பண்டைத் தமிழ்ச் சான்றோர் இயற்கையைப் பயன் படுத்தினர். சுருங்கச் சொன்னால், மனித இதயத்தின் உணர்வுகளையும், இயற்கையின் கவர்ச்சி நிறைந்த எழிலையும், நெருங்கிய பிணைப்புடையனவாய் இனிய உறவுடையனவாய் இணைத்தனர் எனலாம்.

'இயற்கை அரங்கு, மனித அரங்கு ஆகிய இரண்டு களங்களே கவிஞனின் தொழிற்சாலைகள்' என்று ஜே. சி. ஷார்ப் என்பார் கூறுகிறார்.[6]

மானிட உணர்வுகளோடு இயற்கையின் எழிலை இயைபுறச் செய்தது பண்டைத் தமிழிலக்கிய மரபாகும்.

ஜே. சி. ஷார்ப் பின்வருமாறு ஓர் இடத்தில் குறிப்பிடு கின்றார். 'மனிதனுடைய ஆன்மாவைத் தன்வயப்படுத்திக் கொள்ள நினைக்கின்றது இயற்கை. அது பலவகையான மாயங்களைச் செய்து மனித இதயத்தை ஈர்க்கப் பார்க்கிறது. விரிந்து கிடக்கும் பரப்பாலும் ஓங்கி வளரும் உயரத்தாலும் இயற்கையானது மனிதனை உயர்த்த முனைகின்றது. தன் எழிலால் அவனை மகிழ்விக்க முயல் கின்றது. துடைத்துத் தொலைக்கும் தன் அழிப்பாற்றலால் அவனை அவலத்தில் மூழ்கடிக்கப் பார்க்கிறது. கொலு வீற்றிருக்கும் தன் அமைதித் திறத்தால் அவனுக்கு மீட்சி தருகின்றது. இவ்வாறான எண்ணற்ற செயல்களின் வாயிலாக இயற்கை மனித இதயத்தைக் கவர்வதற்கு இடையறாமல் முயன்று கொண்டேயிருக்கிறது; இயற் கைக்கும் மனித மனத்துக்கும் இடையேயுள்ள தொடர்பு — அதாவது, புறக்காட்சிக்கும் அக உணர்வுக்கும் இடையே நடைபெறும் பரிமாற்றம் — மிக நுட்பமானது; மாயம் நிறைந்தது. எனினும் புறமும் அகமும் கலக்கும் இக்காட்சி இடையறாது நடந்து வருகின்றது என்பது உண்மை. சங்க இலக்கிய மரபு இவ்வுண்மையை உணர்ந்து போற்றி வந்திருக்கின்றது.[7]

சங்க இலக்கியத்தின் அகப்பாடல்களும் புறப்பாடல் களும் இயற்கைக் காட்சிகளின் வருணனைகளைத் தருமிடத்து மனித வாழ்வினோடு விரவிய தன்மையுடையன வாய்ப் பிணைப்பு ஊட்டியே தருகின்றன. இயற்கை மனிதனின் உள்ளத்தோடு எவ்வகையில் தொடர்புடைய தாயிருக்கின்றது என்பதைச் சங்க இலக்கியம் தெளிவுறுத்து கின்றது. அவ்வாறு அமைந்துள்ள இயற்கைக் காட்சிகள் மனித வாழ்வுக் கூறுகளை உள்ளுறையாகப் பெற்றுள்ளனவே யன்றி, வெளிப்படையாக அன்று. சங்க இலக்கியத்தில் மனித வாழ்வும் இடம் பெறுகின்றது; இயற்கைக் காட்சியும் இடம் பெறுகின்றது. எனினும், பின்னதைவிட முன்னதே தலைமையும் சிறப்பும் உடையதாய் முதன்மை பெறுகின்றது.[8]

சங்க இலக்கியத்தின் மையம் மானிட வாழ்வே; இயற்கை அதற்கு உறுதுணையாய் இரண்டாம் இடமே பெறுகின்றது.[9]

அச்சமூட்டும் பெருமிதமான இயற்கைக் காட்சிகளும் சங்க இலக்கியத்தில் உண்டு; அமைதி தவழும் மென்மை யான இயற்கைக் காட்சிகளும் அங்கு உண்டு.

இவை யாவும் சங்கப் புலவர்கள் தம் சொந்த அனுபவத்தால் பாடியவை; தமக்கு வாய்த்திருந்த நல்ல இயற்கைச் சூழ்நிலையை இயல்பான சுவையுணர்வோடு நுகர்ந்ததன் விளைவாக எழுந்தவை. புறத்தில் நிகழ்வன வற்றைக் கலையுணர்வோடு நோக்கும் திறமை அவர்கட்குக் கைவந்திருந்தது. அண்மையிலும் தொலைவிலும் இருந்த உயிருள்ளனவும், இல்லனவும், வலியனவும், மெலியனவும் ஆகிய இயற்கைப் பொருட்கள் அவர்களின் கருத்தை ஈர்த்தன. தம்மைச் சூழ்ந்திருந்த நீர்நிலைகளையும் வானத்தையும் வயல் வெளிகளையும் மலைச்சாரல்களையும் தாமே நன்கு நுகர்ந்து, அந்நுகர்ச்சியினைக் கவிதையாக வடித்தார்கள். புலன் நுகர்ச்சிகளில் முழு மனத்தோடு

ஈடுபடும் தமது தனித்திறமையால் இயற்கையை முழுமையாகவும் நுட்பமாகவும் கண்டார்கள்; எந்தச் சிறு பகுதியையும் புறக்கணிக்காமல் கடிந்து நோக்கி உணர்ந்தார்கள். தம் உணர்வைத் தக்க சொற்களால் கவிதையில் தொடுத்தார்கள். எனவே, அவர்களின் கவிதையில் எல்லாம் தம் வாழ்விற்குத் துணைநின்ற இயற்கையின் பல்வேறு வடிவங்களை நுண்ணுணர்வோடு கண்டுணர்ந்த அனுபவத்தின் வெளிப்பாடுகள் என்று கூறுவதில் தவறில்லை.[10]

## இயற்கையும் கவிஞனும்

புலவர்கள் இயற்கையின்பால் கொள்ளும் எல்லையில்லா ஈடுபாடு இயற்கையிடத்துள்ள அழகாலோ அல்லது கவர்ச்சியாலோ மட்டும் ஏற்பட்டதல்ல. அது இயற்கையின் பயன்பாட்டாலும் ஏற்பட்டதே. எனவே இவ்வீடுபாடு பிற்காலக் கவிதைகளிலும் புகுந்துள்ளது. பயன்பாடு கருதி இயற்கையின்பால் ஈடுபாடு கொள்ளும் புலவன் அதன் மேற்போக்கான தோற்றத்தை மட்டும் கருத்தில் கொண்டு ஈடுபடுவதில்லை. கதிரவனின் எழுச்சியையும், மறைவையும், வானவில்லின் தோற்றப் பொலிவையும் மேலும் பிற இயற்கை வனப்புகளையும் கவிதை மொழியில் கூறுவது மட்டும் கவிஞனின் கடமையல்ல. "கவிஞன் இவற்றை இயம்புகையில் இயற்கையின் மறைவுகளிலும் புகுந்து மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலுள்ள தொடர்பை அறிய முனைகிறான்"[11] இயற்கை நிகழ்ச்சிகளில் சில மனிதனுக்கு வியப்பும் அச்சமும் உண்டாக்குகின்றன. தன்னைச் சூழ்ந்துள்ள இயற்கையின் அதிசயங்களும் அவனைச் சிந்திக்கச் செய்கின்றன. இச்சிந்தனைகளின் வெளியீடே இலக்கியங்களாகின்றன.

மக்கள் வாழ்வு இயற்கையோடு இயைந்தது. ஆடிவரும் தென்றலிலும், பாடிவரும் அருவியிலும், மணமிகு மலர்களிலும், கணந்தோறும் புதிய புதிய கோலங்காட்டும்

வானத்தின் வண்ணத்திலும் ஈடுபடாத மனித மனம் இல்லை. கவிஞர்கள் மட்டும் விதி விலக்கா?

"இயற்கை மனிதனுடன் தொடர்புடையது; அது அறிவுரைகளையும் படிப்பினைகளையும் மனிதனுக்குக் கொடுத்து அவனிடம் மனிதப் பண்பை வளர்க்கிறது." [12]

கைபுனைந்தியற்றாத இயற்கையழகில் மனம் பறி கொடுத்த ஒருவரின் மனத்தில் இயற்கையைக் காணுந் தோறும் உள்ளக் கிளர்ச்சி ஏற்படுதல் உறுதி. இதனால் தான் தனிமையில் இயற்கையால் கவிஞன் பெறும் இன்பத்தைத் தலைவியோடு தனித்து விடப்பட்ட தலைவனின் இன்பத்திற்கு இணையாகக் கூறுகிறார் புரூக் என்பவர். இவ்வாறு மனிதப் பண்பைப் பெருக்கும் தன்மையுள்ள இயற்கையை மனித வாழ்வோடு இயைத்துப் பண்டைக் காலந்தொட்டுப் புலவர்கள் பாடி வந்ததில் வியப்பில்லை.

கவிஞன் இயற்கையை நோக்கும் முறையில் அவனது தனிவாழ்வு வெளிப்படலும் உண்டு. கீட்ஸ் எனும் ஆங்கிலக் கவிஞர் பால்உணர்ச்சியோடு இயற்கையைக் காண்கிறார். இயற்கையில் இறைமையைக் காணு கின்றனர் ஷெல்லியும், வேர்ட்ஸ்வொர்த்தும். பைரன் இயற்கையின் ஆரவாரத் தன்மையை மிகவும் விரும்பு கிறார். பாரதியும், பாரதிதாசனும் தத்தம் குறிக்கோள் களை இயற்கையில் காணுகின்றனர். இலக்கியத்தில் இயற்கை மேற்கண்டவாறு இடம் பெற்றிருப்பினும் புலவர் களுக்கேற்ப, அவ்வியற்கையை வெளியிடும் முறையில் வேறுபாடு காணப்படுகிறது.

சங்க காலத்திற்குப் பின்பு, காவிய காலத்தில் இயற்கை வெறும் அழகுக்காக, ஆறு, கடல், நாட்டு வருணனையாகக் கையாளப்படுகிறது. பக்தி இலக்கியம் இயற்கையில் இறை வடிவம் காண்கிறது. பிறகு, இயற்கை பற்றிய சங்க

இலக்கியத்தின் ஒப்பற்ற கொள்கை தமிழிலக்கியத்தி லிருந்து மறைந்திருப்பதையே அறிய முடிகிறது.

அணியிலக்கணத்தால் உயிரிழந்து குற்றுயிராகக் கிடந்த தமிழ்க் கவிதை பாரதிக்குப் பின் மறுவாழ்வு பெற்றபோது ஷெல்லி போன்றோரின் கவிதைத் தாக்கம் தமிழில் ஏற்படத் தொடங்கியது. பாரதி, 'ஷெல்லிதாசன்' என்றே புனைபெயர் வைத்துக் கொண்டது இதனால்தானோ? அப்பாரதியின் தாசன், மேல்நாட்டு இயற்கைக் கவிஞர்கள் போல் தமிழில் இயற்கை தழுவிய ஒரு முழு நூலையே படைத்திருக்கிறார்.

இங்குப் பாரதிதாசனின் கவிதை நூல்கள் மட்டும்,

(அ) அழகின் சிரிப்பில் இயற்கை அமைந்துள்ள பாங்கு

(ஆ) மற்ற நூல்களில் இயற்கை அமைந்துள்ள பாங்கு என இரு நிலைகளில் ஆய்வுக்கு மேற்கொள்ளப் பெற் றுள்ளன.

## அழகின் சிரிப்பு

'அழகின் சிரிப்பு' பாவேந்தரால் இயற்கை அழகில் திளைத்து எழுதப்பட்ட இயற்கை அழகு மிளிரும் இனிய நூல். சிறந்த முறையில் இயற்கையைப் பாடிய புலவர் பாவேந்தர்.

மேலைநாட்டிலே 'வேர்ட்ஸ்வொர்த்து' என்னும் கவிஞரைக் குறிப்பிடும்போது, இயற்கையே எழுதுகோல் பிடித்துக் கவிஞருக்குப் பதிலாகக் கவிதை புனைந்தது (Nature itself wrote for him) என்பர். இக்கூற்று நம் பாவேந்தரைப் பொறுத்தவரையில் முற்றும் பொருந்துவ தாகும்.

"இயற்கை அனைத்தும் அழகே. அந்த அழகு செந்தாமரை என்றும், நிலவென்றும், கதிரென்றும் சிரித்தது. காணும் பொருளிலெல்லாம் அழகைக் காணவும்

கண்டவாறு தாமே சொல்லோவியம் தீட்டவும் திறம் பெறுதல் வேண்டும். தமிழர்கள் பிறமொழி, தமிழ் மொழி நூல்களில் பார்த்தபடியே எழுதும் நிலை தீர வேண்டும். அதற்கு இச்சிறு நூல் இயற்றியதன் வாயிலாக நான் இதை அறிஞர்க்கு நினைவுறுத்துகிறேன்'' என்று கவிஞர் 'அழகின் சிரிப்பு' என்னும் நூலின் முன்னுரையில் சிந்தனையோடு குறிப்பிட்டுள்ளார்.

இவ்வகையில் எழுந்த நூல் 'அழகின் சிரிப்பு' எனலாம். மேலை நாட்டில் 'ஏரிவட்டக் கவிஞர்' (Lake Poet) எனப் புகழப்பெறும் வோர்ட்ஸ்வொர்த்தைப் போல், தமிழ்க் கவிஞர்களில் இயற்கையை இணையற்ற வகையில் அழகுற, எழிலுற வருணித்துப் பாடியவர் புரட்சிக்கவிஞர் பாரதி தாசன் எனலாம்.

'அழகின் சிரிப்பி'ன் முதற்பகுதி 'அழகு' ஆகும். இப்பகுதியில் தான் கண்ட அழகையெல்லாம் விளங்க விளக்குகிறார் கவிஞர். அதனையடுத்துக் கடல், தென்றல், காடு, குன்றம், ஆறு, செந்தாமரை, ஞாயிறு, வான், ஆல், புறாக்கள், கிளி, இருள் முதலிய பன்னிரண்டு பொருட்களைப் பற்றிய கவிதைகள் கனிந்துள்ளன. பிறகு, சிற்றூர், பட்டணம், தமிழ் என்னும் முப்பொருள்களை நமக்குக் காட்டுகிறார். பாக்கள் இனிமையாகவும், அழகுடனும் அமைந்துள்ளன. பாரதிதாசன் நூல்களில் இதைச் சிறந்ததாகக் கூறின் மிகையாகாது.

### அழகு

தமக்கு அழகு கவிதை தந்த இடங்களை அழகுறப் புலப் படுத்தும் போக்கிலும் நோக்கிலும் மூன்று பாடல்கள் முன்னுரையாக - வாயிலாக அமைந்துள்ளன.

'அழகுப் பொருட்கள் என்றும் அழியாத இன்பம் நல்கும்' (A thing of beauty is a jor for ever) என்று 'கீட்ஸ்' என்னும் கவிஞர் பெருமான் குறிப்பிட்டார்.

புரட்சிக் கவிஞருக்கும் அழகே கவிதை கொடுக்கிறதாம்.

**காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்**
**கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன்; அந்தச்**
**சோலையிலே மலர்களிலே தளிர்கள் தம்மில்**
**தொட்டஇடம் எலாம்கண்ணில் தட்டுப் பட்டாள்!**
**மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற**
**மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள் ஆலஞ்**
**சாலையிலே கிளைதொறும் கிளியின் கூட்டந்**
**தனில் அந்த அழகென்பாள் கவிதை தந்தாள்.**

—அழகின் சிரிப்பு: அழகு, ப. 1.

இவ்வாறு இளம்பரிதியிலும், கடற்பரப்பிலும், ஒளிப்புனலிலும், சோலையிலும், மலர்களிலும், தளிர்களிலும், மாலை மறையும் மாணிக்கச் சுடரிலும், ஆலமரத்தின் கிளையிலும், கிளையின் கிளியிலும் பொலியும் அழகு, கவிஞர்தம் நெஞ்சில் உணர்ச்சி ஊற்றினைப் பெருக்கி உயர் கவிதைகளை உருவாக்கிற்று. 'அழகுதனைக் கண்டேன், 'நல்லின்பம் கண்டேன்' என்று அழகுதரும் அமைதியான இன்பத்தினைப் பேசும் கவிஞர்,

**சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள்**
**திருவிளக்கிற் சிரிக்கின்றாள்; நாரெடுத்து**
**நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வளைவில்**
**நாடகத்தைச் செய்கின்றாள் அடடே செந்தோட்**
**புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும்**
**புதுநடையில் பூரித்தாள்; விளைந்த நன்செய்**
**நிலத்தினிலே என்விழியை நிறுத்தினாள்; என்**
**நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்.**

—அழகின் சிரிப்பு: அழகு, ப. 2.

சிறுகுழந்தை விழியினில், திருவிளக்கில், மலர் தொடுக்கும் நங்கையரின் விரல் வளைவில், உழவன்

பெருமித நடையில், நன்செய் நிலத்தில் எல்லாம் அழகு வீற்றிருக்கிறது.

தாம் பெற்ற பேற்றினை நமக்கும் நல்க நல்லுளம் கொண்டு,

பசையுள்ள பொருளிலெல்லாம் பசைய வள்காண்!
பழமையினாற் சாகாத இளைய வள்காண்!
நசையோடு நோக்கடா எங்கும் உள்ளாள்!
நல்லழகு வசப்பட்டால் துன்ப மில்லை.

—அழகின் சிரிப்பு: அழகு 3.

இப் பாடலடிகள் 'கீட்ஸ்' என்பாரின் இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்கின்றன.

திசையும் அழகு; வானும் அழகு; வானக் கூரையின் கீழ்ப் புலப்படும் பொருட்களும் அழகு. அசையும் கொடிகள்; நிற்கும் மரங்கள் அனைத்தும் அழகே. அவ்வழகு இன்பத்தைத் தருகிறது. விருப்பந்தரும் பொருட்களில் விருப்பத்தை விளைவிக்கும் பொருள் அதுவாகும். பழமைக்குப் பழமையாயும் புதுமைக்குப் புதுமையாயும் துலங்கும் இளையோளாக 'அழகு' விளங்குகின்றாள். விருப்புடன் நோக்கினால் அவள் எங்குந் தென்படுவாள். அந்த நல்லழகின் வசப்பட்டால் நலிவில்லை; துன்பமில்லை.

இங்குச் சிறப்பாக எண்ணத்தக்கது "பசையுள்ள பொருளிலெலாம் பசையவள்" என்பதும், "நசையொடு நோக்கினால் எங்கும் உள்ளாள்" என்பதும், "நல்லழகு வசப்பட்டால் துன்பமில்லை" என்பதும் ஆகும்.

இயற்கையழகு — திரு என்பதற்குக் 'கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கு" எனப் பொருள் கண்டார் பேராசிரியர். இக்கருத்து இங்கு நோக்கத்தக்கது.

இயற்கையழகு இணையற்று விளங்கும் பலவிடங்களைப் பத்துப் பத்துப் பாடல்களில் பத்து அறுசீர் விருத்தங்களில் வருணிக்கும் பாவேந்தர் பாரதிதாசன் முதலாவ

தாகக் 'கடல்' என்ற தலைப்பில் தம் கை வண்ணத்தைக் கவிதை வண்ணத்தைக் காட்டி நிற்கிறார்.

கடல்

கடலை அறிமுகப்படுத்தும் கவிஞர் புது உவமையினைக் கையாளுகிறார். கல்வியை மறக்காத நெஞ்சங்கொண்டவராகத் துலங்குகிறார்.

கடல் ஊருக்குக் கிழக்கே இருக்கிறது; அப்பெருங் கடலின் ஓரம் கீரியின் உடல் வண்ணம்போல் மணல் மெத்தை தென்படுகின்றது. அம்மெத்தைமேல் எழுந்து விழுந்து புரளும் அலைகள் கல்வி பயிலும் இளைஞர்கள் நெஞ்சம்போல் பூரிப்பால் ஏறும்; வீழும்; புரண்டிடும்.

**ஊருக்குக் கிழக்கே உள்ள**
**பெருங்கடல் ஓரமெல்லாம்**
**கீரியின் உடல்வண் ணம்போல்**
**மணல்மெத்தை; அம்மெத்தைமேல்**
**நேரிடும் அலையோ, கல்வி**
**நிலையத்தின் இளைஞர் போலப்**
**பூரிப்பால் ஏறும்; வீழும்**
**புரண்டிடும்; பாராய் தம்பி.**

—அழகின் சிரிப்பு: கடல் 1.

அடுத்த பாடலில் மேலும் ஓர் உவமையைத் தருகிறார் கவிஞர். வெண்மைநிற அன்னக்கூட்டங்கள் விளையாடி வீழ்வதைப் போலத் துள்ளித் துள்ளி அலையின் கரையின் மணல்மேல் சுழன்று வீசும். வெள்ளிய அலைகள் கரையைத் தொட்டுக் கடலுக்குள் சென்றுவிட்ட பிறகு, சிறுகால் நண்டுப் பிள்ளைகள் ஆடிஓடி விளையாடி மகிழ்ந்து காண்போர்க்கு வியப்பைச் சேர்க்கும்.

கடற்பரப்பைக் காண நெஞ்சம் மகிழும் கடலின் கண் கொள்ளாக் காட்சி களிப்பூட்டும். வடக்கும் தெற்கும்

ஓடுநீர்ப் பரப்பும் காண இரு விழிச் சிறகால் நெஞ்சம் எழுந்திடும்; முழுதும் காண ஒரு கோடிச் சிறகு வேண்டும்.

...... அடடா எங்கும்
விழுந்தது தங்கத் தூற்றல்
வெளியெலாம் ஒளியின் வீச்சு!
முழங்கிய நீர்ப்பரப்பின்
முழுதும் பொன்னொளி பறக்கும்
பழங்கால இயற்கைசெய்யும்
புதுக்காட்சி பருகு தம்பி.

— அழகின் சிரிப்பு, 7.

என்று காலைக் கதிரவன் பிறப்பை வருணிக்கின்றார். அவன் வரவால் உலகில் ஏற்படும் பரபரப்பை,

இளங்கதிர் எழுந்தான்; ஆங்கே
இருளின் மேல் சினத்தை வைத்தான்;
களித்தன கடலின் புட்கள்;
எழுந்தன கைகள் கொட்டி
ஒளித்தது காரிருள் போய்.

— அழகின் சிரிப்பு, 8.

என்று குறிப்பிடுகிறார்.

கடல் நீரும் நீல வானமும் கைகோக்கின்றன. இரண்டிற்கும் இடையே கிடக்கும் வெள்ளம் அழகு வீணையாகும். அவ்வீணைமேல் காற்று அடித்து அவ்வீணையின் நரம்பினை அசைக்கின்றது. அப்போது வீணை இயக்கவல்ல தேர்ந்த புலவனாக அக்காற்றுத் தென்படுகிறது.

கடல்நீரும் நீலவானும்
கைகோக்கும்! அதற்கிதற்கும்
இடையிலே கிடக்கும் வெள்ளம்
எழில்வீணை; அவ்வீணைமேல்
அடிக்கின்ற காற்றோ வீணை
நரம்பினை அசைத்தின்பத்தை
வடிக்கின்ற புலவன்.

— அழகின் சிரிப்பு, 8.

பொன்னுடை களைந்து, வேறே
புதிதான முத்துச்சேலை
தன்இடை அணிந்தாள் அந்தத்
தடங்கடற் பெண்ணாள்

— *அழகின் சிரிப்பு, கடல் 9.*

என்று மேலும் கடலை வருணிக்கின்றார். நிலாக்காலக் கடலின் நிறத்தை இங்கு விளக்குகிறார்.

இவ்வாறாக, உலகத்தைச் சுற்றிலும் அழகு தென்படுவதாகக் கவிஞர் கூறுகிறார்.

**தென்றல்**

தமிழர் இயற்கையின் இனிய பெற்றியை நுகர்ந்தவர்கள். வடக்கேயிருந்து வரும் காற்றை 'வாடை' என்றும், தெற்கேயிருந்து வீசும் காற்றைத் 'தென்றல்' என்றும், மேற்கேயிருந்து வரும் காற்றைக் 'கோடை' என்றும், கிழக்கேயிருந்து வரும் காற்றைக் 'கொண்டல்' என்றும் பழந்தமிழர் குறிப்பிட்டனர். இவற்றில் 'தென்றல்' என்னும் தென்திசைக் காற்றை விரும்பி வரவேற்றனர்; வாடை என்னும் வடக்குக் காற்று உடலுக்கு ஊறு செய்யும் என வெறுத்தனர்.

காற்றெனப் பேர் இருக்கத்
தென்றலென்றபேர் ஏன்?
சிறப்புநிலை காட்ட அன்றோ?

— *பாரதிதாசன் கவிதைகள், பகுதி 3, ப. 97.*

என்று தென்றலின் சிறப்பைக் கூறும் பாவேந்தர் தென்றல் பற்றி, தென்னாட்டின் தனிச்சொத்துப் பற்றி,

தென்னாடு பெற்ற செல்வத்
தென்றலே உன்இன் பத்தைத்
தென்னாட்டுக் கல்லால் வேறே
எந்நாட்டில் தெரியச் செய்தாய்?

— *அழகின் சிரிப்பு, தென்றல்-10*

என்று குறிப்பிடுகின்றார். இங்குப் பாவேந்தரின் நாட்டுப் பற்றைக் காண முடிகின்றது.

**உன் அரும் உருவம் காணேன்**
**ஆயினும் உன்றன் ஒவ்வோர்**
**சின்னநல் அசைவும் என்னைச்**
**சிலிர்த்திடச் செய்யும்**

—அழகின் சிரிப்பு, தென்றல்-11

என்று தோன்றாப் பொருளாகிய தென்றலின் இனிமையை விளக்குகின்றார்.

**.........பெண்கள்**
**விலக்காத உடையை நீபோய்**
**விலக்கினும், விலக்கார் உன்னை**

—அழகின் சிரிப்பு, தென்றல் 11

என்று அனைவரும் போற்றும் செல்லக் குழந்தையாகத் தென்றலைப் போற்றுகின்றார்.

**இழந்திட்டால் உயிர்வா ழாத**
**என்னாசை மலர்முகத்துக்**
**குழந்தையின் நெற்றிமீது**
**குழலினை அசைப்பாய்; அன்பின்**
**கொழுந்தென்று நினைத்துக் கண்ணிற்**
**குளிர்செய்து மேனியெங்கும்**
**வழிந்தோடிக் கிலுகிலுப்பை**
**தன்னையும் அசைப்பாய் வாழி**
**இருந்த ஓர் மணமும், மிக்க**
**இனியதோர் குளிரும் கொண்டு**
**விருந்தாய் நீ அடையுந்தோறும்**
**கோடையின் வெப்பத்திற்கு**
**மருந்தாகி அயர்வி னுக்கு**
**மாற்றாகிப் பின்னர் வானிற்**
**பருந்தாகி இளங்கிளை மேற்**
**பறந்தோடிப் பாடுகின்றாய்**

—அழகின் சிரிப்பு, தென்றல்-12

என்று சின்ன குழந்தையின் மலர் முகத்தின் மேலிருக்கும் நெற்றிமீது துலங்கும் குழலினை அசைக்கிறது தென்றல். அதன் கையிலுள்ள கிலுகிலுப்பையினையும் தென்றல் அசைக்கின்றது. வெப்பத்திற்கு மருந்தாகி, சோர்விற்கு மாற்றாகிப் பின் வானிற் பருந்தாகி இளங்கிளைமேற் பறந்தோடிப் பாட்டிசைக்கின்றது.

கமுகொடு நெடிய தென்னை
கமழ்கின்ற சந்த னங்கள்
சமைகின்ற பொதிகை அன்னை
உனைத் தந்தாள்; தமிழைத் தந்தாள்
தமிழ் எனக் ககத்தும் தக்க
தென்றல் நீ புறத்தும், இன்பம்
அமைவுறச் செய்வதை நான்
கனவிலும் மறவேன் அன்றோ?

—அழகின் சிரிப்பு, தென்றல்-13

என்று தமிழும் தென்றலும் தமக்குத் தரும் இன்பத்தினை அழகுற விளக்குகிறார். அழகைப் பாடும்போதுகூட மொழிப்பற்றும், நன்றியுணர்வும் கவிஞரை ஆட்கொள் கின்றன.

தும்பியின் கண்ணாடிச் சிறகில் மின்னி, மலர்களின் இதழ்களில் கூத்தாடித் துளி தேன் சிந்தி, சிறு பிள்ளைகள் விளையாடும் பந்தினைத் தள்ளிச் சென்று, கிளியின் சிறகுகளைப் பற்றித் தென்றல் விளையாடுவதாகக் கூறி முடிக்கிறார் கவிஞர்.

காடு

நாட்டையடுத்து விளங்கியது காடு. காடு மிகுந்தால் மழைக்குப் பஞ்சமில்லை. காட்டில் இயற்கை கொலு வீற்றிருக்கிறது.

நாடினேன்; நடந்தேன் என்றன்
நகரஓ வியத்தைத் தாண்டித்

தேடினேன்; சிற்றூர் தந்த
காட்சியைச் சிதைத்தேன்; சென்றேன்
பாடினேன் பறந்தேன் தேய்ந்த
பாதையை இழந்தேன் அங்கே
மாடி வீடொன்று மில்லை
மரங்களோ பேசவில்லை

—அழகின் சிரிப்பு, காடு, ப. 14.

கவிஞர் கவினுறு காட்டுக் காட்சியைக் கண்டு சென்ற பொழுது மயிலொன்று அகவித்தோகை விரித்து வரவேற்பு வழங்கியது. கறுப்பு எலியொன்று வாலை ஆட்டி நின்றது; நல்லவழி காட்டிச் சென்றது. கொடுவாள் மீசை கொண்ட வேடன் கவிஞர் எதிரில் வந்தான். வேட்டையிற் சிக்கிய பறவைகளைக் காட்டினான் "அவைகளின் பெயர் களைக் கேட்டேன். பரத்துவன் என்னும் பறவையை நல்ல தூயதமிழில் 'வலியன்' என்று கூறினான். சகோதரத்தைச் 'செம்போத்து' என்றான்! தமிழா, நீ வாழ்க!" என்று வேடனைப் பாராட்டியதாகக் கவிஞர் கூறுகிறார்.

இழந்தபெட் டையினைக் கண்டே
எழுந்தோடும் சேவல் வாலின்
கொழுந்துபட் டெழுந்த கூட்டக்
கொசுக்களை முகில்தான் என்று
தழைந்ததன் படம்விரிக்கும்
தனிமயிலால் அடைத் 'தேன்'
வழிந்திடும்; கரடி வந்து
மயிலுக்கு வாழ்த்துக் கூறும்

—அழகின் சிரிப்பு, காடு, ப. 17

என்று பறவை, விலங்கினங்களின் இயற்கைச் செயல்களை விளம்புகிறார். இவ்வாறாகக் காடு பயன்பல நல்குவதாக விளக்குகிறார்.

**குன்றம்**

சங்க காலத்தில் 'குறிஞ்சி' எனப் போற்றப்பட்ட மலை, மலைக்காட்சி என்றும் மாறா மகிழ்ச்சி நல்கும். தமிழ்க் கடவுள் முருகன் மலைநிலக் கடவுளாவார். 'குறிஞ்சிக் கிழவ' எனக் கோலக் குழந்தையை நக்கீரர் பெருமான் திருமுருகாற்றுப்படையில் பாராட்டுவார். குன்றம் சார்ந்தே முகில்கள் மழை பொழிகின்றன. அழகு உறையும் இடங்களில் ஒன்று குன்றம்.

**தங்கத்தை உருக்கி விட்ட**
**வானோடை தன்னி லேஓர்**
**செழுங்கதிர் மாணிக்கத்துச்**
**செழும்பழம் முழுகும் மாலை**
**செங்குத்தாய் உயர்ந்த குன்றின்**
**மரகதத் திருமேனிக்கு**
**மங்காத பவழம் போர்த்து**
**வைத்தது வையங் காண!**

—அழகின் சிரிப்பு, குன்றம், ப. 18.

என்று மாலைநேரக் குன்றத்தை விளக்குகிறார்.

தங்கத்தை உருக்கிவிட்டாலெனத் துலங்கும் வானத்து ஓடையில் செங்கதிர் மூழ்கும் நேரம் மாலைக் காலமாகும். மூழ்கும் இடம் குன்றமாகும். பச்சைமலையில் பவழம் போர்த்தது போல மாலைக்கதிர் குன்றத்தில் மறைகிறது.

அருவிகள் வயிரமாலையாகவும், அடர்ந்த கொடிகள் பச்சைப்பட்டுத் துணிகளாகவும், குருவிகள் தங்கக் கட்டிகளாகவும், குளிர்ந்த மலர்கள் மாணிக்கக் கற்களின் குவியலாகவும் தோற்றுகின்றன. எருதின்மேற் பாயும் வேங்கை போல், நிலவுமேல் எழுந்த மின்னல் போலச் சருகுகள் மேலெல்லாம் ஒளிசேர் தங்கத் தகடுகளாக விளங்குகின்றன.

நீலமுக் காட்டுக்காரி
நிலாப் பெண்ணாள் வற்றக்காய்ந்த
பாலிலே உறைமோர் ஊற்றிப்
பருமத்தால் கடைந்து, பானை
மேலுற்ற வெண்ணெய் அள்ளிக்
குன்றின்மேல் வீசிவிட்டாள்;
ஏலு மட்டுந்தோ ழாநீ!
எடுத்துன்பாய் எழிலையெல்லாம்

—அழகின் சிரிப்பு குன்றம், ப. 21

என்று எழில் பெற்ற குன்றத்தை வகையுற வருணிக்கிறார் கவிஞர்.

நீலமுக்காட்டுக் காரியாகிய நிலவாகிய பெண்ணாள், வற்றக்காய்ந்த பாலிலே உறைமோர் ஊற்றிப் பருமத்தால் கடைந்து, பானை மேலுற்ற வெண்ணெயை அள்ளிக் குன்றின்மேல் வீசி விட்டாள். அவ்வெழிலை இயன்ற மட்டும் எடுத்துண்ணுவாய் என் தோழா! என்கிறார் கவிஞர்.

**ஆறு**

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்பர். சங்க காலத்தில் 'வழி' என்ற பொருளையும் குறித்த இச்சொல் இன்று நீரோட்டமாகிய ஆற்றையே குறித்து வழங்குகிறது.

ஆறு ஊருக்கு அழகூட்டுகின்றது; நீரூட்டுகின்றது; குளிர்ச்சி தருகின்றது; கண்ணுக்குக் கவினுறு காட்சி நல்கு கின்றது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆற்றினை அழகு பட வருணித்துள்ளார்.

ஒரே வகை ஆடை பூண்ட
பெரும்படை, ஒழுங்காய் நின்று
சரேலெனப் பகைமேற் பாயும்
தன்மைபோல் ஆற்று வெள்ளம்,
இராவெல்லாம் நடத்தல் கண்ட

**இருகரை மரங்கள் தோல்வி**
**வராவண்ணம் நெஞ்சால் வாழ்த்தி**
**மலர்வீசும் கிளைத்தோள் நீட்டி**

—அழகின் சிரிப்பு, ஆறு, ப. 24.

என்று ஆற்று வெள்ளத்தின் வெள்ளத்தையும், அதன் கண்குளிர் காட்சியழகையும், கரையோர மரங்களின் மலர்க்கிளையையும் வருணிக்கின்றார்.

வெள்ளம் இரு கரையிலும் மோதித் ததும்புகின்றது: அக்கரைகள் தங்கச் சரிவுகளாகின்றன. துறையோ முத்துத் தடுக்குகளாகின்றது. மீன்கொத்திப் பறவைகள் சுழல் கின்றன. நீரில் மிதந்து செல்லும் மரங்களின்மேல் அமர்ந்திருக்கும் நாரையொன்று வெண்டாழம் பூப்போன்று விளங்குகின்றது. அதுபோது எழும் உவப்பினுக்கு எல்லை யில்லை.

**இருகரை ததும்பும் வெள்ள**
**நெளிவினில் எறியும் தங்கச்**
**சரிவுகள்; துறையோ முத்துத்**
**தடுக்குகள்; சுழல்மீன்கொத்தி**
**மரகத வீச்சு நீரில்**
**மிதக்கின்ற மரங்களின்மேல்**
**ஒருநாரை வெண்டாழம்பூ**
**உவப்புக்கோ உவமை இல்லை**

என்று சொல்லோவியம் துலங்கும் பாட்டைச் சித்திரிக் கிறார் பாவேந்தர்.

நூற்றுக்கு நூறுபேர் நோய் தீர்ந்து வறுமை தீர்ந்தனர். கலப்பை தூக்கிய உழவர் குடிப் பெருமக்கள் ஒய்வின்றி உழவுப்பணி ஆற்றினர். தான் பெற்ற குழந்தைகளின் மகிழ்ச்சிகண்டு ஆற்றுத்தாய் சிலம்படி குலுங்க நடக் கின்றாள். இந்த வையகம் தழைக்க என வாழ்த்து கின்றாள்.

சேய்களின் மகிழ்ச்சி கண்டு
சிலம்படி குலுங்க ஆற்றுத்
தாய்நடக் கின்றாள் வையம்
தழைகவே தழைக என்றே

— அழகின் சிரிப்பு, ஆறு, ப.25.

என்று கூறி ஆற்று வருணனையை முடிக்கின்றார்.

**செந்தாமரை**

கண்ணுக்குக் கவினுறு காட்சி வழங்குவது செந்தாமரையாகும். ''பூவெனப் படுவது பொறி வாழ் பூவே'' எனத் தாமரை மலரைத் தமிழ் இலக்கியங்கள் குறிக்கும். செந்தாமரை குறித்த செய்திகளைப் பாவேந்தர் கவினுற விளக்குகிறார்.

கண்ணாடித் தரையின் மீது
கண்கவர் பச்சைத் தட்டில்
எண்ணாத ஒளிமுத் துக்கள்
இறைந்தது போல்கு ளத்துத்
தண்ணீரி லேப டர்ந்த
தாமரை இலையும், மேலே
தண்ணீரின் துளியும் கண்டேன்
உவப்போடு வீடு சேர்ந்தேன்

— அழகின் சிரிப்பு, செந்தாமரை, ப. 26.

கண்ணாடித் தரையின்மீது காணும் பச்சைத் தட்டில் கிடத்தப் பெற்ற ஒளிமுத்துக்கள் போல, குளத்துத் தண்ணீரிற் படர்ந்த தாமரை இலைமேல் முத்துத் துளிகள் போன்ற நீர்த்திவலைகள் என்ற உவமை உன்னத்தக்கது.

மணிஇருள் அடர்ந்த வீட்டில்
மங்கைமார் செங்கை ஏந்தி
அணிசெய்த நல்வி ளக்கின்
அழகிய பிழம்பு போலத்
தனிஇலைப் பரப்பிற்செந்

**தாமரைச் செவ்வரும்பு**
**பிணிபோக்கி என்வி ழிக்குப்**
**படைத்தது பெருவி ருந்தே**

— அழகின் சிரிப்பு, செந்தாமரை, ப. 27.

இருள் மிகுந்த வீட்டில் எழில்மிகு நங்கையர் தம் செங்கைகளில் மணிவிளக்கேந்தி அணிசெய்தல் போலத் தாமரை இலைப்பரப்பில் செந்தாமரைச் செவ்வரும்புகள் முகிழ்த்துக் கவிஞரின் இரு விழிகளுக்குப் பெருவிருந்து படைத்தன. இங்குப் பெண்களின் கைவிளக்குகளுக்கும், செந்தாமரை மலர்க்கும் உவமை கூறியிருப்பது அவர்தம் உணர் நுட்பத்தை அறிய முடிகிறது.

**விண் போன்ற வெள்ளக்காடு**
**மேலெலாம் ஒளிசெய் கின்ற**
**வெண்முத்தங் கள்கொ ழிக்கும்**
**பச்சிலைக்காடு, மேலே**
**மண்ணுளார் மகிழும் செந்தா**
**மரைமலர்க் காடு நெஞ்சைக்**
**கண்ணுளே வைக்கச் சொல்லிக்**
**கவிதையைக் காணச் சொல்லும்**

— அழகின் சிரிப்பு, செந்தாமரை, ப. 27.

என்று மலர்களின் மகிழ்ச்சிப் பொலிவினை மணக்கும் தமிழில் கவிஞர் கூறுகிறார். செந்தாமரை மலர் எவரையும் எளிதில் கவர்ந்து தன்பால் இழுக்கவல்லது என்பதை யறியலாம்.

**என்னை நான் இழந்தேன்; இன்ப**
**உலகத்தில் வாழ லுற்றேன்;**
**...... ...... ......**
**இன்றெலாம் பார்த்திட்டாலும்**
**தெவிட்டாத எழிலின் கூத்தே!**

என்று இயற்கையின் அழகுக் கூத்துக்களையும், அதன்பால் அவர் கொண்ட ஈடுபாட்டையும் அறியலாம்.

## ஞாயிறு

ஞாயிறு — கதிரவனைப் போற்றாத தமிழ் நூல்கள் இல்லை. ''உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு'' என்பர் திருமுருகாற்றுப்படை தந்த நக்கீரர். எழுஞாயிற்றினை மக்கள் தொழு ஞாயிறாகக் கொண்டனர். ''ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்'' என்றார் சிலம்பு தந்த சீர்சால் கவிஞர் இளங்கோவடிகள். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரும் ஞாயிற்றின் சிறப்பையெல்லாம் தெளிவுறக் காட்டுகின்றார்.

ஞாயிறு ஒளிப்பொருள்! உலகிற்கு ஒரு பொருள். நெஞ்சத்திற் களிப்பை விளைவிக்கும். கூத்தைச் சேர்க்கும் கனற்பொருள். ஆழமான நீரினின்று வெளிப்படுவதுபோல் எழுகின்றது. வானக் கூரையிலெல்லாம் பொன்னை அள்ளித் தெளிக்கின்றது. கடற்பரப்பில் அலைமோதும் அலைகளிலெல்லாம் ஒளியூட்டுகின்றது.

> விண்ணெலாம் பொன்னை அள்ளித்
> தெளிக்கின்றாய்; கடலிற் பொங்கும்
> திரையெலாம் ஒளியாய்ச் செய்தாய்
>
> —அழகின் சிரிப்பு, ஞாயிறு, ப. 30.

பொங்கியும் பொலிந்தும் நீண்ட புதுப்பிடரி மயிர் சிலிர்க்கும் சிங்கம் நிகர்த்த ஞாயிறே! வான வீதியில் தகதகவென எரியும் நெருப்புப் பிழம்பே! மாணிக்க மலையே! தீர்ந்த தங்கத்தின் தட்டே! வான அகலில் ஏற்பட்ட பெருவிளக்கே! என்று வருணிக்கிறார்.

> மங்காத தணற்பி ழம்பே!
> மாணிக்கக் குன்றே; தீர்ந்த
> தங்கத்தின் தட்டே! வானத்
> தகளியிற் பெருவிளக்கே
>
> —அழகின் சிரிப்பு, ஞாயிறு, ப. 31.

என்று வியக்கிறார். அழகில் மூழ்குகிறார்.

**வான்**

வானம் பார்க்கப் பார்க்க வண்ணவண்ண அழகைத் தருகிறது. ஒவ்வொரு நேரத்தில் வானம் ஒவ்வொரு காட்சியை வழங்குகிறது. வைகறை வானம் வேறு; காலை வானம் வேறு; நண்பகல் வானம் வேறு; மாலை வானம் வேறு; முன்னிரவு வானம் வேறு; நள்ளிரவு வானம் வேறு. வகை வகையான காட்சி வழங்கும் வானம் என்றைக்குமே கண்கொள்ளாக் காட்சிதான். வெயில் வான் வேறு; மழைவான் வேறன்றோ!

தொடக்கத்திலேயே விண்மீன்கள் நிறைந்த வானைக் காட்டும் கவிஞர் தம் பொதுவுடைமைக் கருத்தினைப் புகுத்திப் புதுநோக்கில் பாடியுள்ள திறம் காணலாம்.

''இம்மண்மீது உழைப்பவர்கள் எல்லாம் வறுமை வாய்ப்பட்டவர்கள், செல்வர்கள், வறியவர்கள், உரிமை கேட்டால் புண்மீதில் அம்பு பாய்ச்சும் புலையராய்த் திகழ்கிறார்கள்.'' பகற்பொழுது முழுவதும் கண்டு கொண்டிருக்கிற வானம் இராப் பொழுதில் விண்மீன் களாய்க் கொப்பளித்தெழுகிறதாம். கவிஞரின் கற்பனை,

மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம்! உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர் செல்வராம், இதைத்தன்
கண்மீதில் பகலி லெல்லாம்
கண்டுகண் டந்திக் குப்பின்
விண் மீனாய்க் கொப்பளித்த
விரிவானம் பாராய் தம்பி!

—அழகின் சிரிப்பு, வான், ப. 34.

என்று வடிவெடுக்கிறது.

கிழக்குப்பெண் விட்டெறிந்த
கிளிச்சிறைப் பரிதிப்பந்து
செழித்த மேற்றிசை வானத்தில்

**செம்பருத் திப்பூங் காவில்**
**விழுந்தது! விரி விளக்கின்**
**கொழுந்தினால் மங்கை மார்கள்**
**இருள்மாற்றிக் கொடுக்கின் றார்கள்**

—அழகின் சிரிப்பு, வான், ப. 35.

என்று அந்தி நேரத்தை வருணிக்கின்றார்.

**உச்சியில் இருந்த வெய்யோன்**
**ஓரடி மேற்கில் வைத்தான்**
**நொச்சியின் நிழல் கிழக்கில்**
**சாய்ந்தது!**

—அழகின் சிரிப்பு, வான், ப. 37.

என மாலையின் வருகையைப் படம் பிடிக்கிறார்.

'வானம் எவ்வளவு பெரியது; அதனோடு ஒப்பிட்டு உன்னை நீ எண்ணிப் பார். இப்பூவுலகம் ஒரு கொய்யாப் பிஞ்சு என்றால் நீ அதில் ஒரு சிற்றெறும்பு. மக்கள் அனைவரும் அவ்வாறே அமைந்திருக்க, நான் மேல், நீ கீழ் என்று மக்கள் பேசுவதெல்லாம் பித்தேறியவர் பேச்சேயன்றோ!' என்று வான் தந்த பாடமாம் சமத்துவ நோக்கினை வடித்துத் தருகிறார் புரட்சிக் கவிஞர் — இயற்கைக் கவிஞர் பாரதிதாசன்.

**ஆல்**

விண்ணுற வோங்கி மண்ணில் விழுது பரப்பித் தழைத்து வளர்ந்திருக்கும் ஆலமரம் காணக் கண்கோடி வேண்டும். மன்னன்படை தங்கும் பாங்குடைய மரம்; அம்மரத்தினை வருணிக்கும் கவிஞர் கூற்றில் நகைச்சுவை கொப்பளித்து வருவதனையும் காணலாம்.

**ஆயஊர் அடங்கும் நீழல்**
**ஆலிடைக் காணலாகும்**
**நீலவான் மறைக்கும் ஆல்தான்**
**ஒற்றைக்கால் நெடிய பந்தல்**

—அழகின் சிரிப்பு, ஆல், ப. 38.

வானை மறைக்கும் ஒற்றைக்கால் பந்தலாகக் கவிஞர் ஆலினைக் காண்கிறார்.

இலைச்சந்தில் குரங்கின் வாலை
எலியென்று பருந்திழுக்கும்

—அழகின் சிரிப்பு, ஆல், ப. 39.

பருந்து குரங்கின் வாலை எலியென்று நினைத்து இழுக்கும். இக்காட்சி நனி நகை பயப்பதாகும்.

ஆலங்கிளையிற் பாம்பு தொங்க, அதனை விழுதென்று எண்ணிக் குரங்கு தொட்டுவிட்டு, 'விளக்கினைத் தொட்ட பிள்ளை வெடுக்கெனக் குதித்ததைப் போல் 'கிளைதொறும் குதித்துத் தாவிக் கீழேயுள்ள விழுதுகளையெல்லாம் ஒளியுடைய பாம்புகளென்று கருதி, உச்சிக் கிளைக்குச் சென்று, தன் வாலையே பாம்போவென அச்சத்துடன் கண்டு மருளும். நகைச்சுவை கொப்பளிக்கும் அக்காட்சியினை வடித்து நிற்கும் பாடல் வருமாறு:

கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று, குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல்
கிளைதொறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதையெல்லாம்
ஒளிப் பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்

— அழகின் சிரிப்பு, ஆல், ப. 40.

அடுத்து, இயற்கையில் இலங்கும் ஒரு காட்சி கொண்டு மாந்தர் கற்க வேண்டிய 'நன்றி' யெனும் பாடத்தைக் கற்பிக்கின்றார்.

ஆலமரத்தினைக் காற்று மோதும்; நான் அசைவேனோ எனச் சிரித்துத் தன் அழகுக் கிளைகள் எல்லாம் குலுங்க அடிமரக் குன்று அசையாமல் நிற்கும். இதுகாறும்

தாலாட்ட ஆளின்றித் தவிப்பெய்திய கிளைப் பறவைகளெல்லாம் தாங்கள் கால்கள் வைத்திருந்த கிளைகள் ஆடக் காற்றுக்கு நன்றி கூறும்.

ஆலினைக் காற்று மோதும்
அசைவேனா எனச் சிரித்துக்
கோலத்துக் கிளை குலுங்க
அடிமரக் குன்று நிற்கும்!
தாலாட்ட ஆளில்லாமல்
தவித்திட்ட கிளைப் புள்ளெல்லாம்
கால்வைத்த கிளைகள் ஆடக்
காற்றுக்கு நன்றி கூறும்

— அழகின் சிரிப்பு, ஆல், ப. 41.

இவ்விரு பாடல்களும் கவிதையின் சிறந்த பெற்றியினையெல்லாம் சிறக்க உணர்த்தி நிற்கின்றன. 'ஆலினைக் காற்று மோதும், அசைவனோ எனச் சிரித்துக் கோலத்துக் கிளை குலுங்க அடிமரக்குன்று நிற்கும்' ஆகா! என்ன அழகான கற்பனை! என்ன அழகான வண்ணச்சித்திரம்! 'தாலாட்ட ஆளில்லாமல் தவித்திட்ட கிளைப்புள் எல்லாம் கால்வைத்த கிளைகளாடக் காற்றுக்கு நன்றி கூறும்! என்ன காட்சி ஓவியம்! என்ன அரிய பண்பாடு! பாவேந்தர் பாரதிதாசனார் ஒருவரே இவ்வாறு கவிதை புனைய இயலும்!

**புறாக்கள்**

பல்வேறு வண்ணப் புறாக்கள் கண்ணுக்கு விருந்து: காட்சிக்கு மாட்சி; புறாக்கள் வாழ்வு கொண்டு மாந்தர்க்கு ஒழுங்கினையும் ஒழுக்கத்தினையும் கற்பிக்கின்றார்; பாவேந்தர் — இயற்கைக் கவிஞர்.

புறாக்களின் பன்னிறத்தைப் படம் பிடித்துக் காட்டும் கவிஞரின் வண்ணங்கள் வருமாறு:

இருநிலா இணைந்துபாடி இரையுண்ணும்! செவ்வி தழ்கள்
விரியாத தாமரைபோல் ஓர்இணை! மெல்லியர்கள்
கருங்கொண்டை! கட்டி ஈயம்; காயாம்பூக்கொத்து! மேலும்
ஒருபக்கம் இருவா ழைப்பூ! உயிருள்ள அழகின் மேய்ச்சல்
— அழகின் சிரிப்பு, புறாக்கள், ப. 42.

கருங்குரங்குகளின் அகவாழ்வினைக் கூறிக் கற்பொழுக்கத் திண்மையின் எல்லையினைக் 'கருத்தோட்கர வீரன்' என்னும் சங்கப்புலவர் (குறுந். 66) வற்புறுத்தியுள்ளார். இயற்கைக் கவிஞர் பாவேந்தனார் புறாவின் ஒழுக்கத்தினைக் கூறுமுகத்தான் மனித சமுதாயத்தின் களைகளுக்கு மாற்றுக்கூறி அறிவுரை புகட்டுகின்றார். அப்பாடல் வருமாறு:

ஒருபெட்டை தன்ஆண் அன்றி
வேறொன்றுக் குடன்படாதாம்;
ஒருபெட்டை மத்தாப்பைப்போல்
ஒளிபுரிந்திட நின்றாலும்
திரும்பியும் பார்ப்பதில்லை
வேறொருசேவல்! தம்மில்
ஒருபுறா இறந்திட்டால்தான்
ஒன்று மற்றொன்றை நாடும்!
— அழகின் சிரிப்பு, புறாக்கள், ப. 43.

கற்புடன் வாழமுடியாதபடியும், சில புறாக்கள் செய்வதுண்டு. ஒரு சில புறாக்கள் தவறுதலாகத் தவறி நடக்கும் சில மனிதர்களிடமிருந்து தகாத பாடத்தைக் கற்றுக் கொண்டு விட்டனவாம். பெண்புறா வருந்தும்வண்ணம் தவறிழைக்கும் ஆண்புறா அப்பழக்கத்தைக் கவலை மிக்க மக்களிடமிருந்தேதான் கற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

அவள் தனி ஒப்பவில்லை;
அவன் அவள் வருந்தும் வண்ணம்
தவறிழைக்கின்றான் இந்தத்

தகாதசெயல் தன்னை, அன்பு
தவழ்கின்ற புறாக்கள் தம்மில்
ஒருசில தறுதலைகள்
கவலைசேர் மக்களின்பால்
கற்றுக்கொண்டிருத்தல் கூடும்

— அழகின் சிரிப்பு, புறாக்கள், ப. 44.

தலைதாழ்த்திக் குடுகுடென்று ஓடிவந்து தன்னைச் சுற்றும் ஆண் புறாவைக் கொலை பாய்ச்சும் கண்ணால் பெண்புறா திரும்பிப் பார்த்து 'இங்கு வா' என்றழைக்கும். மலைகாட்டி அழைத்தாலுந்தான் மையல் உற்றார் மறுப்பாரோ? என்று கூறும்போது குறிஞ்சிப்புணர்தல் கூறப் படுதலை உணரலாகும்.

தலைதாழ்த்திக் குடுகுடென்று
தனைச்சுற்றும் ஆண்புறாவைக்
கொலைபாய்ச்சும் கண்ணால், பெண்ணோ
குறுக்கிற்கென்றே திரும்பித்
தலைநாட்டித் தலையைக் காட்டி
'இங்குவா' என அழைக்கும்
மலைகாட்டி அழைத்தா லுந்தான்
மறுப்பாரோ மையல் உற்றார்

— அழகின் சிரிப்பு, புறாக்கள், ப. 44

தாய் இரையுண்டு கூட்டிற்குச் சென்று அங்குவதியும் தன் குஞ்சுகளின் வாயில் அவ்விரையைச் செலுத்தும். குஞ்சு தாயின் வாய்க்குள் தன் மூக்கை வைக்கும். தாய் தான் சாப்பிட்டதைக் கக்கித் தன் குஞ்சின் குடல் நிரப்பும். தாய் ஊட்டி ஓய்ந்ததும் தந்தை ஊட்டும். இவ்வாழ்வு அன்பிற்கோர் அடையாளமான வாழ்க்கையாகும்.

தாய் இரை தின்ற பின்பு
தன்குஞ்சைக் கூட்டிற்கண்டு
வாயினைத் திறக்கும்; குஞ்சு
தாய்வாய்க்குள் வைக்கும் மூக்கைத்

தாய் அருந்தியதைக் கக்கித்
தன்குஞ்சின் குடல்நி ரப்பும்!
ஓய்ந்ததும் தந்தை ஊட்டும்!
அன்புக்கோர் எடுத்துக் காட்டாம்!

—அழகின் சிரிப்பு, புறாக்கள், ப. 44.

வானத்திற் சுழற்றிய கூர்வாள் போலப் புறாக்கள் கூட்டமாய்ப் பறந்து போகும். இவ்வாறு உரிமையுடன் வானிற் பறந்து திரிபவை மாலை நேரத்திற் கொத்தடிமைகள் போலக் கூட்டை வந்தடையும். வேலன் கூட்டினை வந்து சாத்தினான். வண்ணம் குழைத்துத் தீட்டப்பட்ட ஓவியம் திரையிட்டு மறைக்கப்பட்டுவிட்டது என்கிறார்.

## கிளி

கிளியினைக் கவிஞர் வருணித்துள்ள பாடலைப் படிக்கும்பொழுது, கோலக்கிளியே நம்கண் முன்னர் வந்து நிற்கின்றது.

இலவின் காய் போலும் செக்கச்
செவேலென இருக்கும் மூக்கும்
இலகிடு மணத்தக்காளி
எழில்ஒளி செங்காய்க் கண்ணும்
நிலைஒலி தழுவும் மாவின்
நெட்டிலை வாலும், கொண்டாய்!
பலர் புகழ் நின்ற பச்சைப்
பசுங்கிளி! வாராய்! வாராய்!

—அழகின் சிரிப்பு, கிளி, ப. 46.

கிளியின் இருவகைப் பேச்சினைக் குறிப்பிடும்போது, 'கனியிருப்பக் காய் கவரும்' மனிதர் மடைமையினைக் கவிஞர் சாடுகின்றார்.

காட்டினில் திரியும்போது
கிரீச்சென்று கழலு கின்றாய்;
கூட்டினில் நாங்கள் பெற்ற
குழந்தைபோல் கொஞ்சு கின்றாய்!
வீட்டிலே தூத்தம் என்பார்
வெளியிலே பிழைப்புக் காக
ஏட்டிலே தண்ணீர் என்பார்
உன்போல்தான் அவரும் கிள்ளாய்!

—அழகின் சிரிப்பு, கிளி, ப. 48.

**இருள்**

இறைவன் படைப்பில் எதுவுமே வீணாகப் படைக்கப் பட்டதில்லை. வெயிலின்றேல் நிழல் அருமையைத் துய்க்க முடியாது. அதுபோல் ஒளியின் பெருமையினை அறிய இருள் துணை செய்கின்றது.

ஆடி ஓடி வாடி அலுத்துப்போய் இருக்கும் வைய மக்களை ஓடி அணைக்கிறது இருள்.

அடிக்கடி உடையில் மாற்றம்
பண்ணுவாய் இருளே, உன்றன்
பகல்உடை தங்கச் சேலை!
வெண்பட்டாம் இராச் சேலைமேல்
வேலைப்பா டென்ன சொல்வேன்!

—அழகின் சிரிப்பு, இருள், ப. 50.

என்று இருளைப் பெண்ணாகக் காண்கிறார்.

இருள் உறையும் இடங்களைக் கூறும்போது,

உயர்ந்துள்ள அழகு மூக்கின்
இருபுறம் உறைவாய்; மங்கை
கயல்விழிக் கடையில் உள்ளாய்

—அழகின் சிரிப்பு, இருள், பக். 52.

**சிற்றூர்**

சிற்றூர் நாட்டின் செல்வம்; உயிர்நாடி. அதனை வருணிக்கிறார் கவிஞர்.

நன்செயைச் சுற்றும் வாய்க்கால்
நல்லாற்று நீரை வாங்கிப்
பொன்செயும் உழவு செய்வோன்
பொழுதெலாம் உழவு செய்தேன்
என்செய்தாய்! என்ற பாட்டை
எடுத்திட்டான்; எதிரில் வஞ்சி
முன்செய்த கூழுக் கத்தான்
முடக்கத்தான் துவையல் என்றாள்

—அழகின் சிரிப்பு, சிற்றூர், ப. 57

என்று சிற்றூரையும், அங்கு வாழும் உழவர்களின் இன்ப, ஏழ்மை நிலையினையும், அவர்களின் உழைப்பின் பெருமையினையும் படம் பிடிக்கிறார் இயற்கைக் கவிஞர்.

**பட்டணம்**

சிற்றூருக்கு மறுதலையான காட்சி வழங்குவது பட்டணம்.

இயற்கையின் உயிர்கட் குள்ளே
மனிதன்தான் எவற்றினுக்கும்
உயர்ச்சியும் தான் அறிந்த
உண்மையை உலகுக் காக்கும்
முயற்சியும் இடைவிடாமல்
முன்னேற்றச் செயலைச் செய்யும்
பயிற்சியும் உடையான் என்று
பட்டணம் எடுத்துக் காட்டும்!

—அழகின் சிரிப்பு, பட்டணம், பக். 58

என்று பட்டணத்தின் சிறப்பை விளக்குகின்றார் கவிஞர்.

படைமக்கள் சிட்டுப் போலப்
பறப்பார்கள் பயனை நாடி
—அழகின் சிரிப்பு, பட்டணம், ப. 58.

என்று நகர மக்களின் இயந்திர வாழ்க்கையை விளக்குவார்.

உள்ளத்தில் உள்ளதை ஏட்டில் வடிக்கும் அறிஞர்கள் கூட்டமும் கொள்கை ஒன்றிருக்க வேறு கொள்கைக்கே அடிமையாகும் வெள்ளுடை தரித்த எழுத்தாளர்கள் கூட்டமும் பட்டணத்தில் காணலாம்.

கொள்கை ஒன்றிருக்க வேறு
கொள்கைக்கே அடிமையாகும்
வெள்ளுடை எழுத்தா ளர்கள்
வெறுப்புறும் செயலும் கண்டேன்
—அழகின் சிரிப்பு, பட்டணம், பக். 59

என்ற பட்டணத்தின் போலி வாழ்வைப் படம் பிடிக்கிறார்.

சிற்றூர்க்கும் பேரூர்க்குமுள்ள வேறுபாட்டினைக் கவிஞர் பின்வருமாறு கூறுவார்.

இயற்கையின் எழிலையெல்லாம்
சிற்றூரில் காண ஏலும்
செயற்கையின் அழகை யெல்லாம்
பட்டணம் தெரியக் காட்டும்
முயற்சியும் முழுதுழைப்பும்
சிற்றூரில் காணு கின்றேன்;
பயிற்சியும் கலையு ணர்வும்
பட்டணத் திற்பார்க் கின்றேன்!
—அழகின் சிரிப்பு, பட்டணம், பக். 60

இவ்வாறாக இயற்கைக் கவிஞர், பாவேந்தர் பாரதிதாசன் அழகின் சிரிப்பில் இயற்கையைப் படம் பிடிக்கிறார். இந்நூல் இயற்கையின் அழகைப் பாடிய பாவேந்தரின் ஈடுபாட்டை விளக்குகிறது.

1. இயற்கையை அழகுக்காகவும்
2. இயற்கையின்மூலம் மக்களுக்கு அறிவூட்டவும்

இப்பகுதியில் கவிஞர் இயற்கையைப் பயன்படுத்தியுள்ளார். 'அழகின் சிரிப்பு' என்ற நூலின் தலைப்பு மிகப் பொருத்த மாகவே அமைந்துள்ளது.

பாவேந்தர் பாரதிதாசன் அழகின் சிரிப்பில் மட்டு மல்லாது பிற கவிதை நூல்களிலும் இயற்கையைப் பற்றிப் பாடியுள்ளார். அவற்றை இங்குக் காண்போம்.

தென்றல்

**இழுத்திழுத்து மூடுகின்றேன்**
**எடுத்தெடுத்துப் போடு கின்றாய்**
**பழிக்க என்றன் மேலாடையைத் தென்றலே—உன்னைப்**
**பார்த்து விட்டேன் இந்தச்சேதி ஒன்றிலே**
—பாரதிதாசன் கவிதைகள், நான்காம் தொகுதி, ப. 31.

என்று தென்றலைப் பாடுகிறார். அழகின் சிரிப்பில் 'பொதிகைத் தென்றலின்' இனிமையைப் பாடிய கவிஞர் இங்குத் தென்றலின் தெவிட்டாத இன்பச் செயலைப் பாடுகிறார்.

அடுத்துத் தமிழர்தம் பகுப்புமுறையைக் காற்றைப் பலவிதமாக—காற்று வரும் திசை குறித்துப் பெயரிட் டழைப்பதைக் குறிப்பிடுமுகமாக,

**காற்றென்ற பேர் இருக்கத்**
**தென்றலென்ற பேர் ஏன்?**
**சிறப்புநிலை காட்ட அன்றோ?**
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப, 102.

என்று பாடுகின்றார்.

தென்றலின் அருமையை — இனிமையைப் பற்றிக் கூறும்போது,

**வேகவைக்கும் கோடை—அதை**
**விழுந்தவிக்கும் தென்றல்**

*—பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 3, ப. 149.*

என்று நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்பதை விளக்குகிறார்.

இரண்டாம் தொகுதியில் இடம்பெற்றுள்ள 'தென்றல்' என்னும் கவிதை, கருத்தாழமுடையது. கற்பனையுணர்ச்சி கெழுமியது. தென்றலைத் திறம்படக் கவிஞர் காட்டு கின்றார்.

**அந்தியில் இளமுல்லை சிலிர்க்கச் செங்நெல்**
**அடிதொடரும் மடைப்புனலும் சிலிர்க்க என்றன்**
**சிந்தை உடல் அணு ஒவ்வொன்றும் சிலிர்க்கச்**
**செல்வம் ஒன்று வரும்! அதன்பேர் தென்றற்காற்று**

என்று நவமான — நயமான முறையில் கிளத்துகின்றார்.

கவிஞர் அந்தியில் கொல்லையில் மனைவியாரோடு இருந்தார். தென்றல் இதமாய் வீசிற்று. வெந்தயத்துக் கலயத்தைப் பூனை தள்ளி விட்டதெனக் கவிஞர்தம் மனைவியார் அறைக்குள் போனார். தனித்திருந்த விசுப்பலகையில் கவிஞர் படுத்தார். பக்கத்தில் அமர்ந்து சிரித்துப் பேசிப் பழந்தமிழின் காற்றோடே காதல் சேர்த்து நிற்காமல், பூனையை ஓட்டச் சென்ற பூவையார்மீது அடங்காத சினம் வந்தது கவிஞருக்கு. பிரிவால் வேதனை யுற்றார் கவிஞர். மனைவியாரின் உடற் குளிர்ச்சி, மென்மை, மணம் இவற்றை நுகர நினைவு கொண்டார். பின்னர் நடந்தது என்ன?

**தெரியாமல் பின்புறமாய் வந்த பெண்ணாள்**
**சிலிர்த்திடவே எனைநெருங்கிப் படுத்தாள் போலும்!**
**சரியாத குழல் சரிய லானாள் போலும்!**
**தடவினாள் போலும் எனைத் தன்க ரத்தால்!**

**புரியாத இன்பத்தைப் புரிந்தாள் போலும்!**
**புரியட்டும் என இருந்தேன்; எதிரில் ஓர்பெண்**
**பிரிவுக்கு வருந்தினே னென்றாள் ஓகோ!**
**பேசுமிவள் மனைவிமற் றொருத்தி தென்றல்!**

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 2, ப. 28.

கண்முன் காட்சித் திரையினை விரிக்கும் அழகுச் சித்திரம் இது!

**நிலவு**

'நிலவு' எல்லாக் கவிஞர்களையும் கவர்பொருளாக அமைந்துள்ளது. அந்நிலவினை எல்லாச் சமயத்தாரும் போற்றி வணங்குவர். இதை, தமது நான்காவது கவிதைத் தொகுதி (பா. க. தொகுதி 4)யில் பாவேந்தர், பல சமயச் சிறுவர்களும், சுயமரியாதை இயக்கச் சிறுவனும் கூறு முகமாக அமைத்துள்ளார். இங்கு அவருடைய பொது வுடைமைத் தத்துவம் புலனாகும். பாடல் வருமாறு:

**துருக்கச் சிறுவன்**

**...மூன்றாம் பிறையாய்த் தோன்றுங்காலை**
**என்கூட்டத்தார் உன்னைத் தொழுவார்**
**ஆதலாலே அழகுநிலவே**
**துருக்கருக்குச் சொந்தப் பொருள் நீ!**

**கத்தோலிக்கச் சிறுவன்**

**கன்னி மரியாள் உன்மேல் நிற்பாள்**
**ஆதலாலே அழகு நிலவே**
**கத்தோலிக்கச் சொத்து நீதான்!**

**இந்துச் சிறுவன்**

**எங்கள் சிவனார் முடியில் இருப்பாய்**
**ஆதலாலே அழகு நிலவே**
**இந்து மதத்தார் சொந்தப் பொருள் நீ!**

**சுயமரியாதைச் சிறுவன்**, மற்றப் பிள்ளைகளைக் குறித்து

**...யாவரும் மனிதர் என்பது தெரிந்தால்**
**நிலவும் பொதுவே என்பது தெரியும்**
**அறிந்து வாழ்வீர் அன்பர் கூட்டமே.**

*—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 4, பக், 225—226.*

*மாலையில் ஒளி மங்கி, இருள் தன் போர்வையை எங்கும் விரித்த பின்னர், இருட்பகை போக்கிட எழுகின்ற எழில் நிலாவினைப் பாடிய கவிஞர் பலர். ஆனாலும், நம் கவிஞர் நிலவை வண்ணமுற வருணிக்கின்றார். அவ்வருணனையின் இடையே தமது கருத்தினையும் பொருத்தமுறப் புகுத்தியுள்ளார். அழகாட்சி புரியும் நிலாப்பற்றிய அவர் கவிதைகளில் மூன்றினைப் படிக்கும் பொழுது அவரை உலகக் கவிஞர்* (Universal Poet) *என்று ஒரு மனமாகப் பாராட்ட வேண்டியிருக்கிறது. கற்பனை* (Imagination), *உணர்ச்சி* (Emotion), *வடிவம்* (Form) *கருத்து* (Content) *ஆகிய நான்கும் அமைந்த அவர் பாடல்:*

**நீலவான் ஆடைக்குள் உடல்மறைத்து**
**நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தைக்**
**கோல முழுதுங் காட்டி விட்டால் காதற்**
**கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்**
**சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்!**
**சொக்கவெள்ளிப் பாற்குடமோ? அமுத ஊற்றோ**
**காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்**
**கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ!**
**அந்தி யிருளாற் கருகும் உலகு கண்டேன்;**
**அவ்வாறே வான் கண்டேன்; திசைகள் கண்டேன்;**
**பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?**
**பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்!**
**சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்**
**சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி**

'இந்தா என்றே' இயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்திரித்த வண்ணந் தானோ!
உனைக்காணும் போதினிலே என்னு ளத்தில்
ஊறிவரும் உணர்ச்சியினை எழுதுதற்கு
நினைத்தாலும் வார்த்தை கிடைத்திடுவதில்லை
நித்திய தரித்திரராய் உழைத்து ழைத்துத்
தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால் பானை ஆரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின்நிலவே! உனைக்காணும் இன்பந் தானோ!

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 20.

இப்பாடலின்கண் அமைந்துள்ள 'நிலவைக் காணும் இன்பம் வெண்சோறு காணும் இன்பம்' என்று பாடியிருப்பது நனி நினைந்து போற்றற்குரியதாகும். 'இயற்கை வருணனையே என்றாலும், மக்கள் வாழ்வுதான் உயிர் நாடி; உரிப்பொருளே முதலிடம் பெறுவது' என்கிற சங்கத் தமிழ் மரபு, சித்தர் பாட்டு இப்பாடலில் விளக்கமுறக் காணலாம்.

பகுத்தறிவு நினைவுடன் பாடிய இன்னொரு பாடல்:

முழுமைநிலா! அழகுநிலா!
முளைத்தது விண்மேலே—அது
பழமையிலே புது நினைவு
பாய்ந்தெழுந்தாற்போலே!
அழுதமுகம் சிரித்தது போல்
அல்லி விரிந்தாற்போல்—மேல்
சுழற்றி எறிந்த வெள்ளித்தட்டுத்
தொத்திக் கிடந்தாற்போல்.

—இளைஞர் இலக்கியம்.

நிலாவின் அழகு அனைத்தையும் அப்படியே சித்திரித்துக் காட்டுகிறது. குழந்தைகளுக்குப் பாடும்போது,

வானத்தூ ரார் வந்தார் — அவர்
மத்தாப் பைப்போல் நின்றார்
மீனுக் கெல்லாம் சொன்னார் — மேல்
மினுக்க வேண்டும் என்றார்
நானும் அவரைப் பார்த்தேன் — அவர்
தாமும் என்னைப் பார்த்தார்
ஏனோ வந்து குலவார்? — கீழ்
இறங்கு வாரா நிலவார்?

—இளைஞர் இலக்கியம், ப. 32.

என்றும்,

வில்லடித்த பஞ்சு
விட்டெறிந்த தட்டு
முல்லைமலர்க் குவியல்
முத்தொளியின் வட்டம்
நல்வயிர வில்லை
நானில விளக்கு
மெல்ல இங்கு வாராய்
வெண்ணிலாவே நேராய்
வீற்றிருக்கும் அன்னம்
வெள்ளைத்தா மரைப்பூ
ஊற்றிய பசுப்பால்
உண்ணவைத்த சோறு
ஆற்றுநடுப் பரிசில்
அழகுவைத்த தேக்கம்
மாற்றமில்லை வாராய்
வானிலவே நேராய்

—இளைஞர் இலக்கியம், ப. 36.

என்றும் நிலவின் எழிற்றன்மையைப் பல நிலைகளில் விளக்குகின்றார்.

நீலவான்மீது தோன்றும்
கோலமென்ன சொல்வேன் தோழி நீலவான்மீது...
ஞாலமெங்கும் குளிரும் ஒளியும்
நல்கும் திங்கள் அங்குக் கண்டேன் நீலவான்மீது...
முத்துக்குவியல் இறைந்த துண்டோ?
முல்லைக்காடோ கூட்ட வண்டோ?
புத்தம் புதுநிலா விண் சிரிப்புப்
புனிதத் தாரகை எனத் துளிர்த்ததோ? நீலவான்மீது...
அழகு காட்டி இயற்கை அன்னை
அன்பு கொள்ளச் செய்தாள் என்னை
பழகப் பழக, என்கண் முன்னே
பண்ணும் புதுமை என்னே! என்னே! நீலவான்மீது

—தேனருவி, ப. 92.

என்று நிலவின் அழகை விளக்குகின்றார். 'திங்கள் ஒளி பெறல் செழுங்கதிர் வரவால்' (காதலா? கடமையா?, ப.19) என்று அறிவியல் உண்மையை விளக்குகின்றார்.

மண்காண முகில் கிழித்து நிலவுவந்து
மற்றவர்கள் நமைக்காண வைத்தல் காண்பாய்!

—பாண்டியன் பரிசு; இயல் 38, ப.65.

என்று நிலவின் தோற்றத்தையும், ஒளியையும் குறிக்கின்றார்.

இவ்வாறாகப் பாவேந்தர் — இயற்கைக் கவிஞர் நிலவின் அழகில் ஈடுபட்டுக் கவிதை தந்துள்ளார்.

**காலை வருணனை**

காலை புலர்தலையும் கதிரவன் தோற்றத்தையும் கவிஞர் கவிதையாக்கும் நிலையினை இப்பகுதிக்கண் காண்போம்.

**விடிந்தது! தங்க வெயில் வந்தது!**
**மடிந்தது காரிருள்! மடிந்தது பனிப்புகை!**
**பசும்புல் கதிரொளி பட்டு விளங்கின!**
**விசும்பிற் காக்கைகள் பொன்னென விளங்கின**

*—பாரதிதாசனின் காதல் பாடல்கள், ப. 183.*

என்று விடியலையும் அப்போது தோன்றும் காட்சியினையும் விளக்குகிறார்.

**இளங்கதிர் கிழக்கில் இன்னும் எழவில்லை**
**இரவுபோர்த்த இருள் நீங்கவில்லை**
**ஆயினும் கேள்வியால் அகலும் மடமைபோல்**
**நள்ளிரவு மெதுவாய் நடந்து கொண்டிருந்தது!**
**தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த**
**கலப்பென இருள் தன் கட்டுக் குலைந்தது.**

*—குடும்ப விளக்கு, ப.5.*

**எழுந்தது பரிதிக் குழந்தை! கடலின்**
**செழுநீலத்தில் செம்பொன் தூவி!**
**கரிய கிழக்குவான் திரையில், வெளுப்பும்**
**மஞ்சளும் செம்மணி வண்ணமும் ஒளிசெயும்!**
**எழும்! வளைந்து நெளிந்து விழும்கடல் அலையே**
**அழகிய தென்பாங் காடற் கலையே**
**புதிய காலையில் புதிய பரிதியின்**
**எதிரில் அடடா சதிர்க்கச்சேரி;**
**கிழக்கில் திராவிடர்க்குக் கிடைத்த கடல்முரசு**
**முழக்குவோன் இன்றி முழங்கும் இசையரசு!**

*—குடும்ப விளக்கு, தொகுதி 3, ப.40.*

என்று காலையில் எழும் கதிரோனையும், கடலின் இசைக்கச்சேரியையும் குறிப்பிடுகிறார்.

**மாங்கனியும் நீதான்—அந்த**
**வானம் எனும் தோப்பில்?**

*—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 147.*

என்று வானத்தைத் தோப்பாகவும், கதிரை மாங்கனி யாகவும் உருவகம் செய்கிறார்.

**கிழக்கு மலரணையில் தூங்கிக் கிடந்து**
**விழித்தான்; எழுந்தான்; விரிகதிரோன் வாழி!**
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 167.

என்று கதிரவன் தோற்றத்தை வருணித்து, அவன் வரவால்,

**எழுந்தன புட்கள்; சிறகடித்துப் பண்ணே**
**முழங்கின! ஏருழவர் முன்செல் எருதை**
**அழிஞ்சிக் கோல்காட்டி அதட்டலும் கேட்டீர்**
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப.167

என்று கூறுகிறார்.

**தங்கம் உருக்கிப் பெருவான் தடவுகின்றான்**
**செங்கதிர்ச் செல்வன்!**
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 168.

என்று கதிரோனின் செயலை விவரித்து, மக்களை விளித்து,

**தேர்கவி கொள்ள அமர்ந்து செழும்பரிதி**
**ஆர்கலிமேற் காட்சி அளிக்கின்றான் கீழ்த்திசையில்**
**ஊர் மலர்ந்தும் உங்கள் விழிமலர ஒண்ணாதோ?**
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 168.

என்றும்,

**மன்னிய கீழ்க்கடல்மேல் பொன்னன் கதிர்ச்செல்வன்**
**துன்னினான் இன்னும்நீர் தூங்கல் இனிதாமோ?**
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 169.

என்றும் கூறி மக்களை இயங்க வைக்கிறார். மேலும்,

**செஞ்சூட்டுச் சேவல்கள் கூவின கேட்டீரோ**
**மிஞ்சும் இருள்மீது பொன்னொளி வீழ்ந்ததுவே!**
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 168.

என்றும்,

நீல உடையூடு பொன்னிழை நேர்ந்ததென
ஞால இருளின் நடுவில் கதிர்பரப்பிக்
கோலஞ்செய் கின்றான் இளம்பரிதி!
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 169.

என்றும்,

அருவி, மலை, மரங்கள் அத்தனையும் பொன்னின்
மெருகுபடுத்தி விரிகதிரோன் வந்தான்
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 169.

என்றும்,

காலைக் கதிரவன் கடல் அலைகளில்
மேலெல்லாம் ஏற்றும் மெருகின் அசைவையும்
—குறிஞ்சித்திட்டு, ப. 7.

என்றும்,

நடுக்கடலில் இளங்கதிர்தான் நுனிமுளைக்கும்
வேளையிலே கதிர்காட்டின் மேற்கினின்று
—பாண்டியன் பரிசு, இயல் 62, ப. 176.

என்றும், காலையில் கதிரோன் வருகையைக் கூறுகின்றார் கவிஞர். இங்குப் பெரும்பாலான பாடல்களில் தங்கத்தையே உவமை கூறியிருப்பது நோக்கத்தக்கது.

இவ்வாறு பாவேந்தர் பாரதிதாசனார் காலைக் கதிரோனைப் பாடியுள்ளார்.

## அந்தி

காலைக்கதிரவனையும், ஞாயிற்றையும், பாடிய கவிஞர் கதிரவன் மறையும் நேரமாகிய அந்தியையும் பாடுகின்றார்.

புனலும் நிலாவொளியும் — அங்குப்
புதுமை செய்தே நெளிந்தோடும்! மரங்களில்
இனிது பறந்து பறந் தங்கும்
இங்கும் அடங்கிடும் பாடிய பறவைகள்

**தனிஒரு வெள்ளிக்கலம் — சிந்தும்**
**தரளங்கள் போல்வன நிலவு நட்சத்திரம்**
**புனையிருள் அந்திப்பெண்ணாள் — ஒளி**
**போர்த்ததுண்டோ எழில் பூத்ததுண்டோ**
—*பாரதிதாசன் கவிதைகள்,* தொகுதி 1, ப. 90-91

என்று நிலா ஒளி தோன்றுதலையும், பறவைகள் கூடுகளில் அடங்குதலையும் கூறுகின்றார்.

**முல்லையிலே சிரித்தபடி தென்றலிலே சொக்கி**
**முன்னடியும் பெயர்க்காமல் இன்னும் இருக்கின்ற**
**பொல்லாத மாலைக்குப் போக்கிடமோ இல்லை**
—*காதல் நினைவுகள் 'இன்னுமவள் வரவில்லை',* ப. 14.

என்று கூறும்போது, சங்க இலக்கியங்கள் கூறும் முல்லைநில உரிப்பொருள் இங்குக் கூறப்படுதலை யறியலாம்.

**காரும் மாலையும் முல்லை** —தொல்; பொருள். 6.

என்பதில் இங்கு மாலைப் பொழுது கூறப்படுகிறது.

தலைவன் வரவை எதிர்பார்த்து இல்லில் இருக்கின்றாள், தலைவி; வினைமுடித்துத் திரும்பி வருகின்றான் தலைவன். இதுவே முல்லைத் திணைக்குரிய உரிப்பொருள். இங்குத் தலைவன் தலைவியை எதிர்பார்த்து இருப்பது போல் கூறப்பட்டுள்ளது. அக இலக்கிய மரபில் பிற்காலத்தில் நேர்ந்த மாற்றங்களில் இதுவும் ஒன்று எனலாம்.

**வானவில்**

**எய்யா வரிவில்** —அகம். 192.

**வானத்துக்குறைவில்** —பெரும்பாணா. 292.

**விசும்பு அணிவில்** —அகம். 210.

என்று சங்க இலக்கியங்கள் வருணிக்கும் வானவில்லை இயற்கைக் கவிஞர்—பாவேந்தர் பாரதிதாசனார் அவர்கள் சித்திரம் தீட்டும் காட்சி இதோ!

புதுமை இது! வானிடைக் கண்ட அவ்வோவியம்
போய் முகிற்புனலிலே நொடிதோறும் கரைந்ததே!
இது அது எனச்சொல்ல ஏலா தொழிந்ததே!
இன்பமும் துன்பமும் யாவுமே இவ்வண்ணம்
கதுமெனத் தோன்றிடும் மறைந்திடும் என்பதைக்
கண்ணெதிர்க் காட்டவரும் விண்எழுது கவிதையாம்
அது நமக்குத் தெரியும்; அன்றியும் கவிஞருளம்
அவ்வான விரிவினும் பெரிதன்ப தறிவமே!

—*பாரதிதாசன் குயில் பாடல்கள், ப. 25.*

வானவில்லை வருணித்து, வானவில் போன்று மனித வாழ்வில் இன்பமும் துன்பமும் கதுமெனத் தோன்றிடும் என்று கூறுகிறார். கவிஞருளம் வானவிரிவினும் பெரிதானது என்று கூறுவது உண்மையாதலைப் பாவேந்தர் பாடல்கள் மூலம் உணரலாம்.

**வான்**

எங்கும் பரவிப் பரந்து, உலகிற்குக் கூரையாக அமைந்திருக்கும் வானப்பெருவெளியைப் பாவேந்தர்,

ஒவ்வொரு நினைவும், உன்றன்
உலகிற்கே! செயல் ஒவ்வொன்றும்
இவ்வைய நன்மைக்கே என்
றெண்ணுதல் பெற்றாயாகில்
செவ்வையாம் நினைவுண்டாகும்
செயலெல்லாம் நல்லவாகும்!
அவ்'வானின்' நோக்கம் காண்பாய்!
அதன்பெரும் செயலைக் காண்பாய்!

—*காதலா? கடமையா? ப. 132.*

என்று விளக்கி,

தமக்குஎன முயலா நோன்தாள்,
பிறர்க்குஎன முயலுநர் உண்மை யானே —*புறம். 182.*

என்று கூறும் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி பாட்டிற் கேற்பக் கூறுதலை யறியலாம்.

வான் உலக நன்மையை ஆற்றுதல் போல, மனிதர் களும் உலக நன்மைக்காக மனம், மொழி, செயல்களால் பாடுபடவேண்டுமென்று கூறுகின்றார். இங்குப் பாவேந் தரின் அற உள்ளமும் பொதுவுடைமைப்பற்றும் புலப் படுகின்றன.

**மழை**

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. —குறள் 5.

என்ற பொதுமறைக்கேற்ப,

எங்கும் உளதுமழை
என்றும் உளதுமழை
தங்கும் உலகுயிரைச்
சாவாது காக்குமழை
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, பக். 104.

என்று உலக உயிர்களைச் சாவாது காப்பாற்றுவது மழை யென்று புகழ்கிறார்.

மழையே அமிழ்து;
மழையே உலகை
அழியாது காப்பாற்றும்
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 101.

என்றும் பாடுகிறார். மழையைப் போற்றுமுகமாக,

மாமழை போற்றுதும்
மாமழை போற்றுதும்
நாம நீர் வேலி
உலகுக் கவனளிபோல்

மேல்நின்று தான்சுரத்த
லான் என்றிளங்கோ
தானுரைத்த செய்யுள்
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 96.

என்று இளங்கோவடிகளின் சீர்சால் சிலப்பதிகார மேற்கோளை யெடுத்துக் காட்டுகிறார்.

வான்நின் றிமிழும்
மழைதான் அமிழ்தென்று
நீ நன்றறிந்தாயா
நேரிழையே இப்போது?
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 97.

என்று மழையே அமிழ்து என்று மழையின் பெருமையை உரைக்கின்றார்.

மழையுண்டாகும் முறையையும், மழைபொழியும் ஒழுங்கையும்,

மாக்கடல் முகந்து, மாதிரத்துஇருளி
மலர்தலை உலகம்புதைய, வலன் ஏர்பு
பழங்கண் கொண்ட கொழும்பல் கொண்மூ
போழ்ந்த போலப்பல உடன் மின்னி
தாழ்ந்த போலநனி அணி வந்து,
சோர்ந்த போலச் சொரிவன பயிற்றி,
இடியும் முழக்கும் இன்றி, பாணர்
வடிஉறு நல்யாழ் நரம்புஇசைத் தன்ன
இன்குரல் அழிதுளி தலைஇ, நன்பல
பெயல்பெய்து கழிந்த பூநாறு வைகறை
—அகம். 374.

என்ற பாடலில் இடைக்காடனார் என்னும் புலவர் வனப்புறக் கூறியுள்ளார்.

மேகத்திரள் கடலுள் சென்று நீரை முகந்துகொள்கின்றது. நீர் ஏறஏற நிறத்தின் கருமைச்செறிவும் மிகுகிறது; அகன்ற உலகம் முழுவதும் இருளுமாறு திசையெலாம் பரவிக் கவிகின்றது. கார்மேகம், விண்ணகப் பரப்பிலே சுழன்று முழங்குகின்றது. விண்ணைப் பிளப்பது போல மின்னற் கொடிகளை வீசுகின்றது. நிலத்திற்கு அண்மையில் தாழ்ந்து வந்து முற்றிக் கவிப்பது போல் மழை பொலிகிறது. ஆனால் விண்ணகத்தின் மேற்பரப்பில் இருந்த இடியின் கடுமுழக்கம் இங்கே இல்லை; மழைத் துளிகள் ஒழுங்குபெற இழுமென விழுந்திடுகின்றன; அவற்றின் இன்னோசை இனிய யாழ் நரம்பிசை போல் கேட்கின்றது என்பது அப்பாடல் கருத்தாகும்.

இதுபோன்ற கருத்தமைந்த பாடலைப் பாவேந்தர் பாடியுள்ள திறம் காண்போம்.

முற்றும் கேள்; வெப்பம்
முகந்தநீ ரேமுகிலாம்
குற்றமறக் கொண்டநீர்
கொண்டல்; அக்கொண்டலோ
மேற்போய் இருந்தநிலை
விண்வான் விசும்பென்பார்
காற்றால் கருமைபெறக்
காராகும்; காரிதான்
மழைக்கும் நிலையில்
மழையாம்; மழைதான்
தழைய அமிழ் உண
வாவது தான் அமிழ்து

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 103.

என்று மழை உண்டாகிப் பெய்யும் நிலையைக் குறிப்பிடுகின்றார்.

**ஆலமரசும் விளவும் மாவும் இல்லை;**
**ஆற்றோரம் காற்றில்லை; அனைத்தும்பாலை**
—குறிஞ்சித்திட்டு, ப. 42.

என்று பாலை நிலத்தை விளக்குகிறார்.

**மயில்**

இயற்கையாக நிகழும் நிகழ்ச்சியின்மேல் கவிஞன் தன் குறிப்பினை ஏற்றிக் கூறுதல் 'தற்குறிப்பேற்றவணி' என்பது. கவிஞர் நீண்ட கழுத்துடைய மயிலோடு பேசும் பேச்சில் நகைச்சுவை கொப்பளிப்பதனைக் காணலாம். ஊடே ஓர் உளவியல் உண்மையையும் அவர் உணர்த்துகின்றார்.

**நீயும் பெண்களும் நிகர் என்கிறார்கள்;**
**நிசம் அது! நிசம்! நிசம் நிசமே யாயினும்**
**பிறர்பழி தூற்றும் பெண்கள் இப்பெண்கள்;**
**அவர் கழுத்துஉன் கழுத் தாகுமோ சொல்வாய்!**
**அயலான் வீட்டில் அறையில் நடப்பதை**
**எட்டிப் பாரா திருப்பதற்கே**
**இயற்கை அன்னை, இப்பெண் கட்கெலாம்**
**குட்டைக் கழுத்தைக் கொடுத்தாள்! உனக்கோ**
**குறையொன் றில்லாக் கலாப மயிலே!**
**நிமிர்ந்து நிற்க நீள்கழுத் தளித்தாள்!**
**இங்குவா! உன்னிடம் இன்னதைச் சொன்னேன்**
**மனத்திற் போட்டுவை; மகளிர் கூட்டம்**
**என்னை ஏசும் என்பதற்காக!**
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1.

என்று கூறி மயிலை விளிக்கின்றார்.

ஆயிரம் ஆயிரம் அம்பொற் காசுகள்
ஆயிரம் ஆயிரம் அம்பிறை நிலவுகள்
மரகத உருக்கின் வண்ணத் தடாகம்
ஆனஉன் மெல்லுடல், ஆடல், உன்உயிர்
இவைகள் என்னை எடுத்துப்போயின
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 55.

என்று மயிலின் தோகையழகையும், அதன் நிற மேன்மையையும், அதன் உடல், ஆடல் முதலியவற்றையும் விளக்குகிறார் பாவேந்தர் பாரதிதாசனார்.

காக்கையைப் பற்றிக் குறிப்பிடும்போது, காக்கையின் இன உணர்வைப் புலப்படுத்துகிறார்.

> **ஆக்கிய சோறு கொஞ்சம் சிந்திக் கிடக்கும்! காக்கை**
> **அழைத்துத்தன் இனத்தோடு குந்திப் பொறுக்கும்**
>
> —காக்கை: 29.

என்று தான் மட்டும் உண்ணாத காக்கையின் சிறப்பை விளக்குகின்றார். திசைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது,

> **கதிர் முளைப்பது கிழக்கு—அதன்**
> **எதிர் இருப்பது மேற்கு**
> **முதிர் இமையம் வடக்கு—அதன்**
> **எதிர்க்குமரி தெற்கு**
>
> —இளைஞர் இலக்கியம், ப. 63.

என்று குழந்தைகள் மனம் பற்றுமாறு குறிப்பிடுகின்றார்.

**இட வருணனை**

'முதற்பொருள்' எனப் போற்றப்படும் நிலம் — நில வருணனை பல சங்கப் பாடல்களில் வரும். பாலைக் கலியில் வரும் பாலை நில வருணனை நெஞ்சை உருக்குவதாகும்.

இயற்கைக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் சஞ்சீவி பருவதத்தின் சாரலைக் குறிப்பிடும்போது,

> **குயில் கூவிக் கொண்டிருக்கும்; கோலம் மிகுந்த**
> **மயிலாடிக் கொண்டிருக்கும்; வாசம் உடையநற்**
> **காற்றுக் குளிர்ந்தடிக்கும்; கண்ணாடி போன்றநீர்**
> **ஊற்றுக்கள் உண்டு; கனி மரங்கள் மிக்க உண்டு;**
> **பூக்கள் மணங்கமழும்; பூக்கள்தோறும் சென்றுதே**
> **னீக்கள் இருந்தபடி இன்னிசைபா டிக்களிக்கும்;**
> **வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு**

காட்டு மறவர்களும் காதல்மணம் செய்வதுண்டு
நெஞ்சில் நிறுத்துங்கள்; இந்த இடத்தைத்தான்
சஞ்சீவி பர்வதத்தின் சாரல்என்று சொல்லிடுவார்
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 1.

என்று கூறி ஒரு பெரிய விளக்கம் தருகிறார்.

இவ்வாறாகப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் இயற்கையின் இன்பத்தைப் பலவாறாகப் பாடியுள்ளார். மேலும் இயற்கையையும் அமிழ்தாக எண்ணப்படும்போது,

பொங்கல் அமிழ்துதான்
பொய்யில்லை கட்டிக்
கரும்பும் அமிழ்து
கனி அமிழ்து முல்லை
யரும்பமிழ்து தேனமிழ்து
அப்பம் அமிழ்து
குழந்தை குதலை
மொழியமிழ்து குன்றாப்
பழந்தமிழும் பாட்டும்
அமிழ்து தமிழ்ப்பண் அமிழ்து
திங்கள் அமிழ்து
திகழ் ஆவின் பாலமிழ்தே
இங்கெனக்கு நீ அமிழ்து
நானுனக் கெப்படியோ!
வாய்மை அமிழ்து
மடிசுமந்து பெற்றுவக்கும்
தாய்மை அமிழ்து
தனிஇன்ப வீடமிழ்து
தென்றல் அமிழ்து நறுஞ்
செவ்விள நீரமிழ்து
ஒன்றல்ல எல்லாம்
அமிழ்தென் றுரைக்கலாம்
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 43.

என்று பாடி வருகிறார்.

''நல்லழகு வசப்பட்டால் துன்பமில்லை'' என்ற பாவேந்தர் கருத்து இங்கு மேலும் வலுப்படுத்தப்படுகிறது.

## பொது நோக்கு

பாவேந்தர் பாரதிதாசன் இயற்கையை எவ்வெவ்வகைகளில் பயன்படுத்தியுள்ளார் எனப் பொதுவாக நோக்கும்போது, அ. கி. பரந்தாமனார் பகுத்துள்ள முறையைப் பின்பற்றலாம். அ. கி. பரந்தாமனார் தமிழ்ப் புலவர்கள் ஐந்து வகையாக இயற்கையைப் பயன்படுத்தியுள்ளதாகப் பகுக்கின்றார்கள்.[13]

1. இயற்கையளிக்கும் காட்சியழகில் ஈடுபட்டுச் சித்திரிப்பது.
2. இயற்கையை உவமையில் பயன்படுத்துவது.
3. இயற்கையைப் பயன்படுத்திக் குறிப்பாகக் கருத்தைத் தெரிவிப்பது.
4. இயற்கையை மனித வாழ்வுடன் இணைத்துக் காட்டுவது.
5. இயற்கையின் வாயிலாக அரிய நீதிகளையும் பெரிய உண்மைகளையும் தெரிவிப்பது.

இவ்வைந்து வகைகளிலும் பாவேந்தர் கண்ட இயற்கை அடங்குகின்றது எனலாம்.

இயற்கையின் காட்சியழகில் ஈடுபட்டுச் சித்திரிப்பதற்கு, அழகின் சிரிப்பில் (அழகு-1) அழகினைப் பெண்ணாகக் கண்டின்புற்ற பாடலை,

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்!
கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன்! அந்தச்
சோலையிலே, மலர்களிலே தளிர்கள் தம்மில்
தொட்டஇடம் எல்லாம் கண்ணில் தட்டுப்பட்டாள்
— அழகின் சிரிப்பு, அழகு, ப. 1.

போன்றவற்றைக் காட்டாகக் காட்டலாம்.

**வேம்பின் பழம்பூ விரிந்ததைப்போல**
**ஈயின் கூடும் எறும்பின் கூடும்.**

— இருண்ட வீடு, ப. 22.

இப்பாடலில் ஈயின் கூட்டையும் எறும்பின் கூட்டையும் வேம்பின்பூ விரிந்திருப்பதற்கு ஒப்புவகையாகக் காட்டு கிறார். இது போன்ற பாடல்களை 'இயற்கையை உவமை நிலையில் பயன்படுத்துவது' என்ற நிலைக்குச் சான்றாகத் தரலாம்.

உழைப்பவர் வறியராகவும் அவர் மனப் புண்ணிலே அம்பு பாய்ச்சும் புலையர்கள் செல்வராகவும் இருக்கும் ஏற்றத்தாழ்வு தம் மனத்தில் ஏற்படுத்திய வெறுப் புணர்ச்சியை வெளியிட இயற்கையின் துணையை நாடுகிறார் கவிஞர். விண்மீன்கள் நீந்தும் எந்த வானத்தைப் பலாப் பழமும் சுளைகளும் என வருணித்தாரோ அதே இரவு வானம் இப்போது உள்ள வெப்பத்தால் கொப்பளித்த உடம்பாகத் தெரிகிறது.

**... ... ... இதைத்தன்**
**கண்மீதில் பகலிலெல்லாம்**
**கண்டுகண் டந்திக்குப் பின்**
**விண்மீனாய்க் கொப்பளித்த**
**விரிவானம் பாராய் தம்பி**

— அழகின் சிரிப்பு, வான், ப. 34.

என்று தம் வெறுப்பில் எழுந்த துயரத்தை வெளியிடு கின்றார்.

இது போன்ற பாடல்கள் பல அவர் பாடல்களில் உள்ளன. இவற்றை இயற்கையைப் பயன்படுத்தித் தம் கருத்தை வெளியிடல் என்ற நிலைக்கு உதாரணமாகக் காட்டலாம்.

**அவள் தனி ஒப்பவில்லை**
**அவன், அவள் வருந்தும் வண்ணம்**
**தவறிழைக்கின்றான் இந்தத்**

**தகாச்செயல் தன்னை, அன்பு**
**தவழ்கின்ற புறாக்கள் தம்மில்**
**ஒருசில தறுதலைகள்**
**கவலைசேர் மக்களின்பால்**
**கற்றுக் கொண்டிருத்தல் கூடும்.**

— அழகின் சிரிப்பு, புறாக்கள், ப. 44.

இப்பாடலில் மக்களைக் கண்டு புறாக்கள் தவறிழைக்கக் கற்றுக் கொண்டதாகக் கூறி இயற்கையை மனித வாழ்வுடன் இணைத்துக் காட்டுகிறார்.

அறிவிலிகள் அரற்றுவது இயற்கையே. ஆகையால் பெரியவன் சிறியவன் என்ற பாகுபாடெல்லாம் தவறானது என்ற அறிவுரையைக் கவிஞர் புகட்டுகின்றார். வானம், உலகு முதலியவற்றின் அளவு கண்டு ஏற்பட்ட வியப் புணர்ச்சியோடு தத்துவார்த்தமான அறிவுரைகளையும் தருகின்றார். இதில் கவிஞரின் ஆன்மிக வளர்ச்சியும் தெளிவாகின்றது.

**எத்தனை பெரிய வானம்!**
**எண்ணிப்பார் உனையும் நீயே**
**இத்தரை, கொய்யாப்பிஞ்சு**
**நீ அதில் சிற்றெறும்பே**
**அத்தனை பேரும் மெய்யாய்**
**அப்படித் தானே மானே?**
**பித்தேறி மேல்கீழ் என்று**
**மக்கள்தாம் பேசல் என்னே?**

— அழகின் சிரிப்பு, வான், ப. 33.

என்பன போன்ற பாடல்களில் இயற்கையின் மூலம் அரிய நீதிகளையும் பெரிய உண்மைகளையும் உரைக்கின்றார்.

‘‘பிற்காலத்து இலக்கியங்களில் குறிப்பிட்ட சில பொருள்களுக்குக் குறிப்பிட்ட சில உவமைகளைச் சுட்டுவது மரபாகி விட்டது; அந்த உவமைகளை விளக்கும்

தொடர்கள் ஒரே மாதிரியாகத் திரும்பத்திரும்ப வருவதைக் காணலாம்''[14] என்று டாக்டர் மு. வரதராசனார் கூறுவது போலப் பாரதிதாசன் பாடல்களில் காலையில் சூரியன் உதயமாகும் வண்ணத்தைக் குறிக்கும்போது,

விடிந்தது! தங்க வெயில் வந்தது

என்றும்,

எங்கும் விழுந்தது தங்கத் தூற்றல்

என்றும்,

விண்ணையெல்லாம் பொன்னை அள்ளித் தெளிக்கின்றாய்

என்றும்,

பகல் உடை தங்கச்சேலை

என்றும்,

எழுந்தது பரிதிக் குழந்தை, கடலின்
செழுநீலத்தில் செம்பொன் தூவி!

என்றும்,

தங்கம் உருக்கிப் பெருவான் தடவுகின்றான்
செங்கதிர்ச் செல்வன்

என்றும்,

செஞ்சூட்டுச் சேவல்கள் கூவின கேட்டீரோ
மிஞ்சும் இருள்மீது பொன்னொளி வீழ்ந்ததுவே

என்றும்,

நீல உடையூடு பொன்னிழை நேர்ந்ததென

என்றும், .

அருவி, மலை, மரங்கள் அத்தனையும் பொன்னின்
மெருகு படுத்தி விரிகதிரோன் வந்தான்

என்றும்,

எல்லாவிடங்களிலும் பொன்னையே உவமிக்கின்றார் பாவேந்தர் பாரதிதாசன்.

சங்க இலக்கியங்களில் இயற்கை மனித வாழ்வின் பின் புலமாக அமைந்ததைப் போலப் பாரதிதாசன் பாடல் களிலும் அமைந்துள்ளது. காலச் சூழலின் காரணமாகவும், பாவேந்தர் புரட்சிக் கவிஞர் ஆதலாலும் சில கருத்துகள் மாறியுள்ளன. பாவேந்தர் பாடல்களில் பொதுவுடைமை, பகுத்தறிவு இயக்கம் போன்ற பின்னணிகள் இயற்கை மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

'பாரதிதாசன் பாடல்களில் இயற்கை' என்று எண்ணும் போது, அழகுக்காகவும், தன் கருத்தை வெளியிட்டு இயற்கை மூலம் அறிவுறுத்துவதற்காகவும் பயன்படுத்தி யுள்ளார்.

இயற்கையைச் சிறந்த முறையில் பாடியுள்ளதால் இவர் [4]'இயற்கைக் கவிஞர்' எனப் போற்றப்படுகிறார். இச் சிறப்புப் பெயர் இவருக்கு முற்றிலும் பொருத்தமானதே.

## அடிக்குறிப்புகள்

1. அ. ச. ஞானசம்பந்தன், இன்றைய இலக்கியம், பக். 81-83.

2. சங்க இலக்கியச் சொற்களஞ்சியம், திருவாவடு துறை ஆதீனம், 1965.

3. ஆராய்ச்சி இதழ், அக்டோபர் 1972, 'பாரதி தாசனும் கடவுட்கொள்கையும்', ப. 142.

4. டாக்டர் பீ. நசீமுதீன், பாரதிதாசன் பாடல்களில் இயற்கை, ப. 123.

5. மு. வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப. 11.
6. பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப. 12.
7. மேற்படி, பக். 28-29.
8. பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப. 48.
9. மேற்படி, ப. 46.
10. மேற்படி, ப. 600.
11. மேற்படி, ப. 20.
12. மேற்படி, ப. 22.
13. டாக்டர் பீ. நசீமுதீன், பாரதிதாசன் பாடல்களில் இயற்கை, ப. 17. (எடுத்தாளப்பட்டுள்ளது.)
14. மு. வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப. 479.

# II

# பாரதிதாசன் பாடல்களில் இலக்கியம்

மனித இனத்தின் வாழ்வியல் நெறிகளை—உணர்வுச் சுழிப்புகளை, அனுபவ உண்மைகளைக் காலப் பின்னணியோடு மொழி என்னும் ஊடகத்தின் வழியே உரைப்பது இலக்கியம். எனவே இலக்கியம் காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி எனச் சுட்டப் பெறுகிறது. இந்தப் பொது வரையறையோடு நில்லாமல் மேலும் சில கருத்துகள் இலக்கியத்தை விளக்கும் முகத்தான் கூறப்படுகின்றன.

> உள்ளத்திற்கு இன்பம் ஊட்டும் கற்பனை நிறைந்த நூல்களைப் பொதுவாக இலக்கியம் என்று நினைக்கிறோம். படிக்கப் படிக்க நமது நெஞ்சத்தைக் கவரும் நடை, உள்ளத்திற்கு மகிழ்ச்சியை/இன்பத்தை உண்டாக்கும். கருத்து நம்மைச் சிந்திக்கத் தூண்டும். சிறந்த மொழிகள், ஒருமுறை படித்தபின் வீசி எறிந்து விடாமல் மீண்டும் படிக்க வேண்டும் என்னும் எண்ணத்தை எழுப்பும் தன்மை, அப்படியே திரும்பவும் படிக்கச் செய்யும் செயல், படித்தவைகளில் உள்ள பல செய்திகள் அப்படியே நம் உள்ளத்தில் தங்கிவிடும் இயல்பு, நமது வாழ்க்கையிலே தவறு நேராமல் நல்லமுறையில் நடந்து கொள்ளவேண்டும் என்னும் எண்ணத்தை உண்டாக்கும் சக்தி; பலதிறப்பட்ட அரிய பொருள்களை நாம் அறிந்து இன்புறச் செய்யும் பணி[1]

ஆகியன நிரம்பிய நூல்கள் இலக்கியங்களாகின்றன. இந்த இயல்புகள் நிரம்பிய நூல்கள் செய்யுளாயினும் உரை நடையாயினும் அவை இலக்கியங்களே எனத் துணிந்து கோடலாம்.

இவ்வகை இலக்கியங்கள் கவிதை, சிறுகதை, புதினம், நாடகம், கட்டுரை எனப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் கவிதை இலக்கியம் காலத்தால் முற்பட்டது; தொன்மையானது. இன்றைய நிலையில், இலக்கியம் பல வகைகளைக் கொண்டது என்பதை அனைவரும் ஏற்பர். எனினும் அண்மைக்காலம் வரையில் இலக்கியம் என்றால் அது கவிதையை மட்டுமே சுட்டி நின்ற தன்மையை மறுப்பவர் இலர். தமிழ்மொழியில் மட்டுமன்றி, கீழ்த்திசை நாடுகளிலும் கவிதையொன்றே இலக்கியமாகக் கருதப்பட்டமை ஈண்டு நினைதற்குரியது. இலக்கியத்தின் பல கிளைகளுக்கும் வழிகாட்டியாகக் கவிதைக்கலை சிறப்புற்று விளங்குகிறது. எனவேதான் இலக்கியம் என்பது கவிதையின் நெகிழ்ச்சி மிக்க வடிவாகவும் கவிதை என்பது இலக்கியத்தின் செறிவுமிக்க வடிவாகவும் கருதப்படு கின்றன'[2] என்று அறிஞர் உரைப்பர்.

> இலக்கியம் என்னும் கலைக் குடும்பத்தில் மூத்த மகளாய்ப் பிறந்து விளங்கிய பாட்டு என்னும் செல்வி, தொடக்கத்தில் ஒரே செல்வ மகளாக விளங்கிய காலம் பழங்காலம். காவியம் நாடகம் அகம் புறம் முதலாய எல்லாக் குடும்பப் பொறுப்புக்களையும் அந்த மூத்த மகளே மேற் கொண்டு செம்மையாக நடத்தி வந்தாள். அவளை அடுத்துத் தங்கையர் பிறந்து வளர வளர அப் பொறுப்புக்கள் ஒவ்வொன்றாய் அவள் கையை விட்டு நழுவலாயின. இன்று அவளுடைய தங்கையர் தொடர்கதை, சிறுகதை, நாடகம், கட்டுரை முதலியன மேற்கொண்டு தமக்கையை

> விட்டுப் பிரிந்து செல்வாக்குடன் வாழ்கின்றனர். மூத்த மகளாகிய பாட்டு, பிறந்த வீட்டிலேயே நின்று, பழைய செல்வங்களைத் தங்கையர்க்கு வாரி வழங்கிய பின், தன்னுணர்ச்சி, சமுதாய உணர்ச்சி ஆகிய இருவகைப் பொறுப்புகள் மட்டும் உடையவளாய் வாழ்கின்றாள். தன் முன்னைய சீரும் சிறப்புமான பெருவாழ்வை நினைந்து இன்புறும் பேறு அவளுக்கு இன்று உள்ளது[3]

என்று கவிதையின் மேன்மையை, தொன்மையைத் தெளிவு படுத்துகின்றார் டாக்டர் மு. வ.

கலையழகு மேம்படும் கவிதையின் கூறுகளாக உணர்ச்சி, கற்பனை, கருத்து, வடிவம் என்ற நான்கும் கூறப் படுகின்றன. இவை பொதுவாக ஒவ்வோர் இலக்கியத் திற்கும் உரியவை என்றாலும் கவிதைக்கே பெரிதும் இன்றியமையாது வேண்டப்படுகின்றன. இந்த நான்கு கூறுகளின் அடியாகவே கவிதை மதிப்பிடப்படுகிறது. கவிதையை உணர்ந்து சுவைப்பதற்கும், அதன் பயன் பாட்டை மதிப்பிடுவதற்கும் என இரு நிலைகளில் இக் கூறுகள் அமைந்து சிறக்கின்றன. காட்சி, கேள்வி, உணர்வு மூன்றின் அடிப்படையில் அனுபவம் பிறக்கின்றது. பிறக்கும் அனுபவம் உணர்ச்சி மயமானது; அது கற்பனையைத் தூண்டுகிறது. அக்கற்பனை கவிஞனுக்கேற்ப மாறுபடு கிறது. கற்பனையில் திளைக்கும் கவிஞன் தன் எண்ணங் களை — குறிக்கோள்களை — எதிர்கால நம்பிக்கைகளை— தொலை நோக்குச் சிந்தனையினை வெளிப்படுத்துகிறான். அதுவே கருத்தாகக் கொள்ளப்படுகிறது. அக்கருத்து படிப்போரை எளிதில் சென்று சேரும் வண்ணம் கையாளும் இலக்கிய உத்திகள் — சொல்லாட்சி நிலைகள், ஓர் ஒழுங்கான கலைத் தன்மையை அளிக்கின்றன. அது வடிவம் எனப்படுகிறது. இவ்வாறு இக்கூறுகள் ஒன்றோடொன்று தொடர்புடைய — பிணைப்புண்ட நிலையில் பிறக்கும்

இலக்கியம் கவிதை என்ற பெயரைப் பெறுகிறது. அத்துடன் அது காலத்தைவென்று வாழும் இயல்பினையும் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. புதுவைக்குயில்—புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதைகளில் இவ்விலக்கியக் கூறுகள் செறிவாக அமைந்துள்ளன. எனவே அவருடைய கவிதைகள் கால வெள்ளத்தை வெற்றி கொள்ளுதல் திண்ணம். நிலைபேற்றுத் தன்மைக்கான இலக்கியக் கூறுகளாக உணர்ச்சி, கற்பனை, கருத்து, வடிவம் ஆகியவற்றோடு உவமை, உருவகம், வருணனை, சொல்லாட்சி ஆகியனவும் பாவேந்தரின் பாடல்களில் பளிச்சிடுகின்றன. இனி அவற்றை நோக்கலாம்.

**உணர்ச்சி**

புறநானூற்றுப் புலவரின் புதிய வாரிசாகப் புரட்சிக் கவிஞரைக் கருதலாம். வீரத்தின் விளைநிலமாய் விளங்கிய பண்டைய தமிழகத்தின் பின்னணியை நன்குணர்ந்த பாரதிதாசன் வீரவுணர்வு மிக்கோராய் விளங்கினார். நேரிய நோக்கும் நிமிர்ந்த தோற்றமும் கொண்ட கவிஞர் தமிழர் வாழ்வு, தமிழ்மொழியின் வாழ்வை ஒட்டி அமைகின்றது என்பதை உணர்த்த எழுச்சிக் கவிதைகள் பலவற்றை எழுதினார். அவற்றில் உணர்ச்சி வெள்ளம் கட்டுக்கடங்காது பாய்வதைக் காணமுடிகிறது. தமிழினம் தாழ்த்தப்படுவதை, அடிமைப்படுத்தப்படுவதைப் பொறுக்க வியலாது.

பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு
திறக்கப்பட்டது! சிறுத்தையே வெளியில் வா!
எலிஎன உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலிஎனச் செயல் செய்யப் புறப்படு வெளியில்
நம்பினை பகலினை நள்ளிருள் என்றே
சிம்புட் பறவையே சிறகை விரி! எழு!
சிங்க இளைஞனே திரும்புமுகம்! திறவிழி!

இங்குன் நாட்டுக் கிழிகழுதை ஆட்சியா?
கைவிரித்து வந்த கயவர் நம்மிடைப்
பொய் விரித்துநம் புலன்கள் மறைத்துத்
தமிழுக்கு விலங்கிட்டுத் தாயகம் பற்றி
நமக்குள உரிமை தமக்கென் பார்எனில்
வழிவழி வந்த உன் மறத்தனம் எங்கே?
மொழிப்பற் றெங்கே? விழிப்புற் றெழுக![4]

என்று தங்கத் தமிழ் இளைஞனுக்கு வீரவுணர்வூட்டி அவனைச் சிங்க ஏறாகச் சிலிர்த்திடச் செய்கிறார் பாவேந்தர். மொழி இன மானம் காப்பதில் கவிஞர் கைக்கொண்டிருந்த கொள்கை வீரச்சுவையாக — வீர உணர்ச்சியாக வெளிப்படுகின்றது.

நின்மகன் யாண்டுளன் என வினவியவனுக்கு விடையாக 'தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே' என்று கூறிய மறப்பெண்ணையும், தந்தை கணவன் இருவரையும் போரில் இழந்த பிறகும் ஒரே மகனைப் போர்க்களம் அனுப்பிய மறக்குல மங்கையையும் கவிஞர், தம் மனக்கண் முன்னர்க் கொணர்ந்ததன் விளைவே 'வீரத்தாய்' என்னும் காவியம். இதன்கண் மணிபுரி நாட்டுப் பட்டத்தரசி விசயராணியைக் கவிஞர் வீரத்திருவாய்ப் படைத்திருக்கிறார். வஞ்சகமாக நாட்டைக் கவர எண்ணிய சேனாபதி காங்கேயனை வாட்போரில் வெற்றி கொள்கிறாள் விசயராணி. அவள் கிழவர் வேடம்பூண்டு தன் மகனுக்குப் போர்ப் பயிற்சி அளிக்கின்றாள். மகன் சுதர்மன் கலைகளில் தேர்ச்சி பெற்று நாட்டையாளும் பக்குவத்தை எய்துகின்றான். இதற்கிடையில் தனக்கே முடிசூட்டுமாறு காங்கேயன் பல நாட்டு மன்னர்களை வேண்டுகின்றான்; அவர்களை அழைத்து வருகின்றான். ஆனால் உண்மை நிலை தெரிய வருகின்றது. கிழவர் வேடம் பூண்ட விசயராணி பல நாட்டு மன்னர்களும் கூடியுள்ள அவையில் காங்கேயனின் கொடுமனத்தை விளக்கியுரைக்கின்றாள்.

தாடியும் பொய்! என்றன் தலைப்பாகையும் பொய்யே!
சூடியுள்ள அங்கியும் பொய்! கொண்ட முதுமையும் பொய்!
நான் விசயராணி! நகைக்கப் புவியினிலே
ஊனெடுத்த காங்கேயன் ஒன்றும் உணர்கில்லான்!
கோழியும்தன் குஞ்சுதனைக் கொல்லவரும் வான்பருந்தைச்
சூழ்ந்தெதிர்க்க அஞ்சாத தொல்புவியில், ஆடவரைப்
பெற்றெடுத்த தாய்க்குலத்தைப் பெண்குலத்தைத்
துஷ்டருக்குப்
புற்றெடுத்த நச்சரவைப் புல்லெனவே எண்ணிவிட்டான்![5]

இது விசயராணியின் மதி நுட்பத்திற்கும், வீரப் பண்பிற்கும் சான்றாகும் பகுதியாகும். ஆமைபோல் அடங்கி ஒடுங்கி வாழுபவர்கள்தாம் பெண்கள் என்னும் மூடக் கொள்கையை ஒரு பெண்ணின் வாயிலாகவே பொய்யாக்கியுள்ளார் கவிஞர். அவர் பெண்ணுரிமைச் சிந்தனையை உணர்ச்சிகரமாக வெளியிட்டுள்ள பாங்கினைக் காண முடிகிறது.

இருக்கும் நிலை மாற்ற ஒரு புரட்சிமனப் பான்மை
ஏற்படுத்தல் பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடனாம்

என எழுத்தாளரின் கடமையைத் தெளிவுபடுத்திய கவிஞர் அவர்களுக்கு வேண்டுகோள் சிலவற்றை விடுக்கிறார்

பொதுமக்கள் நலம் நாடிப் புதுக்கருத்தைச் சொல்க!
புன்கருத்தைச் சொல்லுவதில் ஆயிரம் வந்தாலும்
அதற்கொப்ப வேண்டாமே! அந்தமிழர் மேன்மை
அழிப்பாரைப் போற்றுதற்கும் ஏடுபல வாழ்ந்தால்
எதிப்பதன்றோ தமிழர்களின் எழுதுகோல் வேலை?
ஏற்றசெயல் செய்தற்கும் ஏன் அஞ்ச வேண்டும்
உதிர்த்திடுக பொன்மலர்கள் உயர்கைகள் நன்றே
உணர்ந்திடுக உளங்கவரும் புதுமணத்தை யாண்டும்.[6]

என்பது கவிஞரின் விழைவு. புதுக்கருத்தைச் சொல்ல வேண்டும், பொருளுக்காகப் பொய்க்கருத்தை, புன்கருத்

தைக் கூறாதீர், தமிழர் மேன்மையைக் குலைக்கும் ஏடுகளை எதிர்த்துச் செயலாற்ற வேண்டும்; அஞ்சாமை எனும் உணர்வை நெஞ்சில் நிறுத்திச் செயல் படுக. அவ்வாறு செய்வதால் பொன்னனைய கருத்து மலர்கள் எங்கும் பரவி புதுமணத்தை நிரப்பும் என்ற கருத்தை விழுமிய உணர்ச்சி வெளிப்படும் வண்ணம் இழுமென் மொழியால் இயம்புகின்றார்.

தமிழின எழுச்சியை, பெண்ணுரிமையை, எழுத்தாளர் கடமையை வீரவுணர்வோடு பாடிய கவிஞர் காதல் உணர்வையும் கனிவாகப் பாடியுள்ளார். காதலுணர்ச்சி ஓசை நயமுடன் வெளிப்பட்டுப் பயில்வோர் உள்ளங்களில் ஆழமாகச் சென்று படிகிறது. தன் நெஞ்சம் நிறைந்த காதலனைக் காணாத காதலியின் உணர்வைத் துல்லியமாகக் கணக்கிட்டு அதனைச் சொற்சித்திரமாக வடிக்கின்றார் பாவேந்தர்.

**வாராத நாளெல்லாம் (நான்) வாழாத நாள்**
**—அத்தான் வாராத நாளெல்லாம்**
**வந்திட்டால் காண்பேனிங்கே சந்தனச் சோலையைத்தான்**
**— வாராத நாளெல்லாம்**
**தீராத காதல் நோயை ஓர் நொடியில் தீர்த்திடுவான்**
**செந்தமிழில் பேசிப்பேசித் தேன் கவிதை சேர்த்திடுவான்**
**பாராத நாள் எல்லாம் பாழான நாள் அத்தானைப்**
**பார்க்கும் நாள் ஒவ்வொன்றும் தைப்பொங்கல் நாள்.**[7]

காதலியின் எண்ண ஓட்டத்தை விளக்கும் எழுத்துப்படம் இது. காதலனுடன் காதலி இருக்கும்போது அவர் களிடையே நடைபெறும் நிகழ்ச்சியையும், காதலி அதனால் பெறும் மகிழ்ச்சியினையும், அவன் வாராதபோது அவளது துயர நிலையையும் கவிஞர் கலையழகு மிளிர, உணர்ச்சி நடை சலசல எனப் பயில்வோர் மாட்டுப் பாயும் வண்ணம் பாடிய பாங்கு போற்றுதற்குரியது. காதலனைப் பாராத நாள் பாழான நாள்; அவனைப் பார்க்கும் நாள்

ஒவ்வொன்றும் தைப்பொங்கல் நாள் என்ற கருத்து, சீரிய கற்பனையின் விளைவாகும். தமிழரின் விழாக்களுள் பொங்கலைப் பெரிதும் விரும்பியவர் கவிஞர். அதனை ஏற்ற இடத்தில் ஏற்றவாறெல்லாம் சிறப்புற எடுத்தியம் புதல் அவரது இயல்பு.

தமிழிலக்கியங்களில் இரு சுடர்களாகிய ஞாயிறு, திங்கள் ஆகியன விரிவாக எடுத்தோதப்பட்டுள்ளன. திங்களைப் பாடாத கவிஞர் இல்லை எனலாம். கவிஞரின் கற்பனைக்கேற்பவும், சூழலுக்கேற்பவும் திங்கள் சிறப்பிக்கப் படுகிறது. காதலனைப் பிரிந்த காதலிக்கு அது தணலாய்ச் சுடுகிறது. கவிஞர்களுக்கு இனிமை பயக்கிறது; கம்பருக்குத் தருமத்தின் வதனமாகப் பொலிகிறது. இப்படிக் கவிஞர் களின் கற்பனைக்கேற்பக் கவினுறச் சித்திரிக்கப்படும் நிலவைப் பாவேந்தர் பாரதிதாசன்,

**சுமை சுமையாய் உவப்பெடுக்க, உணர்வுவெள்ளம்**
**தூண்டிவிடப்**[8]

பாடுகின்றார். அவர் பார்வைக்குப் பசியின்றி உழைத்த மக்கள் நினைவுக்கு வருகின்றனர். அவர்கள் கூழுக்காக அலைகின்றனர்; அப்போது வெண்சோறு நிறைந்த பானை யைக் காணுகின்றனர். அவர்கள் முகம் மலர்கின்றது. அந்த மலர்ச்சியை நிலவைக் கண்டவுடன் பெறுகிறார் கவிஞர்.

**உனைக்காணும் போதினிலே என்னுளத்தில்**
**ஊறிவரும் உணர்ச்சியினை எழுதுதற்கு**
**நினைத்தாலும் வார்த்தை கிடைத்திடுவ தில்லை**
**நித்திய தரித்திரராய் உழைத்துழைத்துத்**
**தினைத் துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்**
**சிறிதுகூழ் தேடுங்கால் பானை ஆரக்**
**கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்**
**கவின்நிலவே உனைக்காணும் இன்பம் தானோ!**[9]

உணர்ச்சி நிலையில் மூழ்கிய கவிஞர் தமது உள்ளத் துணர்வை வெளிப்படுத்த வார்த்தை கிடைக்கவில்லை என்று கூறுகிறார். எனினும் அதனை அவர் வெளிப் படுத்திய பாங்கில் உணர்ச்சி வெள்ளம் வழிந்தோடக் காண்கிறோம். கவிஞரின் சீரிய சமூக உணர்வு இப்பாடற் பகுதியில் உரக்க ஒலிக்கின்றது. வறுமை நிலையிலிருந்து விடுபட்ட உள்ளம் பெறும் உவகை உணர்ச்சியைப் பாரதி தாசன் இப்பாடலில் புலப்படுத்தியுள்ளார்.

பெருமித உணர்வைப் பாடுவதிலும் கவிஞர் வல்லவ ராய்த் திகழ்கிறார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பணியைப் பாராட்டிக் கூறும்போது,

> காய்ப்பு நாளின்முன் காய்த்துப் பழுத்த மாந்
> தோப்புப் போன்ற தூய்கழகத்தாய்
> அதற்குள் எத்தனை ஆயிரம் அறிஞரை
> எத்தனை ஆயிரம் முத்தமிழ்ப் புலவரை
> ஈன்று புரந்தந்தாள்! ஈடெடுப்பில்லா
> எழுத்தாளர்களை — எத்தனை பேர்களை
> அளித்தாள்! — பொருளின் பெற்றி ஆயுநர்
> தமிழிசை வல்லுநர் அமிழ்தப் பாவலர்
> இந்தா இந்தா — என்று தந்தாள்
> ஒரு நூற்றாண்டில் தரத்தகு பயனைக்
> கால் நூற்றாண்டில் தந்தது கழகம்[10]

எனப் போற்றுகின்றார். வெள்ளிவிழாக் காணும் பல்கலைக் கழகம் ஒரு நூற்றாண்டில் செய்ய வேண்டிய பணியை இருபத்தைந்தே ஆண்டுகளில் செய்துவிட்டதை எண்ணிப் பெருமிதம் கொள்கின்றார் கவிஞர். அப்பெருமிதம் இப்பாடலில் படிந்துள்ளமை நோக்குதற்குரியது. அறிஞர், புலவர், ஆய்வாளர், பாவலர் என்றிவர்களை ஆயிரக் கணக்கில் "இந்தா இந்தா என்று தந்த" தாகக் கூறுகையில் அவர் உள்ளத்தில் ஊறும் உணர்ச்சிப் பெருக்கை நாம் உணர முடிகிறது; அவர் கொண்ட அதே உணர்ச்சியை நாமும்

அடைய முடிகிறது. தாம் உணர்ந்ததை, தாம் உணர்ந்த வாறே பிறரும் உணரும் வண்ணம் வெளிப்படுத்துவது உண்மையான கவிஞர்களின் இயல்பு. பாவேந்தர் இதில் பெருவெற்றி பெறுகின்றார். அவர் உண்மையான கவிஞர், உணர்ச்சிக் கவிஞர்.

பெருமிதத்தைப் பாடிய கவிஞர் அவலத்தையும் பாடியுள்ளார். காதலர் பிரிவால் ஏற்படும் அவலம் அவரது கவிதைகளில் வடித்துரைக்கப்படுகின்றது. மனித உணர்வுகளுள் துன்பத்தால் ஏற்படும் அவல உணர்வு தலையாய ஒன்று. நாடு, மொழி, இனம், மதம் என்றிவற்றைக் கடந்து உலக மக்கள் அனைவரையும் இணைக்கும் உணர்வாக அவல உணர்வு திகழ்கின்ற தெனலாம். தமிழிலக்கியப் பரப்பில் அவலச்சுவை நிரம்பிய கவிதைகள் பல உள்ளன.

> இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
> நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
> பாணன் சூடான் பாடினி அணியாள்
> ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
> வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
> முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே[11]

என்பது புறநானூற்றுப் பாடல். ஒல்லையூர் நாட்டைச் சேர்ந்த பெருஞ்சாத்தன் என்னும் பெருமகன் இறந்த பின்னர் அவன் பிரிவிற்குக் கலங்கிய குடவாயிற்கீரத்தனார் என்ற புலவர் பாடிய இப்பாடலில் அவல உணர்வு தலை தூக்கி நிற்கக் காணலாம். சாத்தன் இறந்ததால் அவ்வூரினர் அனைவரும் துயர உணர்வில் சிக்கினர்; துயர மிகுதியால் ஒருவரும் முல்லை மலரைச் சூடவில்லை; மகிழ்ச்சியை அளிக்கும் முல்லை மலரைச் சூடும் தருணம் அப்போது இல்லையென்பதால் யாரும் அதனைப் பறிக்கவே யில்லை. யாருக்கும் பயன்படாத நிலையில் அம்மலர் இருப்பதைக் கண்ட கவிஞர் அதனை நோக்கி நீ பூத்ததாற்

பயன் இல்லை; ஏன் பூத்தாய்? என வினவுகின்றார். அவரது வினாவிற்கு அடிப்படை அவல உணர்வு என்பது நினைதற்குரியது. சீவகசிந்தாமணியில் காட்டிலே பிறந்த சீவகனை எண்ணிக் கலங்கும் தாயின் நிலையைத் திருத்தக்க தேவர் பாடுகையில்,

> **வெவ்வாய் ஓரி முழவாக விளிந்தார் ஈமம் விளக்காக**
> **ஒவ்வாச் சுடுகாட்டுயரரங்கின் நிழல் போல் நுடங்கிப் பேயாட**
> **எவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக் கூகைகுழறிப் பாராட்ட**
> **இவ்வாறாகிப் பிறப்பதுவோ இதுவோ மன்னர்க்கியல் வேந்தே**[12]

என ஆற்றாமை உணர்வை — அவல உணர்வைத் தோற்றுவிக்கிறார். மன்னன் மகனுக்குநேர்ந்த நிலையைத் துயர உணர்வு பெருகுமாறு நீண்ட ஓசையைத் தரும் சொற்களின் வாயிலாகச் சுட்டுகிறார். இத்தகைய கவிதைகள் தமிழில் நிரம்ப உள்ளன; காலந்தோறும் பற்பல கவிஞர்களால் பாடப்பட்டுள்ளன பாவேந்தரும் அவல உணர்வை வெளிப்படுத்தும் பாடல்கள் பல புனைந்துள்ளார். அவற்றுள் காதற் பிரிவால் நேரும் அவலம் இன்றியமையாததாகும் தன்னுடைய காதலன் இறந்து விட்டான் என்பதை அறிந்த காதலி தனக்கேற்பட்ட துயரத்தை,

> **இருப்பீர் என்றிருந்தேனே**
> **இறந்தீரே அத்தானே**
> **ஒரு பானை வெண்ணெயும் கவிழ்ந்ததோ**
> **உண்ணவே அணைத்தகை அவிழ்ந்ததோ**
> **வெண்ணெய் படும் நேரத்திலே**
> **தாழி உடைந்திட் டதுவோ**
> **கண்ணொளியை இழந்தேனே அத்தானே**
> **காவலற்ற பயிரானேன் அத்தானே**

கண்ணுக்கு மையானீர்
கார்குழலில் பூவானீர்
மண்ணாகிப் போனதுவே என் வாழ்வு
மறப்பினும் மறக்கவில்லை உம் சேர்க்கை[13]

எனப் பாடுகின்றாள். 'காவலற்ற பயிரானேன்' என்னும் தொடர் நெஞ்சைப் பிழியும் துயர உணர்வைத் தோற்றுவிக்கின்றது. அது போன்றே கண்ணுக்கு மையானீர், கார்குழலில் பூவானீர் என்பன அவர்களது வாழ்க்கை முறையை, அன்புப் பிணைப்பை விளக்கி நிற்கின்றன. அத்தகைய அன்புடையோரிடையே ஏற்படும் பிரிவு அவர்களது வாழ்க்கையை மண்ணாக்கி விடுகிறது. துயரச் சுவையைக் கூட்டும் நீண்ட சீர்களால் இப்பாடல், அமைக்கட்டுள்ளமையும், அஃது உணர்ச்சிச் சூழலுக்குள் அமிழ்த்துவதையும் காணலாம்.

ஆதரவாய் நின்று அன்பு மொழிபேசி அரவணைத்த காதலன் இல்லாததை எண்ணிக் கலங்கும் காதலியைக் கவிஞர் நமக்குக் காட்டுகிறார். அவள் தன் நிலையை எண்ணி வருந்துவதை அழகிய சொல்லோவியம் மூலம் உணர்த்துகிறார்.

சூடாத மலரானேன்
தோயாத புனலானேன், நான்
சூடாத மலரானேன்

ஆடாத அரங்கானேன்
அன்பனில்லை என்பதனால்
சூடாத மலரானேன்

தமிழற்ற நாடானேன்
தலையற்ற உடலானேன்
கமழ்வற்ற பொழிலானேன்
காதலனில் லாததினால்
சூடாத மலரானேன்

மிழற்றாத யாழானேன்
வேண்டாத குழலானேன்
அழைக்காத விருந்தானேன்
அழகனில்லை ஆதலினால்
சூடாத மலரானேன்

மழை பெற்ற பயிர்போலே
மதி பெற்ற வான் போலே
அழகுற்று வாழ்வேனோ
அவன் நல்கும் இன்பமுற்று?
சூடாத மலரானேன்[14]

உலகப் படைப்புகள் அனைத்தும் பயன்பாட்டு நோக்கின் அடிப்படையில் மதிப்பும், சிறப்பும் அடைகின்றன. பயன்படாத பொருள்களைப் பற்றி அக்கறை கொள்வோர் இல்லை. பயன்படாத பொருள் உலகில் இருப்பதுவும் மறைவதும் ஒன்றே. தலையற்ற உடல், ஆடாத அரங்கு, மிழற்றாத யாழ் ஆகியவை ஒரு பொருளாகவே மதிக்கப் படுவதில்லை. இந்தப் பயன்பாட்டுத் தன்மையை இழந்து நிற்கிறாள் ஒரு தலைவி. அதற்குக் காரணம் அவளது தலைவன் இல்லாமையே. தலைவியைப் பொறுத்த மட்டில் தலைவனுக்கே அவள் உரியவள். தான் அவனுக்குப் பயன்படாது வாளா உயிர் வாழ்தலில் பொருள் இல்லை என்பதை உணர்ந்த அவளின் துன்பமே இங்குப் பகட்டாகப் பரிணமித்தது. காதல் ஏக்கம் துயரத்தை ஏற்படுத்து கிறது. துயரம் அவலமாக மாறிப் பயில்வோரின் உணர்வினுள் ஊடுருவுகின்றது. இப்பாடல் அவலச் சுவையின் — உணர்வின் தன்மையைக் காட்டும் கலைத் தன்மையோடு இலங்குகிறது.

வீரம், பெருமிதம், உவகை, அவலம் எனப் பல சுவைகளைப்பாடிய கவிஞர் நகையையும் நயமாக நவின்றுள்ளார். சிரிக்கத் தெரிந்தவன் சிந்திக்கத் தெரிந்தவனாகக் கருதப் படுகிறான்.

**சிரிப்பென்ற ஒன்று சிறிதளவும் இன்றேல்**
**பொறுக்காது இந்த உலகு.**

என்னும் புதுக் குறள் ஈண்டு எண்ணத்தக்கது. மனிதன் மட்டுமே சிரிக்கும் பக்குவமுடையவன் என்பது அறிஞர்களின் கருத்து. ஆனால் சில இலக்கியவாதிகளுக்கு அனைத்து உயிர்களும் சிரிக்கும் உயிர்களாகத் தோன்றுகின்றன. எனவேதான்,

**அத்திமுதல் எறும்புவரை ஆனவுயிர் அத்தனையும்**
**சித்தம் கனிந்து சிரிக்குதடா தேசிகா**

என்று ஒரு புலவர் பாடியுள்ளார். பொதுவாக நகைச்சுவை மனிதனின் பணிச்சுமைகளைக் குறைக்கின்றது; மனச்சோர்வை நீக்குகின்றது; அத்துடன் சிறந்த சிந்தனையாற்றலைப் பெறவும் வழிகோலுகிறது. நகைச்சுவையின் இந்தத் தன்மைகள் பாவேந்தர் பாரதிதாசனின் பாடல்களில் பாங்குறப் பயின்று வந்துள்ளமை நோக்குதற்குரியது.

குடும்ப விளக்கில், ஊருக்குச் சென்று திரும்பிய தன் மாமியார் நிறையப் பொருள்களோடு வண்டியில் வந்திறங்குகிறாள். வண்டியின் உட்புறம் ஏராளமான பொருள்கள் இடமில்லாத காரணத்தால் நெருக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. மாமியார் மிகவும் கடினப்பட்டு உட்கார்ந்த நிலையைக் கண்ட மருமகள் 'நீங்கள் எப்படி இந்த வண்டியில் அமர்ந்து வந்தீர்கள்' என வினவுகிறாள். அதற்கு,

இவைகளின் உச்சிமீதில்
குன்றுமேல் குரங்குபோல
என்றனைக் குந்தவைத்தார்
என்தலை நிமிர, வண்டி
மூடிமேல் பொத்தலிட்டார்
உன்மாமன் நடந்து வந்தார்
ஊரெல்லாம் சிரித்தது[16]

என்று மாமியார் விடையிறுக்கிறாள். இப்பகுதியில் மாமியாரின் வாயிலாக நகைச்சுவையின்பத்தைக் கவிஞர் ஊட்டுகிறார். குன்றுமேல் குரங்கு எனும் உருவகம் நகைப்பை விளைவிக்கிறது. வண்டியின் மூடிமேல் பொத்த லிட்ட நிகழ்ச்சியை நினைக்கையில் சிரிப்பொலி பெருகுதல் திண்ணம்.

பாவேந்தரின் 'நகைச்சுவை'ப் பாங்கை நன்கு விளக்கும் பகுதி அவரது 'இருண்ட வீடு' என்னும் சிறு கவிதை நூல்.

> கல்வி அறிவில்லாக் குடும்பம் இருண்டவீடு எனப்பட்டது. கல்வி இல்லையேல்; ஒழுக்கமில்லை; எதுவுமில்லை. அக் குடும்பத்தினர் அடையத் தக்கது இன்னது என்பதை இந்நூலில் விளக்கி யிருக்கிறேன்[16]

என்று கவிஞர் இந்நூலின் முகப்பில் அளிக்கும் விளக்கம் பாடுபொருளைக் குறிப்பாகச் சுட்டி நிற்கிறது. முறையான கல்வி கற்காததால் வாழ்க்கையின் ஒழுங்குமுறைகளை தெரியாது போகலாம். இருண்ட வீட்டில் அந்தக் குடும்பத் தினர் அனைவரும் வாழ்க்கை முறைகளை அறியாதவர் களாய்ப் படைக்கப்பட்டுள்ளனர். அவர்களது செயல் களைக் கவிஞர் குறிப்பிடும்போது சிரிப்பு வெடித்துக் கிளம்புகின்றது. சான்றாக இருண்ட வீட்டின் பெரிய பையனின் செயலைக் காணலாம். அவன் காலையில் எழுந்து காலைக்கடன்களை முடிக்காமல் உணவுண்ணச் செல்கிறான். உண்ணத் தொடங்கியவுடன் அவனிடம் ஏற்பட்ட மாற்றத்தை ஆசிரியர் பின்வருமாறு பாடுகிறார்.

> நாவில் இடுகையில் நடுவயிறு வலித்தது
> வெளிக்குப் போக வேண்டுமென்றுணர்ந்தான்
> வடையின் சுவையோ விடேன் விடேன் என்றது
> கொல்லை நோக்கிச் செல்லவும் துடித்தான்
> மெல்லும் வடையை விழுங்கவும் துடித்தான்

வில்லம்பு போல மிகவிரைவாக
நடுவிற் கிடந்த நாயை மிதித்துப்
படபடவென்று பானையைத் தள்ளிக்
கன்றின் கயிற்றால் கால் தடுக்குற்று
நின்ற பசுவின் நெற்றியில் மோதி
இரண்டு பற்கள் எங்கேயோ போட்டுப்
புரண்டேழுந்தோடிப் போனான் கொல்லைக்கு![17]

பையனின் அவசரத்தையும் அவதியையும் நகைச்சுவை மிளிரக் கவிஞர் கூறுகின்றார். வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல விரைவாகச் சென்ற பையன் நாயை மிதித்ததும், பானையைத் தள்ளியதும், கயிறு தடுக்கி வீழ்ந்ததும் பசுவிடம் மோதுண்டதும் பற்களை இழந்ததும் நகையின்பம் விளைக்கும் வண்ணம் உணர்ச்சியுடன் பாடப் பட்டுள்ளன.

இது போன்றே, மனைவிக்குத் தெரியாமல் மற்றொரு பெண்ணிடம் உறவு கொண்டிருந்த கந்தன் என்பவனின் நிலையை நகைச்சுவைபடச் சித்திரிக்கும் பாங்கு குறிப்பிடத் தக்கது. திரைப்படத்திற்குச் செல்கிறேன் என்று பொய் கூறிவிட்டுக் கந்தன் வேறொரு மங்கை வரச்சொன்ன இடத்திற்குச் செல்ல முற்படும்போது அவனுக்குப் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. அவனுக்கு ஏற்பட்ட இடையூறுகளை நகையுணர்வு தோன்றப் பாவேந்தர் குறிப்பிடுகின்றார்.

கண்ணான மனைவியிடம் திரைப்படம் பார்த்திடக்
கருதினேன் என்று புளுகிக்
கந்தனோ ஒரு மங்கை வரச்சொன்ன நள்ளிருள்
வரும்வரை அழகியதிரு
வண்ணாமலைத் திருக்குளப்படி மலக்கழிவில்
அமிழ்ந்தே பதுங்கி, நேரம்
ஆனபின் விரைவினிற் போனதோர் போக்கிலே
ஆலமரவேர் தடுக்கப்

புண்ணான காலையும் எண்ணாமல் முள்ளொன்று
பொத்தலும் வாங்காமல் மேல்
புளியங் கிளையொன்று துளையிட்ட நெற்றியிற்
போட்டகை போட்டவண்ணம்
வண்ணான் பெருங்கழுதை மேல் விழுந்துதையுண்டு
தோட்டவாயிற் சேர்ந்தனன்
வள்ளென்றதொரு நாய் தன் உள்ளங் கலங்கினன்
வந்து வீழ்ந்தனன் வீட்டிலே. [18]

இதன்கண், இருட்டில் மறைந்திருந்த இடம், ஆலமரவேர் தடுத்ததால் காலில் ஏற்பட்ட புண், முள் குத்துதல், புளியங்கிளை நெற்றியைக் காயப்படுத்துதல், வண்ணான் கழுதை மேல் விழுந்து உதைபடல், நாயால் குரைக்கப்படல் ஆகியன வரிசையாகக் கூறப்பட்டிருக்கும் முறை நகைச் சுவையை அளிக்கின்றது. அத்துடன் அயன்மனை உறவு கொள்வதால் ஏற்படும் இழிநிலையைச் சுட்டிக்காட்டி உண்மையான இல்லறத்தை மேற்கொள்ளுமாறு குறிப்பாக உணர்த்துகின்றார் கவிஞர்.

நல்லமுத்துக் கதையில் விரசலூர் வெள்ளையப்பன் என்பவன் அரசலூர் அம்மாக்கண்ணு என்பவளின் வீட்டில் தங்கி தனது மனைவி, மகனைப் பற்றிக் கவலை கொள்ளா திருக்கிறான். அம்மாக்கண்ணுவை ஆசைநாயகியாகக் கொண்டதால் அவளுடைய பேச்சுக்கெல்லாம் இணங்கு கிறான். இந்நிலையில் அம்மாக்கண்ணு அவனைப்பற்றிக் குறிப்பிடும் சொற்கள் நகைச்சுவை உணர்ச்சியை அளிக்கின்றன.

பூனை உருட்டும் பானையை அவ்வொலி
நீங்கள் வரும் ஒலி என்று நினைப்பேன்
தெருநாய் குரைக்கும் வருகின்றாரோ
என்று நினைப்பேன் ஏமாந்து போவேன்
கழுதை கத்தும்; கனைத்தீர் என்று
எழுந்து செல்வேன் ஏமாந்து நிற்பேன்

உம்மைப் போதும் உள்ளத்தில் வைத்ததால்
அம்மியும் நீங்கள் அடுப்பும் நீங்கள்
சட்டியும் நீங்கள் பானையும் நீங்கள்
வீடும் நீங்கள் மாடும் நீங்கள்
திகைப்படைந்து தெருவிற் போனால்
மரமும் நீங்கள் மட்டையும் நீங்கள்
எல்லாம் நீங்களாய் எனக்குத் தோன்றும்.[19]

என்ற அம்மாக்கண்ணுவின் கூற்று, பொருத்தமற்றவற்றை நோக்கும்போது நமக்குத் தோன்றும் விளையாட்டுத் தன்மை சார்ந்த சிரிப்பினைப் போன்ற சிரிப்பை உண்டாக்குகிறது.

அடுத்து, பாவேந்தர் படைத்துள்ள கதைமாந்தர்களுள் எதிர்பாராத முத்தத்தில் வரும் பண்டாரம் குறிப்பிடத் தக்கவன். அவனை நகைச்சுவை மாந்தன் என்றே குறிப்பிடலாம். ‘இல்லையென்பான் தொல்லை’ என்னும் தலைப்பில் அவனது செயல்களைக் கவிஞர் சித்திரித்திருப்பது நோக்கத்தக்கது. பொன்முடிக்கும், பூங்கோதைக்கும் இடையே உள்ள காதலைப் பொன்முடியின் பெற்றோரிடத்தே சொல்கிறான் பண்டாரம். பிறகு அங்கிருந்து பொன்முடியிடம் சென்று ‘நான் உன் தந்தையைப் பார்க்கவில்லை’ என்று சொல்வது தொடங்கி அவன் கூறுவதெல்லாம் நகைச்சுவையின்பம் நல்குகின்றன.

பண்டாரம் செப்புகின்றான்
உன் தந்தையாரும் நானும்
ஒன்றுமே பேசவில்லை
அவளுக்கும் உனக்குமுள்ள
அந்தரங்கத்தை யேனும்,
அவன் உன்னை மரத்தில் கட்டி
அடித்ததையேனும் காதற்
கவலையால் கடையை நீதான்
கவனியாமையை யேனும்

அவர் கேள்விப்படவே இல்லை
அதற்கவர் அழவுமில்லை
நாளைக்கே அயலூர் க்குன்னை
அனுப்பிடும் நாட்ட மில்லை
கேளப்பா தாடிச்சேதி
கேட்கவும் இல்லை! என்றான்.[20]

இப்பகுதியில் பண்டாரம் இல்லை என்ற சொல்லின் வழியாக உண்மையை உரைத்துவிடுகின்றான். அவனது பேச்சுத்தன்மை, பழக்கம் ஆகியவை நமக்கு நகைச்சுவையை உண்டாக்குகின்றன. 'என் அப்பன் குதிருக்குள் இல்லை' என்னும் பழமொழி விளக்கி நிற்கும் உண்மையைப் போன்று இப்பகுதியும் உண்மையை விளக்குகின்றது. பண்டாரம் போன்ற கதைமாந்தர்களைப் புகுத்துவதன் மூலம் இலக்கியச் சுவை பெருகுகின்றதெனலாம். தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் வகுத்த எண்வகை மெய்ப்பாடுகளை எண்வகை உணர்ச்சிகள் அல்லது சுவைகள் எனக் குறிப்பிடமுடியும். இவ்வெட்டனுள் ஒன்றிரண்டு சுவைகள் பாவேந்தரின் பாடல்களில் இடம் பெறவில்லை. வெகுளி, பெருமிதம், உவகை, அவலம், நகை ஆகிய சுவைகளே மிகுதியாக உள்ளன. இழிவு முதலானவை மிகச் சிலவாக உள்ளன. எனினும் ஒன்பது வகையான சுவைகளைப் பாவேந்தர் ஒன்றாக ஒரே இடத்தில் பாடியுள்ளார். 'ஒன்பது சுவை' என்பதே அப்பாடலின் தலைப்புமாகும். தலைவன், தலைவி இருவரும் நட்புப் பூணுகின்றனர். அவர்களைத் தடுக்கின்றனர் சிலர். இந்தச் சூழலின் பின்னணியில் ஒன்பது சுவைகளைப் பாடி நம் உள்ளத்தை மகிழ்விக்கிறார் பாவேந்தர்.

புரட்சிக்கவிஞரின் கவிதை உணர்ச்சியை மதிப்பிடும் போது தமிழ்மொழியின் உயர்வு, அதன் இன்றைய நிலை, தமிழினத்தின் மேம்பாடு, தமிழ்நாட்டின் விழிப்புணர்ச்சி ஆகியவையே வீறுவுணர்வுடன் வெளிப்படுகின்றன என்பதை

அறிகிறோம். பிற கவிதைகளைவிட மொழி, இனம், நாடு குறித்த கவிதைகள் தாம் உணர்ச்சி மயமாக உள்ளன. இப்படி மொழி உணர்ச்சியை உள்ளத்தில் உறுதியாகப் பதிந்திருந்த பாவேந்தர் இன்றைய நிலையில் தமிழ் மொழிக்கு நேர்ந்துள்ள அச்சமான சூழ்நிலையைப் பாடுகையில் உருக்கமான உணர்வினைப் பெறுகிறோம்.

கரும்பு தந்த தீஞ்சாறே
கனிதந்த நறுஞ்சுளையே
கவின்செய் முல்லை

அரும்பு தந்த வெண்ணகையே
அணிதந்த செந்தமிழே
அன்பே, கட்டி

இரும்பு தந்த நெஞ்சுடையார்
துறைதோறும் நின்னெழிலை
ஈடழித்து

வரும் புதுமை நினைக்கையிலே
நெஞ்சம் பதைக்கும், சொல்ல
வாய் பதைக்கும்[21]

என்பதில் கவிஞரின் ஏக்கத்தை, வருத்தத்தைக் காண்கிறோம். இந்நிலை மாறிட வேண்டும் என்பது பாவேந்தரின் வேணவா. பாவேந்தரின் கவிதை உணர்ச்சி களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல, விளங்கும் தமிழுணர்ச்சி, இன்றைய நிலையில் தமிழ்நாட்டிற்கு மிகத் தேவையான — நியாயமான உணர்ச்சியாகும். இழந்த பல வளங்களையும் மீட்க வேண்டும் என்னும் உணர்ச்சியைக் கவிஞர் வலியுறுத்துகிறார்.

வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்
விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்
சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமை தன்னைத்

**தொகையாக எதிர்நிறுத்தித் தூள் தூளாக்கும்**
**காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்**
**கடல் போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்.**[22]

என்பதே கவிஞரின் உணர்ச்சிகரமான வேண்டுதல். பல ஆண்டுகளுக்கு முன் இக்கவிதை எழுதப்பட்டாலும் இன்றைக்குத் தேவையான கருத்தை வலியுறுத்திக் கூறுவதால் வாழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழ் இனம், மொழி, நாடு மேம்பாடு அடையும் வரை இக்கவிதை நிலைத்திருக்கும் — இன்னும் சொல்லப்போனால் தமிழ் மொழி உள்ளவரை நிலைபேறுடையதாகத் திகழும். எனவே இதுகாறும் கண்ட கருத்துகளை நோக்கும்போது பாவேந்தரின் மொழி இனம் தொடர்பான உணர்ச்சி மேலோங்கி நிற்கின்றமை போதரும்.

**கற்பனை**

கற்பனை என்பது வெறும் புனைந்துரை என்று சிலர் கழறுவர். அது நினைப்பவர் நெஞ்சத்தில் எல்லாம் நிலைப்பதில்லை; அது கவிஞனின் எண்ணத்திற்கே உரிய கவசமாகும். சிறார்கள் சிற்றிலிழைத்துச் சீமான்களாக வாழ்ந்துகாட்டும் சிறிதுநேரக் கற்பனையும், ஏற்காத ஒருத்தியைத் தன் இச்சைக்குட்படுத்தி நடக்கவிருக்கும் திருமணம் நளன் — தமயந்தி கோலமாகவே நினைத்து உள்ளம் உருகும் காதலர் தம் கற்பனையும், பாரைத் தன் குடைக்கீழ்க் கொணர்ந்து அசோக மன்னனாகத் தன்னைப் பாவிக்கும் மண்ணாசைக் கற்பனையும், உலகப் பொருள்கள் யாவும் தன்னிடம் இருக்க வேண்டும்; தன் இல்லம் அமுதசுரபியாகக் காட்சியளிக்க வேண்டும் என்று எண்ணுகின்ற பொருளாசைக் கற்பனையும் இதுபோன்ற பிற வகைகளும் உண்டு என்றாலும் இவையாவும் நிற்பதும் நிலைப்பதுமில்லை. கண்ட மாத்திரத்தில் கலைந்துவிடும் எண்ணத்துகள்கள் ஆகும்.

கவிஞன் படைக்கின்ற — எண்ணுகின்ற—ஆக்குகின்ற கற்பனை உலகம் உள்ளவரை உலவுகின்ற தென்றலாக வீசிக்கொண்டிருக்கும். காரணம் கவிஞன் தான் காணும் பொருளைப் புறநோக்கோடு மட்டுமல்லாமல் அகத்துள்ளும் புகுந்து ஆராய்ந்து பொருளோடேயே ஒன்றிவிடுகின்றான். உணர்ச்சிக்கு ஆளாகி, எண்ணக் கூறுகளில் முகிழ்த்து, அதனை உருவாக்கி, பின்னர் அதனைக் காண்பாரையும் கற்பாரையும் தன் மனக்கோட்டை வாசலுக்கு அழைத்து அமரச்செய்யும் அமரத்தன்மையுடையதாக்குகின்றான். இத்தகு அமரத்தன்மை ஒன்றே — கவிஞனின் எண்ணக் கோவையே கற்பனையாகும்.

இக்கற்பனையின் வகைகள் குறித்து மேலைநாட்டார் பலர் பலவாறாகக் கூறுகின்றனர். வின்செஸ்டர் என்னும் திறனாய்வாளர் கற்பனையை மூவகையாகப் பிரிக்கின்றார். அவை 1. படைப்புக் கற்பனை, 2. இயைபுக் கற்பனை, 3. கருத்து விளக்கக் கற்பனை என்பனவாம்.[23] கோல்ரிட்ஜ் என்னும் அறிஞர் கற்பனையைப் பற்றிக் கூறும்போது "கற்பனையை நான் இரண்டு வகையாகக் கருதுகின்றேன். ஒன்றை முதன்மையானது என்றும் மற்றொன்றை இரண்டாம் நிலையானது அல்லது 'சார்புக் கற்பனை' என்றும் கூறலாம். மனிதனுடைய புலனுணர்ச்சிகள் அனைத்திலும் முதன்மையானதாகவும், உயிர்த்துடிப்பு மிக்க ஆற்றலாகவும் விளங்குவது முதனிலைக் கற்பனையாகும்"[24] என்கிறார். கவிதைக்கலையில் வல்லவராகிய வோர்ட்ஸ் வொர்த் என்பவர் கற்பனையை 1. ஆக்கக் கற்பனை. 2. நினைவுக் கற்பனை என்று இருவகையாகக் கூறுகிறார்.[25]

இவையேயன்றி உள்ளதை உள்ளவாறே கூறுகின்ற கற்பனையும் உள்ளம் விழையுமாறு அமைகின்ற கற்பனையும் உண்டு. இதுகாறும் கண்ட கற்பனையின் தன்மை, வகைகள் யாவும் பாவேந்தரின் படைப்புகளில் பொருந்தி வருகின்றன. அவருடைய படைப்புகளில் படைப்புக்

கற்பனை, இயைபுக் கற்பனை, கருத்து விளக்கக் கற்பனை ஆகியன செறிந்து விளங்குகின்றன.

### படைப்புக் கற்பனை

நாம் ஒரு பொருளைக் கண்டால் அதை அப்பொழுதே மறந்து விடுகிறோம். ஆனால் கவிஞர்கள் அப்படி இல்லை. ஓர் இடத்தில் கண்ட ஒன்றின் அழகுணர்வை நினைவி விருத்தி, பின்னர் பிறிதோர் இடத்தில் காணும் அழகுணர் வோடு அதனை ஒன்றாக்கி, புதிய ஓர் அழகுணர்வைப் படைத்துக் காட்டுவது படைப்புக் கற்பனை எனப்படும். சான்றாக,

மங்கையவள் வீட்டிலே கூடத்துச் சுவரில்
மணிப்பொறியின் இருமுள்ளும் பிழைசெய்யுமோ—மேற்கில்
தங்கத்தை உருக்கிவிட்ட வான்கடலில் பரிதி
தலைமூழ்க மறந்தானோ! இருள் என்னும் யானை
செங்கதிரைச் சிங்கமென அஞ்சிவரவில்லையோ!
சிம்புட்கள் இன்னும் ஏன் திரிந்தன வான்வெளியில்!
திங்கள் முகம் இருள்வானில் மிதக்க அவள் ஆம்பற்
செவ்வாயின் இதழளிக்க இன்னும் வரவிலையே!
மணியசையக் கழுத்தசைக்கும் மாடுகளும் இன்னும்
வயல்விட்டு வீட்டுக்கு வந்தபாடில்லை
துணியுலர்த்தி ஏகாலி வீடு நுழைந்திட்டால்
தொலையாத மாலைதான் தொலைந்து போமன்றோ!
அணியிரவும் தூங்கிற்றோ காலொ டிந்ததுண்டோ
அன்றுபோல் இன்றைக்கேன் விரைந்து வரவில்லை
பிணிபோக்கும் கடைவிழியாள் குறுநகைப்பும் செய்தே
பேரின்பம் எனக்கருள இன்னும் வரவிலையே[26]

எனும் பாவேந்தர் பாடலில் படைப்புக் கற்பனை அமைந் துள்ளதை அறியலாம்.

பாவேந்தர் பகல்பொழுது மறைந்து இரவு நேரம் வந்தால் இரவில் தண்ணொளிபரப்பும் நிலவுப் பெண்ணின் கவினழகைக் காணலாமே என்று கருதுகிறார். இச்சிறிய

நிகழ்ச்சியைக் கற்பனையாகக் காண்பதில் விசித்திரத்தைப் படைக்க விழையும் கவிஞர், சூரியன் மறையவில்லையே என்பதற்கு மாறாக, தங்கநிறம் பெற்ற வானக்கடலில் பரிதி தலைமூழ்கவில்லை என்றும், இருள் தோன்ற வில்லையே என்பதற்கு மாறாக, இருட்டு என்ற யானை செங்கதிரைச் சிங்கமென்று அஞ்சி வாராமல் இருக்கிறது என்றும், அழகிய இரவு தூங்கிவிட்டதா? அல்லது அதற்குக் கால் ஒடிந்து நடக்க முடியாமல் ஆகிவிட்டதா? என்றும், திங்கள் முகத்தாள் இருள்வானில் மிதக்க ஆம்பல் செவ்வாயின் இதழளிக்க இன்னும் வரவில்லையே என்றும், காதலன் ஒருவன் காதற்குறியிடத்துக்குக் கூறியதுபோல் இன்னும் வாராததால் அவள்மீது காதற் புலவி கொள்வது போல் பாடியுள்ளார். மாலை நேரத்தில் ஞாயிறு மறைவதையும், யானை சிங்கத்துக்கு அஞ்சி நின்றதையும், நிலா போன்ற முகம் உடையாளிடத்துக் காதலமுதைப் பருகிய கட்டிளங் காளையின் காதல் சிறப்பையும்., கால் ஒடிந்துவிட்டால் நடக்கத் தாமதமும் முடியாமையும் ஏற்படுவதையும் என்று இவை ஒவ்வொன்றையும் கவிஞர் பல நிலைகளில் கண்டிருத்தல் கூடும். அதனை, தான் பிறிதோரிடத்தில், நிலவு தோன்றவில்லையே என்ற எண்ணம் உருவானபோது, அவ்வெண்ணத்தோடு இணைத்து ஒருமைப்படுத்தி ஒரு புதிய அழகுணர்ச்சியை—படைப்புக் கற்பனையை நம் கண்முன் காட்டுகிறார். மேலும்,

உள்ளம் உருக்கி உயிர் உருக்கி மேல் வியர்வை
வெள்ளம் பெருக்கியே மேனிதனைப் பொசுக்கி
ஓடையின் ஓரம் உயர் சோலைக்குள் என்னைக்
கோடை துரத்திட நான் உட்கார்ந்து கொண்டிருந்தேன்
பட்டுவிரித்த பசும்புல்லின் ஆசனமும்
தொட்டு மெதுவாய் வருடத் தோய்தென்றல் தோழியும்
போந்து விசிற ஒரு புன்னைப் பணிப்பெண்ணும்
சாந்து மகரந்தம் சாரும் நறுமலர்த்தேன்

**தீங்கனிகள் சங்கீதம் ஆனதிருவெல்லாம்**
**ஆங்கு நிறைந்திருக்கும் ஆலின் நெடுமாளிகையில்**[27]

என்ற பாடலிலும் படைப்புக் கற்பனை சிறந்துள்ளதைக் காணலாம். இதில் கோடைக்காலத்தின் மாலையில் நீரோடையின் ஓரத்தில் அமர்ந்திருந்தேன். அழகிய புல் தரை, நல்ல காற்று, புன்னை மரம், ஆலமரம் ஆகியன அங்கிருந்தன என்பதற்கு மாறாக, பட்டு விரித்த பசும்புல் ஆசனத்தில் அமர்ந்திருக்க, தொட்டுவருடிச் சோகத்தை மாற்றத் தென்றல் எனும் தோழியும், இலையாகிய தோகை விரித்துச் சாமரம் வீசப் புன்னை என்னும் பணிப்பெண்ணும் கூந்தல், மேனி மணக்கச் சாந்தும், மகரந்தமும் பருகிடத் தேனும், தின்னக் கனிகளும், கேட்டுமகிழ சங்கீதமாக ஆலமரத்தில் வாழ் பறவைகளின் இசைகளும் சூழ்ந்திருந்தன என்று கூறுகிறார். இது தனக்கொரு காதலன் இல்லாத இளவரசியானவள் தனிமையில் இருக்கும்போது எல்லாம் இருக்கிறது; அங்கே காதலன் மட்டும் இல்லையே என்று ஏங்கும் நிலையோடு ஒப்புமைப்படுத்திப் பாடப் பட்டதாகத் தோன்றுகிறது.

காதலனற்ற இளவரசியை — அவள் நிலையை — கண்டோ அல்லது பிறர் கூறக் கேட்டோ கவிஞர் அறிகின்றார். பின்னர் அதனைத் தான் காணும் இயற்கையில் இணைத்து, ஒரு புதிய படைப்பை மெருகுடன் படைத்துக் காட்டுகிறார். இவற்றை நோக்கும்போது பல்வேறு சூழலில் பரந்து கிடக்கும் காட்சியை — எழிலை — எண்ணத்தின் ஊற்றாக்கி அதனைப் பிறிதொரு சூழலில் கண்ணுறுவனவற்றோடு ஒன்றுபடுத்தி, புதியதொரு முழு வடிவத்தைப் படைத்தளிப்பதான படைப்புக் கற்பனையைப் பாவேந்தர் சிறப்பாக அமைத்துள்ளமை புலனாகின்றது.

### இயைபுக் கற்பனை

உணர்ச்சி, கருத்து, காட்சி, சூழல் முதலியவற்றில் ஏதேனும் ஒன்றால் முற்கண்டது போன்றதே இது என்று

இரண்டையும் இயைத்து அழகுணர்வோடு ஆக்கிக் காட்டுவது இயைபுக் கற்பனை எனப்படும்.

> ... ... ... தங்க
> இழையுடன் நூலை வைத்துப்
> பின்னிய ஆடை காற்றில்
> பெயர்ந்தாடி அசைவதைப்போல்
> நன்னீரில் கதிர் கலந்து
> நளிர்கடல் நெளிதல் கண்டேன்.[28]

கடல்நீரின் பரப்பில் கதிரவனின் ஒளிபட்டுத் தெறிக்கும் காட்சியைக் காணும் கவிஞர் அக்காட்சியை, தான் முன்பே கண்ட தங்க இழையையும், நூலையும் இணைத்துப் பின்னிய ஆடை காற்றில் அசைந்தாடுவது போல் இருக் கின்றதென்று இரு காட்சிகளையும் இயைத்துக் காணு கின்றார். இதில் கடல் நீரின் பரப்பு மெல்லிய ஆடைபோல் உள்ளதென்று இயல்பாகக் கூறவேண்டியதற்கு மாறாக, கற்பனை கலந்து மெருகூட்டியமை வியப்பினையும் நலத்தை யும் நல்குகின்றது.

மேலும், கோடையின் வெப்பத்தால் வாடி, துன்புறும் நிலையில் மழை வந்து இன்புறச் செய்தது என்பதனைக் கூற வரும் ஆசிரியர், அதனை இயல்பாகக் கூறாமல் எங்கிருந்தோ வந்தவர்கள் இங்கிருப்பவரை அடக்கி வாட்டியபோது பொறுத்தவர்கள் பொங்கி எழுந்ததால் புரட்சி தோன்றியது; பொதுவுடைமை வாய்த்தது அதனால் மகிழ்ச்சி நிலவிற்று என்னும் உவமை வாயிலாக இணைத்துக் காட்டுகின்றார். ஒரு புரட்சிக் கருத்தைத் தன் மனத்துக்குள் தேக்கி இயற்கையில் காணுகின்ற இயல்பான நிகழ்ச்சியோடு இயைத்துக் கற்பாரை வியக்கச் செய்யவும் — புரட்சிக்குட் படுத்தும் — ஆற்றல் வாய்ந்த கற்பனையை அழகிய உவமையின் வாயிலாகக் குறிப்பிடுகின்றார். இதனை,

வந்தேறிகளால் நொந்தழுவார் போல்
கோடை கொடுமையில் வாடலானோம்
புரட்சியின் புழுக்கத்தின் பின்
பொதுவுடைமை போல் புகுந்தது மாரியே[29]

எனும் பாடல் புலப்படுத்தும்.

காலையில் தன் காதல் மனைவியை விட்டுப் பிரிந்து சென்ற கணவன் வாராது காலம் நீட்டிக்கக் கண்டு வருந்தி விம்முதல் கொள்ளும் மனைவியை ஓர் இடத்தில் காண்கிறார் கவிஞர். குளிர்நீர்த் தடாகத்தில் சந்திரனின் கதிர் வாராமையால் அல்லி கூம்பி இருக்கும் காட்சியையும் காண்கிறார். சந்திரன் இல்லையென்றால் அல்லி கூம்பி இருத்தல் இயற்கை. எனினும் இதற்கு மாறாகக் கவிஞர் தன் கற்பனையில் காலையில் பிரிந்த கணவன் வரவிற்காக மனைவி வாடுதல் போல் வாடுகிறது என்று வேறொரு காட்சியோடு இயைத்துக் காட்டுகிறார். தமிழர்களின் அக வாழ்வையும், இயற்கை ஈடுபாட்டையும் கற்பனை மூலம் கவிஞர் காட்டும் பாங்கு எண்ணி மகிழ்தற்குரியதாம். இதனை,

காலையிற் பிரிந்த கணவன் தனக்குக்
காத்திருந்தே தன் மனைக்கு
மாலை வரும் என்று தேம்பும்—ஒரு
மங்கை போல் அல்லியும் கூம்பும்[30]

எனும் 'தேனருவி'ப் பாடல் முழக்குகிறது.

குழந்தையைத் தாலாட்டு முகத்தான் அமைந்த கவிஞரின் மற்றொரு பாடலிலும் இக்கற்பனை அமைகிறது. குழந்தையை வானத்திலிருந்து நழுவி வந்த வளர்பிறை என்றும், அதன் கன்னத்தைக் கனி என்றும், சிரிப்பைச் செல்வச் சிரிப்பென்றும் உவமித்துக் கூறுகிறார் கவிஞர். இறுதியில் அன்னை முகத்தை நிலவாகவும், குழந்தையின் கண்களை அல்லியாகவும் உவமிக்கின்றார். அத்துடன் முரணாகவும் அமைத்துள்ளார். அன்னை முகம் நிலவு

போன்றது என்றாலும், அதனைக் கண்டு அல்லி மலர் போன்ற விழிகள் திறந்துவிடக் கூடாது; உறங்கவேண்டும் என்று அவ்வன்னை குழவியிடம் கூறுவதுபோலக் கவிஞர் கூறுகிறார். தாய் சேய் நிலையை நிலவு — அல்லி இவற் றோடு இயைத்துக் கற்பனை நயம்பெருகப் படைத்தளிக்கும் பாங்கு,

> வான் நழுவி வந்த வளர்பிறையே கண்ணுறங்கு
> கன்னம் பூரித்துக் கனியுதடு மின் உதிர்த்துச்
> சின்ன விழிபூத்துச் சிரித்ததென்ன செல்வமே?
> அன்னை முகம் வெண்ணிலவே ஆனாலும் உன்விழியைச்
> சின்னதொரு செவ்வல்லி ஆக்காமல் நீயுறங்கு[31]

எனும் பாடல் உறைவிடமாகிறது.

**கருத்து விளக்கக் கற்பனை**

ஒரு கருத்தை, இயற்கையான நிகழ்ச்சி ஒன்றின்மேல் கற்பித்துக் கூறுவதைக் கருத்து விளக்கக் கற்பனை என்பர்.

பெண்கள் பலர் தமது வீட்டுக் கடமைகளைக் கவனி யாமல் அண்டை வீட்டுச் செய்திகளை, நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ள ஒட்டுக்கேட்கும் (ஒற்று) பழக்கத்தைக் கைக்கொள்கின்றனர். இதனால் பிறருடன் சண்டை மூளும்; வீண் பொழுதாய்க் காலம் கழியும் என்ற கருத்தை மயிலின் மேல் ஏற்றியுரைக்கின்றார் கவிஞர். மயிலிடம், உன் கழுத்து நீண்டு இருப்பது ஏன் தெரியுமா? என வினவும் கவிஞர் உடனே விடையாக, அதில் ஓர் இரகசியம் இருக் கின்றது. அதைக் கூறுகிறேன்; ஆனால் மற்றப் பெண் களிடம் கூறாமல் இருக்க வேண்டும். அச்செய்தி பெண் களுக்குத் தெரிந்தால் என்னை ஏசுவார்கள் என்று கூறி, அயலார் வீட்டில் நடப்பதை எட்டிப் பார்க்காமல் இருப்ப தற்கே இயற்கையன்னை பெண்களுக்கெல்லாம் கழுத்தைக் குட்டையாகப் படைத்துள்ளாள். உனக்கோ நீண்ட கழுத்தைப் படைத்துள்ளான் என்ற செய்தியையும் உரைக் கிறார். இதனை,

அயலான் வீட்டில் அறையில் நடப்பதை
எட்டிப் பார்க்கா திருப்பதற்கே
இயற்கை அன்னை இப்பெண்கட் கெல்லாம்
குட்டைக் கழுத்தைக் கொடுத்தாள்! உனக்கோ
கறையொன் றில்லாக் கலாப மயிலே
நிமிர்ந்து நிற்க நீள் கழுத்தளித்தாள்!
இங்குவா உன்னிடம் இன்னதைச் சொன்னேன்
மனதிற் போட்டுவை; மகளிர் கூட்டம்
என்னை ஏசும் என்பதற்காக![32]

என்னும் பாடலால் உணரலாம். இப்பாடல் நகைச்சுவை யையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.

அறம் ஒன்றே உயர்ந்தது; சிறந்தது. ஆதலால் இருப்போர் இல்லாதார்க்குக் கொடுத்து வாழ வேண்டும். அப்படிச் செய்கின்ற கொடை கொளல்தன்மை போற்றுதற் குரியது என்று தம் கருத்தை விளக்க விரும்புகிறார் கவிஞர்.

இதற்கு மலர்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் வாயிலாகத் தம் கருத்தை உரைக்கின்றார். செங்காந்தள் மலர் விரிந்து ஏந்தினாற்போல் இருப்பதும், புன்னை மலர் பூத்து உதிர்வதும் சோலையில் குயில் கூவுவதும் இயற்கை. இவ்வியற்கை நிலையை, காந்தள் மலர் கையேந்தித் தாழ்ந்து நிற்க, உயர்ந்த புன்னை எனும் பெண் தன் மலர்கள் என்னும் பொன்னை, காந்தள் என்ற ஏழைக்கு வழங்க, அதனைக்கண்டு— இக்கொடைத் தன்மையைக் கண்டு — களிப்புறும் குயில் இதுபோன்ற கொடைத்தன்மை குவலயத்தில் என்றும் வாழ்க என்று எக்காளமிட்டு முழங்குவதாக ஆசிரியர் கூறுகின்றார். இயல்பான நிகழ்ச்சியின் மேல் தம் கருத்தைச் சாற்றியுள்ள திறம் போற்றற்குரியது. இதனை,

நின்ற செங்காந்தட்பூ நேரிற் கையேந்த நெடுங்
கொன்றை மலர் பொன்னைக் கொட்டுகின்றாள்—என்றே
அடைகுயில்கள் எக்காளமிட்டு ஆர்த்தனவே மண்ணிற்
கொடை வாழ்க என்று குறித்து[33]

எனும் பாடல் பரிமாறக் காண்கிறோம்.

**உள்ளவாறு அமையும் கற்பனை**

ஒரு காட்சியைக் காணும்போது அதன்மீது தன் புதிய எண்ணக் கோவையை மிகுதியாகவோ, குறைவாகவோ புகுத்தாமல் இயல்பாக, இருப்பவற்றைச் சொல்நயம் மிளிரக் கூறும் கற்பனை 'உள்ளவாறு அமையும் கற்பனை' எனப்படும். உள்ளவாறு அமையும் கற்பனைக்குப் பொருள்களை ஒழுங்குபடுத்துதலும் அழகுற அமைத்தலும் தேவை என்ற கருத்து ஈண்டு எண்ணற்பாலது.

இயற்கை வளப்பம் மிக்க நம் தமிழகத்தின் ஆறு, கடல் ஆகியவற்றினிடத்தும், சோலைகள் மிகுந்தவிடத்தும் பறவை இனங்கள் நிறைந்து வாழ்வது கண்கூடு. அவற்றின் செயல்களை, தன்மைகளை எல்லோரும் காணுகின்றனர். எனினும் மற்றவர்களுக்கு அவை நினைவில் நிற்பதில்லை. ஆழவும் படிவதில்லை. கவிஞர்களிடத்து மட்டும் அவை ஆழ்ந்து படிந்துவிடுகின்றன. படிந்தவற்றை அவர் உள்ளவாறு சொற்கோவையாக அளிக்கின்றார். உள்ளதை உணர்த்தும் இத்திறனை,

> **இலைச்சந்தில் குரங்கின் வாலை**
> **எலியென்று பருந்திழுக்கும்**[34]

என்பதில் காணலாம். ஆலமரத்தில் குரங்குகளும், எலிகளும் ஏறி உலவுதல் உண்டு. பறவை இனங்கள் இம்மரத்தில் அமர்வதும், வட்டமிடுவதும் இயல்பு. இந்நிலையில் குரங்கு தன் உடல் முழுதும் ஓர் இடத்தில் நிறுத்தித் தன் நீண்ட வாலைச் சற்றுத் தள்ளி நீட்டிக் கொண்டு இருக்கின்றது. பருந்தின் கண்ணுக்குக் குரங்கின் உருவம் மறைந்து வால் மட்டும் தென்பட அது தனக்கு விருந்தாகும் எலியினுடைய வால் என்று நினைத்து மயங்கி இழுக்கிறது. இதனை உள்ளவாறே உரைத்துக் கற்பனை நயம் தோன்றக் கவிஞர் விளக்குகின்றார்.

நீலக்கடலில் அதிகாலைப் பொழுதில் கதிரவன் உதயமாகும் காட்சி எங்கும் காணப் பெருவியப்பை

நல்குவதுண்டு. அதனைச் சற்று உற்று நோக்குவோமே யானால் வீறுகொள்ளும் செங்கதிர் ஒரு நீலநிறப் பெட்டியை நீக்கிக் கொண்டு புறப்படுவதுபோல் தோன்றும். இதனையே கவிஞர் கவிதை நயம்படச் சொல்லமைத்து இயல்பான கற்பனையுணர்வுடன் சுட்டுகின்றார்.

**.........கீழ்ப்பால்**
**ஒலிகடல் நீலப்பெட்டி**
**உடைத்தெழுந்தது கதிர்தான்[35]**

என்னும் பகுதியால் இதனை உணரலாம்.

**உள்ளம் விழைமாறு அமையும் கற்பனை**

கவிஞர் பலவிதக் கற்பனைகளைப் படைத்தாலும் ஒரு சிலவே உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. இவ்வாறு கவிஞர் படைப்பில் படிப்பவர் உள்ளம் பறிபோகும் நிலையில் அமையும் கற்பனையை உள்ளம் விழையும் கற்பனை எனலாம். இயற்கையை உள்ளவாறு காட்டாமல் வேண்டாத பகுதிகள் பலவற்றை விட்டு அழகுணர்ச்சிக்கு வேண்டியவை மட்டும் தீட்டப்படுவதால் தான் இக்கற்பனை விரும்பிப் போற்றப்படுகிறது என்ற கருத்து இவண் உன்னற்பாலது.

கிழக்கெழும் கதிரவன் மேற்றிசையில் மறைய, இருள் வர, அதனையடுத்துச் சந்திரன் சுடர் விடுகிறான் என்பதைக் கூறவரும் கவிஞர்,

**கிழக்குப்பெண் விட்டெறிந்த**
**கிளிச்சிறைப் பரிதிப்பந்து**
**செழித்த மேற்றிசை வானத்தில்**
**செம்பருத்திப் பூங்காவின்**
**விழுந்தது! விரிவிளக்கின்**
**கொழுந்தினால் மங்கைமார்கள்**
**இருள்மாற்றிக் கொடுக்கின்றார்கள்[36]**

என்று கூறுகிறார்.

இதில் கீழ்த்திசையைப் பெண்ணாகவும், கதிரவனை கிளிச்சிறகாலான பரிதிப்பந்தாகவும், மேற்றிசையை அதன் நிறத்தன்மையால் செம்பருத்திப் பூங்காவாகவும் அதில் விழுந்த பந்தைத் தேடுதற்கு வான் என்னும் மங்கையர் நிலவு, நட்சத்திரம் முதலிய விரிவிளக்குகளை ஏற்றி இருளைப் போக்கிக் கொடுப்பதாகவும் கவிஞர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் கற்பனையை ஆண்டுள்ளார்.

தங்கம் உருக்கித் தகடிட்டுப் பன்மணிகள்
எங்கும் அழுத்தி இயற்றியதோர் தொட்டிலிலே
திங்கள் திகழ்ந்ததெனும் வெண்பட்டு மெத்தையின்மேல்
மங்கா உடல்மலரும் வாய்மலரும் கண்மலரும்
செங்கை மலரும் சிரிப்பின் எழில்மலரும்
தங்கா தசைந்தாடும் தண்டை இருகால் மலரும்
அங்கங் கழகுசெயும் ஆணழகே கண்வளராய்
எங்கள் மரபின் எழில் விளக்கே கண்வளராய்[37]

எனும் இப்பாடலில் குழந்தையைத் தொட்டிலில் இட்டு உறங்க வைக்கும் நிலை இனிதே இயம்பப் பெறுகின்றது. தொட்டிலின் தன்மையை விரிவாகக் கற்பனை செய்தும், குழந்தையை — அதன் உறுப்புகள் ஒவ்வொன்றையும் மலர்களோடு உவமித்தும் ஓர் இயலாத்தன்மை — நடைபெற முடியாத ஒன்றை நடைபெற வைக்கும் நிலை — தோன்றப் பாடியுள்ள பாங்கில் கற்பனை வளம் உள்ளம் விழைகின்ற வண்ணம் அமைந்திருக்கக் காணலாம்.

"புலவரின் உணர்ச்சி வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் அமையும்போது ஆழ்ந்த பண்புகளற்ற, நிலையற்ற வெறும் கற்பனைகள் தோன்றும். புலவரின் உணர்ச்சி ஆழமுடையதாகவும் உயர்வுடையதாகவும் அமையும் போது நிலைபெற்ற விருப்பமுடைய கற்பனைகள் தோன்றும்" என்பார் மு. வ.[38] இவற்றில் மு. வ. இரண்டாவதாகக் கூறியுள்ள நிலைபெற்ற விருப்பக் கற்பனைகளை,

பொருள் பொருந்திய — சீரிய கற்பனைகளையே பாவேந்தர் படைத்துள்ளார்.

**கருத்து**

ஒரு படைப்பின் பாடுபொருள் எதைப்பற்றி வேண்டுமானாலும் அமையலாம். ஆனால் மனித இனத்திற்குப் பொதுவான உணர்வுகளை வலியுறுத்தி எழுதப்படும் படைப்பே காலத்தை வென்று வாழும் வல்லமையைப் பெறுகிறது. வாழ்க்கை முறைகள், ஒழுக்கம், பண்பு, காதல், ஏக்கம், பிரிவு ஆகியவை சிறந்த பாடுபொருள்களாகக் கருதப்படுகின்றன. பாவேந்தரின் கவிதைகள் இவற்றைப் பலவாறாகச் சிறப்பித்துரைக்கின்றன. வாழ்க்கைச் சுழற்சிக்கு அடிப்படையாவது அன்பு. அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல் மனிதனின் கடமை. இறைவனை அடைதலுக்கும் அன்பே ஆணிவேராக—அடிக் கருத்தாகக் கருதப்பட்டதை 'அன்பே சிவம்' என்னும் தொடர் விளக்கி நிற்கிறது. வள்ளுவப் பெருந்தகை,

> **அன்பின் வழியதுயர்நிலை அஃதிலார்க்கு**
> **என்புதோல் போர்த்த உடம்பு**[39]

என்று அன்பின் திறத்தை வலியுறுத்துகிறார். பழந்தமிழ் இலக்கியங்களும் பக்தி இலக்கியங்களும் அன்புடைமையின் சிறப்பை ஆழமாக எடுத்தியம்புகின்றன. பாப்பாப் பாட்டுப் பாடிய பாவலர் பாரதி வாழும் முறையை விளக்குகையில் 'உயிர்களிடத்தில் அன்பு வேணும்' என உரைக்கக் காண்கிறோம். அவர்வழி வந்த பாவேந்தர் அன்புப் பெருநிலமாய்த் திகழ்ந்தவர். அவர் அன்பினைத் தாயிடத்தில் மிகுதியாகக் காண்கிறார். எனவேதான் மற்ற மனித உள்ளங்களையெல்லாம் கடுகு, துவரை, தென்னை, மாம்பிஞ்சு ஆகியவற்றின் அளவோடு ஒப்பிடுகிறார். தாயானவள் அப்படிப்பட்டவள் அல்லள்.

> **தூயஉள்ளம் அன்புஉள்ளம் பெரிய உள்ளம்**
> **தொல்லுலக மக்களெல்லாம் 'ஒன்றே' என்னும்**

**தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே**
**சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்ததாலே[40]**

என்று அன்புவழிப்பட்ட தாயுள்ளத்தைப் பாராட்டிப் பாடுகின்றார் பாவேந்தர். அத்தகைய அன்பினை அனைவரும் பேணுதல் வேண்டும் என்னும் அவரது விழைவு குறிப்பாக வெளிப்படக் காண்கின்றோம். அன்புடைய வாழ்க்கை தூய்மையாக அமைந்துவிட்டால் இன்பத்திற்குத் தடையில்லை என்று இசையமுதில் எழுதுகிறார் கவிஞர்.

**உடையினில் தூய்மை — உண்ணும்**
**உணவினில் தூய்மை — வாழ்வின்**
**நடையினில் தூய்மை — உன்றன்**
**நல்லுடற் றூய்மை சேர்ப்பின்**
**தடையில்லை வாழ்நாள் ஒவ்வொன்றும் இன்பம்**
**தரும்நாள் ஆகும் நீ என்றும்**
**தூய்மை சேரடா தம்பி[41]**

என்று தம்பிக்குத் தருகின்ற கருத்துரை தரணிக்குப் பொதுவானதாய்க் கருதத்தக்கது. உடல், உடை, உணவு, வாழ்க்கை நடை இவற்றில் தூய்மை நிலவின் இன்பம் விளையும்; தடையற்ற இன்பம் விளையும் என்கின்ற சிறந்த கருத்தை — அனைவரும் பின்பற்றத்தக்க கருத்தைப் பாவேந்தர் பகன்றுள்ளார்.

பிறர் செய்த உதவியை மறக்காத நன்றியுள்ளம் நானிலத்திற்கு வேண்டப்படுவது. 'செய்தி கொன்றோர்க்கும் உய்தி இல்' என்பது புறநானூற்று வழக்கு. இதனையே வள்ளுவர்,

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு[42]**

என்கிறார். இத்தகைய செய்ந்நன்றியறியும் திறத்தை,

**பிறந்தவர் வாழும் வாழ்வு**
**பிறர் நன்றியின் தொகுப்பே**
**மறவாத தூய உள்ளம்**
**இறவாத வாழ்வு நல்கும்[43]**

என்று இறவாத வாழ்வின் அடிப்படையாகப் பாவேந்தர் கருதுகின்றார். இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்தலே தலையாய வழி என உலகப் பொதுமறை உரைக்கின்றது. பாவேந்தரும்,

> **தீது செய்தார்க்கும் நன்மை செய்வர்**
> **மூதுணர்ந்தவர் முனிவு செய்யார்**[44]

என்று பெரியோர் மேன்மையை எடுத்துச் சொல்லி, பகைமைக்கு மருத்துவம் பார்த்த நிலையைக் காண்கிறோம். இன்பம், துன்பம், இரண்டும் கலந்தது வாழ்க்கை. இன்பத்தை விரும்புவதும், துன்பத்தை வெறுப்பதும் முறையன்று. எதுவரினும் எதிர்நின்று நோக்கும் பக்குவம் பெறவேண்டும். துன்பநிலையில் உழன்றவரே இன்பத்தின் எல்லையை அறியமுடியும். அதனால் 'மிகுதுன்பம் இன்பத்திற்கு வேர்' என்கிறார் பாவேந்தர். படிப்பில்லா தவர்க்கே படிப்பறிவின் மேன்மை புலப்படும். இது போன்றே

> **கரிப்பின்றேல் இனிப்பருமை யாரே கண்டார்**
> **காயின்றேல் கனியருமை யாரே கண்டார்**[45]

என வினவி இன்ப துன்பங்களின் இன்றியமையாமையைக் கவிஞர் வற்புறுத்துகின்றார்.

'நிழலருமை வெயிலிலே நின்றறிமின்' என்னும் பழம் பாடலை நினைவுகூரச் செய்கிறார் புரட்சிக்கவிஞர். இவ்வாறு நடைமுறை வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதரும் மேற்கொள்ள வேண்டிய அன்பு, தூய்மை, நன்றியறிதல், இனியவை செய்தல், இன்ப, துன்பங்களில் நடுநிலைமை ஆகிய கருத்துகளைக் கவிஞர் அழகுறச் சுட்டியுள்ளார். சாதாரணமாக நோக்கும்போது இவற்றின் உயர்வு பலருக்குப் புலப்படுவதில்லை. உயிர் வாழ்க்கையின் இயக்கத்திற்கு இக்கருத்துகள் சீரிய பின்னணியாகத் திகழ் கின்றன என்பதை அனுபவத்தால் மூத்தோர் அறிதல் திண்ணம்.

ஒதுக்க வேண்டிய சில பழக்கங்களைக் கவிஞர் பாடியுள்ளமை கருதத்தக்கது. புகை பிடித்தல் உடல்நலத்திற்குக் கேடானது; வாழ்வில் சலிப்பினை ஏற்படுத்தி நோய்க்கு நிலைக்களமாகிவிடும் என எச்சரிக்கின்றார்.

புகைச்சுருட்டால் இளமை பறிபோகும்
பொல்லாங்குண்டாகும்[46]

என்பது கவிஞரின் அறிவுரை கலந்த எச்சரிக்கை யாகும். புகை பிடிப்பதால் பிடிப்பவர்க்கு மட்டும் தீமை விளைவதில்லை; நாட்டிற்கே தீமை நேருகிறது என்கிறார்.

மாசில்லாத செந்தமிழ் நாடு
வறுமை நோய் பெற ஏன் இக்கேடு?[47]

என்பது நாட்டுணர்வோடு கவிஞர் கூறும் கருத்துரை. காப்பி குடிக்கும் வழக்கம் இன்று பெரும்பாலோரிடத்தில் உள்ளது, கவிஞர் காப்பியை வெறுக்கிறார்.

காப்பி எதற்காக நெஞ்சே?
காப்பி எதற்காக?
கையினில் சுக்குடன் மல்லி இருக்கையில்
காப்பி எதற்காக?
தீப்பட்ட மெய்யும் சிலிர்க்க இனிப்புக்கு
வாய்ப்பற்ற தெங்கு வளர்ந்த தென்னாட்டினில்
காப்பி எதற்காக?[48]

என வினா எழுப்பி நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறார். தற்காலச் சூழ்நிலையில் காப்பி குடிப்பதைத் தவிர்த்தல் என்பது அரிது. எனினும் நல்லவை நாடி, நல்லவை மேற்கொள்ளுதல் நலம் பயக்கும் என்பதால் இக்கருத்து ஏற்கத் தக்கதே.

இளைஞர் இலக்கியத்தில் 'நேர்பட ஒழுகு' என்னும் தலைப்பில் எட்டுப் பாடல்கள் பாடியுள்ளார் கவிஞர். அவை இளைஞர்களுக்காகப் பாடப்பட்டவை. "இன்றைய குழந்தைகள் நீங்கள். இனி இந்நாட்டினை ஆளப்பிறந்தீர்"

என்று குழந்தைகளைக் குறிப்பிடுவார் பாவேந்தர். நாட்டினை ஆளப்போகும் நல்லிளைஞர் கூட்டத்திற்கு,

கடன் வாங்கக் கூடாது தம்பி—மிகக்
கருத்தாய்ச் செலவிட வேண்டும்
உடம்பினைக் காப்பாற்ற வேண்டும்
உணவினில் நல்லுணவை உண்பாய்
உடைந்திடக் கூடாது நெஞ்சம்—நீ
உண்மைக்குப் பாடுபடும் போதில்!
அடைந்ததைக் காப்பாற்ற வேண்டும்—நீ
அயல்பொருள் பறிக்க எண்ணாதே[49]

எனக் கருத்துமணிகளை நல்ஆரமாக அளிக்கின்றார். இளைய தலைமுறையின் வாழ்வில், உயர்வில் கவிஞர் கொண்டிருந்த அக்கறை உணர்வு இதில் வெளிப்படுகின்றது. கொடுமையை எதிர்க்கும் துணிவை இளைஞர்கள் பெற வேண்டும் என்பது புரட்சிக் கவிஞரின் எண்ணம். அவர் அதனை,

கொடிய வர்கள் தாக்க வந்தால்
தடியினைத் தூக்கு—வெறுங்
கோழைகளை ஏழைகளை
வாழ வைப்பாய் நீ[50]

என்று எளியநடையில் உறுதி தோன்ற எழுதியுள்ளார். கருத்துடன் வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதை 'நோய்' என்னும் பாடல் வாயிலாகக் குறிப்பிடுகிறார் கவிஞர்.

மருத்துவர் தருவார் மருந்து
மகிழ்ச்சியாக அருந்து
வருத்தப் படுதல் ஆகுமோ?
வந்தநோய் தான் போகுமோ?
திருத்தமாக நடப்பாய்
தீண்டுமா சொல் ஒரு நோய்
கருத்தாய் நடப்போர் வாழ்வார்
கருத்தில்லாதார் வீழ்வார்[51]

திருத்தமில்லாத வாழ்க்கை தெளிவில்லாத வாழ்க்கையாகி விடும். வாழ்வியல் நெறிகளை உணர்ந்து இன்றைய இளைஞர் செயல்படல் வேண்டும்; நோயின் மூலம் கருத்தில்லாது கண்டபடி வாழ்வின் ஒழுகலாறுகளை அமைத்துக் கொள்வதேயாம். அதனைத் தவிர்த்திடுக என்று கவிஞர் அறிவுறுத்துகின்றார். உழைப்பின் உயர்வை இளம் உள்ளத்தில் விதைப்பது எதிர்காலச் சமுதாயத்திற்கு நாம் செய்யும் சிறந்த தொண்டாகும். பெற்றோர்கள் பணம் படைத்திருந்தாலும், பிள்ளைகள் தம் சொந்தக்காலில் நிற்கவேண்டும்; பொருள் படைத்திட வேண்டிய வழிமுறை நாட வேண்டும். இவ்வுலகில் பொருளுக்கு இருக்கும் மதிப்புப் பெரிது. வள்ளுவர்,

> **செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்**
> **எஃகதனிற் கூரிய தில்[52]**

என்று பகையை முறிக்கப் பொருள் ஈட்டுதலை வலியுறுத்தக் காண்கிறோம். 'வினையே ஆடவர்க்குயிர்' என்பது பழந்தமிழர் வாழ்க்கை நெறிகளுள் தலையாயது. இதனைத் தம்முடைய நடையில்,

> **பெற்றவர் தேடி வைத்த**
> **பெருஞ்செல்வம் உண்டென்றாலும்**
> **மற்றும் தான் தேட வேண்டும்**
> **மாந்தன் சீர் அதுவே அன்றோ?[53]**

என்னும் வினாவுடன் தருகின்றார் கவிஞர்.

### காதல்

வாழ்க்கைக்கு இன்றியமையாத கருத்துகளைக் கூறிய கவிஞர் இளைஞருக்கு உரியவற்றையும் — மேற்கொள்ள வேண்டியவற்றையும் உரைத்துள்ளார். அடுத்து, அவ் விளைஞர்கள் பருவமடைந்தவுடன் அடையும் காதல் உணர்வினைப் பாங்குறப் பாடியுள்ளார். பாவேந்தரின் மொத்தக் கவிதைகளுள் காதல் கவிதைகள் மிகுதியானவை.

பண்டைத் தமிழர் வாழ்வில் அகமும் புறமும் தலையாய இடம் வகித்தன. வாழ்வின் இரு கண்களாக அகமும் புறமும் கருதப்பட்டன. இதனைச் சங்க நூலும் அதற்கு முற்பட்ட தொல்காப்பிய இலக்கணமும் இனிதே இயம்புகின்றன. அகம், புறம் என்னும் இருபாகுபாட்டிலும் அகமே தலைசிறந்து விளங்கக் காண்கிறோம்; அகம் குறித்த பாடல்களே சங்க இலக்கியத்தில் மிகுதியாக உள்ளன. அதுபோன்றே பாரதிதாசனாரின் பாடல்களுள் அகவுணர்வைப் போற்றும் காதல் பாடல்கள் பெருமளவில் உள்ளன.

காதல் என்பது ஓர் உணர்வு. அது பருவம் வந்ததும் தோன்றும் வளர்பிறை. ஆண், பெண் இருவரின் உளக் கலப்பும், உடற்கலப்பும் இணைந்து வையத்தில் காதலின் மகத்துவத்தை நிலைநாட்டுகின்றன. காதல் அழியாதது என்பது அறிஞர்களின் கருத்து.

> காதலுணர்ச்சி தோன்றாத காலம் இல்லை. இது தோன்றாத இடமில்லை. இதனுடைய ஆச்சரியமான சக்தியினால் இயக்கப்படாத உயிரினமும் இல்லை. மக்கள் அநாகரிகமாய் வாழ்ந்து வந்த காலந்தொட்டு இன்றுவரை இக் காதல் அவர்கள் மனத்தில் நிலைத்து வந்திருக் கிறது. மக்களை விட்டுவிட்டு அவர்களுக்குக் கீழ்த்தரமாயுள்ள பிராணிகளை எடுத்துக் கொண் டாலும் அவைகளிடத்தும் இவ்வுணர்ச்சியானது வியாபித்தே வந்திருக்கிறது. இனி எக்காலத்தி லாவது எங்காவது இவ்வுணர்ச்சி தானும் மறைந்து விடலாம் என்று நினைப்பதற்குமில்லை. ஆகவே இது நித்தியம் என்று சொல்வதில் என்ன தடை? [54]

என்று காதலின் அழியாத் தன்மையைச் சாற்றுவர். இத்தகு காதல் ஆண் பெண் இருபாலரிடத்தும் தக்க வயது வந்தவுடன் இயற்கையாய்த் துளிர்விடும். பாவேந்தர்,

**காதல் அடைதல் உயிரியற்கை! அது**
**கட்டில் அகப்படும் தன்மையதோ**[56]

என்று காதலின் கட்டுப்படுத்தவியலா நிலையைக் குறிக்கின்றார். காதல் இல்லாத உலகம் இல்லை.

**தனையடக்கிக் காதலினைத் தவிர்த்து வாழும்**
**சகம் இருந்தால் காட்டாயோ நிலவே நீதான்**[56]

என நிலவை வினவுகின்றாள், பாவேந்தர் படைத்த புதுமைப்பெண். தெளிந்த உள்ளத்தில் தோன்றும் காதல் அழியாதது; அதன் வளர்ச்சியைத் தடுக்கவியலாது கதிரவனை முகில் சூழ்ந்து கொண்டு அதன் ஒளியைத் தடுத்துவிடும். ஆனால் காதலை எவராலும் தடுத்திட முடியாது.

**விரித்த ஒருவானத்தின் ஒளிவெள்ளத்தை**
**விரைந்துவந்து கருமேகம் விழுங்கக்கூடும்!**
**இருந்த வெயில் இருளாகும் ஒரு கணத்தில்**
**இது அதுவாய் மாறிவிடும் மறுகணத்தில்**
**தெரிந்ததுதான்; ஆனாலும் ஒன்றையொன்று**
**தெளிந்த ஓர் உள்ளத்தில் எழுந்த காதல்**
**பருந்துவந்து கொத்துமென்றும் தணிவதில்லை**
**படைதிரண்டு வந்தாலும் சலிப்பதில்லை.**[57]

உள்ளத்தில் உறுதியோடு குடிகொண்ட காதல் இன்னல் விளைக்கும் இழி படைகள் எதிர்த்து வரும்போதும் சலியாமல் — சோர்வடையாமல் ஒளிவிடும் என்பது பாவேந்தர் கண்ட முடிபு. இதனையே,

**மக்கள் ஒன்று சேர்வதைப் பிறர்**
**தடுக்க முடியும் பெண்ணே;**
**மனம் ஒன்று சேர்வதை — யார்**
**தடுப்பாரடி கண்ணே!**[58]

என்று பிறிதோரிடத்திலும் கவிஞர் வலியுறுத்திக் கூறுகின்றார். காதல் உணர்வுடையோருக்கு காட்சி, நினைவு

பிற செயல்கள் குறித்த சிந்தனை எழுவதில்லை. அவர்கள் ஏறத்தாழ தெய்வீக நிலையில் வாழ்பவர்கள் என்பதை,

சாதலும் வாழ்தலும் அற்ற இடம்— அணுச்
சஞ்சலமெனும் இல்லாத இடம்
மோதலும் மேவலும் அற்ற இடம் — உளம்
மொய்த்தலும் நீங்கலும் அற்ற இடம்
காதல் உணர்வெனும் லோகத்திலே — அவர்
காணல் நினைத்தல் தவிர்த் திருந்தார் [59]

என்ற பாடற் பகுதியில் சுட்டுகிறார். இப்படிப்பட்ட காதல் நினைவில் திளைத்திடும் ஆண்மகன் ஒருவன் தன் காதலியின் அழகு நலனைத் திறம்பட இயம்புகின்றான்.

உண்டாலே தேன், மலரின்தேன் — இவள்
கண்டாலே தித்திக்கும் தேன் [60]

இங்கே காட்சியின் போதே இனிக்கின்றாள் காதலி:

பாவேந்தரின் சில காதற் பாடல்கள் பழந்தமிழ் அக இலக்கிய மரபுகளைக் கொண்டு விளங்குகின்றன. முதன் முதலாக, தலைவன் தலைவியைச் சந்திக்கும்போது ஐயம் எழுகின்றது. இவ்வாறு ஐயம் எழுதல் மரபென்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

சிறந்துழி ஐயம் சிறந்ததென்ப [61]

என்பது தொல்காப்பியனார் கூற்று. இவ்விலக்கணத்திற் கேற்ப இலக்கிய ஆட்சி நிலவுவதையும் காணமுடிகிறது.

அணங்குகொல் ஆய்மயில்கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு [62]

என்பது வள்ளுவப் பெருந்தகை படைத்த தலைமகனின் ஐயம். இம்மரபு காலந்தோறும் தமிழ் அகப்பாடல்களில் பயின்று வருவதை அறிகின்றோம். சுந்தரமூர்த்தி நாயனார் பரவையாரைக் கண்டு காதல் கொண்டு பாடுகிறார்.

கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ
பொற்புடை புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேனென்று
அதிசயித்தார். [63]

இது சுந்தரர் கொண்ட ஐயம். குயில்பாட்டில் பாரதியார் குயில் பெண்ணாக மாறியதைக் கண்டு பாடும் போது,

விண்டுரைக்க மாட்டாத விந்தையடா! விந்தையடா!
ஆசைக் கடலின் அமுதமடா! அற்புதத்தின்
தேசமடா! பெண்மைதான் தெய்விகமாங் காட்சியடா! [64]

என வியக்கின்றார். இறுதியில் அங்கு நிற்பது பெண்தான் என உணர்கிறார். அவளது அழகை வருணித்துக் கூற வார்த்தைகள் இல்லை. இருப்பினும் ஒருவாறாக அந்த அழகுப் பதுமையை அறிமுகப்படுத்துகின்றார் பாரதியார்.

..................................ஓர் வார்த்தை
கற்றவர்க்குச் சொல்வேன் கவிதைக் கனிபிழிந்த
காற்றினிலே பண்கூத் தெனுமிவற்றின் சாரமெல்லாம்
ஏற்றி யதனோடே யின்னமுதைத் தான் கலந்து
காதல் வெயிலிலே காயவைத்த கட்டியினால்
மாதவளின் மேனி வகுத்தான் பிரமனென்பேன் [65]

என்று ஐயத்திற்குத் தெளிவுரைக்க முனைகின்றார். அவரது தாசனாகிய பாவேந்தரும், அமுதவல்லியைக் கண்ட புரட்சிக்கவி உதாரனின் கூற்றை ஐயப்பாங்கோடு வரைகின்றார்.

என்ன வியப்பிது? வானிலே — இருந்
திட்டதோர் மாமதி மங்கையாய்
என்னெதிரே வந்து வாய்த்ததோ? — புவிக்
கேதிது போலொரு தண்ஒளி

மின்னற்குலத்தில் விளைந்ததோ? — வான்
வில்லின் குலத்திற் பிறந்ததோ?
கன்னல் தமிழ்க்கவி வாணரின் — உளக்
கற்பனையே உருப்பெற்றதோ? ஒரு
பொன்னின் உருக்கிற் பொலிந்ததோ? ஒரு
பூங்கொடியோ? மலர்க் கூட்டமோ?[66]

என ஐய வினாக்களை அடுக்கிக் கூறும் பாங்கினை அகமரபைப் பின்பற்றும் பாரதிதாசனிடம் காணமுடிகின்றது.

ஐயத்திலிருந்தும் வியப்பிலிருந்தும் விடுபட்ட தலைவன் தலைவியை நலம் பாராட்டல் அக இலக்கண மரபாம். பாவேந்தர் படைத்த தலைமகன்,

கண்ணுக்கொரு வண்ணப்புறா
காதுக்கவள் கானக்குயில்
பெண்ணுக் கரசானவளை[67]

என்று தலைமகளின் நலத்தைப் புகழ்கின்றான். பாண்டியன் பரிசிலே தலைவன்,

மின்னலிடை, கன்னல்மொழி இன்னும் சொன்னால்
விரியுலகில் ஒருத்தி நீ அழகின் உச்சி![68]

எனத் தலைவியைப் புகழ்ந்து கூறுவதில் இலக்கிய இன்பம் இலங்கக் காணலாம். ஒத்த காதல் கொண்ட தலைவன் தலைவியை,

அவளோ அழகின் அரங்கு! நீயோ
இந்நாள் உற்ற இன்னொரு சேரன்
ஒத்த வயதும் ஒத்த அன்பும்
உள்ள இருவரின் உயர்ந்த காதலை
ஓராயிரம் ஆண்டுக் கொரு முறையாக
இவ்வுலகு இன்றுகண்டு இன்பம் பெறட்டும்[69]

என வேறொரு பாத்திரத்தின் நிலையில் நின்று பாவேந்தர் வாழ்த்துவதை — பாராட்டுவதை அக இலக்கண மரபோடு பொருத்திப் பார்க்கலாம்.

மற்றுமொரு தலைவன், தலைவியின் நலத்தைப் பிற பொருள்களோடு ஒப்பிட்டு அவற்றினும் அவள் மேம்பட்டு விளங்குதலைச் சுட்டுகின்றான்.

மின்னொளி இன்முக நிலவே! நிலவு!
விண்ணிலவே அகலாயோ!
அன்னவள் இன்சொல் இசையே — இசையாம்
ஆர்கடல் வாய டக்காயோ!
கன்ன ங்கருங்குழல் மணமே — மணமாம்
காட்டில் மலர்காள் அகல்வீர்[70]

என நிலவு, கடலொலி. மலர்மணம் இவற்றோடு ஒப்பிடுகையில் தலைவியின் நலம் உயர்ந்து விளங்குவதாகக் கூறுவது நயமுடையது.

தலைவியைப் பாராட்டியதோடு தலைவன் நின்று விடவில்லை. தான் காணும் பொருள்களில் எல்லாம் அவள் களிநடம் புரியக்கண்டு களிக்கின்றான். அதனை இன்சொல்லின் வழியே கவிதையாக வடிக்கின்றான்:

ஏட்டினில் கவிதை தன்னில்
இவளைத்தான் காணுகின்றேன்
கூட்டினிற் கிளியும் வானில்
குளிரிளம் பிறையும் என்றன்
வீட்டினில் திருவிளக்கும்
அவள்எழில் விளக்கல் அன்றிக்
காட்டவே இல்லை என்றன்
கவலைக்கு மருந்து நெஞ்சே[71]

நெஞ்ச வீடு காதலியை எண்ணிக் கலங்கும் கவலையைக் குடியமர்த்திக் கொண்டது. எனவே நெஞ்சம்தான் கவலைக்கு மாற்று மருந்து என்று கூறி, தலைவியின் உருவம் காணுமிடங்களில் எல்லாம் காட்சி தருவதாக மொழிகின்றான். 'நோக்குவ எல்லாம் அவையே போறல்' என்னும் இலக்கண மரபினைப் பாவேந்தர் தான் படைத்த தலைவனிடத்தே ஏற்றியுரைத்துள்ளமை எண்ணத்தக்கது.

தலைவியின் நினைவைப் போற்றியவண்ணம் வாழும் தலைவனையும் பாவேந்தர் படைத்துள்ளார். நெஞ்சத்தில் கூத்து நிகழ்த்தும் தலைவியை நினைந்து படுத்துள்ள தலைவனை,

நிலவு குளிர்வார்க்கக் காற்று நெளிய
அலைகடல் இசையை அளிக்க மலர்சேர்
பஞ்சணையில் தனியே படுத்தேன்
நெஞ்சில் அவள் கூத்து நிகழ்த்துகின்றாளே![72]

என இயற்கைச் சூழலின் இனிமையோடு வெளிப்படுத்தும் நிலை போற்றற்குரியது.

தலைவி தரும் புன்னகை சாகும்வரை மறக்க முடியாதது என்பதை, தலைவியை நினைத்துத் தனிமையில் பேசும் தலைவன் வாயிலாகக் கவிஞர் குறிப்பிடுகிறார்.

போகுமட்டும் பூரிப்பாள் போகவிடை பெற்றுப்பின்
ஏகுமட்டும் பின்னழகு பார்த்திருப்பாள் யான் திரும்பித்
தோகையினை மட்டாக நோக்கினால் தான் குனிந்து
சாகுமட்டும் நான்மறவாப் புன்னகையைச்
சாய்த்திடுவாள்[73]

தனிமையிலும் தலைவியின் இனிமை நினைவு பயப்பதை இப் பகுதியின் மூலம் அறியலாம். இதுகாறும் நோக்கிய செய்திகளின் வாயிலாகப் பாவேந்தரின் அக இலக்கண மரபுப் பிடிப்பை உணர முடிகின்றது. வழிவழி வந்த தமிழிலக்கண இலக்கியச் சிந்தனைகளில் அவர் நாட்டம் கொண்டிருந்தமை புலனாகின்றது.

தலைவனின் கூற்றாகப் பாடிய பாடலைப் போன்றே தலைவியின் கூற்றாகவும் காதல் பாடல்களைக் கவிஞர் பாடியுள்ளார். தன்னைப் பார்த்தும் பார்க்காதது போலச் சென்ற தலைவன் ஆசையைத் தூண்டிவிட்டு,

பார்க்காதவன் போலே
பார்த்துப் போனாண்டி—அந்தப்
பாவி என் மனத்தில்
ஆசையை விண்டி (பார்க்காதவன்...)

**தீர்க்காதவன் போல்தன் ஆவலைத் தீர்த்தே**
**சிரிக்காதவன் போலே மறைவாய்ச் சிரித்தே**[74]

சென்றதாகக் குறிப்பிடுகின்றாள். தலைவன் பார்த்தான்; ஆவலைத் தீர்த்தான்; சிரித்தான் என்றாலும் தலைவி அதில் முழுநிறைவடையவில்லை. கவிஞர் அதனை அழகுற மொழிந்துள்ள முறை இலக்கிய நெஞ்சங்கட்கு இனிய விருந்தாகின்றது.

புரட்சிக்கவி காவியத்தில் உதாரன் மீது அமுதவல்லி காதல் கொள்கிறாள். அவனோ அரசனுக்கும், சமூக அமைப்புக்கும் அஞ்சி அவளது காதலை ஏற்கத் தயங்கு கிறான். அப்போது அமுதவல்லி,

**சித்தரித்த ஆணழகே, சென்றுபடர் முல்லையினைக்**
**கத்தரித்தல் இன்றிக் கரந்தழுவும் மாமரமும்**
**சத்தமிட்ட வண்டு தடாகத்தின் அல்லியினை**
**முத்தமிட்டுத் தேன்குடிக்கும் நல்ல முடிவும்**
**உணர்வுதனை உண்டாக்க வில்லையோ உன்பால்**
**தணலைத்தான் வீசுகின்றான் சந்திரனும் என்மேல்**[75]

எனக் காதல் வயப்பட்டு, தன் கருத்தை அவனிடம் உரைக் கின்றாள். முல்லைக்கொடி — சுற்றிப்படர மாமரம் இடந் தருகின்றது; வண்டு தேனுண்ண மலர் வாய்ப்பளிக்கின்றது; இதனை நோக்கிய பிறகும் உன்னிடம் காதலுணர்வு அரும்ப வில்லையா? நானோ காதல் மிகக் கொண்டேன்; எனக்கு வெண்ணிலவும் தணலாய்த் தகிக்கிறது என இலக்கிய நயம்பட அமுதவல்லி வாயிலாகக் காதலைக் குறிப்பிடும் பாங்கு, கவிஞரின் கலைவண்ணத்திற்குக் காட்டாய் மிளிர்கிறது.

'எதிர்பாராத முத்தம்' பாவேந்தரின் காதல் படைப்பு களுள் தலைமையானது. பொன்முடி, பூங்கோதை இருவரும் காதலர்கள். இவர்தம் காதலுக்குத் தடையாகப் பெற்றோர்கள் விளங்குகிறார்கள். எனினும் காதல்

உணர்வு நாளும் நாளும் அவர்களிடையே வளர்ந்து வருகிறது. பூங்கோதை தன் காதலனுக்கு எழுதிய கடித மொன்றில் காதலால் விளையும் இன்பத்தைப் பரம் பொருளோடு ஒப்பிடுகின்றாள்.

**இந்தச்**
**செகத்தினில் உம்மை அல்லால்**
**சத்தான பொருளைக் காணேன்!**
**சாத்திரம் கூறுகின்ற**
**பத்தான திசை பரந்த**
**பரம்பொருள் உயர்வென்கின்றார்**
**அப்பொருள் உயிர்க்குலத்தின்**
**பேரின்பம் ஆவதென்று**
**செப்புவார் பெரியார் யாரும்**
**தினந்தோறும் கேட்கின்றோமே**
**அப்பெரியார்களெல்லாம்**
**வெட்கமாய் இருக்குதத்தான்—**
**கைப்பிடித் தணைக்கும் முத்தம்**
**ஒன்றேனும் காணார் போலும்**[76]

எனப் பரம்பொருளை விடக் காதலால் விளையும் இன்பம் உயர்வானதை ஒரு பெண்ணின் கூற்றாக, பெண்ணுக்கே யுரிய நாணவுணர்வோடு கவிஞர் புலப்படுத்துகின்றார். பரம் பொருளைப் பேசுபவர்கள் காதல் வாழ்வின் இன்பத்தை அறியாதவர்கள் என்னுங் கருத்தையும், காதல் வாழ்வின் இனிமையை நுகர்ந்தவர்கள் பரம்பொருளை விடக் காதல் வாழ்வு சிறந்ததாகக் கருதுவார்கள் என்பதையும் இப்பாடற் பகுதி விளக்கி நிற்கிறது. அத்துடன் கவிஞர் காதலுக்கு அளித்த இன்றியமையாமையும் வெளிப்படுகின்றது.

அடுத்து, ஒரு பெண் ஆண்மகன் ஒருவனைக் கண்டவுடன் நாணமுறுதலை நயமாகக் காட்டியுள்ள ஆசிரியரின் திறம் போற்றுதற்குரியது. எதிர்பாராத முத்தத்தில் பூங்கோதை நீராடிவிட்டுத் திரும்புகையில் பொன்முடி வருவதைக்கண்டு

மகிழ்கிறாள். அவன் அவளை நெருங்கும்போது இருவரும் ஒருவரை ஒருவர் நோக்குகின்றனர். தனது காதலனைக் கண்டவுடன் நாணம் பெருகுகிறது பூங்கோதைக்கு; உடன் தன்னுடைய திருத்தமான ஆடையை மீண்டும் திருத்திக் கொள்கிறாள் அவள். பெண்ணிற்குரிய உயர்பண்பினை அங்கே ஆசிரியர் அருமையாக வடித்துள்ளார்.

... நிமிர்ந்தே அன்னோன்
ஒளிமுகத்தைப் பார்த்திடுவாள்; குனிந்து கொள்வாள்
சின்னவிழி ஒளிபெருகும்! இதழ் சிரிக்கும்
திருத்தமுள்ள ஆடைதனைத் திருத்திக் கொள்வாள்[77]

என்பது கவிஞர் வழங்கும் காட்சி. 'திருத்தமுள்ள ஆடைதனைத் திருத்திக் கொள்வாள்' என்னும் தொடர் பெண்மைக்குச் சிறப்பளிக்கக் கூடிய நாண உணர்வைப் பூங்கோதை கொண்டிருந்தாள் என்பதையும், இவ்வாறு பெண்கள் ஆடையைத் திருத்தும் பண்பினை ஆசிரியர் உற்று நோக்கியுள்ளார் என்பதையும் குறிப்பாகச் சுட்டு கின்றது. அத்துடன் இத்தொடர் இலக்கிய நுகர்வுக்குத் துணைசெய்யும் கலைத்தன்மையைக் கொண்டு திகழ் வதையும் நாம் காண்கிறோம். இவ்வாறு ஆண் பெண் காதலை உணர்த்திய கவிஞர் அக்காதலுக்குத் தடை விளைக்கும் சமூகத்தையும் அதனை எதிர்த்து நிற்கும் காதலரையும் பாடியுள்ள நிலை காணவேண்டிய ஒன்றாம்.

நால்வருணப் பாகுபாட்டால் அமுதவல்லி உதாரன் காதல் தொடக்கத்தில் உறுதி பெறவில்லை. தனது காதல் தயக்கத்திற்குக் காரணமாக இரத்தவெறி பிடித்தலையும் சாதிச்சார்புச் சமூக அமைப்பு விளங்குவதை உதாரன் கூறுகின்றான்.

ஏழையரைக் கொல்ல எதிரிருந்து பார்த்திருப்போர்
பாழான நெஞ்சம் சில சமயம் பார்த்திரங்கும்
சித்தம் துடிக்கின்ற சேயின் நிலைமைக்கு
ரத்தவெறி கொண்டலையும் நால்வருணம் ஏனிரங்கும்[78]

என்பது உதாரனின் வினா. இதற்குரிய விடையை அமுதவல்லி வாயிலாகக் கவிஞர் உரைக்கின்றார்.

சாதி உயர்வென்றும் தனத்தால் உயர்வென்றும்
போதாக் குறைக்குப் பொதுத் தொழிலாளர் சமூகம்
மெத்த இழிவென்றும் மிகுபெரும் பாலோரை எல்லாம்
கத்திமுனை காட்டிக் காலமெல்லாம் ஏய்த்துவரும்
பாவிகளைத் திருத்தப் பாவலனே நம்மிருவர்
ஆவிகளையெனும் அர்ப்பணம் செய்வோம்[79]

எனச் சமூக மாற்றம் காண்பதற்குச் சாவை அணைக்க அழைக்கின்றாள் அமுதவல்லி. கவிஞரின் சீரிய சமூக உணர்வு இதன் மூலம் வெளிப்படுகின்றது. காதலர் இருவர் கருத்தொருமித்துவிட்டபின் மற்றவர்க்கு அதில் வேலை கிடையாது என்று கவிஞர் ஆணித்தரமாக அறைகின்றார்.

ஆண், பெண் காதலைப் பாடியதோடு குழந்தை மணத்தின் கொடுமை, கைம்பெண் மணம் ஆகியவற்றையும் பாவேந்தர் பாடியுள்ளார்.

கூவத் தெரியாக் குயிலின் குஞ்சு
தாவாச் சிறுமான் மோவா அரும்பு[80]

என்று குழந்தையாக உள்ள பெண்ணைக் குறிப்பிடுகின்றார். அவளுக்கு இவ்வளவு சிறுவயதில் மணம் செய்து வைப்பதைக் கவிஞர் எதிர்க்கின்றார். காரணம் மணமகனோ வயதானவன். இப்பெண் வயதுக்கு வரும்போது இவன் இறந்தாலும் இறந்துவிடுவான். இவள் வாழ்க்கையை அனுபவிக்காமலே மரத்தினும் கீழாய் வாழ்ந்து மரிப்பதில் என்ன பயன்? பயனுடைய வாழ்க்கையாக ஒரு பெண்ணின் வாழ்க்கை அமைய வேண்டுமெனில் அவள் பருவமெய்திய பிறகே பிறருக்கு உரியவளாதல் வேண்டும் என்பது கவிஞரின் விழைவு.

விதவைகள் மறுமணம் புரிந்து கொள்வதை வலியுறுத்தி எழுதியவர்களுள் பாரதிதாசன் குறிப்பிடத்தக்கவர்.

**கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே—இங்கு**
**வேரிற் பழுத்த பலா**[81]

என்பது விதவை குறித்த கவிஞரின் எண்ணம். அவர்கள் வாழ்வு மீண்டும் மலர வேண்டும் என்ற நோக்கில் பல பாடல்களைப் புனைந்துள்ளார் கவிஞர். கைம்பெண் ஒருத்தியின் துயரத்தை அவலச் சுவைபட மொழிகிறார்.

**துணையிழந்த பெண்கட்குக் காதல் பொய்யோ?**
**சுகம் வேண்டாதிருப்பதுண்டோ அவர்கள் உள்ளம்**
**அணையாத காதலினை அணைக்கச் சொன்னீர்**
**அணை கடந்தால் உங்கள் தடை எந்தமூலை?**
**பெண்ணுக்கொரு நீதி கண்டீர்**
**பேதமெனும் மதுவை யுண்டீர்**
**கண்ணிலொன்றைப் பழுது செய்தால் கான்றுமிழாதோ?**
**கான்றுமிழாதோ? புவிதான் பழியாதோ**[82]

என்று பாதிக்கப்பட்ட பெண் வினவுவதாகப் பாடியுள்ள கவிதை சோக இழையும், புதுமைச் சிந்தனையும் இணைந்த கவிதையாக அமைகின்றது. காதலைப் பல நிலைகளில் வலியுறுத்திய கவிஞர் குடும்பத்தில் நிகழும் காதலையும், குடும்பப் பொறுப்பில் பெண்கள் வகிக்கும் பெரும் பொறுப்பையும் திறம்பட எழுதியுள்ளார். பெண்மைச் சிறப்பு, குடும்ப நலம், அமைதி வேட்கை ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது கவிஞரின் 'குடும்ப விளக்கு'. இதன்கண்ணும் காதல் மணத்தை வரவேற்றுப் பாடியுள்ளமை நோக்கத்தக்கது.

ஒருத்தியும் ஒருவனும் உள்ளம் கலத்தலாகிய திருமண வாழ்வு நல்ல குடும்பத்திற்கு வித்து 'நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்' என்னும் உரை, உண்மையுரை. குடும்பத்தில் மனைவியின் கடமை பெரிது.

**கண்ணவள் மாமியார்க்கே காப்பவள் மாமனார்க்கே**
**உண்மையில் வாழ்க்கையில் உயிராவள் கணவனுக்கே**[83]

என்று பாவேந்தர் மனைவியின் நிலையைச் சுட்டுகிறார். குடும்ப விளக்கிலே 'தங்கத்தின்' இயல்பை,

பொருளையும் பெரிதென் றெண்ணாள்
பூண் வேண்டாள் தனை மணந்தோன்
அருளையே உயிரென் றெண்ணும்
அன்பினாள்[84]

என உரைக்கின்றார் ஆசிரியர். பெண்ணுலகிற்கு எடுத்துக் காட்டாய் தங்கத்தைப் படைத்து, பெண்ணிலாத வாழ் வில்லை என்பதை உணர்த்துகின்றார். பிள்ளைகளை வளர்க்கும் முறைக்காகத் தங்கமும் மணவழகும் பரிசு பெறுகின்றனர். அவர்கள் பிள்ளைகளை வளர்த்த முறையை,

ஆல் ஒடிந்து விழுந்தாலும் தோள்கள் தாங்கும்
அப்படி நாம் பிள்ளைகளை வளர்த்ததாலே[85]

எனப் பெற்றோர்கள் வாயிலாகவே பாடியுள்ளார் பாவேந்தர்.

கணவனைப் பேணி, பெற்றோர் உற்றோரைக் காத்து, பிள்ளைகளைப் பெரியவராக்கி, நற்பொறுப்புகளை அவர் களுக்களித்துக் குடும்பச் சக்கரத்தின் சுழற்சிக்கு அடிப்படை யாய் அமைகின்றாள் பெண். ஒத்த அன்புடைய கணவன் மனைவியர் இல்லறம் மேற்கொண்டு பல ஆண்டுகள் கழிந்த பின்னர் அவர்கள் தங்கள் இளமைக்கால வாழ்வை நினைத்துப் பெருமிதம் கொள்வர். அப்படிப் பெருமிதம் கொண்ட பெரியவர் குடும்பவிளக்கில் வரும் மணவழகர். அவர் வாழும் உலகில் தொல்லைகள் ஏதும் இல்லை. அதற்குக் காரணம் அவர் மனைவியே. இதனை, மண வழகர் வாயிலாக,

தொல்லையிலா அவ்வுலகம் யான் வாழும் இல்லம்
பகையில்லை அங்கின்மை இல்லை பிணி இல்லை
பழியில்லை என்துணைவி அரசாண்ட தாலே[86]

என்ற பாடலில் குறிப்பிடுகின்றார் பாவேந்தர். துணைவியின் பெருமையில் திளைத்திடுவதால் அவளை மறக்க இயலவில்லை. வயது கழிந்தது என்றாலும் அவள் நெஞ்சில் நான் நிலைத்து விட்டேன்; அவள் நினைவாகவே நானும் வாழுகின்றேன்.

கதையாகிக் கனவாய்ப்போகும்
நிகழ்ந்தவை; எனினும் அந்த
முதியோளே வாழுகின்றாள்
என்நெஞ்சில் மூன்று போதும்[87]

என்று முப்போதும் அவள் நினைவில் நிற்பதைக் காட்டு கையில் முதிர்ந்த அன்பின் திறம் தெற்றெனப் புலனாகிறது. முதியவரின் மகிழ்ச்சிக்குக் காரணம் அவளது உடலழகு அன்று; பணிவிடைகளும் அன்று. அவள் இருப்பதொன்றே இவருக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது.

புதுமலர் அல்ல; காய்ந்த
புற்கட்டே அவளுடம்பு
சதிராடும் நடையாள் அல்லள்
தள்ளாடி விழும் மூதாட்டி
மதியல்ல முகம் அவட்கு
வறள்நிலம்! குழிகள் கண்கள்
எது எனக்கு இன்பம் நல்கும்
இருக்கின்றாள் என்பதொன்றே[88]

என்னும் பாடல் பாவேந்தரின் கவிதைச் சிறப்புக்கு, கருத்துச் செறிவுக்கு உலகியல் சிந்தனைக்குச் சிறந்த சான்றாய்த் திகழ்கிறது. முதியோர் காதலை எண்ணிப் பார்த்தவர் என்ற முதன்மைப் பெருமை பாவேந்தருக்குண்டு. மனைவியின் நினைவால் நிலைத்த இன்பம் பெற்றதாகக் கணவர் கூறுகிறார். கணவனைச் சுமக்கும் மனம்தான் என் வாழ்வு அமைதிக்குக் காரணம் என்கிறார் மனைவி.

அறம்செய்த கையும் ஓயும்
மக்களை அன்பால் தூக்கிப்
புறம்போன காலும் ஓயும்
செந்தமிழ்ப் புலவர் சொல்லின்
திறம் கேட்ட காதும் ஓயும்
செயல்கண்ட கண்ணும் ஓயும்
மறவனைச் சுமக்கும் என்றன்
மனம்மட்டும் ஓய்தலில்லை[89]

கணவனை ஓயாது நினைத்துக் கொண்டிருக்கும் மனைவியின் நிலை இது. பாவேந்தர் படைத்த முதியோர் காதல்—வாழ்வு அன்புலகை நோக்கி நடைபோடும் உலகத்திற்குக் கிடைத்த புதிய பாதை எனப் புகல்வது பொருத்தமுடையது. இறுதியாகப்பெ பண்கள் இன்றேல் ஆண்கள் வாழ்வு சிறக்காது என்று கூறிப் பெண்மையைப், பெண்ணுரிமையைப் பலவாகப் புகழ்கின்றார் பாவேந்தர். போர் பூசலற்ற, அமைதி தவழும் இன்பநிலை பெண்கள் இட்ட பிச்சை என்கிறார் கவிஞர்.

பெண்கள் இட்ட பிச்சைதான் ஆண்கள்
பெற்றஇன்பம் அனைத்தும் அழகிய பெண்கள்
இட்ட பிச்சைதான்
கண்ணைக் கவர்வார் எண்ணம் கவர்வார்
காதலால் இன்ப வாழ்வளித்திடும்
பெண்கள் இட்ட பிச்சைதான்
அன்னை தயை உடையார்—பணிவினில்
அடியவர் போன்றார்—மலர்ப்
பொன்னின் அழகுடையார் பொறுமையில்
பூமிக்கிணை ஆவார்
இன்பம் அளிப்பதில் தாசிகள்—அவர்
எண்ணம் அளிப்பதில் அமைச்சர்கள் அழகிய
பெண்கள் இட்ட பிச்சைதான்[90]

தாயாக, பொறுமை நிறைந்தவராக, நல் மனைவியாக, தேர்ந்த அமைச்சராக பெண்கள் விளங்குவதால் ஆண்கள்

இன்பமுறுகின்றனர்; எனவே வையக வாழ்வு சிறக்கிறது. புரட்சிக்கவிஞர் பெண்களுக்கு அளித்த சிறப்புகளை இந்த ஒரு பாடலைக் கொண்டே மதிப்பிட்டுவிட முடியும். இந்த நூற்றாண்டில் பெண்மையை, பெண் கல்வியை, பெண் உரிமையை, பெண் முன்னேற்றத்தை இவ்வளவு விரிவாகப் பாடிய தமிழ்க் கவிஞர்கள் வேறு யாரும் இருப்பதாகக் கூற முடியாத அளவிற்குப் பாவேந்தரின் பாடல்கள் பல பெண்மைச் சிந்தனையை முழக்குகின்றன.

பாவேந்தர் பாரதிதாசனின் காதலைப் பற்றிய பாடல்கள் மிகுதியானவை எனத் தொடக்கத்தில் சுட்டப்பட்டது. காதல் உணர்வு இடம், மொழி, இனம், நாடு, இவற்றையெல்லாம் கடந்த நிலையில் உயிர்களிடையே தோன்றும் பிணைப்புநிலை. இந்தப் பிணைப்புக் குறித்த பாடல்கள் பல பாடுவதன் மூலம்—காதல் உணர்வின் மூலம்—மக்களை ஒன்று சேர்க்க முடியும்; ஒற்றுமைப்படுத்த முடியும்; சாதி, சமயப் பூசலற்ற நேரிய சமுதாயத்தை உருவாக்க முடியும் என்ற கொள்கையைக் கொண்டவராகப் பாரதிதாசன் விளங்குகிறார். கலப்பு மணங்களும், காதல் மணங்களும் சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை நீக்க வல்லன என்ற கருத்தில் அவர் கொண்டிருந்த உறுதியை நாம் உணர்கின்றோம்.

பொதுவான வாழ்க்கை முறைகள், இளைஞர்களின் முன்னேற்றத்திற்குரிய காதல் வாழ்வு இவற்றைப் பாடிய கவிஞர் வேறு சில சமூக உணர்ச்சிகளையும் தம் பாடல்களில் வடித்துள்ளார். அவற்றுள் மூட நம்பிக்கையைச் சாடியது முதன்மையானது. மூடநம்பிக்கையால் விளையும் கேடுகளை விளக்குவதற்காகவே 'இருண்ட வீட்டை'ப் பாவேந்தர் படைத்துள்ளார். கடவுள், சடங்குகள் இவற்றால் நேரும் பயன்கள் எதுவுமில்லை; எனவே அவற்றைக் கைவிடுதல் நல்லது என மண்ணக மக்களுக்கு மதியூட்டுகின்றார்.

சாணிக்குப் பொட்டிட்டு, சாமி எனக் கும்பிடும் வழக்கம் வெட்கத்திற்குரியது. இது போன்ற மூடப்பழக்கம் இருப்பதால் நமது உயர்வு தடைப்படுகின்றது. நாம் உயர்ந்து விளங்கும் நாள் எப்போது? என்ற வினாவை,

நல்ல இமயம் நலங்கொழிக்கும் கங்கைநதி
வெல்லத்தமிழ் நாட்டின் மேன்மைப் பொதியமலை
செந்நெல் வயல்கள் செழுங்கரும்புத் தோட்டங்கள்
தின்னக் கனிகள் தெவிட்டாப் பயன்மரங்கள்
இன்பம் செறிந்திருக்கும் இப்பெரிய தேசத்தில்
முப்பத்து முக்கோடி மாந்தர்கள் மொய்த்தென்ன?
செப்பும் இயற்கை வளங்கள் செறிந்தென்ன?
மூடப்பழக்கம் முடிவற்ற கண்ணுறக்கம்
ஓடுவதென்றோ? உயர்வ தென்றோ?[91]

என்னும் பாடற்பகுதியில் எழுப்பி நம்மைச் சிந்தித்துச் செயல்பட வைக்கிறார் கவிஞர். பாவேந்தரின் பகுத்தறிவுச் சிந்தனை விளக்கமுற வழிகாட்டியவர் தந்தை பெரியார். பெரியாரின் எண்ணங்களைத் தம் எழுத்தில் வடிக்கும் பணியைச் செவ்வனே செய்திருக்கிறார் புரட்சிக்கவிஞர். பெரியாரின் பின்னணி, அக்கால அரசியல், சமூகப் பின்னணி ஆகியன கவிஞரின் மூடப்பழக்க ஒழிப்பிற்கு உறுதுணையாயின.

தொழிலாளர்களின் உயர்விற்குக் குரல் கொடுத்தவர் பாரதிதாசன். தொழிலாளர்களைப் பற்றிய அவருடைய கவிதைகள் அவரது தொழிலாளர் நலக் கொள்கைக்குச் சான்றாகின்றன.

நீரோடை நிலங்கிழிக்க நெடுமரங்கள்
நிறைந்து பெருங்காடாகப் பெருவிலங்கு
நேரோடி வாழ்ந்திருக்கப் பருகைக்கல்லின்
நெடுங்குன்றில் பிலஞ்சேரப் பாம்புக்கூட்டம்
போராடும் பாழ்நிலத்தை அந்த நாளில்
புதுக்கியவர் யார்?[92]

என்னும் வினாவை எழுப்பித் தொழிலாளரிடையே ஒற்றுமையுணர்வை உருவாக்குகிறார் கவிஞர்.

சித்திரச் சோலைகள், தாமரைத் தடாகங்கள், யந்திரக் கூட்டம் மரமிகு பாதைகள், என்றிவற்றை வடித்தளித்தவர் தொழிலாளர். அவர் வாழ்வு செம்மையுற வேண்டும்; இன்றேல் முன்னேற்றம் தடைப்படும். அவர்களைக் குறைத்து மதிப்பிடுவதும், அவர்களது உணர்வை மதியாமல் இருப்பதும் பயனற்றவை.

**நேர் இருத்தித் தீர்ப்புரைத்துச் சிறையில் போட்டால்**
**நிறை தொழிலாளர் உணர்வு மறைந்து**[93]

போகாது என்று அடக்கி ஆளும் வஞ்சர்க்கு நினை வூட்டுகிறார்.

உழைக்கும் தொழிலாளரின் உயர்வுக்கு வழிவகுப்பது பொதுவுடைமைக் கொள்கை. அத்தகு சமுதாயம் அமைய வேண்டும் என விழைகின்றார் புரட்சிக் கவிஞர். அதன் விளைவே உலகப்பன் பாட்டு.

**புதுக்கணக்குப் போட்டுவிடு பொருளையெல்லாம்**
**பொதுவாக எல்லோர்க்கும் நீ குத்தகை செய்**[94]

என உலகப்பனை எச்சரிக்கிறார் ஆசிரியர். பொது வுடைமைக்கு வழி வகுக்கவில்லையெனில் மக்களே அதனைப் பெற முயல்வர்.

**ஓடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்**
**உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொ டிக்குள்**
**ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி**
**ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ**[95]

என்று பொதுமை உலகு அமைய வேண்டிய முறையை எடுத்துச் சொல்லி நமக்குப் புதுப்பாதை காட்டுகின்றார் கவிஞர். 'எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் இனம்; எல்லோரும் ஓர் நிறை' என்னும் பாரதியின் சமத்துவப்

பார்வை மேலும் கூர்மையடைந்து ஒளிருவதைப் பாவேந்தரிடம் காண்கிறோம்.

பொதுமைச் சிந்தனையால் ஏற்றத்தாழ்வற்ற சமூகத்தை அமைக்கமுடியும் என உரைத்த புரட்சிக் கவிஞர் உலகமக்களை ஓரினமாகக் கருதும் உயரிய பார்வையை நமக்கு அளித்துள்ளார்.

உன்வீடு—உனது பக்கத்து வீட்டின்
இடையில் வைத்த சுவரை இடித்து
வீதிகள் இடையில் திரையை விலக்கி
நாட்டொடு நாட்டை இணைத்து மேலே
ஏறு! வானை இடிக்கும் மலைமேல்
ஏறுவிடாமல்! ஏறு மேன்மேல்!
ஏறி நின்று பாரடா எங்கும்
எங்கும் பாரடா இப்புவி மக்களைப்
பாரடா உனது மானுடப் பிறப்பைப்
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்
'என் குலம்' என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்
அறிவை விரிவு செய்! அகண்டமாக்கு
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
அணைந்து கொள்! உன்னைச் சங்கமமாக்கு
மானிட சமுத்திரம் நானென்று கூவு
பிரிவிலை எங்குப் பேதமில்லை
உலகம் உண்ண உண்! உடுத்த உடுப்பாய்[96]

என்னும் கவிதையில் கவிஞரின் உலகம் தழுவிய நோக்கினை உலகமக்களை எல்லாம் பேதமின்றி நோக்கும் தன்மையினைக் காணலாம். எனவேதான் பாவேந்தர் ஓர் உலகக் கவிஞர் எனப் போற்றப்படுகின்றார்.

இதுகாறும் கண்டவற்றால் பாவேந்தர் கவிதைகளின் பாடுபொருள்கள் தனிமனித வாழ்க்கை, பொதுவான ஒழுகலாறுகள், இளைய தலைமுறைக்குரிய எழுச்சிக்

கருத்துகள், காதல் உணர்வு, குடும்பமேன்மை, பெண்ணுரிமை, மூடப்பழக்க ஒழிப்பு, தொழிலாளர் சிந்தனை, பொதுவுடைமை நோக்கு, பரந்த உலக நோக்கு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிலங்கும் பான்மையினை அறிகின்றோம்.

இவையன்றிக் 'காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நல்கும்' பத்திரிகையைப் பாடியுள்ளார். பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிகையைப் பெண்ணாக உருவகித்து, அறிஞர்தம் இதய ஓடையின் ஆழநீரினை மொண்டு மக்கள் எண்ணம் செழிக்கும் வண்ணம் ஊற்றிக் குவலயம் ஓங்கச் செய்யும் அதன் பண்பினைப் பகர்கின்றார். கல்வியறிவைப் பெருக்கும் புத்தகசாலை குறித்தும் கவிஞர் பாடியுள்ளார்.

**புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில்**
**புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்**[97]

என்று அவர் விரும்புகின்றார்.

**இளகிய வெல்லம் மாற்றி**
**நல்லதாய் ஈவோம் இன்றே**
**புளியோகை யிருப்பிலில்லை**
**பொதிக்கொரு நூறு ரூபாய்**
**மிளகுக்கு விலைஏ றிற்று**
**வெந்தயம் வரவே யில்லை**[98]

எனும் கவிதை மளிகைப் பொருட்களைப் பாட்டுப் பொருளாகக் கொண்டுள்ளமை காண்க. இதுபோன்றே யாத்திரைக்குச் செல்கையில் எடுத்துச் செல்லவேண்டிய பொருள்களையும் கவிஞர் கவிதையாக வடித்துள்ளார். கவிஞரின் ஆற்றலுக்கு இவை சான்றாகின்றன.

இப்படிப் பல செய்திகளை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்ட பாவேந்தரின் கவிதைகளில் மனித வாழ்வை மேம்படுத்தும் 'கருத்து வளம்' நிறைந்து கிடக்கின்றது; இலக்கிய நுகர்வுக்குத் துணையாகும் வண்ணம் உணர்ச்சி

யுடனும் கற்பனையுடனும், அழகிய வடிவத்தோடும் அவற்றைக் கவிஞர் வெளியிட்டுள்ளார்.

**வடிவம்**

கலையின் வடிவம் என்பது ஒருமுகமாக இயையும் முழுமை என்று சுட்டப்படுகிறது. உணர்ச்சி, கற்பனை, கருத்து இவற்றைப் படிப்போரிடத்து முழுமையாகச் செலுத்தும்வண்ணம் ஏற்றதொரு வடிவத்தைக் கலைஞன் கையாளவேண்டும். இலக்கியக் கூறுகளின் முழுமை பெற்ற நிலை வடிவத்தில் ஒளிருதல் இயல்பு. இவ்வாறு அமையும் வடிவத்திற்கு ஏற்ற சொற்களும், அதற்கு இயைபுடைய நடையும் இன்றியமையாது வேண்டப்படுவன. வடிவச் சிறப்பிற்குக் கலைஞரின் உள்ளம் காரணமாகின்றது. கலைஞரின் உள்ளத்து உணர்ச்சியே வடிவாகின்றமையால் அவரது உணர்வுகள் முதல் நிலை வகிக்கின்றன. உணர்வுகளின் ஒருமித்த சேர்க்கையால் வடிவத்தில் முழுமையும், இயைபும் ஏற்படுகின்றன. பாவேந்தரின் பாடல்கள் பலவும் வடிவ அமைதியோடு திகழ்கின்றன.

வானுக்கு நிலவு வேண்டும்
வாழ்வுக்குப் புகழ் வேண்டும்
தேனுக்குப் பலாச்சுளை வேண்டும்—என்
செங்கரும்பே நீ எனக்கு வேண்டும்

மீனுக்குப் பொய்கை வேண்டும்
வெற்றிக்கு வீரம் வேண்டும்
கானுக்கு வேங்கைப் புலி வேண்டும்—என்
கண்ணாட்டியே நீ எனக்கு வேண்டும்

வாளுக்குக் கூர்மை வேண்டும்
வண்டுக்குத் தேன் வேண்டும்
தோளுக்குப் பூமாலை வேண்டும்—அடி
தோகையே நீ எனக்கு வேண்டும்

நாளுக்குப் புதுமை வேண்டும்
நாட்டுக்கு உரிமை வேண்டும்
கேளுக்கே ஆதரவு வேண்டும்—அடி
கிள்ளையே நீ எனக்கு வேண்டும்.''

இவ்வடிவப் பாங்கு 'அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்' என்னும் வள்ளற் பெருமானின் பாடல் வடிவத்தோடும், 'காணிநிலம் வேண்டும்—பராசக்தி, காணி நிலம் வேண்டும்' என்னும் பாரதியின் பாடல் வடிவத் தோடும் ஒத்திருக்கின்றமை நோக்கத்தக்கது. எவை எவை எவற்றைப் பெற்றிருந்தால் அவற்றுக்குச் சிறப்பு நேரும் என்பதைக் கூறுகின்றார். ஆடவன் ஒருவன் நல்ல மனைத் தக்க மாண்புடையவளைப் பெற்றிருந்தால்தான் அவன் வாழ்வு சிறக்க முடியும் எனும் வள்ளுவர் உள்ளத்தையும் இப்பெரிய வடிவமைப்பின் உள்ளீடாகக் காட்டுகின்றார் கவிஞர். இவ்வாறு இப்பாடல் பரந்து விரிந்திருப்பினும் கருதுகோள் ஒன்றினைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளமை வடிவ முழுமையின் வெற்றிக்கு எடுத்துக் காட்டாகின்றது.

பாழாய்ப் போன என்மனம் ஒரு நாய்க்குட்டி—அதைப்
பறித்துக் கொண்டாய் அடியே என் சின்னக்குட்டி

உன்மேனி ஒரு பூந்தொட்டி
உதடு தித்திக்கும் வெல்லக்கட்டி

ஏழைக்கு வடித்து வைத்த சோறு—பணம்
இருப்பவருக்குச் சாத்துக்குடிச் சாறு

பெருக்கெடுத்த தேனாறு
பெண்ணே உன் எண்ணம் கூறு

காணக்காண ஆசைகாட்டும் முத்துநிலா—நீ
கடுகடுப்புக் காட்டுவதும் என் மட்டிலா

வேரில் பழுத்த பலா
வேண்டும் போதும் தடங்கலா?

**வீணாகிப் போகலாமா நேரமே—என்னை**
**விலக்கி விட்டால் பழி உன்னைச் சேருமே**

**பொறுத்தேன் ஒரு வாரமே**
**பொறுக்க மாட்டார் யாருமே**[100]

எனக் காதலன் ஒருவன் தன் காதல் மேம்பாட்டை, அறியாதாள் போல் பிறருக்காக மறுக்கும் உளம் கொண்ட காதலியிடம் கூறுகையில் நகைச்சுவைத் தன்மையும், காதல் ஏக்கமும் உணர்வுச் சுழிப்புடன் வெளிப்படுகின்றன. மேலும் இச்சொல்லோவியத்தில் இருப்பவன், இல்லாதவன் இருவரிடையே நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வையும் கவிஞர் புலப்படுத்துகின்றார். இப்பாடலின் அனைத்து அடிகளும் ஒருபோக்காக அமையாமல் இரண்டு இரண்டு அடிகள் சேர்ந்து நாட்டுப்புற இலக்கியத்தின் பிரதிபலிப்பாக அமைகின்றன. இவ்வாறு அடிதோறும் நயத்தினைச் சேர்த்துப் படிப்போரின் சலிப்பினைப் போக்குகின்றார் கவிஞர்.

**பாண்டியன் என் சொல்லைத் தாண்டிப் போனாண்டி**
**பாண்டியன் என் சொல்லை...**

**ஈண்டு மயலில் நான் தூண்டிலில் மீனாய்**
**மாண்டிட விடுத்தே வேண்டிட வேண்டிட**
**பாண்டியன் என் சொல்லை...**

**தமிழிசைப் பேச்சும் செங்கோலோச்சும்**
**தடக்கை வீச்சும் காதலைப் பாய்ச்சும்**
**இமைப்பினில் ஓடி அவனைத் தேடி**
**என்னகம் நாடி வாடி போடி**
**பாண்டியன் என் சொல்லை...**

**பிரிந்திடும் போது நெஞ்சு பொறாது**
**வரும்போது பேசாதிருக்க ஒண்ணாது**
**எரிந்திடும் சினத்தில் எதிர்வருவானேல்**
**என்னுயிர் தாவிடும் அன்னவன் மேல்**
**பாண்டியன் என் சொல்லை...**[101]

எனும் இப்பாடல் 'நந்தவனத்தில் ஓர் ஆண்டி' என்ற சித்தர் பாடலை உருவெடுத்து நிற்கிறது; ஒவ்வோர் அடியின் இறுதிச் சீர்களும் சந்த ஒலியில் ஒன்றுபட்டு இறுதி இயைபுடன் அமைகின்றமை காணலாம். இவ்வடிவமும் காதல் உணர்வுகளை அடியொற்றியதாகவே உள்ளது.

இரு உருவும் ஒரு மனமுமாக இருக்கவேண்டிய இல்லறம் கணவன் மனைவியர் தமக்குள் உள வேறுபாடு கொண்டால் இல்லறம் சிறவாது என்பதை விளக்க வரும் கவிஞர், சீரிய வடிவத்தைக் கருவியாகக் கொள்கின்றார்.

எங்கிருந்தாயடி என்குடிக்கிப்படி
மங்கிப் போக வைத்தாய் காலடி
பொங்கலாண்டி யாகப் போம்படி
புரிவதெல்லாம் மிகவும் அழும்படி
எனவே இப்படி முடித்தார் முதலடி
தானும் தொடங்கினாள் தாளத்தின்படி
ஊருக்கழித்தாய் உருப்படவா நீ
நாட்டுக்கழித்தாய் நலம்படவா நீ
இனியும் ஊரில் எடுபட வாநீ
என்று கூறி எடுத்தாள் அம்மை
இரண்டாம் அடியை இப்படி முடிக்குமுன்
வந்த அண்ணன் வந்தவழியே
சந்தடியின்றிச் சடுதியிற் சென்றான்.[102]

வீட்டுக்கு விருந்தாக வந்து கொண்டிருப்போரைக் கவனியது வசைபாடிக்கொள்ளும் இரு காதலர்களை — அவகளது நிலையை வெளிப்படுத்தும் நோக்கில் ஆசிரியர் சந்த இன்பம் பெருகும் வண்ணம் பாடிய பாங்கினை நோக்கலாம். இதன்கண் மனப்பூசலோடு உரையாடும் இருமாந்தர்களின் உருக்காட்சியை நம் கண்முன் கவிஞர்

வாரவமைத்துள்ளமை ஆழ்ந்து நோக்குங்கால் அறிய முடிகின்றது.

எடுப்பு

நூலைப்படி — சங்கத்தமிழ்
நூலைப்படி — முறைப்படி
நூலைப்படி

உடனெடுப்பு

காலையிற்படி கடும்பகல்படி
மாலை இரவு பொருள் படும்படி நூலைப்படி!

அடிகள்

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் கொள்கைப்படி
கற்கத்தான் வேண்டும் அப்படி
கல்லாதவர்கள் வாழ்வதெப்படி? நூலைப்படி!

அறம்படி பொருளைப்படி
அப்படியே இன்பம் படி
இறந்த தமிழ் நான்மறை
பிறந்ததென்று சொல்லும்படி நூலைப்படி!

அகப்பொருள்படி அதன்படி
புறப்பொருள்படி நல்லபடி
புகப்புகப் படிப்படியாய்
புலமை வருமென் சொற்படி
சாதி என்னும் தாழ்ந்தபடி
நமக்கெல்லாம் தள்ளுபடி
சேதி அப்படி தெரிந்துபடி
தீமை வந்திடுமே மறுபடி நூலைப்படி!

பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூல்களை ஒப்புவதெப்படி? நூலைப்படி!

தொடங்கையில் வருந்தும்படி
இருப்பினும் ஊன்றிப்படி
அடங்காஇன்பம் மறுபடி
ஆகும் என்ற ஆன்றோர் சொற்படி[103] நூலைப்படி!

எனும் இச்சொற்கலை ஓவியம், உண்மையை உணர்த்தும் சங்க இலக்கியம், திருக்குறள் இரண்டையும் படிக்க வேண்டும்; மருட்டுகின்ற மதம் கூறும் நூல்களையெல்லாம் வெறுத்துப் பொசுக்க வேண்டும் என்ற பகுத்தறிவு முழக்கத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது. சாதி வேற்றுமையைக் களைவதற்கு ஏற்ற பருவம் பள்ளிப்பருவம் என்பதை உணர்ந்து இளம் சிறார்களை எதிர்காலச் சிற்பிகளாய் உருவாக்கும் பொறுப்புணர்வோடு பாவேந்தர் இப்பாடலைப் படைத்துள்ளார். இதன்கண் படி எனும் சொல் திரும்பத் திரும்ப வந்து இலக்கிய நயமும், இனிய ஓசையும் ஊட்டி நிற்கின்றது. இப்பாடல் அடிகளில் படியாத நெஞ்சங்கள் உள்ளபடியே இருக்கமுடியாது.

தமிழ்நாடு, தமிழ்மொழி இரண்டையும் இரு கண்களாகப் போற்றும் கவிஞர் தமிழ்மொழியை ஒவ்வொரு வரும் படிக்க வேண்டும் என்ற தம் எண்ணத்தை ஒரு பெண்ணின் குரலில் ஒலிக்கச் செய்கிறார். குடும்பவிளக்கு எனும் நூலில் 'ஒரு நாள் நிகழ்ச்சி'யில் எல்லா அலுவல் களையும் முடித்து இரவு படுக்கச் செல்கின்ற கணவன் மனைவியர் தம் காதல் உணர்வின் ஊடே தமிழ் உணர்வை யும் மறவாது கிளக்கின்றனர். அப்போது தங்கம் கட்டிலருகே அமர்ந்து தன் கணவனிடம் பொதுத் தொண்டைப் புகழுகின்றாள். கணவன்,

கரும்படியின் சாறுநிகர் மொழியாள் இந்தக்
கனிந்தமொழி சொன்னவுடன் அவன் உரைப்பான்

வரும்படி வீதப்படி நான் தரும்படிக்கு
வாக்களித்தபடி கணக்கர் திங்கள்தோறும்
கரம்படி வீதித்தமிழர் கழகத்தார்கள்

கடைப்படியை மிதித்தவுடன் எண்ணி வைப்பார்!
பெரும்படியாய்ச் செய்ததுண்டு; படிக்கணக்கைப்
பேசிவிட்டாய் கண்டபடி

என அவளுக்கு மறுமொழியுரைக்கின்றான்.

அப்படியா! அறியாத படியால் சொன்னேன்
அந்தமிழர் படிப்படியாய் முன்னேற்றத்தை
எப்படியாயினும் பெற்றுவிட்டால் மக்கள்
இப்படியே கீழ்ப்படியில் இரார்களன்றோ!
மெய்ப்படிநம் மறிஞரின் சொற்படி நடந்தால்
மேற்படியார் செப்படி வித்தை பறக்கும்
முற்படில் ஆகாததுண்டோ? எப்படிக்கும்
முதற்படியாய்த் தமிழ் படிக்க வேண்டும் என்றாள்[104]

என்று தமிழால்தான் எல்லாம் முடியும்: ஆதலினால் முதற்படியாய்த் தமிழைப் படிக்கக் கூவி அழைக்கின்றார் கவிஞர். மேலும், இதில் சமுதாயத்தில் அரசியலார்க்கு வாக்களிப்பவர்கள் ஓட்டுக் கேட்பவர்களிடத்தில் கையூட்டுப் பெற்று விடுவதால் உண்மையானவர்களைத் தேர்ந்தெடுக்கத் தவறுகிறார்கள். அதனால் வெற்றி பெற்று வருபவர்களும், மக்கள் நலனைக் கருதுவதில்லை என்ற ஓர் அரசியல் உளவியலையும் கவிஞர் படைத்துக் காட்டுகின்றார்.

தமிழ்க் கோயில்களில் தமிழ்மொழிப் புறக்கணிப்பு ஒரு கொடிய நோயாகப் பல்லாண்டுக் காலமாக இருந்து வருவதைக் கண்டு உளம் தாங்காக் கவிஞர் இந்நிலையை மாற்ற வேண்டும் என்னும் ஆவேச முழக்கை.

தெற்கோதும் தேவாரம்
திருவாய்நன்மொழியான
தேனிருக்கச்

செக்காடும் இரைச்சலென
வேதபாராயண மேன்
திருக்கோயில் பால்?

திருப்படியில் நின்றபடி
செந்தமிழில் பெரும்படியார்
அருளிச் செய்த

உருப்படியை அப்படியே
ஊரறியும் படியுரைத்தால்
படியும் நெஞ்சில்

தெருப்படியில் கழுதையெனச்
செல்லுபடி யாகாத
வடசொற் கூச்சல்

நெருப்படியை எப்படியோ
பொறுத்திடினும் நேர்ந்தபடி
பொருள் கண்டீரே[105]

எனும் பாடல் ஓங்கி ஒலிக்கின்றது. கடவுள்பற்று தனக்கில்லை என்று கவலைப்படாமல் பாவேந்தர் ஒதுங்கி யிருக்கலாம். ஆனால் தமிழ்நாட்டில், தமிழ் ஆலயங்களில் தமிழுக்குரிய உரிமை மறுக்கப்படுகிறது என்றால் அதனை நசுக்கிடத் துணிதல் வேண்டும் என்ற உணர்வை உருகிய இரும்பாக உளத்தில் இருத்திய காரணத்தால் பொங்கி எழுகிறார் புரட்சிக் கவிஞர். இப்பாடலில் மொழிப்பற்றுப் பீறிட்டு எழுவதைக் காணமுடிகிறது.

இவை போன்றே கவிஞரின் கவிதைகளில் சந்தத்திற்கும் பஞ்சமில்லை என்று கூறும் அளவிற்குப் பல பாடல்கள் உள்ளன. உணர்வுக்கேற்ற யாப்பமைப்பதிலும், சுவைக் கேற்ற வண்ணப் பாவமைப்பதிலும் எளிமைக்கும் எளிதாய், அரிதிற்கும் அரிதாய்ப் பாவமைப்பதிலும் கவிஞர் கைதேர்ந்தவர் என்பது வெள்ளிடைமலை.

எடுமெடு மெடுமென எடுத்த தோர்
இகலொலி கடலொலி இகக்கவே
விடுவிடு விடு பரி கரி குழாம்
விடும் விடுமெனுமொலி மிகைக்கவே[106]

என்ற கலிங்கத்துப் பரணிப் பாடலும்,

உறங்குகின்ற கும்பகன்ன உங்கள் மாய வாழ்வெலாம்
இறங்குகின்ற தின்றுகான் எழுந்திராய் எழுந்திராய்
கறங்கு போல விற்பிடித்த கால தூதர் கையிலே
உறங்குவாய் உறங்குவாய் இனிக்கிடந்து உறங்குவாய்[107]

எனும் கம்பராமாயணப் பாடலும் சந்த ஒலி மிக்கவை. படிப்போரைத் தட்டி எழுப்பி உணர்வலைக்குள் ஆழ்த்தும் வல்லமை பெற்றவை. இத்தகு கவிஞர் பரம்பரையில் வந்த கவிஞர் வெகுளிச்சுவை வெளிப்படப் பாடும் பாடல் வீர உணர்வின் எல்லைக்கு நம்மை இழுத்துச் செல்கிறது.

நாட்டின் சீர்கேட்டைச் சமாதானக் கொள்கையால் மாய்க்க முடியாது; கொலைவாளினை எடுத்துத் தீமை கொண்டோரைத் தீர்த்திட வேண்டும் என்ற எண்ணம்— உளம் துடித்து உயிர்மூச்சு தீயாக மாறும் ஆவேசம்— அவரது படைப்பில் பாய்கின்றது.

வலியோர் சிலர் எளியோர் தமை
வதையே புரிகுவதா?
மகராசர்கள் உலகாளுதல்
நிலையாம் எனும் நினைவா?
உலகாள உனது தாய்மிக
உயிர்வாதை யடைகிறாள்
உதவாதினி ஒரு தாமதம்
உடனே விழி தமிழா!

அலைமா கடல் நிலம் வானிலுன்
அணி மாளிகை ரதமே
அவையேறிடும் விதமே யுன
ததிகாரம் நிறுவுவாய்
கொலைவாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே
குகைவாழ் ஒருபுலியே உயர்
குணமேவிய தமிழா!

தலையாய அறமேபுரி
சரிநீதி யுதவுவாய்
சமமே பொருள் ஜனநாயகம்
எனவே முரசறைவாய்
இலையே உணவிலையே கதி
இலையே எனும் எளிமை
இனிமேலிலை எனவே முர
சறைவாய் முரசறைவாய்![108]

கற்றவரெல்லாம் கையிலே வாளேந்தும்படியான உணர்ச்சி நிலையை இக்கவிதை மொழிகிறது. சமத்துவப் பூ மணக்க வரும் எரிஞாயிற்றின் தன்மையைக் கவிஞரிடத்தே காண்கிறோம். வசைபாடி இசை எழுப்புவது கவிஞரின் தனித்திறனுக்கொரு முத்திரை.

மேற்கண்ட வடிவங்கள் யாவும் உணர்வுக்கும் கருத்துக்கும் பொருளாழத்துக்கும் ஏற்பப் பாவவடிவம் பெற்றுத் திகழ்வதோடு அல்லாமல் கவிக்கூறுகளில் அமைந்துள்ள கருதுபொருளையும் வடிவக் காட்சியாக நம் கண்முன் காட்டுகின்றன; வடிவங்கள் நிகழ்ச்சி நடக்கும் இடத்தினை நோக்கி நம்மை அழைத்துச்செல்கின்றன.

### உவமைகள்

பொருள் விளக்கத்திற்காகக் கவிஞன் கையாளும் இலக்கிய உத்திகளுள் உவமையும் ஒன்று. அறியாத ஒன்றை அறிந்த ஒன்றனொடு ஒப்புமைப்படுத்திக் கூறுவது உவமை. இதன் பயன்களாக 'புலன் அல்லாதன புலனாதலும், அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தலும்'[109] என்பவை கூறப்படுகின்றன. கருத்தைப் புலப்படுத்துதல், சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் பயத்தல் என உவமையின் பயனை வரையறுக்க முடிகிறது. பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகளில் பயின்றுவரும் உவமைகள் உவமைக்குரிய இலக்கணத்தை — பயனைக்

கொண்டுள்ளன. இவருடைய கவிதைகளில் அமையும் உவமைகளை சமூக மாற்றத்தைச் சித்திரிக்கும் உவமைகள், இயற்கைப் பொருளை விளக்கும் உவமைகள், தமிழ் அடிப்படையிலான உவமைகள், நிலவு அடிப்படையிலான உவமைகள், நகைச்சுவை உவமைகள், அழகுக்காட்சி உவமைகள், பழமொழி உவமைகள், அடுக்கு உவமைகள் எனப் பாகுபடுத்தலாம்.

இதுவரை நிலவி வந்த சூழலை மாற்றவும் புதிய சமூக மேம்பாட்டைக் கருத்திற்கொண்டும் படைக்கப்பட்ட உவமைகள் சமூக மாற்றத்தைச் சித்திரிக்கும் உவமைகளாகும். உழைத்துச் சலித்த மக்களையும், உழைக்காமல் வளர்ந்த செல்வர்களையும் ஒப்புமைப்படுத்தி உரைப்பதற்கு,

**பொத்தல் இலைக் கலமானார் ஏழைமக்கள்**
**புனல் நிறைந்த தொட்டியைப் போல் ஆனார் செல்வர்**[110]

என்னும் உவமையைக் கையாள்கின்றார். ஏழையினிடத்தே செல்வரின் நிலையை எடுத்துக்கூறி அவனுக்குப் புதிய பார்வையை அளிக்கும் போக்கு இவ்வுவமையின்மூலம் மேற்கொள்ளப்படுகிறது. மதம் போதை தரும் அபினி போன்றது என்பர். அதனைக் கொள்ளை நோயாக உவமிக்கிறார் பாவேந்தர்.

**கொள்ளை நோய் போல் மதத்தைக் கட்டியழும்**
**வைதீகம்**[111]

என வைதீகத்தை விளக்க முயன்ற நிலை நோக்கத்தக்கது. மதம் மனிதனின் முன்னேற்றத்தைத் தடுக்கின்றது என்று புரட்சிக்கவிஞர் கருதினார். அதனை மக்களுக்கு ஏற்ற பொழுதில் ஏற்றவாறெல்லாம் எடுத்துச் சொல்லியுள்ளார். இங்கே மதத்தைச் சாடி நிற்கும் தன்மையைக் காணுகின்றோம். மதத்தை விட்டு விலகி வரும் நிலையை மனிதனிடத்தே ஏற்படுத்தும் நோக்கில் இஃது ஆளப்பட்டிருக்கிறது.

சாதி, மதம், மூடப்பழக்கங்கள் இவற்றை முன்னிறுத்தி நடைபெற்றுவரும் சண்டைகளைச் சூறாவளிக் காற்றின் முன் சிக்கிய துரும்பு போன்று அலைக்கழித்து ஒழிப்போம் என்று சமூகத்திற்குக் குரல் கொடுக்கிறார் பாவேந்தர்.

**சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள்**
**தாங்கி நடைபெற்றுவரும் சண்டையுலகிதனை**
**ஊதையினில் துரும்பு போல் அலக்கழிப்போம்; பின்னர்**
**ஒழித்திடுவோம்! புதியதோர் உலகம் செய்வோம்**[112]

என்னும் சமூக மாற்றத்திற்குரிய உணர்வினை முழுமையாக இவ்வுவமையில் காண முடிகின்றது.

பொதுவாக இயற்கைப் பொருள்களான மரம், நீர்நிலை, மலர், செடி, கொடி இவற்றை உவமையாகக் கூறுதல் நாம் காணக்கூடியது. ஆயின் இயற்கைப் பொருள்களுக்கும் உவமை கூறும் திறத்தை மிகுதியாகக் காண்டலரிது. புரட்சிக் கவிஞர் இயற்கைக்கும் உவமை கூறியுள்ளார். நாவற்பழத்திற்கு,

**எருமைக்கண் போல் நாவல்—கனி**[113]

என எருமை மாட்டின் கண்ணை உவமையாகக் கூறுகின்றார். தாமரைச் சிற்றரும்பு,

**...... கரிய பாம்பின்**
**தலைகள் போல்**[114]

நிமிர்ந்திருந்ததாக உரைக்கின்றார். கூட்டமாக மலர்ந்துள்ள மலர்களுக்குப் பறவைக்கூட்டம் உவமையாகின்றது.

**பன்னூறு செழுமாணிக்கப்**
**பறவை போல் கூட்டப் பூக்கள்**[115]

என்னும் இவ்வுவமை இயற்கையை விளக்கிடும் பாங்கில் புதுமையுணர்வு பொலிகிறது.

**கொந்திடும் அணிலின் வால்போல்**
**குலைமுத்துச் சோளக்கொல்லை**[116]

என்பதில் முத்துச் சோளத்திற்கு, அணிலின் வால் உவமை யாகின்றமை காணலாம். இவ்வாறு இயற்கைப் பொருள் களுக்கும் உவமை கூறும் திறத்தைப் பாவேந்தர் பெற்றிருப் பதை நோக்கும்போது அவரது இயற்கை ஈடுபாட்டின் தன்மையும், உற்று நோக்கும் திறனும் புலனாகின்றன.

புரட்சிக்கவிஞரின் தமிழ்மொழிப்பற்று அளத்தற் கரியது. அவர் உறக்கத்திலும் தமிழ் உணர்வை மறந்த தில்லை என்பர். வாய்ப்பு நேருமிடங்களில் எல்லாம் தமிழ் மொழியைப் பற்றிய செய்திகளை அள்ளி வழங்கியுள்ளார். அவ்வாறு அவர் வழங்கிய கருத்துகள் சில தமிழ்மொழி, இனம் அடிப்படையிலான உவமைகளாக உருப்பெற்றுள்ளன. காதலின் சொல்லாற்றல் தமிழின் இனிமையை ஒக்கும். இதனை,

**தண்டமிழின் இனிமைபோல் இனிய சொல்லான்**[117]

என்ற பாடலடியிற் காண்கிறோம். குடும்பவிளக்கில் உணவுண்ணும் முறையை,

**வல்லார் இலக்கியத்தை வாரி அருந்துதல் போல்**
**சிற்றுண வுண்கின்றார்கள்**[118]

என்று இலக்கிய நுகர்ச்சியை உவமையாக்கியுள்ள பாங்கு பாராட்டற்குரியது.

தமிழைச் சுட்டிய கவிஞர் தமிழ் மன்னனையும் உவமையாகக் குறிப்பிடுகின்றார். குடும்பவிளக்கில் கணவனின் அழகைக் கண்டு உவந்த தலைவியின் நிலையை,

**ஆண்டநாள் ஆண்டு மாண்ட செந்தமிழ்ப்**
**பாண்டிய மன்னன் மீண்டது போல**
**உடுத்திய உடையும் எடுத்த மார்பும்**
**படைத்த கணவனைப் பார்த்துக் கிடந்தாள்**[119]

என்று பாண்டிய மன்னனோடு ஒப்பிட்ட தன்மை தகவுடையது. தமிழர்களின் யாழும் உவமையாகியுள்ள திறத்தை,

> தணியுறும் தமிழர் யாழ்போல்
> தன்மடிமேல் அமைந்த
> அணியுடல் குழந்தை கண்டாள்[120]

என்னும் பகுதியுள் காணலாம். குழந்தைக்கு யாழ் உவமை யாக்கப்பட்டமை, குழந்தையும், யாழும் மிழற்றும் ஒலிகளின் இனிமை கருதியதால் எனலாம். 'உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே' என்று கவிஞர் பாடியதோடு அந்த உணர்வோடு எப்பொழுதும் திளைத்திருந்தார் என்பதை எடுத்துக்காட்டும் வண்ணம் இவ்வுவமைகள் அமைகின்றன. அத்துடன் இலக்கியச் சுவைக்கும் இவை ஆதாரமாகின்றன.

நிலவைப் பெண்ணாக உவமித்துப் பாடுதல் தமிழ் மரபு. பாவேந்தரும் இம்மரபைப் பின்பற்றியுள்ளார். இவர்தம் 'நீலவான் ஆடைக்குள்' என்னும் பாடல் நிலவையும், பெண்ணையும் ஒருசேரக் குறித்து நிற்றல் காண்கிறோம். கவிஞர் நிலவைக் குழந்தைக்கு உவமை யாகக் கூறுகின்றார். தன் மனைவி கருவுற்றதைக் கேட்டு மகிழ்ந்த கணவனின் நினைவில் பிறக்கப் போகும் குழந்தை பெருநிலவாகக் காட்சி தருகிறது.

> வான் பெற்ற நிலவைப் போல
> வந்தொரு குழந்தை என்னை
> தேன் பெற்ற வாயால் அப்பா
> எனத் தாவும் திங்கள் எழில்[121]

என்னும் பகுதியுள் குழந்தைக்கு வான்நிலவு உவமையாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆணை வானாகவும், பெண்ணை நிலவாகவும் வேறோரிடத்திற் கவிஞர் சுட்டுகின்றார்.

> பெருந்திரு என்னும் அப்பேரெழிலாளை உன்
> திருமகன் வையத்திறல் மணப்பது
> பெருவான் நிலவைப் பெறுவ தாகும்![122]

'குறிஞ்சித் திட்டில்' இவ்வாறு நிலவினைப் பெண்ணுக் குவமையாக்கிய நிலை காண்கிறோம். மேலும்;

ஒரு நிலவு
வானின் உடுக்களிடை வாழ்தல் போல்[123]

என்னும் உவமையும் பெண்ணைச் சுட்டிக் கூறப்பட்டதே. 'குடும்பவிளக்கில்' மூதாட்டியின் நரை முடியையும், முகவொளியையும் நிலவின் அடிப்படையோடு உவமிக்கிறார் பாரதிதாசன்.

நன்னிலாக் கதிர் போல் கூந்தல்
நரைத்தது; தொண்டையிட்டு
முன்னிலா முகில் உண்டாற்போல்
முகத்தொளி குறைய லானார்[124]

நிலவின் கதிர்போல் கூந்தல் நரைத்தது; நிலவை முகில் மறைப்பதால் நேரும் ஒளியின்மை போன்று முகத்தில் ஒளியின்மை தோன்றிற்று என்று நிலவைக் கொண்டு ஒரே பாடலில் இரு உவமைகளைப் படைத்துள்ளார் கவிஞர். அவரது இயற்கை ஈடுபாடு, மரபுப் பிடிப்பு ஆகியன இவ்வுவமைகளின் வழி அறியலாகின்றன.

நகையின்பம் விளைவிக்கும் சில உவமைகள் பாவேந்தரின் 'இருண்ட வீடு' கவிதையில் உள்ளன. இருண்ட வீட்டின் தலைவி வாழ்வில் ஒழுங்கை உணராதவள். அவளது கோலத்தைக் கவிஞர்,

அவள் குழல்
முள்ளம் பன்றி முழுதுடல் சிலித்தல் போல்
மேலெழுந்து நின்று விரிந்து கிடந்தது[125]

என்று முள்ளம் பன்றியோடு ஒப்பிட்டுக் கூறுகையில் அங்கதம் கலந்த நகை பிறக்கின்றது. இது போன்றே அத்தலைவியின் உடல் தோற்றத்தை,

...............பிழிந்து போட்ட
கருப்பஞ் சக்கையின் கற்றை போல் இருந்தாள்[126]

எனக் கருப்பஞ்சக்கைத் தோற்றத்தினை உவமையாகக் கூறியமை நகைப்பினை விளைக்கிறது. நகைச்சுவை

உவமைகள் 'இருண்டவீட்டில்' மிகுதியாக உள்ளன. பிற பாடல்களில் இவை காணப்படவில்லை. முற்றிலும் மூடத் தனத்தில் வாழும் குடும்பத்தைச் சீர்திருத்த வேண்டி எள்ளல் நடையில் கவிஞர் இவ்வுவமைகளைக் கையாண் டுள்ளார் எனலாம்.

கவிதை என்பது கலையழகு நிறைந்தது. அக்கலை யழகைத் தருவதில் உவமைகள் ஒப்பிலா இடத்தினை வகிக்கின்றன. அழகுணர்வோடு அவை அமைகின்றன. படித்தவுடன் நெஞ்சில் நிலைத்திடும் இவ்வுவமைகள் அழகுக் காட்சிகளாய்க் கருதத்தக்கவை.

**பூவிலிருந்து பெடையன்னம் ஒன்று**
**புறப்படல் போல்**
**பாவை இறங்கினள் வண்டிவிட்டே.**[127]

நகைமுத்து வண்டியிலிருந்து இறங்கும் காட்சியை அழகாகச் சித்திரித்துள்ளார். குழந்தைகளை வருணிக்கையில்,

**கோட்டைப்பவுன் உருக்கிச் செய்த**
**குத்துவிளக்கினைப் போன்ற குழந்தைகள்**[128]

என விளக்கோடு உவமிக்கிறார் கவிஞர். கோட்டைப் பொன்னால் செய்யப்பட்ட குத்துவிளக்கு என்றவுடன் நம்முன்னே விளக்கும், விளக்கின் ஒளியும் நினைவுக்கு வருகின்றன; குழந்தை தவழ்ந்து வரும் காட்சியும் கண்ணில் நிறைகின்றது. தலைவன், தலைவி இருவரும் ஒருவரை யொருவர் சந்திக்கின்றனர். இருவர் பார்வையும் ஒன்றாய்க் கலக்கின்றன; அவர்கள் வேறு எதனையும் நோக்காமல் ஒருவரையொருவர் நோக்கியிருந்தனர்.

**கொடுத்ததை வாங்காக் கொடையாளர் போல்**
**விடுத்த விழியை மீட்கா திருந்தான்**[129]

என்று தலைவனின் பார்வை கொடையாளனின் செயலோடு ஒப்பிடப்படுகிறது.

தற்சொற் கேளாது தள்ளாடி ஓடித்
தின்பண்டம் நாடும் சிறு குழந்தை போல்
மொய்குழல் மீது மொய்த்த தன் விழியை[130]

என்னும் பகுதியில் தலைவியின் நோக்கு, குழந்தையின் செயலோடு ஒப்பிடப்படுகிறது. இவையிரண்டும் அழகியல் நோக்கில் அமைகின்றன. எதிர்பாராத முத்தத்தில் பூங்கோதையை,

தென்னம்பாளை பிளந்து
சிந்திடும் சிரிப்புக்காரி[131]

எனச் சொல்லோவியமாகக் காட்டுவது அழகுணர்வின் பிரதிபலிப்பாகும். இயற்கை அழகிலும், காட்சியழகிலும் நெஞ்சைப் பறிகொடுத்த கவிஞரின் நிலை அழகுவமைகளாக உருமாற்றம் பெற்று ஒளிர்கின்றன.

பழமொழிகள் காலத்தை வென்று வாழ்வன; கடந்த கால வாழ்வின் சுவடுகளாய் அமைவன. இவற்றைக் கையாளாத படைப்புக் கலைஞன் இல்லையென்றே கூறலாம். பழமொழிகளைக் கருத்து விளக்கத்திற்காகக் கூறுபவர்களும் உண்டு. உவமையாகக் குறிப்பிடுவோரும் உண்டு. பாவேந்தர் பழமொழிகளை உவமைகளாகக் கையாண்டுள்ளார்.

அனற் காட்டில் குளிர் காய்வார் போல்[132]
எலி ஒன்று பழம் பெற்றாற் போல்[133]
நெய்யாலே மூண்டெழுந்த நெருப்பைப் போலே[134]

என்பன உவமைகளாக வந்துள்ள பழமொழிகளாம்.

அண்ணன் எனக்கிருக்க மகளிருக்கப்—பெண்
அயலினிற் கொள்ளுவது தக்கதல்லவே
வெண்ணெயை வைத்துநறு நெய்க்கழுவதா—என்ன
வேடிக்கை என்று மன்னி துன்படைந்தாள்[135]

என்னும் பகுதி 'வெண்ணெயைக் கையில் வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவதா?' என்னும் பழமொழியை

உள்ளடக்கி நிற்கிறது. பாவேந்தரின் மரபுநெறியைப் போற்றும் பாங்கிற்கு இவற்றைக் காட்டாகக் கொள்ளலாம்.

ஆழ்ந்த அனுபவ உணர்ச்சியின் வெளிப்பாட்டிற்கு உதவிபுரியும் வகையில் உவமைகளை அடுக்கிச் சொல்வது படைப்பாளர்கள் கையாளக்கூடிய உத்தியாகும். இவ்வாறு ஒரு பொருள் குறித்து அடுக்கிக் கூறப்படும் உவமைகளை அடுக்கு உவமைகள் எனலாம். பாவேந்தரின் கவிதைகளில் இரண்டு முதல் ஐந்து வரையிலான உவமைகளைக் காணமுடிகிறது. உரிமையைஎதிர் நோக்குவோர் போன்றும், வெள்ளம் கண்ட உழவர் போலவும் குடும்பவிளக்கின் தலைவி தனது குழந்தைகளை ஆவலுடன் வரவேற்றாள்.

**இழந்த நல்லுரிமை தன்னை**
**எய்தியே மகிழ்வதைப் போல்!**
**வழிந்தோடும் புது வெள்ளத்தை**
**வரவேற்கும் உழவரைப் போல்**
**எழுந்தோடி மக்கள் தம்மை**
**ஏந்தினாள் இருகையாலும்.**[136]

இப்பாடற் பகுதி இரு உவமைகளை ஒரு பொருளுக்கு உரைக்கின்றது. தலைவியின் திறம் நில அடிப்படையில் சிறப்பித்துக் கூறப்படுகிறது. அவளது நலம் மூன்று உவமைகளால் வெளிப்படுத்தப்படுகின்றது.

**குறிஞ்சி நிலம் போல் நலத்தாள்**
**வெறிமுல்லை போல் அழகாள்**
**முறிமருதம் போல் வளத்தாள் ஆம் ஆம் ஆம்**[137]

என்பது ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வந்த உவமையாம். காதலனிடம் தனக்குள்ள அன்பின் நெருக்கத்தை மூன்று உவமைகளின் மூலம் கூறுகின்றாள் காதலி,

**திங்களிடம் குளிர்போலும் கதிரவன்பால்**
**செந்தழல் போலும் பூவில் மணமே போலும்**
**உங்களிடம் எனக்குள்ள அன்பின் மீதில்**[138]

திங்களை விட்டுப் பிரியாத குளிர்ச்சி, கதிரவனை விட்டு அகலாத வெம்மை, பூவிடத்துக் குடி கொண்ட மணம் ஆகியன போன்று நான் உங்களிடத்தே கொண்டுள்ள உறவு என்பது காதலியின் கூற்றாகும்.

காதலர் இருவர் தமக்குள் ஒருமித்த உணர்வுடையோராய்த் திகழும் முறையை நான்கு உவமைகள் மூலம் காட்டுகிறார் கவிஞர்.

**நாமிருவர் பூப்போல் மணம் போல்**
**இருள்மாற்றும் இன்ப நிலாப் போல் குளிர்போல்**
**ஒருமித்தல் வேண்டும்**[139]

என்பதில் பூ, பூவின் மணம், நிலா, நிலவின் தண்மை ஆகியன உவமையாகக் கூறப்பட்டுள்ள பாங்கு நோக்கத் தக்கது. அடுத்து, தலைவியின் எழிலைத் தலைவன் ஒருவன் பாடுகின்றான். அவளது உடலழகை ஐந்து உவமைகளால் சுட்டுகின்றான். ஒவ்வோர் உறுப்பிற்கும் ஓர் உவமை சுட்டப்படுகிறது.

**தேனைப் போல் மொழியுடையாள்; அன்றலர்ந்த**
**செந்தாமரை போல் முகத்தாள் கெண்டை**
**மீனைப் போல் விழியுடையாள் விட்டதிர்ந்த**
**மின்னைப்போல் நுண்ணிடையாள்! கொண்ட**
**வானைப் போல் உயர்வாழ்வு வாய்ந்தாள்**[140]

என்று காதலியின் உறுப்பழகை விளக்கும் பகுதியில் உவமையின்பம் சிறந்து நிற்கிறது. பாவேந்தரின் கவிதைகளில் அடுக்குவமைகள் நிரம்ப இடம் பெற்றுள்ளன. இவ்வாறு ஒரு பொருள் மேல் இரண்டு, மூன்று என உவமைகளை அடுக்கிச் சொல்வதால் அப்பொருளின் சிறப்பு, மேன்மை ஆகியன வெளிப்படுகின்றன. மேலும் கலையழகும், இலக்கிய நுகர்வுணர்ச்சியும் மேலோங்குகின்றன. பாவேந்தர் பயன்படுத்தியுள்ள உவமைகள்

கருத்து விளக்கம், கலைநயம், மரபுப்பிடிப்பு, ஆகியவற்றில் அவருக்கிருந்த திறத்தை வெளிப்படுத்துகின்றன.

### உருவகம்

இலக்கிய வனப்பில் உவமையைவிட உருவகமே ஆற்றலும் அருமையும் உடையதாகும். இத்தகு உருவகத்தைப் பற்றிக் கூறும்போது "பொருளையும் உவமையையும் தனித்தனியே காணாமல் ஒன்றிலேயே மற்றொன்றைக் காண்பது உருவகம் ஆகும். எனவே அடக்கிச் செறிந்த உவமையே உருவகம் என்று கூறப்படும்.[141] பாட்டின் உயிர் கோட்பாடாகவும், கவிஞனின் தலையாய தேர்ச்சியாகவும் சிறப்பாகவும் உருவகம் போற்றப்படுகிறது. உவமையைப் போது அதனூடே உருவகத்தையும் அடக்கிச் சொல்வது அரிய ஒரு செயலாகும்.

இத்தகு அழகு உருவகங்களைப் பாவேந்தர் பல நிலைகளில் கண்டுள்ளார். எனினும் இங்கு (1) ஒரு பொருளுக்கு ஒரு பொருள் உருவகம். (2) பலபொருளுக்குப் பலபொருள் உருவகம் எனும் இரண்டு நிலைகளைக் காணலாம்.

### ஒரு பொருளுக்கு ஓர் உருவகம்

ஒரு பொருளுக்கு ஒரு பொருளே உருவகமாக அமைவதைத் தனிநிலை உருவகம் என்று குறிப்பர் ரா. சீனிவாசன்.[142] இவ்வாறு வரும் உருவகத்தைக் காண்போம்.

> ஆடற் கலைக் கழகு தேடப் பிறந்தவள்
> ஆடாத பொற்பாவை ஆடவந்தாள்[143]

இதில் ஆடவந்தவளை 'பொற்பாவை' என்றும், புரட்சிக் கவியில் நிலாவைக் குறிக்கும்போது 'இருட்காட்டை அழித்த நிலா' என்றும் 'இருட்டை'க் 'காடு' என்றும்,

**கொழிக்கும் ஆணழகன் — அவன்**
**கொஞ்சி வந்தே எனது**
**விழிக்குள் போய்ப் புகுந்தான் — நெஞ்ச**
**வீட்டில் உலாவுகின்றான்[144]**

என்பதில் நெஞ்சை வீடாகவும் உருவகித்துள்ளார்.

**கண்ணலிலே சாறெடுத்துத் தமிழ்கு ழைத்துக்**
**கனிஇதழிற் பரிமாறும் இனியசொல்லாள்[146]**

என்பதில் இதழைக் கனியாகவும்,

**சிரிப்பினிலே இன்பம் உன்றன்**
**சேல்விழியில் இன்பம்[147]**

என்பதில் விழியைச் 'சேலாகவும்',

**நின்றாள் இடியைச் சிரிப்பாக்கி நேர் இறைத்தாள்[148]**

என்பதில் சிரிப்பை இடியாகவும்,

**துயர்பாதி அச்சம்பாதி**
**தொடர்ந்திடத் தூக்க மென்னும்**
**அயலுல கடைந்தான் மன்னன்[149]**

என்பதில் தூக்கத்தை அயல் உலகம் என்றும் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு பொருளை உருவகித்துள்ளார்.

**பலவற்றுக்குப் பல உருவகம்**

ஒன்றனுக்கொன்று உருவகிப்பதைவிட பலவற்றை உருவகித்து அமைக்கும் திறன் அனைவருக்கும் அமைவதில்லை. இது கவிதையில் அந்தாதித் தன்மையைப் போல் அரிய செயலாகும். எனினும் பாவேந்தர் பலவித தொடர் — பல பொருளுக்குப் பல உருவகத்தைப் படைத்துள்ளார்.

**மறைநாயகன் பெற்ற பெண்ணாள்**
**மயில்போலும் சாயல் கொண்டாள்**
**நிறைமதி முகத்தாள்; கண்கள்**

நீலம் போல் பூத்திருக்கும்
பிறை போன்ற நெற்றி வாய்ந்தாள்
பேச்செல்லாம் அமுதாய்ச் சாய்ப்பாள்.[150]

இதில் அவளின் சாயலுக்கு மயிலும், முகத்துக்கு நிறை மதியும், கண்ணுக்கு நீலமும், நெற்றிக்குப் பிறைமதியும் பேச்சுக்கு அமுதமும் உருவகிக்கப்பட்டுள்ளன.

மங்கா உடலெனும் மாற்றுயர் பெண்ணையும்
பொங்கும் சிரிப்புப் புத்தொளி முகத்தையும்
வகைபெறு கழுத்து வலம்புரிச் சங்கையும்
விழிநீ லத்தையும் மொழிஅ முதத்தையும்
இதழ்ப்பவ ளத்தையும் இந்தா என்றே
எதிரில் வைத்தே எழிலுறு கிள்ளைதன்
அன்பெனும் நீர்வார்த் தளித்து நின்றாள்.[151]

இதில் உடலுக்குப் பொன்னும், முகத்துக்கு ஒளியும், கழுத்துக்கு வலம்புரிச்சங்கும், விழிக்கு நீலமும், மொழிக்கு அமுதமும், இதழுக்குப் பவளமும், பெண்ணுக்குக் கிள்ளையும், அன்புக்கு நீரும் என்று பலவற்றுக்குப் பல பொருள் உருவகிக்கப்பட்டுள்ளன, இதுபோன்று மணி கோத்தாற் போல் உருவகம் அமைவது அரிது.

சிவப்பாம்பல் மலர்வாயிற் சிந்தும் முல்லைச்
சிரிப்புக்கும், கருப்பஞ்சாற்றுச் சொல்லுக்கும்
குவிக்கின்ற காதலொளி விழிக்கும், கால் போல்
கூந்தலுக்கும், முகத்தி ங்களுக்கும்,
உவப்புற்றேன் அவ்வுவப்பால் காதல் பெற்றே
உயிர்நீயே என்றுணர்ந்தேன், இயங்கலானேன்
அவிந்தனையே திருவிளக்கே! இந்த வையம்
அவியவில்லை எனில் எனக்கிங்கென்ன வேலை.[152]

இதில் வாய்க்குச் சிவப்பாம்பலும், சிரிப்புக்கு முல்லையும், சொல்லுக்குக் கருப்பஞ்சாரும் விழிக்கு, ஒளியும், கூந்தலுக்குக் காரும், முகத்திற்குத் திங்களும், அவளுக்குத் திருவிளக்கும்

என்று பல பொருளுக்குப் பல உருவகிக்கப்பட்டன. எனினும் இதில் காதலி என்று வெளிப்படுத்தி உருவகிக்காமல் திருவிளக்கே என்று உருவகத்திற்கு உருவகம் அமைந்துள்ளது ஒரு தனிச்சிறப்பாகும்.

வாங்கி நிற்கும் ஒளியைப் பார்! காட்சித்தேனில்
வண்டடி நாம் என்றுரைத்து மகிழ்ந்து நின்றான்.[153]

இதில் ஒளிக்காட்சி தேனுக்கும், காண்கின்ற பெண்களுக்கு வண்டும் என்று பலவற்றுக்குப் பல உருவகிக்கப்பட்டுள்ளன.

பறந்து வந்த கிளியே
திறந்த என்மனக்கூடு புகுவாய்
பிறந்த பெண்கள் பலகோடி — உன்போல்
பெண்ணொருத்தி ஏது — நான்
இறந்து போகுமுன் னாடி — மிக
எழில் சுமந்தபடி என்னை நாடிப் பரந்து[154]

இதில் காதலியைக் கிளியாகவும், தன் மனத்தைக் கிளி உறையும் கூடாகவும் உருவகித்துக் காதலியின் உயிர் மூச்சை உலவ விடுகிறார்.

நெஞ்சுதீ! ஆனால் அன்னாள்
முகம் மட்டும் நிலவே அன்றோ?[155]

இதில் இயலாக் காதலைக் காட்டும் கவிஞர் ஒப்பாத அவர் நெஞ்சத்துக்குத் தீயையும், நெஞ்சம் சுடுத்தாலும் சுடு சுடுக்கா முகத்திற்கு நிலவையும் உருவகித்துள்ளார்.

பாவேந்தர் விளக்கும் உருவகங்கள் யாவும் மகளிரின் விழி, நெற்றி, பல், இதழ், இடை, நடை முதலியவற்றையே பெரும்பாலும் காதல் உணர்வோடு உருவகித்துள்ளார். இது, கவிஞர் புரட்சிப் பார்வை உடையவர் என்ற போதிலும் தமிழ் மரபை ஏற்பவர் என்பதைப் புலப்படுத்து கிறது. இவ்வாறு அமைகின்ற உருவகங்கள் கவியைக்

கற்பவர்கள் காலத்தைப் பொருட்படுத்தாமையை ஏற்படுத்தும் ஆற்றல் பெறுகிறது.

**வருணனை**

கவிதைகளில் பயின்றுவரும் உறுப்புகளுள் ஒன்று வருணனை. கவிஞனுக்கும் மற்றவர்களுக்கும் இடையேயுள்ள மதிநுட்ப வேறுபாட்டை அறிய உதவும் அளவுகோலாகக் கவிதையுலகில் இது கருதப்படுகிறது. கண்ணால் காணும் காட்சியை அதன் இயல் சற்றும் திரிபுபடாமல் சொற்றிறம் மேம்பட அழகுணர்வுடன் வெளிப்படுத்தும் போது அது வருணனை என்னும் பெயரைப் பெறுகிறது. இவ்வருணனை மரபைத் தழுவியும், மரபை மீறியும், புதுமை நோக்கிலும் அமையலாம். பொதுவாகப் பாவேந்தரின் பாடல்களில் மரபு தழுவிய வருணனையே காட்சியளிக்கின்றது. அவ்வருணனைகளும் பெண்களை வருணிக்கும்—காதல் தொடர்பான வருணனைகளாக உள்ளன.

> ஸ்ரீமதி இவளார்? உலகிடை மானிடமதிலேதிவள்? ஒரு
> சேலிணையினை நேரிருவிழி கோக்கை விநோத அதரம்
> மாமதி நிகர் ஓரிளமுகம் வானுறு மழைதானிருள்குழல்
> வாழ் மதுகரம் ஊதிடு சூடிய முடியொடு[106]

எனும் இப்பாடலடிகளில் தன் தலைவியைக் கண்ணுற்ற தலைவன் அவளது கண், முடி, முகம் முதலானவற்றை நயம்பட வருணித்துள்ள திறம் தென்படுகிறது. இதனுள் வடசொல் சில பயிலக் காண்கிறோம். ஆனால் பெரும்பாலான பாடல்களில் தூய தமிழ்ச் சொற்களே நிறைந்துள்ளன. பாவேந்தரின் தொடக்க காலக் கவிதையாக இஃது இருக்கக்கூடும் என நம்பலாம்.

> தாமரை பூத்த குளத்தினிலே—முகத்
> தாமரை தோன்ற முழுகிடுவாள்!—அந்தக்
> கோமளவல்லியைக் கண்டுவிட்டான்—குப்பன்

கொள்ளை கொடுத்தனன் உள்ளத்தினை—அவன்
தூய்மை படைத்த உடம்பினையும்—பசுந்
தோகை நிகர்த்த நடையினையும்—கண்டு
காமனைக் கொல்லும் நினைப்புடனே—குப்பன்
காத்திருந்தான் அந்தத் தோப்பினிலே.[157]

இதில் தாமரைக் குளத்திற்குக் குளிக்க வந்தவளிடம் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தவன் மீண்டும் ஒருநாள் தன் காதல் நினைவுகளைப் பரிமாறிக்கொள்ள அவளது வரவிற்காக விழிதொடுத்து மாந்தோப்பில் காத்திருந்தான் என்று காதல் மரபினை வருணித்துக் காட்டியுள்ளார் கவிஞர்.

புரட்சிக்கவியில் மன்னனின் எண்ணப்படி மங்கையும் மாகவிஞனும் பிரித்து வைக்கப்படுகின்றனர். ஒருநாள் கவிஞன் நிலவைப்பாட, அமுதவல்லி வியந்து திரையை விலக்கி உதாரனை நோக்கினாள். இருவர் நோக்கும் கலந்தன. கவிஞனுக்குத் தன் எதிரே நிற்பது பெண் தானா? என்ற ஐயம் எழுகிறது.

மின் ஒன்று பெண்ணென்று புவியில் வந்து
விளைந்தது போல் விளைந்த உனதழகுமேனி[158]

என்று இல்லாத ஒன்றை வருணனையாக்கியுள்ள திறம் போற்றுதற்குரியது. இவ்வருணனை அளிக்கும் இலக்கிய நயம் நெஞ்சை மகிழ்விக்கிறது.

குறத்தியர்கள் கவண் எறியும் காட்சியைக் காணும் கவிஞர் அவர்களின் உடலுறுப்புகளைக் கூறும்போது,

குறத்தியர் கவண் எடுத்துக்
குறிபார்க்கும் விழி நீலப்பூ
எறியும் கை செங்காந்தட்பூ
உடுக்கைதான் எழில் இடுப்பே[159]

என உருவக நயம் மிளிர வருணித்து உரைக்கின்றார்.

தண்ணிலவும் அவள் முகமோ! தாரகைகள் நகையோ
தளிருடலைத் தொடும் உணர்வோ நன்மணஞ்சேர் குளிரும்
விண்ணீலம் கார்குழலோ? காணும் எழிலெல்லாம்
மெல்லியின் வாய்க் கள்வெறியோ? அல்லி மலர்த்தேனின்
வண்டின் ஒலி அன்னவளின் தண்டமிழ்த் தாய்மொழியோ?
வாழிய இங்கிவை எல்லாம் எழுதவரும் கவிதை
கண்டெடுத்தேன் உயிர்ப்புதையல்! அதோ வந்துவிட்டாள்
கண்டெழுத முடியாத நறுங்கவிதை அவளே.[160]

இதில் தலைவியின் நலம் ஐயமாகவும் வியப்பாகவும் சுட்டப் படுகிறது. இறுதியில் அவள் எழுத முடியாத கவிதை என்று உருவகித்துச் சுட்டப்படுகிறாள். இதனை நோக்குகையில்,

'கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெரு வாழ்வோ'[161] என்னும் சேக்கிழாரின் செய்யுள் திறம் ஈண்டு நினைவிற்கு வரக் காணலாம்.

யாழின் மொழியும் இசைவண்டு நேர்விழியும்
கோத்த முத்துப்பற்கள் குலுங்கும் சிரிப்பழகும்
வாய்த்த நல்வஞ்சி[162]

என்பதில் உவமையும், உருவகமும் இணைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எதிர்பாராத முத்தத்தில் பொய்கையில் நீராடும் மகளிரை,

......................பொய்கை தன்னில்
வெள்ள நீர் தளும்ப வெள்ள
மேலெல்லாம் முகங்கள் கண்கள்
எள்ளுப்பூ நாசி கைகள்
எழிலொடு மிதக்கப் பெண்கள்
தெள்ளு நீராடு கின்றார்
சிரிக்கின்றார்! கூவுகின்றார்![163]

என்று அவர்களது முகம், கண்கள், மூக்கு, கைகள் முதலியன வருணிக்கப்படுகின்றன. இஃது இயற்கை வருணனையாக உள்ளது.

திராவிட நாட்டுப் பண்ணில், நாட்டின் பெருமிதத்திற்குக் காரணமாகும் குன்றுகள், கடல்கள், நன்செய் நிலங்கள் முதலியவற்றை,

> அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
> அழகாய் முத்துக் குவியும் கடல்கள்
> முகிலும் செந்நெலும் முழங்கு நன்செய்
> முல்லைக் காடு மணக்கும் நாடு[164]

என்று கோவைப்படுத்திக் காட்டுகிறார்.

குறிஞ்சித்திட்டில் கடலோர மலைக்கோயிலைக் குறித்து அவ்விடத்தை வருணிக்கும்போது,

> முப்புறத்தும் தலைகூடிக் கீழ்ப்புறத்தில்
> ஆழத்துக் கடல்வெள்ளம் முழக்கம் செய்யக்
> கப்புகின்ற முயற்கூட்டம் தவழும் உச்சிக்
> கடலோர மலைக்கோயில்[165]

என்று முகிற்கூட்டம் தவழும் உச்சியை உடையதாக இலக்கியச் சுவை பெருகக் குறிப்பிடுகின்றார்.

தவழ்ந்து விளையாடும் மழலைச் செல்வம் ஆண்டொன்றை அடைந்திட்டபோது அதன் எழிலை, வளர்ச்சியைக் கவிஞர் வருணிக்கும் பாங்கில் உள்ள நிறைவும், பெருமகிழ்வும் ஏற்படுகின்றன.

> வான் பார்த்துக் கிடந்த மேனி
> மண் பார்த்துக் கவிழ்ந்தும் பின்னர்
> தேன் பார்த்து மலர்க்கையூன்றிச்
> செம்மையாய்த் தவழ்ந்து நின்றும்
> தான் பார்க்க அங்கும் இங்கும்
> தள்ளாடி நடந்தும் கெண்டை
> மீன் பார்த்த கண்ணாள் பெண்ணாள்
> ஓராண்டு மேவல் உற்றாள்[166]

என்பதில் குழவியின் வளர்ச்சியைக் கவிஞர் உற்று நோக்கி உரைக்கும் தன்மை வெளிப்படுகிறது; கலையழகும் கவிதைச்சுவையும் இப்பகுதியில் கூடிநின்று உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன.

இதுகாறும் கண்டவற்றால் பாவேந்தர் பெண்களின் அழகு, வான், கடல், நாட்டின் இயற்கை எழில், குழந்தை ஆகியவற்றை உருவகப் பாங்கிலும், உவமை நிலையிலும், இயற்கைச் சூழலின் அடியாகவும் வருணித்துக் கவிதைக்குச் சிறப்பினைச் சேர்த்துள்ளார் என அறியலாம்.

## சொல்லாட்சி

கவிதை கவிஞனின் கருத்தைக் காத்து வேண்டு வோர்க்கு வேண்டும்போது அளிக்கின்ற இன்பக் கருவூல மாகும். எவ்வாறாகினும் கவிஞன் படைக்கின்ற சொற் கூறு — கவிக்கூறு யாவும் காலம் கடந்து வாழ்வதில்லை. தீபங்கள் பல உண்டு — பல காலங்களில் ஏற்றப்படுகிறது. என்றாலும் கார்த்திகைத் தீபம் தனிச் சிறப்பினை எட்டுகிறது. மலர்கள் பல பூத்து உதிர்ந்து விடுகின்றன. அவற்றில் ஒரு சிலவே பிஞ்சாகி, காயாகி, கனியாகிப் பயன் பாட்டை நல்குகின்றன. அதுபோலவே கவிஞன் எண்ணற்ற சொற்கூறுகளை ஆக்கி அளித்தபோதிலும் அவன் உளம் கொள, தேர்ந்து எடுத்துக் கையாளுகின்ற சொற்களே அவன் கவிதையின் வாழ்விற்கு உயிர் ஊட்டுகின்றன.

திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரனார் கவிதை எழுதப் புகும்போது, சொற் கூட்டங்கள் 'எனை வைத்து ஆளுதி, எனை வைத்து ஆளுதி' என்று கேட்டு இரங்குதலாகிய சொற்படை பெருக்கெடுத்தல் என்று அவர் கூறும் பாங்கும்; பாவேந்தர் கவிதை புனைய ஏடெடுக்க, குயில், மயில், பெண், இயற்கை அனைத்தும் என்ன எழுத வேண்டும் எனும் நிலையில் ஒவ்வொன்றும் விண்ணப்பம் செய்தலும் நோக்கத் தக்கவை. ஆனால் கவிஞன் அதனை எல்லாம்

இருந்து மக்கள் சமுதாயத்திற்கு ஏற்படும் ஊறுகளைக் களையக்கூடிய பெற்றியுடையவற்றைத் தேர்ந்தெடுத்து அமைக்க வேண்டும். 'அமைத்தேன்' என்று பாவேந்தர் கூறும் செய்தியும் சொல்லாட்சிக்கு — சொல் தேர்வுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

பயிர் வாடுவதும் மனிதன்/உழவன் கண்டு வருந்துவதும் இயல்பான ஒன்று. ஆனால் பயிர் வாடுதல் — காய்தல், இரங்குதல் என்ற சொற்கள் தனித்தனியே நிற்கும்போது அவற்றில் எந்தவித உணர்ச்சியோ, நயமோ, கருத்தோ எழவில்லை. ஆனால் அவற்றை எல்லாம் ஒன்றுபட்டு அருட்பாவில் அடிகளார்,

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்

என்று ஏக்கப் பெருமூச்சுடன் கூறும்போது இவ் அஃறிணை பண்பால் இரங்காத இதயங்கள் இருக்க முடியாது என்கிற அளவிற்கு ஓர் அவல உணர்ச்சி தோன்றுகிறது. இவ்வாறு தேர்ந்தெடுத்து அமைக்கின்ற சொல்லாட்சி, உவமை வாயிலாகவும், உருவக வாயிலாகவும், அடைமொழி வாயிலாகவும், கருத்துக்கோவையின் வாயிலாகவும் பிரதிபலிக்கப்படுகின்றன எனலாம். இவற்றை முறையே பாவேந்தர் பாடல்களில் காணலாம்.

அடுக்களைத் தந்தி அனுப்பினாள்—மங்கை
வந்தேன் என்று மணாளன் வந்தான்.[168]

இதில் சமையல் தயார் ஆகிவிட்டது. வாருங்கள் என்று தன் தலைவி அழைத்திருக்க வேண்டும். ஆனால் கவிஞர் அதற்கெதிராகச் சுவைகூடும் வகையில் 'அடுக்களைத்தந்தி' என்று அறிவியல் உலகிற்கு ஏற்ற சொல்லைத் தேர்வு செய்திருப்பது சிறப்புடைத்தாகும்.

புன்னை மலர்க்காம்பு போன்றதோர் சிற்றடிப்புறா[169]

இதில் புறாவை—எழிலை நாம் கண்டால் 'சிறிய கால் கொண்ட புறா' என்று கூறுவோம். ஆனால் கவிஞர் புன்னை

மலர்க்காம்பினை உவமை காட்டி, புறாவையும் புள்ளின மலரையும் நம் கண்முன் காட்சியாக்குகின்றார்.

கடிமலர்ப்பூஞ் சோலையுண்டு, மான்ஷேமம்
மயில் ஷேமம், பசுக்கள் ஷேமம்
இன்னபடி இவ்விடம்யா வரும் எவையும்
ஷேமமென்றன் நிலையோ என்றால்
இருக்கின்றேன் சாகவில்லை என்றறிக.[170]

இதில் காதலனைப் பிரிந்த வேதனை மிகுதியால் அவனுக்கு ஓலை தீட்டுகின்றாள் மனைவி. நான் வாடுகின்றேன். ஆதலால் விரைவில் வாருங்கள் என்று எழுதியிருக்கலாம். ஆனால், அவ்வாறின்றி, அதனைப் புதிய கோணத்தில் ஆக்குகின்றார். 'இருக்கின்றேன் சாகவில்லை' என்றறிக என்பதில் காதற்பிழம்பு — கவினுற ஒளிரும் காட்சியைக் காணமுடிகிறது.

கூடத்திலே மனப்பாடத்திலே—விழி
கூடிக்கிடந்திடும் ஆணழகை
ஓடைக் குளிர்மலர்ப் பார்வையினால்—அவள்
உண்ணத் தலைப்படு நேரத்திலே
பாடம் பிடித்து நிமிர்ந்த விழி
தன்னில் பட்டுத் தெறித்ததுமானின் விழி
ஆடை திருத்தி நின்றாள் அவள்தான்—இவன்
ஆயிரம் ஏடு திருப்புகின்றான்.[171]

இதில் காதலின் வெளிப்பாடு வெள்ளோட்டமாகிறது. காதலி தனது காதலனை இதயமலரில் இருத்தி, கண் மலரால் கண்டு ஆடை திருத்தும்போது புதியதொரு கவிதையாகத் தோன்றுகிறாள். காதல் எண்ணத்தை விளக்கும் காட்சிப்படமாக 'ஆடை திருத்தி நின்றாள் அவள் தான்—இவன் ஆயிரம் ஏடு திருப்புகின்றான்' என்னும் சொல்லோவியம் அமைகிறது.

மெய் வண்ண வீடுகட்ட உனைத் தொங்கவிடுகின்றார்கள்
செய் வண்ண வேலை செய்து திருமாடம் முடிக்கின்றாய்—நீ
பொய்வண்ணப் பூசணிக்காய்! கறியுனைச்
செய்துண்டேன்—உன்
கைவண்ணம் அங்குக் கண்டேன்! கறிவண்ணம்
இங்குக் கண்டேன்.[172]

இது நகைச்சுவைபட அமைந்துள்ளது. பூசணிக்காயைப் புதுவீட்டு முகப்பில் பார்த்தவர் பிறிதொரு நாள் அதனைக் கறியாக உண்ணும்போது இரண்டையும் ஒப்பிட்டுக் களிக்கின்றார். அக்களிப்பில் பிறந்ததே இக்கவிதை. இக்கவிதையை, கம்ப நாடரின்,

மைவண்ணத் தண்ணலே உன்
கைவண்ணம் இங்குக் கண்டேன் உன்
கால்வண்ணம் அங்குக் கண்டேன்

என்னும் கவிதையோடு ஒப்பிடலாம். பூசணிக்காயின் பெருமையை ஒரு கவிதையில் இனிய ஓசை நயமுடன் விளக்கியுள்ள பாங்கு பாவேந்தரின் தனித்திறனாகும்.

கண்ணன்பால் மிக அன்பால் வேலைக்காரி
கையிற் பால் செம்போடு சென்றாள்
திண்ணன் பால் வாங்கென்றான் கரியனும் பால்
தீங்கற்ற பாலே என்பால் வாங்கென்றான்
திண்ணன்பால் நில்லாதீர் போவீர் அப்பால்
கண்ணன்பால் நான் கொண்ட களிப்பால் அன்னோன்
கலப்பாலே இனிப்பதென்று கசப்பால் சொன்னான்.[173]

இப்பாடலில் 'பால்' எனும் சொல் பலமுறை பயின்று வந்து நயமூட்டுகிறது; சிலேடையின்பமும் இதன்கண் அமைந்து சிறக்கின்றது.

இவ்வாறு அமைகின்ற சொல்லாட்சிக் கூறுகள் கவிஞரின் பெருமைக்கும் புகழுக்கும் நிலைக்களனாய்

அமைகின்றன; கவிதையின் நிலைபேற்றுக்குக் காரணமாகின்றன.

## முடிவுரை

'பாவேந்தர் பாடல்களில் இலக்கியம்' எனும் இக் கட்டுரை இலக்கியக் கூறுகளான விழுமிய உணர்ச்சி, உயரிய கற்பனை, சிறந்த கருத்து, அழகிய வடிவம் ஆகியன ஒருங்கே இணைந்து பாவேந்தரின் கவிதைகளில் ஒளிர்கின்றமையை எடுத்துக் காட்டுகளுடன் விளக்குகின்றது. கருத்து விளக்கக் கருவிகளான உவமை, உருவகம், வருணனை, சொல்லாட்சி ஆகியன ஏற்ற இடத்தில் ஏற்றவாறு அமைந்து இலக்கிய நுகர்வுக்குத் துணை புரிகின்றன. முடிவாக, பாவேந்தரின் கவிதைகள் வாழும் இலக்கிய வகையைச் சார்ந்தவை; காலவெள்ளத்தை வெற்றி கொள்ளும் கருத்துப் பெட்டகங்களாய்த் திகழ்பவை எனலாம்.

## அடிக்குறிப்புகள்

1. சாமி. சிதம்பரனார், இலக்கியம் என்றால் என்ன?, ப. 10.
2. க. த. திருநாவுக்கரசு, திருக்குறள் நீதி இலக்கியம், ப. 81.
3. மு. வரதராசனார், இலக்கியத்திறன், ப. 54.
4. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 2, ப. 113.
5. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 49.
6. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 2, பக். 109-110.

7. பாரதிதாசன், காதல் பாடல்கள், ப. 43.
8. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 20.
9. மேற்படி, ப. 29.
10. பாரதிதாசன், புகழ் மலர்கள், பக். 19-20.
11. புறநானூறு, 242.
12. சீவக சிந்தாமணி, 309.
13. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 4, ப. 42.
14. மேற்படி, ப. 48.
15. பாரதிதாசன், குடும்பவிளக்கு, 1 & 2, ப. 14.
16. பாரதிதாசன், இருண்ட வீடு, 'என்னுரை', ப. 4.
17. மேற்படி, ப. 7.
18. பாரதிதாகன், பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 4, ப. 96.
19. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, 'நல்லமுத்துக் கதை' பக். 131-132.
20. பாரதிதாசன், எதிர்பாராத முத்தம், பக். 40-41.
21. ,, தமிழியக்கம், ப. 5.
22. ,, பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 174.
23. W. T. Winchester, Principles of Literary Criticism, P. 45.
24. மேற்கோள், க. த. திருநாவுக்கரசு, திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும், ப. 40-41.
25. மேற்கோள் அ. ச. ஞானசம்பந்தன், இலக்கியக் கலை, ப. 62.
26. பாரதிதாசன், காதல் நினைவுகள், ப. 13.
27. மேற்படி, ப. 9.

28. பாரதிதாசன், அழகின் சிரிப்பு, ப. 31.
29. ,, குயில் பாடல்கள், ப. 86.
30. ,, தேனருவி, ப. 96.
31. பாரதிதாசன், இசையமுது, தொகுதி 1, ப. 55.
32. ,, பாரதிதாசன் கவிதைகள் — முதல் தொகுதி, ப. 54.
33. பாரதிதாசன், முல்லைக்காடு, ப. 31.
34. ,, அழகின், சிரிப்பு, ப. 39.
35. ,, எதிர்பாராத முத்தம், ப. 17.
36. ,, அழகின், சிரிப்பு, ப. 35.
37. ,, தேனருவி, ப. 137.
38. மு. வரதராசன், இலக்கியத்திறன், பக். 147—148.
39. திருக்குறள், 80
40. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் — முதல் தொகுதி, ப. 131.
41. பாரதிதாசன், இசையமுது—தொகுதி 1, ப. 20.
42. திருக்குறள், 110.
43. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள்—தொகுதி நான்கு, ப. 198.
44. பாரதிதாசன், குயில் பாடல்கள், ப. 20.
45. ,, பாண்டியன் பரிசு, ப. 19.
46. ,, இசையமுது, தொகுதி 1, ப. 33.
47. மேற்படி, ப. 33.
48. ,, ப. 32.
49. பாரதிதாசன், இளைஞர் இலக்கியம், ப. 48.
50. மேற்படி, ப. 46.
51. ,, ப. 56.
52. திருக்குறள் 759.

53. பாரதிதாசன், குடும்பவிளக்கு—1, ப. 8.
54. எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழர் பண்பாடு, ப. 50.
55. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, ப. 79.
56. மேற்படி, ப. 81.
57. ,, ப. 112.
58. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள்—தொகுதி நான்கு, ப. 99.
59. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் — முதல் தொகுதி, ப. 73.
60. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள்—தொகுதி நான்கு, ப. 65.
61. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா 94.
62. திருக்குறள், 1081.
63. பெரியபுராணம், 'தடுத்தாட்கொண்ட புராணம்', பாடல் 140.
64. பாரதியார், பாரதியார் கவிதைகள், ப. 306.
65. மேற்படி, ப. 306.
66. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள்—முதல் தொகுதி, ப. 22.
67. பாரதிதாசன், காதல் பாடல்கள், ப. 39.
68. ,, பாண்டியன் பரிசு, ப. 103.
69. ,, காதல் நினைவுகள், ப. 36.
70. ,, பாரதிதாசன் கவிதைகள்—தொகுதி மூன்று, ப. 13.
71. பாரதிதாசன், காதல் நினைவுகள், ப. 20.
72. ,, பாரதிதாசன் கவிதைகள்—தொகுதி மூன்று, ப. 13.
73. மேற்படி, பக். 5—6.

74. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள்—தொகுதி நான்கு, ப, 35.
75. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள்—முதல் தொகுதி, ப. 23.
76. பாரதிதாசன், எதிர்பாராத முத்தம், பக். 25—26.
77. மேற்படி, ப. 10.
78. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள்—முதல் தொகுதி, ப. 24.
79. மேற்படி, ப. 25.
80. ,, ப. 115.
81. ,, ப. 106.
82. ,, ப. 120.
83. பாரதிதாசன், குடும்பவிளக்கு, பகுதி 4, ப. 103.
84. மேற்படி, ப. 16.
85. ,, ப. 28.
86. ,, ப. 216.
87. ,, ப. 103.
88. ,, பக். 100—101.
89. ,, பக். 104—105.
90. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, பக். 45—46.
91. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 15.
92. மேற்படி, ப. 32.
93. ,, ப. 23.
94. ,, ப. 147.
95. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 148.
96. மேற்படி, பக். 149—150.
97. ,, ப. 170.

98. பாரதிதாசன், குடும்பவிளக்கு, பகுதி 3, ப. 9.
99. ,, பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 4, ப. 44.
100. மேற்படி, ப. 49.
101. பாரதிதாசன், இசையமுது—1, ப. 40.
102. ,, இருண்ட வீடு, ப. 29.
103. ,, ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது, பக். 34—35.
104. பாரதிதாசன், குடும்பவிளக்கு—1, ப. 20.
105. ,, தமிழியக்கம்,
106. கலிங்கத்துப்பரணி, பாடல் 404.
107. கம்பராமாயணம், கும்பகருணன்வதைப் படலம், பாடல் 15.
108. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, பக். 172—173.
109. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, ப. 395.
110. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 147.
111. மேற்படி, ப. 175.
112. ,, ப. 146.
113. பாரதிதாசன், குயில் பாடல்கள், ப. 66.
114. ,, அழகின் சிரிப்பு, ப. 26.
115. மேற்படி, ப. 29.
116. ,, ப. 55.
117. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 82.
118. பாரதிதாசன், குடும்பவிளக்கு 1, ப. 30.

119. மேற்படி, ப. 9.
120. ,, ப. 20.
121. ,, ப. 58.
122. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், பகுதி 3, ப. 17.
123. பாரதிதாசன். குடும்பவிளக்கு 1, ப. 21.
124. மேற்படி, ப. 57.
125. பாரதிதாசன், இருண்டவீடு, ப. 8.
126. மேற்படி, ப 8.
127. பாரதிதாசன் குடும்பவிளக்கு 3, ப. 37.
128. ,, பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 90.
129. பாரதிதாசன், காதலா? கடமையா?, பு. 26.
130. மேற்படி, ப. 43.
131. பாரதிதாசன், எதிர்பாராத முத்தம், ப. 15.
132. ,, பாரதிதாசன் கவிதைகள், பகுதி 3, ப. 239.
133. மேற்படி, ப. 301.
134. பாரதிதாசன், பாண்டியன் பரிசு, ப. 36.
135. ,, பாரதிதாசன் கவிதைகள், பகுதி 3, ப. 19.
136. பாரதிதாசன், குடும்பவிளக்கு 2, ப. 18.
137. ,, பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 4, ப. 61.
138. பாரதிதாசன், பாண்டியன் பரிசு, ப. 107.
139. ,, பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப, 250.
140. பாரதிதாசன், பாண்டியன் பரிசு, ப. 144.

141. தண்டியலங்காரம், நூற்பா 35.
142. ரா. சீனிவாசன், சங்க இலக்கியத்தில் உவமைகள், ப. 83.
143. பாரதிதாசன், இசையமுது 2, ப. 3.
144. ,, பாரதிதாசன் கவிதைகள் — முதல் தொகுதி, ப. 78.
145. பாரதிதாசன், குடும்பவிளக்கு, ப. 24.
146. ,, பாண்டியன் பரிசு, ப. 154.
147. ,, பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 4, ப. 84.
148. மேற்படி, ப. 115.
149. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 67
150. பாரதிதாசன், எதிர்பாராத முத்தம், ப. 14.
151. ,, காதலா? கடமையா?, ப. 33.
152. ,, பாண்டியன் பரிசு, ப. 162.
153. மேற்படி, ப. 91.
154. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 4, ப. 55.
155. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 288.
156. பாரதிதாசன், இசையமுது 2, ப. 12.
157. ,, பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 67.
158. மேற்படி, ப. 22.
159. பாரதிதாசன், அழகின் சிரிப்பு, ப. 20.
160. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 75.

161. பெரியபுராணம், தடுத்தாட்கொண்ட புராணம், பாடல் 140.

162. பாரதிதாசன், குடும்பவிளக்கு 3, ப. 22.

163. ,, காதல் நினைவுகள், ப. 48.

164. ,, எதிர்பாராத முத்தம், ப. 6.

165. ,, திராவிட நாட்டுப்பண், ப. 2.

166. ,, பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 3, ப. 307.

167. பாரதிதாசன், குடும்பவிளக்கு, 4 & 5, ப. 38.

168. மேற்படி 3, ப. 8.

169. பாரதிதாசன், இசையமுது 2, ப. 4.

170. ,, பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 70,

171. மேற்படி, ப. 72.

172. ,, ப. 188.

173. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 4, ப. 116.

III

# பாரதிதாசன் பாடல்களில் இயக்கம்

இயக்கம் (Movement) என்பது சில கோட்பாடுகளை வரையறுத்துக் கொண்டு அதனை மக்களிடம் பரப்புவது. இசுலாமிய இயக்கம், கிருத்துவ இயக்கம் போன்றவை சமய அடிப்படையில் எழுந்த இயக்கங்களாகும். திராவிடர் கழகமும் ஓர் இயக்கமாகவே இயங்கி வருகின்றது. இதனைப் போலவே புலவர்கள் சில கொள்கைகளை வரையறுத்துக் கொண்டு அதனைத் தம் கவிதையின் மூலமாக மக்களிடம் பரப்புவர். இஃது இலக்கிய இயக்கம் (Literary movement) எனப்படும். இவ்வியக்கத்தின் பாடுபொருளாகச் சமயம், மானுடம், சீர்திருத்தம், மொழி போன்றவைகள் இருக்கலாம். பிறவும் ஏற்றுக் கொள்ளப்படும். புலவர்கள் ஏதேனும் ஒன்றையே இயக்கத்திற்குப் பாடுபொருளாக ஏற்றுக் கொள்வதுண்டு. ஒரு சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட பல கொள்கைகளைத் தம் இயக்கத்திற்குப் பாடுபொருளாகக் கொள்வதுமுண்டு.

பாவேந்தர் பாரதிதாசனாரின் இலக்கிய இயக்கத்தைப் பாடுபொருளின் அடிப்படையில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று 'தமிழ் இயக்கம்'; பிறிதொன்று 'தன்மான இயக்கம்' (சுயமரியாதை இயக்கம்); மற்றது 'சீர்திருத்த இயக்கம்'.

# 1. தமிழ் இயக்கம்

'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்பதே பாரதிதாசனாரின் முழக்கமாக இருந்தது. இத்தமிழ் இயக்கம், மற்ற இரு இயக்கங்களிலும் ஊடுருவி நிற்கின்றது. அதனால் தான் திறனாய்வாளர்கள் கூடப் பாவேந்தரை, "திராவிட இயக்கம், நாத்திக இயக்கம், பொதுவுடைமை இயக்கம், சீர்திருத்த இயக்கம் எனவெல்லாம் இயம்புவதை விடத் தமிழியக்கம் என்பதே தக்கதாகும்"[1] என்கின்றனர்.

தமிழ் நாட்டில் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று பாவேந்தர் ஏன் கூறினார்? கூறவேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது என்று சிந்திப்போமானால் அதற்கு இரு காரணங்கள் புலப்படுகின்றன. ஒன்று தமிழில் பிறமொழிக் கலப்பு. மற்றது அக்காலச் சூழ்நிலை. தொல்காப்பியனார் காலத்திலேயே தமிழில் வடமொழி கலக்கத் தொடங்கிவிட்டது. பிறகு பௌத்த சமண சமயங்களின் வழி பாலி மொழி வந்து கலந்தது. பல்லவர் காலத்தில் மீண்டும் வடமொழி செல்வாக்குப் பெறுகின்றது. இச்செல்வாக்கு பக்தி இலக்கியக் காலம் வரை தொடர்கின்றது. அதனை அடுத்துச் சோழர் காலத்திலும் வடமொழியே செல்வாக்குப் பெற்ற மொழியாக இருந்திருக்கின்றது. பிறகு இசுலாமியர்களின் படையெடுப்பால் அரபுமொழியும், பார்சிய மொழியும், இந்துஸ்தானியும் வந்து கலந்தன. ஐரோப்பியர் வருகையினால் போர்ச்சுகீசிய மொழி, பிரஞ்சு மொழி, ஆங்கில மொழி போன்றவைகளும் வந்து கலந்து ஒரு கலப்பு மொழியாகவே தமிழ் காட்சி தந்தது. இப் பிறமொழிச் சொற்களை நீக்கித் தமிழைத் தனித் தமிழாகவே போற்ற வேண்டும் என்ற எண்ணம் பாவேந்தர் உள்ளத்தில் கருவுற்றது.

தொடக்கக் காலத்தில் பாவேந்தர் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தியும் கவிதை புனைந்தார். பின்பு

மறைமலை அடிகளின் தனித்தமிழ் இயக்கத்தால் ஈர்க்கப் பட்டுத் தனித்தமிழைப் போற்றுவாரானார்.

காலச் சூழ்நிலை என்று பார்க்கும்போது, "அடிமை வரவின் விடியற்காலம் அது! தமிழனே தமிழை எதிர்த்த காலம்! ஆங்கில மோகம் ஆட்டிப் படைத்த நேரம்! ஆட்சியிலும், அலுவலகங்களிலும், பள்ளியிலும், கல்லூரி யிலும், ஆங்கிலம் அரசோச்ச, கோயில்களிலும், விழாக்களிலும், இசையரங்குகளிலும், மணமேடைகளிலும் வடமொழி வலம் வந்த காலம்... பிறமொழியில் பெயர் மாற்றம் கொண்டு கூத்தர் நடித்த காலம் அது. 'தமிழ் நாடும், தமிழ்மொழியும் தமிழன் தன்மானமும் விடுதலை பெற்று வளர்ச்சி அடைய வேண்டுமானால் தமிழன் காரியத்தில் தமிழன் அல்லாதவன், அவன் எப்படிப் பட்டவன் ஆனாலும் தலையிடுவது முதலில் ஒழித்தாக வேண்டும். இதை வேறு எதை வைத்தாவது ஒழிக்க வேண்டும்' என்று தந்தை பெரியார் சூளுரைக்க வேண்டிய சூழ்நிலை அமைந்த காலம்".[2] இத்தகைய காலச் சூழல்தான் பாவேந்தரைத் தமிழ் இயக்கம் காண உந்தியது. இத்தமிழ் இயக்கத்தை மக்களிடம் பரப்ப இவர் மேற்கொண்ட படி முறைகள் மூன்று. முதல் நிலையில் கொள்கைகளைத் தான் பின்பற்றி மற்றவர்களுக்கு வழிகாட்டியாக நின்றார். அடுத்து மக்களுக்குத் தமிழ் உணர்ச்சியை ஊட்டுகின்றார். தமிழ் உணர்ச்சியை ஊட்டிய பிறகு தமிழ் மக்களை ஒன்றுபடுத்த — ஒற்றுமை யுடன் வாழ வேண்டுகின்றார். மக்கள் ஒற்றுமையுடன் சேர்ந்த பின்பு தமிழ்ப் பகையை அழிக்க முயல வேண்டும் — அப்பொழுதுதான் முழு வெற்றி கிடைக்கும் என்கிறார்.

### பாவேந்தரும் தமிழும்

ஒரு கொள்கையை மக்களிடம் பரப்பும் ஒருவர் முதலில் அக்கொள்கையைத் தான் பின்பற்றி ஒழுக வேண்டும். எளிமையை மக்கட்குப் போதித்த மகாத்மா காந்தி, தாமே

அதற்கோர் எடுத்துக்காட்டாகக் கடைசி வரை திகழ்ந்தார். தாய்மொழி போற்ற வேண்டும்; தமிழ் போற்றி வாழ வேண்டும் என முரசு கொட்டிய பாவேந்தர் தம் வாழ்வைத் தமிழுடன் இணைத்துக் கொண்டார். பாவேந்தர்,

**செந்தமிழே! உயிரே! நறுந் தேனே**
**செயலினை மூச்சினை உனக்களித் தேனே**
**நைந்தா யெனில் நைந்து போகும்என் வாழ்வு**
**நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே**

—பாரதிதாசன், இசையமுது, தொகுதி 1, ப. 34.

என்று தமிழோடு தாம் இணைந்து விட்டதை உணர்த்து கின்றார். மேலும்,

**சலுகை போனால் போகட்டும் — என்**
**அலுவல் போனால் போகட்டும்**
**தலைமுறை ஒருகோடி கண்ட என்**
**தமிழ் விடுதலை ஆகட்டும்.**
**பிள்ளை பிறந்தேன் யாருக்காக?**
**பெற்ற தமிழ்மொழிப் போருக்காக**
**உள்ளம் இருப்பதும் தோள் இருப்பதும்**
**உயிர்நிகர் தமிழ்ச் சீருக்காக**

—பாரதிதாசன், தமிழுக்கு அமுதென்று பேர், ப. 23.

என்று தமிழுக்காக எதையும் இழக்கத் தயாராக உள்ளேன் என்கின்றார்; தமிழை உயிராக மதித்து ஒழுகுகின்றார்.

**அளப்பிலா உவகை ஆடற்றமிழே நீ என்றன் ஆவி**
**தமிழை என்னுயிர் என்பேன் கண்டீர்**
**உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே**

என்று நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் தமிழைத் தம் உயிராக மதித்தொழுகுகின்றார். மேலும்,

**பயிலுறும் அண்ணன் தம்பி — அக்கம்**
**பக்கத் துறவின் முறையார்**

தயைமிக உடையாள் அன்னை — என்னைச்
சந்ததம் மறவாத் தந்தை
குயில்போல் பேசிடும் மனையாள் — அன்பைக்
கொட்டி வளர்க்கும் பிள்ளை
அயலவ ராகும் வண்ணம் — தமிழ்என்
அகத்தினில் உறைதல் கண்டீர்.

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1 ப. 87.

என்று தமிழ் மொழியைத் தம் உறவுகளைவிட மேலாகக் கருதுகின்றார்.

இவ்வாறு தமிழை முதலில் போற்றிப் பின்பு மக்களும் போற்றவேண்டும் என்கின்றார். இவர் மக்கட்குத் தமிழ் உணர்வைப் பல முறைகளைப் பின்பற்றி ஊட்டுகின்றார். தமிழின் தொன்மையை எடுத்துக்காட்டல், தமிழின் சிறப்பியல்புகளைக் கூறல், பிற நாட்டில் மொழியைப் போற்றும் பாங்கினைக் கூறல் போன்றவை அவற்றுள் சில.

## தமிழின் தொன்மை

ஒருவனைத் திருத்த வேண்டுமானால் அவனிடம், 'வள்ளுவர் இவ்வாறு கூறியுள்ளார்; நாலடியில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது' என்று கூறுவதைவிட நின் பாட்டனார் இவ்வாறு வாழ்ந்தார் நின் தந்தையார் இவ்வாறு இருந்தார் நீ இப்படி இருக்கலாமா என்று கேட்பதன்மூலம் அவனை எளிமையாகத் திருத்தலாம். அது அவன் உள்ளத்தின் ஆழத்தில் படியும். சங்க காலத்தில், சோழன் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மலையமான் மக்களை யானையால் இடறிக் கொலை செய்யப் பணித்தான். இக் கொடுஞ்செயலைத் தடுக்க வேண்டிக் கோவூர் கிழார் சோழனைத் திருத்த வேண்டி அவன் மூதாதையரின் பழம் பெருமைகளை எடுத்துக் கூறியே திருத்துகின்றார்.

நீயே, புறவி னல்ல லன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை

இவரே புலனுழு துண்மார் புன்கண் அஞ்சித்
தமது பகுத்துண்ணும் தண்ணிழல் வாழ்நர்
களிறுகண் டமூஉ மழாஅன் மறந்த
புன்தலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ வுடையார்
கேட்டனை யாயினீ வேட்டது செய்ம்மே![3]

இம்முறையைப் பின்பற்றியே பாவேந்தர் அவர்களும் தமிழின் தொன்மையைப் பரக்கக் கூறுகின்றார். தமிழனே உலகின் முதன் மனிதன் என்றும் அவன் முதலில் பேசியது தமிழ் மொழியே என்றும் கூறுகின்றார்.

ஆதி மனிதன் தமிழன்தான்
அவன் மொழிந்ததும் செந்தமிழ்த்தேன்.

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 4, ப. 121.

மேலும் ஞாயிறும் திங்களும் தோன்றிய அன்றே தமிழ் தோன்றிவிட்டது என்பதனை,

திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்க ளோடும்
மங்குல்கடல் இவற்றோடும் பிறந்த தமிழ்...

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 100.

என்கிறார்.

பண்டுவந்த செழும்பொருளே
பார்அடர்ந்த இருட் கடலில்
படிந்த மக்கள்
கண்டு வந்த திருவிளக்கே
களிப்பருளும் செந்தமிழே.

—பாரதிதாசன், தமிழியக்கம், ப. 5.

என அதன் பழைமையைச் சொல்லி, சங்கத் தொட்டிலில் வளர்ந்த தமிழ் என்று மேலும் அதன் தன்மைக்கு மெருகேற்றுகின்றார்.

வையகமே உய்யுமாறு
வாய்த்த தமிழ் என் அரும்பேறு
துய்யதான சங்கமெனும்
தொட்டிலில் வளர்ந்த பிள்ளை
கையிலே வேலேந்தி (தம்)
கடல் உலகாள் மூவேந்தர்
கருத்தேந்திக் காத்தார் அந்தக்
கன்னல் தமிழும்

—பாரதிதாசன், இசையமுது, தொகுதி ப. 46.

இவ்வாறு தமிழின் தொன்மையை எடுத்துக் கூறுவதன் மூலம் மக்களின் உள்ளத்தில் தமிழ் உணர்வை விதைக்கின்றார். தொன்மையானது என்ற ஒரு காரணத்தால் மட்டுமே தமிழ் உயர்ந்ததா என்ற எண்ணம் எழும் அல்லவா? அதனால் தமிழ் தொன்மையானது மட்டுமல்ல பல சிறப்புகளைப் பெற்றுப் பாரில் சிறந்த மொழியாகத் திகழ்கின்றது என்று அதன் ஒவ்வொரு சிறப்பினையும் எடுத்துக்கூறி, தாம் விதைத்த 'தமிழ் உணர்வுக்கு' நீர் ஊற்றுகின்றார்.

## தமிழின் இனிமை

மொழியியல் அறிஞர்கள் குற்றியலுகரத்தைப் பற்றிக் கூறும்போது, வல்லொற்று ஈறு, ஒலிப்பதற்குக் கடினமாகையால் அதனை எளிமைப்படுத்தவந்த மொழித்துணை உகரத்தையே பிற்காலத்துக் குற்றியலுகரம் என்று இலக்கணிகள் கூறுகின்றனர் என்பர். அதாவது தமிழ் மொழி உகர ஈற்றைப் பெற்று எளிமை உடைய மொழியாக, இனிமை உடைய மொழியாக இருக்கின்றது. இதனைத் தமிழ் மொழியின் அண்டை மொழியாகிய தெலுங்கு மொழியிலும் காணலாம். இத்தமிழ் மொழியின் இனிமையை நன்கு நுகர்ந்த பாவேந்தர் மொழிகளிலே தமிழ் மொழிதான் இனிமையானது என்கின்றார்.

**தனிமைச் சுவையுள்ள சொல்லை...எங்கள்**
**தமிழினும் வேறெங்கும்யாங் கண்டதில்லை**
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1. ப. 94

என்று கூறி அந்த இனிமைத் தமிழுக்கு ஒப்பான ஒரு பொருளைக் கூற விழைகின்றார்.

**தமிழ் படித் 'தேன்' அதை உண்ணத்தான்**
**தமிழ் 'படித்தேன்' நான்**
—பாரதிதாசன், இளைஞர் இயக்கம், ப. 11

என்று தேனுடன் ஒப்பிடுகின்றார். அத்துடன் நில்லாது வள்ளுவரை நினைவுபடுத்துவது போல்,

**தழுவு குழல்யாழ் கிளிமொழி யுமோர்**
**அமிழ்தும் உனையே நிகர் ஆமோ**
—பாரதிதாசன், பன்மணித்திரள், ப. 6.

என்று குழல் யாழ் மட்டுமல்லாது கிளிமொழி, அமிழ்து இவற்றுடன் ஒப்பிட்டு மகிழ்கின்றார். மேலும்,

**மங்கை ஒருத்தி தரும் சுகமும்—எங்கள்**
**மாத்தமிழ்க் கீடில்லை என்றுரைப் போம்**
—பாரதிதாசன், பன்மணித்திரள், ப. 85.

என்றும்,

**தமிழுக்கும் அமுதென்று பேர்! அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!**

என்றும் நிலவு, மணம், வாழ்வு, மது, இளமை, அறிவு, கவிதை போன்ற பலவற்றுடன் ஒப்பிட்டு மகிழ்கின்றார். (பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 89.) இவ்வாறு தமிழின் தொன்மையையும் இனிமையையும் எடுத்துக்கூறி வள்ளுவரையும் வாழ்வையும் கூறித் தமிழ் உணர்ச்சியை வளர்க்கின்றார். மக்களுக்குத் தமிழ் உணர்ச்சி ஏற்பட்ட பின் அவர் வேண்டுவது ஒற்றுமையை.

**தமிழர் ஒற்றுமை**

மக்களை ஒன்றுபடுத்தாமல் நாம் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிட முடியாது. மக்களின் ஒத்துழைப்பால் தான் ஸ்பார்ட்டா, கிரேக்கத்தில் வலிமை மிகுந்த ஒரு நகரமாக விளங்கியது. மக்களை ஒருங்கிணைத்த பின்பே சீனப் பொதுவுடைமையை மாசேதுங்கால் ஏற்படுத்த முடிந்தது. சாதி மதங்களைக் கடந்து இந்திய மக்கள் ஒன்றுபட்டதால் தான் இந்தியா சுதந்திரம் அடைந்தது. எனவே மாற்றம் ஏற்பட மக்களின் ஒத்துழைப்பு மிகமிகத் தேவையானது. இதனை உணர்ந்த பாவேந்தர், தமிழ் உணர்ச்சி மட்டும் பெற்றுவிட்டால் பகையை ஒழிக்கமுடியாது. பகையை ஒழிப்பதற்கு முன்னால் தமிழர்கள் ஒன்றுபடவேண்டும். ஒற்றுமையுடன் பகையை எதிர்த்தால் நிச்சயம் வெற்றி கிட்டும் என்று எண்ணித் தமிழர்களை ஒற்றுமையுடன் இணையத் தூண்டுகின்றார்.

**தமிழரெல்லாம் தமிழரையே சார்தல் வேண்டும்**
**தமிழரல்லார் தமைச்சார்தல் தீமை செய்யும்.**

—பாரதிதாசன், *தமிழுக்கு அமுதென்று பேர்*, ப. 21.

**எங்குப் பிறப்பினும் தமிழன் தமிழனே!**
**இங்குப் பிறப்பினும் அயலான் அயலனே!**
**செங்குருதி தன்னில் தனித்தன்மை வேண்டும்**
**சிறிதும் அயலான் கலப்பின்மை வேண்டும்.**

—பாரதிதாசன், *தமிழுக்கு அமுதென்று பேர்*, ப. 42.

கலப்பில்லாமல், புல்லுருவிகள் ஊடுருவாமல், தமிழர்கள் எல்லாம் ஒன்றுபடுதல் வேண்டும். இரத்தக் கலப்பு இல்லாமையைப் பாவேந்தர் கூறுவது குறிப்பிடத்தக்கது. ஒன்றுபட வேண்டும் என்று கூறிய பாவேந்தர் எவ்வாறு ஒன்றுபட வேண்டும் என்பதனையும் கூறுகின்றார்.

உடையினிலே ஒன்றாதல் வேண்டும்! உண்ணும்
உணவினிலே ஒன்றாதல் வேண்டும்! நல்ல
நடையினிலே ஒன்றாதல் வேண்டும்! பேசும்
நாவிலும் எண்ணத்திலும் ஒன்றாதல் வேண்டும்

—பாரதிதாசன், வேங்கையே எழுக, ப. 39.

என்று ஒன்றாக இணையும் முறையைக் கூறுகின்றார். மக்கள் இணையும் நெறியைக் காட்டிய பாவேந்தர் அவ்வாறு இணையும்போது ஏற்படும் சிக்கல்களையும் அதற்கான தீர்வையும் கூறுகின்றார்.

### ஒன்றுசேரப் பொறுமை வேண்டும்

'ஒருவர் பொறை இருவர் நட்பு' என்பது நாலடியார் நவிலும் நன்மொழி பொறையுடைமை இல்லையென்றால் ஒற்றுமையும் இல்லை. தமிழர்கள் ஒன்றுபடும் வேளையில் ஒரு தமிழர் மற்றொரு தமிழருக்குத் தீமை விளைவித்தால் அதனைப் பொறுத்தல் வேண்டும். அப்பொழுதுதான் பொதுநலக் குறிக்கோளை அடைய முடியும்.

தமிழருக்குத் தமிழர்தாம் இடர் செய்தாலும்
தமிழர்பொது நலமெண்ணிப் பொறுக்க வேண்டும்
தமிழரெலாம் தமிழரன்றோ?...
... ... ... ... ... ...
தமிழனொரு தமிழனுக்குத் தீமை செய்தால்
தனிமுறையில் செய்ததென அதை மறந்து
தமிழரது பொதுநலத்திற்கு உயிரும் தந்து
தமிழரது பண்பை நிலைநிறுத்த வேண்டும்

—பாரதிதாசன், தமிழுக்கு அமுதென்று பேர், ப. 21.

என்கின்றார். ஒரு செயல் நடைபெறுகின்றது என்றால் ஒரு பயன் விளைய வேண்டும். பயனற்ற செயல் வாழ்வின் முன்னேற்றத்திற்குப் பயன்படாதது மட்டுமல்ல, ஒருசில வேளையில் தடையாகவும் அமைந்துவிடும். தடையை

நீக்கத் திட்டமிட்டுப் பயனற்ற செயல் செய்வதன்மூலம் மேலும் தலைமையை மிகுதிப்படுத்திக் கொள்ளக் கூடாது. இல்லையென்றால் 'குளிக்கச் சென்று சேற்றைப் பூசிக் கொண்ட கதை'யாகி விடும். தமிழர்கள் ஒன்றுபட வேண்டும்; இன்னின்ன முறையில் ஒன்றுபடுதல் வேண்டும்; ஒன்றுபடும்பொழுது இன்னின்ன சிக்கல்கள் தோன்றும், அதனை இன்னின்ன முறையில் களைதல் வேண்டும் என்றெல்லாம் சொல்லி எதற்காக ஒன்றுபடுதல் வேண்டும் என்ற குறிக்கோளைக் கூறவில்லையென்றால் ஒன்று சேர்வதன் மூலம் எந்தப் பயனும் இல்லை. ஒன்றுசேர்வதன் குறிக்கோளைப் பாவேந்தர் கூறும் நிலையில்தான் அன்னாரது தமிழ் இயக்கத்தின் உச்சக்கட்டக் கொள்கை புலப்படுகின்றது.

தமிழர்கள் தமிழ் உணர்ச்சியோடு ஒன்றுபட்ட பின்பு அவர்கள் ஆற்ற வேண்டிய கடமை இரண்டு என்று பாவேந்தர் கூறுகின்றார். ஒன்று தமிழைப் போற்றுதல். மற்றது தமிழ்ப் பகையை அழித்தல். இவ்விரண்டும் பறவையின் இரு சிறகுகள் போன்றன. ஒன்று ஒழுங்காகச் செயல்படவில்லையென்றால் கூடப் பறவையால் பறக்க முடியாது. அதுபோல மேற்கூறிய இரண்டு கடமையையும் முழுமையாக ஆற்றுவதன் மூலமே தமிழ் இயக்கம் வெற்றி அடைய முடியும். ஒன்றை ஒழுங்காக— முழுமையாகச் செய்யவில்லை என்றால் கூட இயக்கத்தின் பயன் முழுமையாகக் கிட்டாது.

**தமிழ் போற்றல்**

தமிழை ஏன் போற்ற வேண்டும்? என்ற கேள்வி எழுகின்றது. அதற்குப் பாவேந்தர் தரும் விடை சிந்தனைக் குரியது. அவர் கூறுகின்றார்:

**தமிழ் மொழி தாழும்; தமிழன் தாழ்வான்**
**தமிழ் அழிந்திட்டால் தமிழர் அழிவர்.**

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 4, ப. 311.

**தமிழ் உயர்ந்தால்தான் தமிழன் உயர்வான்**
**தமிழ்ப் பகையாளனும் தானே பெயர்வான்!**

—பாரதிதாசன், வேங்கையே எழுக, ப. 115.

**நைந்தாய் எனில்நைந்து போகும்என்வாழ்வு**
**நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே.**

—பாரதிதாசன், இசையமுது, தொகுதி 1, ப. 34.

'தமிழ் அழிந்தால் தமிழர் அழிவர்' என்று கூறுவதில் 'தமிழர்' என்பது தமிழரின் உடலை அல்ல. தமிழரின் பண்பாட்டை! தமிழரின் நாகரிகத்தை! தமிழரின் ஒழுக்கத்தை! தமிழ் அழிந்தால் இம்மூன்றுமே அழிந்துவிடும் என்கின்றார்.

பண்டைய கிரேக்க மொழி அழிந்தது; கூடவே பண்டைய கிரேக்கப் பண்பாடும் அழிந்தது. பண்டைய சுமேரிய மொழி அழிந்ததும் அதன் பண்பாடும் அழிந்தது. எனவே மொழி அழிந்தால் அம்மொழி வளர்த்த பண்பாடும் அழிந்து போகும். தமிழ்ப் பண்பாடு காக்க வேண்டு மானால் முதலில் தமிழைக் காக்க வேண்டும். தனித் தமிழைப் போற்ற வேண்டும். பிறமொழிக் கலப்பு தமிழில் ஏற்பட்டால் பிற பண்பாடும் தமிழில் கலந்து கலப்புப் பண்பாடு உருவாகிவிடும். எனவே தமிழ்ப் பண்பாடு தனியாக நிறுவ வேண்டுமானால் தனித்தமிழைப் போற்ற வேண்டும் என்று சிந்தித்தே 'தமிழ் அழிந்தால் தமிழர் அழிவர்' என்கின்றார் பாவேந்தர்.

தமிழ்ப் பண்பாடு காக்கப்பட வேண்டுமானால் ஒன்று பட்ட மக்கள் வீறுகொண்டு எழுதல் வேண்டும். மக்களுள்ளும் இளைஞர்கள் வீறுகொள்ளுதல் வேண்டும். இளைஞர்களே புரட்சியை வெற்றிகரமாக முடிக்க வல்லவர்கள். 'உருசியப் புரட்சி'யின் தந்தையான லெனின், தம் வெற்றிக்கு இளைஞர்களையே நாடினார். இந்தியாவில் கூட, மாணவர்கள் தங்கள் பள்ளிப் படிப்பை

நிறுத்திவிட்டுக் காந்தியடிகளின் வேண்டுகோளுக்கிணங்க அரசியலில்—போராட்டத்தில் குதித்ததால்தான் விடுதலை அடைய முடிந்தது. அதைப் போலவே பாவேந்தரும் தம் தமிழ் இயக்கம் வெற்றி பெற இளைஞர்களையே அறை கூவல் விடுத்து அழைக்கின்றார்.

**பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு**
**திறக்கப் பட்டது! சிறுத்தையே வெளியில்வா!**
**எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்**
**புலியென செயல்செய்யப் புறப்படு வெளியில்!**
**நம்பினை பகலினை நள்ளிருள் என்றே**
**சிம்புட் பறவையே சிறகை விரி! எழு!**
**சிங்க இளைஞனே திருப்புமுகம்! திறவிழி**

— பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 2, ப. 90.

**எது செய்க நாட்டுக்கே எனத்துடித்த சிங்கமே!**
**இன்றே இன்னே**
**புதுநாளை உண்டாக்கித் தமிழ்காப்பாய் புத்துணர்வைக்**
**கொணர்வாய் இங்கே**
**ஆர்த்தெழுக! தமிழுக்குத் துறைதொறும் துறைதொறும்**
**அழகு காப்பாய்**
**இதுதான்நீ செய்யத்தக்க எப்பணிக்கும் முதற்பணியாம்**
**எழுக நன்றே**

— பாரதிதாசன், தமிழியக்கம், ப. 10.

என்று தமிழ் இளைஞன் செய்யத்தக்க முதற்பணியைக் கூறுகின்றார். அடுத்து எங்கெங்கெல்லாம் தமிழ் வேண்டும் என்று தமிழியக்கம் என்ற தமது நூலில் பட்டியல் போட்டுக் காட்டுகின்றார்.

### வணிகத்துறையில் தமிழ்

இன்று, உலகத்தின் பொருளாதாரம் வணிகத்தில் அடங்கி உள்ளது எனலாம். ஒரு நாடு பொருளாதாரத்தில்

முன்னேற வேண்டுமானால் நாட்டைத் தொழில் மயமாக்க வேண்டும். வணிகத்தின் உதவியுடன்தான் தொழில் மயமாக்க வேண்டும். மேலும் தொழிலால் உற்பத்தி ஆகும் பொருளை விற்பனை செய்வதற்கும் வணிகம் வேண்டும். எனவே இவ்விரு நிலையிலும் வணிகத்தின் தேவை வேண்டப் படுகின்றது. மக்களிடையே அதிகத் தொடர்பு உடைய துறைகளுள் வணிகமும் ஒன்று. இவ்வணிகம் தமிழ்நாட்டில் தமிழில்தான் நடைபெறுதல் வேண்டும் என்கின்றார் பாவேந்தர். ஆனால் அவர் காலத்தில் வணிக முகவரிகளும் விளம்பரங்களும் பிறமொழியிலேயே இருந்தன. அதனால் மனம் வெம்பிய பாவேந்தர்,

> ஆணிவிற் போன்முதலாக
> அணிவிற்போன் ஈறாக
> அனைவர் போக்கும்
>
> நாணமற்ற தல்லாமல்
> நந்தமிழின் நலங்காக்கும்
> செய்கை யாமே?
>
> தணிப்பரிதாம் துன்பமிது!
> தமிழகத்தின் தமிழ்த்தெருவில்
> தமிழ்தான் இல்லை
>
> — பாரதிதாசன், தமிழியக்கம், ப. 13.

என வேதனையை வெளியிடுகின்றார். வேதனைப் படுவதுடன் நின்று விடவில்லை. அதற்கு மருந்தையும் சொல்கின்றார் பாவேந்தர். ஏனெனில் அவர் ஒரு புரட்சிக் கவி. வேதனையை மட்டும் வெளியிட்டிருந்தால் ஆயிரக் கணக்கான கவிஞர்களில் அவரும் ஒருவராக இருந்து தெரியாமல் போயிருப்பார். தமிழ்நாட்டின் புண்களை மட்டும் பாட வந்தவர் அல்லர் பாவேந்தர்; அதற்கான மருந்தையும் கூறியவர். அவர் கூறும் மருந்து,

**வாணிகர், தம்முகவரியை**
**வரைகின்ற பலகையில், ஆங்**
**கிலமா வேண்டும்?**

**மாணுயர்ந்த செந்தமிழால்**
**வரைக என அன்னவர்க்குச்**
**சொல்ல வேண்டும்.**

— பாரதிதாசன், தமிழியக்கம், ப. 13.

என்கின்றார்; சொல்லிச் சொல்லித்தான் திருத்த வேண்டும். "வணிகர்க்கும் தமிழென்றால் வெறுப் புண்டோ?" இல்லை. ஆனால் அவர்கள், தமிழுக்கு அழிவை உண்டாக்குகின்றோம் என்பதை உணராமலே அழிவைச் செய்கின்றனர். எனவே அவர்களிடம் அதனை எடுத்துக்கூறி அவரைத் திருத்துதல் வேண்டும். மேலும் உணவு விடுதிகள், துணிக்கடைகள் போன்றவற்றிலும் தமிழ்ப் பெயர்கள் வேண்டும் என்றார். தமிழ் எழுத்து களால் எழுதினால் மட்டுமே அது தமிழாகி விடாது. "உடுப்பி ஓட்டல்" "மெடிக்கல் ஷாப்" என்று எழுதுவது எழுத்தால் தமிழாக இருந்தாலும் பெயரால் — அது உணர்த்தும் பொருளால் பிறமொழியே. இவற்றை "உடுப்பி உணவகம்" "மருந்துக் கடை" என்று எழுதினால் அது தமிழ்ப் பெயராகும். இத்தகைய மாற்றத்தையே பாவேந்தர் வேண்டுகின்றார்.

## இசையில் தமிழ்

சங்கக் காலத்திலேயே பரிபாடல் இசையோடு பாடப் பெற்றது. இடைக்காலத்திலும் நாயன்மார்களும், ஆழ்வார் களும் இசைப்பாமாலை பாடியே இறைவனை வழி பட்டனர். அக்காலக் கட்டத்தில், இசையொடு எழுந்ததே திருவாசகம். இதன் இசை இனிமையை நன்கு நுகர்ந்த புலவர்கள் 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத் திற்கும் உருகார்' என்று போற்றினர். இசை உள்ளத்தை

உருக வைக்கக் கூடியது. 'இசையை நுகராதவன் கொலை காரனாக இருப்பான்' என்ற ஆங்கிலப் பழமொழி இங்கு நினைவு கூரத்தக்கது. இவ்விசை தமிழிசையாகவே இருக்க வேண்டும் என்று பாவேந்தர் விரும்புகின்றார். அவர் காலத்தில் தெலுங்கு இசையே தமிழ் நாட்டில் அரசோச்சிக் கொண்டிருந்தது. இதனைப் பற்றிக் கூறும்போது,

**தெலுங்குதமிழ் நாட்டிலேன்?**
**செத்த வடமொழிக்கு இங்கே**
**என்ன ஆக்கம்?**
**இலங்கும் இசைப் பாட்டுக்கள்**
**பிறமொழியில் ஏற்படுத்த**
**இசையலாமோ?**

—பாரதிதாசன், தமிழியக்கம், ப. 21.

என்கின்றார். இசை மொழிக்கு அப்பாற்பட்டது என்றும், தமிழ் மொழியின் அமைப்பு இசைக்கு ஏற்புடையதன்று என்றும் மேலும் தமிழ் மொழியில் இசைப்பாடல்கள் இல்லை என்றும் சிலர் கூறுவர் அதனை ஏற்காதீர்! மறுப்பீர் என்கின்றார் பாவேந்தர்.

**தெலுங்கிசைத்தால் மறுப்பீர்கள்! தமிழே பாடச்**
**செய்யுங்கள்! அதற்காகத் திரண்டெ ழுங்கள்!**
**இலங்குதமிழ் மொழியினிலே பாடல் இல்லை**
**என உரைத்தால், அறையுங்கள்! தமிழமைப்பு**
**நலமுள்ள இசைக் கொவ்வாது என்பார் வாலை**
**நறுக்குங்கள்! இசைக்கு மொழி வேண்டாம் என்னும்**
**விலங்குகளை வளையுங்கள்**

— பாரதிதாசன், தமிழுக்கு அமுதென்று பேர், ப. 67.

இவ்வாறு இசைக்கலையிலும் தமிழ்மொழி வேண்டும் என்கின்றார். இசைக்கும் மொழிக்கும் அதிகத் தொடர்பு இல்லை. அப்படி இருந்தும் பாவேந்தர் இசையிலும் மொழி வேண்டும் என்று வற்புறுத்துவதன் காரணம் இசை பண்பாட்டுடன் தொடர்புடையது. மக்களின் பண்

பாட்டிற்கு ஏற்ற முறையில்தான் அம்மக்களின் இசையும் அமையும். இசையை மக்களிடம் இருந்து பிரிக்கப் பிரிக்க அவர்களின் பண்பாடும் சிறிது சிறிதாகச் சீர்குலைந்து கொண்டு வரும்.

இன்று மேலைநாட்டு இசை ஆட்சி செய்வது போன்று, அன்று தெலுங்கு இசை தமிழ்நாட்டில் ஆட்சி செய்தது. ஆகவே பாவேந்தர் தெலுங்கு இசையை நாட்டை விட்டு விரட்ட வேண்டும் என்றார், தெலுங்கிசையின் செல்வாக்கு சிறிது சிறிதாகக் குறைந்தது. தமிழிசை வளரத் தொடங்கியது. ஆனால் அந்த இடத்தில் தமிழிசை வராமல் மேலைநாட்டிசை வந்து கொண்டிருக்கின்றது. எனவே பாவேந்தரின் ஆசை இன்றுவரை முழுமையாக நிறைவேற வில்லை எனலாம்.

**படத்துறையில் தமிழ்**

படத்துறை (Film Industry) எல்லா மக்களிடமும் மிக நெருங்கிய துறையாக இன்று வளர்ந்துவிட்டது. தமிழ் நாட்டில் படம் (Cinema) பார்க்காத மனிதர்களே இல்லை என்று உறுதியாகச் சொல்லலாம். இத்துறையில் தமிழ் மொழியும், தமிழ்ப் பண்பாடும் சிறக்கவேண்டும், முதன்மை பெற வேண்டும் என்று விழைகின்றார் பாவேந்தர். அதற்கு இரண்டு வழிகளைக் கூறுகின்றார். ஒன்று,

> தமிழர்க்கே சலுகைகாட்ட வேண்டும்
> தமிழ்த்திரைப் படங்களில் நடிப்பதற்குத்
> தமிழர்க்கே சலுகை காட்ட வேண்டும்.
>
> — பாரதிதாசன், தமிழுக்கு அமுதென்று பேர், ப. 105.

இரண்டாவது,

> தமிழ்ப் புலவர் தனித்தமிழில்
> நாடகங்கள் படக்கதைகள்
> எழுத வேண்டும்
> ...... யாவும்

அமைப்பானும் செந்தமிழன்
அதைக் காண்பானும் தமிழன்
ஆதல் வேண்டும்

—பாரதிதாசன், தமிழியக்கம் ப, 39.

என்கின்றார். இவ்விரு நிலையிலும் மக்களின் மனநிலை கட்டாயம் மாறியே ஆகவேண்டும். செல்வம் திரட்டுதல் மட்டுமே குறிக்கோள் என்று திரைப்படம் எடுத்தலை வன்மையாகக் கண்டிக்கின்றார்.

### செய்தித்தாளில் தமிழ்

திரைப்படத்தை அடுத்து மக்களிடம் அதிகத் தொடர்பு கொண்டு உள்ளது செய்தித்தாள்களாகும். இவையும் செந்தமிழில் இருக்க வேண்டும் என்கின்றார். தமிழ் இலக்கணமும் இலக்கியமும் தெரியாதான் ஏடெழுதுதல் கேடு நல்கும். தமிழிற்குத் தொண்டு செய்கின்றோம் என்ற மனப்பாங்கில் செய்தித்தாளை எழுதுதல் வேண்டும். செய்தித்தாள் செய்ய வேண்டிய பணியினையும் அதன் சிறப்பினையும் பாவேந்தர்,

அறிஞர் தம் இதயஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்தாய்!
நறுமண இதழ்ப் பெண்ணே உன்
நலம்காணார் ஞாலம் காணார்

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 186.

என்னும் அடிகளின் வாயிலாக உணர்த்துகின்றார்.

இதற்குத் தமிழர்கள் — தமிழின் இலக்கணமும் இலக்கியமும் அறிந்த தமிழர்கள் — ஏடு நடத்துதல் வேண்டும்.

இத்தகைய செய்தித்தாள்களையே மக்களும் விரும்பிப் படித்தல் வேண்டும்.

## கோயிலில் தமிழ்

உலக வரலாற்றைப் பின்னோக்கிக் காணும்போது 'இறைமை' உணர்வு முதன் முதலில் தமிழனிடத்தில்தான் தோன்றியது எனலாம். தமிழன் என்றால் அவன் மூன்று இலக்கணங்கள் நிறைந்தவனாக இருத்தல் வேண்டும். ஒன்று இறைவனை வழிபடுதல். பிறிதொன்று இயற்கை ஈடுபாடு; மற்றது பெண்மையைப் போற்றுதல். இம் மூன்றில் இறைமையை வழிபடுதல் தமிழரிடமிருந்து உலகெங்கும் பரவியது எனலாம். இறை வழிபாட்டில் அமைதி வேண்டும் என்பதற்காகத் தனி இடத்தில் கோயில் அமைத்து இறைவனை வழிபட்டனர். அக்கோயிலைக் கட்டுவித்தவன் தமிழன். கட்டியவனும் தமிழன். கருவறையில் இருக்கும் இறைவனை வடித்தவனும் தமிழன். அவ்விறைவனை வழிபடுபவனும் தமிழன். ஆனால் அவ் விறைவன் முன் தமிழ்ப் பாமாலைகள் ஓதப்படாமல் வேத பாராயணங்கள் அல்லவா ஓதப்படுகின்றன! இம்மாற்றம் எவ்வாறு நிகழ்ந்தது?

**சொற்கோவின் நற்போற்றித்**
**திருஅகவல் செந்தமிழில்**
**இருக்கும்போது**

**கற்கோயில் உட்புறத்தில்**
**கால்வைத்த தெவ்வாறு**
**சகத்ர நாமம்**

**தெற்கோதும் தேவாரம்**
**திருவாய் நன்மொழியான**
**தேனிருக்கச்**

செக்காடும் இரைச்சலென
வேதபா ராயணமேன்
திருக்கோயில் பால்?

—பாரதிதாசன், தமிழியக்கம், ப. 28.

அதற்குக் காரணம் தமிழர்களின் மனப்பான்மை, வட மொழி உயர்ந்தது என்ற எண்ணம். கோயில்களில் தமிழர்களின் நிலை என்ன?

படிகட்டித் தமிழரெனப்
படிக்கட்டின் கீழ்நின்று
தமிழ் மானத்தை

வடிகட்டி அவன்வடசொல்
மண்ணாங்கட்டிக்கு உரைப்பீர்
'மந்த்ரம்' என்றே.

—பாரதிதாசன், தமிழியக்கம், ப. 27.

இந்த நிலை மாறவேண்டும். அவன் வழிபடும்பொழுது சொல்லும் 'மந்த்ர'த்தின் பொருள் விளங்கவில்லை. பொருள் விளங்கா மொழியில் இறைவனை வழிபட்டால் உள்ளத்தில் இறைமை உணர்வு எப்படித் தோன்ற முடியும்? உள்ளத்தில் இறைமை உணர்வு தோன்ற வேண்டுமானால் தேவாரம், திருவாசகம், பாசுரங்கள் போன்றவற்றை அப்படியே எடுத்து இசைப்பதால் மட்டுமே இறைமையை உணர முடியும்.

**அரசியல் தமிழ்**

ஜெர்மனி நாட்டில் 'ஜெர்மன்' ஆட்சிமொழி. பிரான்சு நாட்டில் 'பிரஞ்சு' ஆட்சிமொழி. இங்கிலாந்து நாட்டில் 'இங்லீஸ்' (ஆங்கிலம்) ஆட்சி மொழி. துருக்கி நாட்டில் 'துருக்கி' ஆட்சி மொழி, பாரசீக நாட்டில் 'பெர்சியன்' ஆட்சிமொழி, பர்மா நாட்டில் 'பர்மிய' மொழி ஆட்சி

மொழி. சீனநாட்டில் 'சீனமொழி' (சைனீஸ்) ஆட்சி மொழி. ஜப்பான் நாட்டில் ஜப்பான் மொழி (ஜப்பனீஸ்) ஆட்சிமொழி, அவரவர்கள் நாட்டில் அவரவர்களின் தாய்மொழி ஆட்சிமொழியாக உள்ளது. உலகத்தோடு ஒட்டி வாழ வேண்டுமானால் தமிழ்நாட்டில் தமிழ் மொழி தான் ஆட்சிமொழியாக இருத்தல் வேண்டும். ஆட்சி மொழி என்பது சட்டத்தில் மட்டும் இருத்தல் அன்று. நடைமுறை வாழ்க்கையிலும் தாய்மொழிதான் ஆட்சி மொழியாக இருத்தல் வேண்டும். கல்வித்துறையில், நீதித் துறையில், சட்டத்துறையில், மருத்துவத்துறையில், வான வியல் துறையில் என்று துறைதோறும் துறைதோறும் தமிழே ஆட்சிமொழியாக ஆளும் மொழியாக இருத்தல் வேண்டும்.

பாவேந்தரின் 'தமிழியக்கம்' என்ற நூல் 1945ஆம் ஆண்டு வெளி வந்தது. அந்தக் காலக் கட்டத்தில் இன்றைய தமிழ்நாடு, ஆந்திராவின் பெரும் பகுதி, கர்நாடகத்தின் ஒருசில பகுதிகள் போன்றவற்றை இணைத்து 'மதராஸ் ராச்சியம்' என்று பெயர் வைத்து ஆட்சி செலுத்தி வந்தனர். இதனால் தெலுங்கரும், கன்னடியரும் சென்னையில் இருந்து தமிழ் நாட்டையும் சேர்த்து ஆட்சி செலுத்தி வந்தனர்.

பிறமொழியாளன் எல்லாம் தமிழ்நாட்டை ஆளுவது தவறு என்று எண்ணினார் பாவேந்தர். அதனால் அவர் ஒருங்கிணைந்த தமிழ் மக்களுக்கு,

தமிழாய்ந்த தமிழன்தான்
தமிழ்நாட்டில் முதலமைச்சாய்
வருதல் வேண்டும்!

தமிழ்ப் பகைவன் முதலமைச்சாய்த்
தமிழ்நாட்டில் வாராது
தடுத்தல் வேண்டும்

—பாரதிதாசன், தமிழியக்கம், ப. 19.

என்று கூறுகின்றார். தமிழ் ஆய்ந்தவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராய் வந்தால்தான் தமிழ்மொழிக்கும், தமிழருக்கும் நன்மையை உளமாரச் செய்வர். இதனால் தமிழ் தன்னேரில்லாத தமிழாக வளரும்.

**அரியாசனம் உனக்கே ஆனால் உனக்குச்**
**சரியாரும் உண்டோ தமிழே[4]**

என்ற பழைய புலவர் கண்ட கனவு நிறைவேறும். எனவே ஆட்சிமொழியாகத் தமிழ் இருந்து சட்டத்துறையிலும் நீதித் துறையிலும் மருத்துவத் துறையிலும் ஆட்சி செய்தல் வேண்டும்

## கல்வித்துறையில் தமிழ்

மக்களுக்குப் பயிற்றும் மொழியாகத் தமிழ் இருத்தல் வேண்டும். தாய்மொழி மூலமாகக் கல்வி கற்றால்தான் சிந்தனை அறிவு மிகுதியாகும். பிறமொழி மூலமாகக் கல்வி கற்றால் அறிவு வளரலாம். ஆனால் சிந்தனை வளர முடியாது. சிந்தனை வளராமல் புதிய கண்டு பிடிப்புகள் இல்லை. மேலை நாட்டாரைப் போல் தமிழர்களும் புதிது புதிதாகக் கண்டுபிடிப்புகள் செய்ய வேண்டுமானால் அவர்களுக்குச் சிந்தனைச் சக்தி—சிந்திக்கும் ஆற்றல் மிகுதல் வேண்டும். சிந்தனைச் சக்தியை மிகுவிக்கும் ஆற்றல் தாய்மொழிக்கே உண்டு. "இத்தனை ஆண்டுக் காலமாக நான் கல்வித்துறையில் செய்த சேவையின் காரணமாக இன்றைக்கு என்ன அறிந்து கொண்டேன் என்றால் மாணவர்களுக்குச் சிந்தனா சக்தி பெரிய அளவில் பெருகவில்லை என்பதும், அதற்குக் காரணம் அந்நிய மொழி ஒன்றின் மூலம் கல்வி கற்று வந்து, அது அவர்களுக்குப் பெரும்பாரமாக இடையூறாக இருந்து வந்திருக்கிறது என்பதுதான்"[5] என்று முன்னாள் கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம் கூறுவதை இங்குச் சிந்தித்தல் வேண்டும். எனவே தமிழ் நாட்டில் பயிற்று மொழியாகத்

தமிழ்தான் இருத்தல் வேண்டும். பாவேந்தர், "தமிழ்க் கல்வி தமிழ்நாட்டில் கட்டாயம் என்பதொரு சட்டம் செய்ய" வேண்டும் என்கின்றார். அவ்வாறு ஒரு சட்டம் இல்லையென்றால் தமிழ்நாடு குன்றிவிடும் என்பதனை,

**தமிழுயர்ந்தால் தமிழ்நாடு**
**தானுயரும் அறிவுயரும்**
**அறமும் ஓங்கும்**
**இமயமலை போலுயர்ந்த**
**ஒருநாடும் தன்மொழியில்**
**தாழ்ந்தால் வீழும்**

—பாரதிதாசன், தமிழியக்கம், ப. 49.

என்று காட்டுகின்றார். எனவே பயிற்று மொழியாகத் தமிழ் மொழி வேண்டும். பள்ளியிலும் கல்லூரிகளிலும் ஊராட்சி மன்றங்களிலும் கணக்காயர்கள் தமிழைப் போற்ற வேண்டும் என்கின்றார்.

## அகவாழ்வில் தமிழ்

இங்குதான் பாவேந்தர் 'புரட்சிக்கவிஞ'ராகக் காட்சி தருகின்றார், வணிகத்துறையில் தமிழ், இசைத்துறையில் தமிழ், படத்துறையில் தமிழ், செய்தித்தாளில் தமிழ், கோயிலில் தமிழ் என்று முழக்கம் செய்யும் பாவேந்தர் இல்லற வாழ்விலும் அகவாழ்விலும் தமிழ் வேண்டும் என் கின்றார். மற்றத்துறைகளில் தமிழ் வேண்டும் என்று யாரும் சொல்லலாம். யாரும் பாடலாம். ஆனால் அகவாழ்வில் கூடத் தமிழ்தான் வேண்டும் என்று பாவேந்தர் காட்டுவது அவரைப் புரட்சிக்கவி என்று எண்ணத் தோன்றுகின்றது.

**மாதொருத்தி வேண்டும் எனக்கும்—தமிழ்**
**மகளா யிருந்தால்தான் இனிக்கும்**

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 4, ப. 75.

என்றும்,

பொருள் விளங்கா மொழிபேசும் ஒருத்தி
இருளில் இட்ட இன்ப ஓவியம்
அழகும் பண்பும் தழையக் கிடப்பினும்
பழகுதமிழ் அறியாப் பாவை தமிழருக்கு
உயிரில்லாத உடலே அன்றோ
கடுமொழி யேனும் கன்னலின் தமிழ்த்தேன்
வடிவிலா வாழ்வுக்கு அடிப்படை யன்றோ?

—பாரதிதாசன், இசையமுது, தொகுதி 2, ப. 37.

என்று வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதில் கூடத் தமிழுக்கு முதன்மை தருகின்றார்.

விவாக சுபமுகூர்த்தமென
வெளிப்படுத்தும் மண அழைப்பில்
மேன்மை என்ன?

—பாரதிதாசன், தமிழியக்கம், ப. 31.

என்று திருமண அழைப்பிதழில் வடமொழிக் கலப்பு இருத்தல் கூடாது என்று மறுக்கின்றார்.

மணமக்கள் தமைத் தமிழர்
வாழ்கஎன வாழ்த்துமொரு
வன்தமிழுக்கே
இணையாகப் பார்ப்பான் சொல்
வடமொழியா, தமிழர் செவிக்கு
இன்பம் ஊட்டும்

—பாரதிதாசன், தமிழியக்கம், ப. 32.

என்று மணமக்களை வாழ்த்துவதிலும் தமிழே வேண்டும் என்கின்றார்.

மணமக்கள் இல்லறத்தை
மாத்தமிழால் தொடங்கிடுக
மல்கும் இன்பம்

—பாரதிதாசன், தமிழியக்கம், ப. 32.

என்று இல்லறத் தொடக்கத்திலும் தமிழுக்கு முதன்மை தருகின்றார்.

இழந்தபழம் புகழ்மீள வேண்டும் நாட்டில்,
எல்லோரும் தமிழர்களாய் வாழ வேண்டும்
வழிந்தொழுகும் சுவைத் தமிழே பெருகவேண்டும்
மாற்றலர்கள் ஏமாற்றம் தொலைய வேண்டும்
விழுந்த தமிழ்நாடு தலை தூக்க என்றன்
உயிர்தனையே வேண்டிடினும் தருவேன் என்றான்
பழம் இடுவேன் சர்க்கரைப்பால் வார்ப்பேன் உங்கள்
பண்பாடும் வாய்திறப்பீர் அத்தான் என்றாள்

—பாரதிதாசன், குடும்பவிளக்கு, பாகம் 1, ப. 32

என்று பள்ளி அறையில் கூடத் தமிழ்ச் சிந்தனையுடன் இருக்கும் குடும்பத் தலைவர்களைக் காட்டுகின்றார்.

செல்வத் தமிழ்வேந்தர் போற்றும் செந்தமிழாம்
கல்விக்கரசி கலைச்செல்வி ஔவை
இனியும் தமிழ்காத்தே இந்நாட்டைக் காக்க
நினைந்து வந்தாள் என்னிலவள் நீதானோ என்கிளியே?
... ... ... ... ...
சற்றேஉன் ஆடல் தமிழ்ப்பாடல் நீ நிறுத்திப்
பொற்கொடியே என்னருமைப் பொன்னே நீ
கண்ணுறங்காய்

—பாரதிதாசன், குடும்பவிளக்கு, பாகம் 3, ப. 31.

என்று குழந்தையைத் தாலாட்டுப் பாடுவதிலும்,

அமிழ்தே அமிழ்தே ஓடிவா—என்
அன்பின் விளைவே ஓடிவா
தமிழின் சுவையே ஓடிவா—என்
தங்கப் பாப்பா ஓடிவா

—பாரதிதாசன், குடும்பவிளக்கு, பாகம் 3, ப. 38.

என்று குழந்தை வளர்ப்பிலும் தமிழைப் போற்றிக் காணுகின்றார் பாவேந்தர். இவ்வாறு அகத்திலும் புறத்திலும் தமிழைப் போற்ற வேண்டும் என்று எடுத்துக்காட்டும் பாவேந்தர் அடுத்துப்பகை அழிப்பைக் கூறுகின்றார்.

**பகை அழிப்பு**

தமிழ் உணர்ச்சியுடன் ஒருங்கிணைந்த தமிழர்க்கு எங்கெல்லாம் எவ்வாறு தமிழைப் போற்றவேண்டும் என்று கூறிய பின்பு இக்காலத்தில் தமிழ் எவ்வாறெல்லாம் புறக்கணிக்கப்படுகின்றது என்பதனையும், தமிழ்த்தாயின் அவலக்காட்சியையும் எடுத்துக் கூறிப் பகையழிப்பிற்கான உணர்ச்சியை ஊட்டுகின்றார். அதற்கு முதலில் தமிழின் அவல நிலையை — தமிழரின் சீர்கேட்டை எடுத்துக் கூறுகின்றார்.

> **வடநாட்டார் போன்ற உடை, வடநாட்டார் மெட்டு**
> **மாத்தமிழர் நடுவினிலே தெலுங்குக் கீர்த் தனங்கள்**
> **வடமொழியில் சுலோகங்கள்! ஆங்கில ப்ரசங்கம்**
> **வாய்க்கு வரா இந்துஸ்தான்! ஆபாச நடனம்**
> **அடையும் இவை அனைத்தையும் கழித்துப் பார்த்தால்**
> **அத்திம்பேர் அம்மாமி எனுந்தமிழ்தான் மீதம்.**
>
> —பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 168.

இவ்வாறு பிறமொழியெல்லாம் இங்கு வந்து ஆட்சி செய்ய, தமிழ் மொழி ஒதுக்கப்பட்டும் புறக்கணிக்கப்பட்டும் படுகுழியை நோக்கித் தள்ளப்படுகின்றது. ஆனால் வடமொழிக்கும் பிறமொழிகளுக்கும் உற்றத் துணையாக இருந்து அவற்றை வளர்த்தது தமிழ் மொழி. கடல் சூழ்ந்த இவ்வுலகை எல்லாம் ஆட்சி செய்த மொழி. அத்தகைய பெருமை சான்ற மொழி ஒதுக்கப்படும்போது அம் மொழிக்கு உரிமை படைத்தவர்களான நாம் மறுமொழி கூறாமல் இருப்பது பேடித்தனம் அல்லவா?

தமிழ் எழுத்துடன் வடமொழி எழுத்துகளைச் சேர்த்துத் தமிழ் எழுத்தை அழிக்கின்றார்கள். எழுத்தைக் கொல்வது மொழியைக் கொல்வதே ஆகும்; மொழியைக் கொல்வது என்பது இலக்கியத்தைக் கொல்வதற்குச் சமம், இலக்கியத்தைக் கொல்வது இனத்தைக் கொல்வது

அல்லவா? 'தமிழ், தமிழினம், தமிழ் இலக்கியம் இவற்றுள் ஒன்றுபோம் எனில் மற்றவும் ஒழியும்' எனவே, இம் மூன்றையும் காத்தல் வேண்டும், அதற்குப் பிறமொழியைத் தமிழகத்தில் இருந்து ஓட்டவேண்டும்.

பிறன் கண்ணாலே பார்த்திட முடியுமா?
பிறன் காதாலே கேட்டிட முடியுமா?
பிறன் அறிவாலே உணர்ந்திட முடியுமா?
பிறன் காலாலே நடந்திட முடியுமா?
பிறமொழியாலே பேசலும் எழுதலும்
அறவொளி காணலும் அரிது! பேதமை!
இவைதாம் முடியும் என்றால், எவரும்
தாய்மொழி விட்டுப் பிறமொழி தழுவலாம்.

—பாரதிதாசன் வேங்கையே எழுக, ப. 114.

பிறன் பொருளால் எந்தப் பயனும் பெறமுடியாதபோது பிறன்மொழியால் மட்டும் என்ன பயன் விளைந்துவிடும். அப்படியே சிறிது பயன் விளையுமானால், அம்மொழியால் விளையும் கேடு பயனைவிட அதிகமாக அல்லவா உள்ளது. எனவே,

தெலுங்கு, தமிழ் நாட்டினிலேன்?
செத்த வடமொழிக்கிங்கே
என்ன ஆக்கம்?

—பாரதிதாசன், வேங்கையே எழுக, ப. 115.

எங்கும் எதிலும் தமிழமுதூட்டு
இங்கிலீசை இந்தியை இடமிலா தோட்டு.

—பாரதிதாசன், வேங்கையே எழுக ப. 115.

இவற்றை ஓட்டுவதற்கு நீ தொண்டு செய், இல்லையெனில் உன்மொழி கெட்டுச் சீரழிந்துவிடும்.

தமிழுக்குநீ செய்யும் கேடு—பெற்ற
தாய்க்குச் செய்யும் மானக்கேடு
இமிழ்க்காதே சிந்தனைப் பீடு—நாளும்
செழிக்கட்டும் தமிழ்மறைக்காடு.

—பாரதிதாசன், தமிழுக்கு அமுதென்று பேர், ப. 132.

ஆனால், ஆட்சியாளர்கள் தமிழ் செழிக்க ஏதும் செய்யவில்லை. ஆனால் இந்திமொழி செழிக்கப் பல கோடிகள் செலவழிக்கின்றனர். நாமோ நமது நாட்டில் நம் தாய்மொழிக் கல்வியையே எல்லாருக்கும் அளிக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இந்திமொழியை மட்டும் அனைவரும் கற்க வேண்டுவது கட்டாயமாம் (இந்தி படிக்கவேண்டும் என்று சட்டம் வந்தபோது போடப்பட்டது.) இதை எண்ணிப் பாவேந்தர்,

> **தமிழ்**
> **அன்னைக்குச் சோறில்லை எம்மிடத்தில்—இந்தி**
> **ஆனைக்குத் தீனியும் கட்டாயமாம்**
> **சின்னப் பிள்ளைக்குத் தாய்ப்பாலில்லை—இந்தித்**
> **தீ நஞ்சை ஊட்டுதல் கட்டாயமாம்**
>
> —பாரதிதாசன், வேங்கையே எழுக, ப. 92.

என்று கொதித்தெழுகின்றார். கொதித்தெழுந்து இந்தியைத் தமிழ்நாட்டை விட்டு ஒழிக்கவேண்டும்; இதைத் தொண்டாகக் கருதி ஆற்ற வேண்டும். இத்தொண்டு தான் பகைவரை அஞ்ச வைக்கும், ஓடவைக்கும். மேலும்,

> **பொருள்களைத் தமிழினில் அழைப்பாய்—பிற**
> **பொருந்தாப் பெயர்களை ஒழிப்பாய்**
> **தெருப் பெயரில் தமிழே இழைப்பாய்—அதில்**
> **சீறுவார் மடமையை ஒழிப்பாய்**

என்று தெருப்பெயர்களிலும் தமிழே வேண்டும் என்கின்றார். இதை எதிர்ப்பவர் மடமையை ஒழி, எதிர்த்துப் போரிடு, உனக்கு எதிராக யாரும் வெற்றி பெற்றுவிட முடியாது.

> **தமிழை ஒழிப்பவன் உலகினில் இல்லை**
> **தமிழை எதிர்த்தவன் வாழ்ந்ததும் இல்லை.**
>
> —பாரதிதாசன், வேங்கையே எழுக, ப. 130.

எனவே எதிர்த்துப் போரிடு, தொண்டு செய் என்கின்றார்.

**தமிழ்க்காளைகாள் தமிழ் மாணவர்காள்**
**தமிழின் பகையைக் காணுங்கள்**
**தமிழ்ப் பகைமாய்த்த வீரர்கள் என்ற**
**தன்மானத்தைப் பூணுங்கள்**
—பாரதிதாசன், வேங்கையே எழுக, ப. 142.

என்று மாணவர்களை நோக்கி அறைகூவல் விடுக்கின்றார்; போரில் பகையை மாய்க்காமல் மாய்ந்துவிட்டால் புகழ் நிலைத்து நிற்கும்; எனவே மொழிப் போரையே தொண்டாகக் கருதிச் செய்யுங்கள்.

**தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை**
**தமிழ்த்தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ?**
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 2, ப. 81.

இல்லை. எனவே போராடிப் போராடியே நாம் தமிழை மீட்க வேண்டும் என்கின்றார்

இவ்வாறு பாவேந்தரின் 'தமிழியக்கம்' மக்களுக்கு மொழி உணர்ச்சி ஊட்டி, அதன் மூலம் ஒன்றுபடச் செய்து, 'தமிழ் இயக்கத்தை'க் குடும்பம் தழுவிய இயக்கமாக மாற்றித் தமிழைப் போற்றிப் பகையை அழிப்பதற்கான வழிமுறையை கூறி, வெற்றிக்கனியை எவ்வாறு எய்தவேண்டும் என்பதனையும் படிப்படியாகக் கூறுகின்றது. இவரது தமிழ் இயக்கம். எந்த ஒருபடிநிலையிலும் பிழை என்பது இல்லாமல் ஒரு சிறந்த இயக்கத்திற்கான கொள்கைகள், வரன் முறைகள் யாவும் செம்மையாய் அமையப் பெற்றதாக விளங்குகின்றது.

### பாவேந்தரின் மொழிச்சிந்தனை

**வடமொழிக் குதவி தமிழ்மொழி யன்றோ!**
**மறுமொழி கூறாது இருப்பது நன்றோ?**
**கடல்சூழ் வையம் ஆண்டது தமிழோ!**
**கையேந்தி வந்தவர் பேசிய மொழியோ?**
—பாரதிதாசன், இசையமுது, தொகுதி 2, ப. 30.

எனவே தமிழ் மொழியை, தமிழ்த் தாயை முன்னைப் போலத் தன்னைத் தானே ஆளவகை செய்யவேண்டும். அதற்கு ஓர் உறுதி எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். மதிலை முற்றுகை இட்டிருக்கும் மன்னன், அம்மதிலைக் கடந்து வெற்றி வாகை சூடத்திட்டமிடுகின்றான். மதிலை வெற்றிகொண்டே ஆகவேண்டும். அதற்கு அவர்கள், தாங்கள் சமைத்து உண்ணும் பாத்திரங்களான அகப்பை, தட்டு, உண்கலம் முதலியவற்றை அம்மதிலுக்கு உட்புறத்தில் தூக்கி எறிகின்றனர். அதாவது அடுத்த வேளை உணவு மதிலின் உட்புறத்தில் இருக்கவேண்டும் என்பது அவர்கள் எண்ணம். இத்தகைய காட்சி ஒன்றினைச் சங்கப்பாடல் ஒன்று உணர்த்துகின்றது. அதைப் போலவே தமிழ்ப் பகை அழிக்கத் துடித்துக் கொண்டிருக்கும் மக்கள் ஒவ்வொருவரும் ஆணையிடுதல் வேண்டும் என்று கருதும் பாவேந்தர் அவ்வாணையைக் கூறுகின்றார்:

**தாயின்மேல் ஆணை! தந்தைமேல் ஆணை!**
**தமிழக மேல் ஆணை**
**தூயஎன் தமிழ்மேல் ஆணையிட்டே நான்**
**தோழரே உரைக்கின்றேன்**
**தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனைஎன்**
**தாய்தடுத் தாலும் விடேன்**
**எமை நந்துவாயென எதிரிகள் கோடி**
**இட்டழைத் தாலும் தொடேன்**

—பாரதிதாசன், இசையமுது, தொகுதி 1. ப. 41.

என்று ஆணையிடச் செய்கின்றார். அதுவும் எத்தகைய ஆணை! தாயைப் பழித்தவனை நாம் யார் தடுத்தாலும் விடமாட்டோம். ஆனால் பாவேந்தர் கூறுகின்றார் தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடாதே என்று! அதாவது 'தாயைப் பழித்தவனை யார் தடுத்தாலும் விடாதே. தமிழைத் பழித்தவனைப் தாய்

தடுத்தாலும் விடாதே' என்பது அவர் ஆணையாக இருந்தது எனலாம்.

**பகைவன் யார்**

மொழிப் போருக்கு ஆயத்தமாகிவிட்ட பிறகு யாரை அழிப்பது, எதை அழிப்பது என்று தெரிய வேண்டாமா? நமது பகை எது என்று தெரிந்துகொள்ளாமல் அணிவகுத்து என்ன பயன்? குறிக்கோள் முழுமை பெறா அணிவகுப்பாகி விடுமே. பாவேந்தர் மொழிப் போரின் ஒவ்வோர் அசைவிலும் குறிக்கோளை வேண்டுபவர். எனவே நமது பகை எது என்பதையும் விரிவாக எடுத்துக் கூறுகின்றார்.

முட்டாள்கள் நமது முதற் பகைவர்கள். யார் முட்டாள்? யார் அறிவிலி? கல்வி அறிவு அற்றவனா? உணர்ச்சி அற்றவனா? சிந்தனா சக்தி இல்லாதவனா? இல்லை! இல்லை! இவர்கள் எல்லாம் மொழிப் போரில் முட்டாள்கள் இல்லை. அப்படியானால் யார் முட்டாள்கள்?

> **நகும்படியோர் தமிழறிஞன் தமிழர்க் கின்னல்**
> **நாடுவனேல், அவ்வறிஞன் முட்டாள் ஆவான்**
> **இகழ்மிக்க ஒரு முட்டாள் தமிழர்க் கின்னல்**
> **எண்ணானேல் அம்முட்டாள் அறிஞனாவான்.**
>
> —பாரதிதாசன், குறிஞ்சித்திட்டு, ப. 206.

தமிழ் மீட்புப் போரில் தமிழர்க்கு இன்னல் விளைவிக்கும் அறிஞனும் முட்டாள் ஆகின்றான். தமிழருக்கு இன்னல் எண்ணாத முட்டாளும் அறிஞனாகின்றான். எனவே தமிழருக்கு இன்னல் எண்ணாத ஒருவன் அவன் முட்டாளாக இருந்தாலும் நமது நண்பன். தமிழருக்கு இன்னல் விளைவிக்கும் ஒருவன், அவன் எவ்வளவுதான் அறிவு பெற்றவனாக இருந்தாலும் நமது பகைவனே. ஒருவன் நல்ல தமிழ் அறிவு பெற்றவனாக, தமிழ் இலக்கியத்திலும், இலக்கணத்திலும் நுண்மாண் நுழைபுலம் பெற்று

வனாக இருந்தாலும் அவன் சிந்தனை தமிழுக்கு வஞ்சனை செய்வதாக இருப்பதால் அவனே நமது முதற் பகைவன்; உட்பகை என்று கூடச் சொல்லலாம்.

தொண்டர்களிடம் தமிழ் உணர்ச்சியும், தமிழை மீட்க வேண்டும் என்ற வீர உணர்ச்சியும் இருந்து தலைவனிடம் அவ்வுணர்வுகள் இல்லையென்றால் அவர்களால் எதைத் தான் செய்யமுடியும்? தகுதியில்லா மீகாமனைப் பெற்ற கலமாக அல்லவா அவர்கள் தவிப்பர். எனவே மொழிப் போருக்குத் தலைவர்கள் தகுதி பெற்றவராக இருத்தல் வேண்டும். இத்தகைய தலைவருடன் மொழிப்போர் நடத்தி வெற்றி பெறவேண்டும்.

**...... இளைஞர்களே**
**தென்னாட்டுச் சிங்கங்காள்!**
**எழுக, நம் தாய்**

**மொழிப்போரே வேண்டுவது**
**தொடக்கம் செய்வீர் வெல்வீர்**
**மொழிப்போர் வெல்க.**

—பாரதிதாசன், தமிழியக்கம், ப. 52.

என்று கூறி,

**துயர் செய்ய எண்ணிடும் பகைவர்—திறம்**
**தூள் என்று கொட்டு முரசே**

—பாரதிதாசன், இசையமுது, தொகுதி 1, ப. 57.

என்று வெற்றி முரசு கொட்டி வழியனுப்பி வைக்கின்றார். அடுத்துப் போரில் அவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளைக் கூறுகின்றார்.

எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று மார்தட்டும் பாவேந்தர் தமிழர்கள் பிற மொழிகளைக் கற்கவே கூடாது என்று கூறவில்லை.

**தாய்மொழி நூற்றுக்கு நூறுபெயர்—பெறத்**
**தக்கதோர் கட்டாயம் ஆக்கிவிட்டால்**
**போய்விடும் கல்லாமை! இங்கதன்பின்—பிற**
**புன்மொழிகள் வந்து சேரட்டுமே**

— *பாரதிதாசன்*, வேங்கையே எழுக, ப. 92.

என்கின்றார். அதாவது தமிழ்நாட்டில் உள்ள அனைவருக்கும் தமிழறிவை ஊட்டிய பின்பு பிற மொழிகளைக் கற்பிப்பதால் தவறில்லை. தமிழறிவும், தமிழுணர்வும் அல்லாமல் தமிழர்கள் பிறமொழிகளைக் கற்றால் அவர்களுக்குத் தமிழ் உணர்வு அற்றுப் போகின்றது. எனவே பிற மொழிகளைக் கற்பிக்கும் முன் தமிழ்மொழியை அனைவருக்கும் கற்பித்தல் வேண்டும். இன்று நாட்டில் உள்ள நிலை என்ன? ஆங்கில முறையைத் தழுவி அமைக்கப் பட்டுள்ள சிறுவர் பள்ளிகளில் தமிழுக்கு இருக்கும் இடம் எது? இவர்கள் வளர்ந்த பின்பு எந்த அளவிற்குத் தாய் மொழியைப் பேணுவார்கள்? அவர்களுக்கு ஆங்கிலத்தையோ அல்லது பிறமொழிகளையோ கற்பிக்க வேண்டாம் என்பதல்ல இதன் பொருள். தமிழுக்கு முதன்மை கொடுத்துப் பின் பிறமொழிகளைக் கற்பியுங்கள் என்பதே. ஆங்கில நாட்டில் ஒரு குழந்தை ஆங்கில அறிவு இல்லாமல், ஆங்கிலம் பேசத் தெரியாமல் பிற மொழிகளைக் கற்பதில்லை, கற்பிப்பதுமில்லை. அதைப் போலவே பிற நாட்டிலும். ஆனால், தமிழ்நாட்டில், ஒரு தமிழ்க் குழந்தைக்குத் தமிழ் அறிவை ஊட்டாமல், தமிழில் பேசக் கூடக் கற்றுக் கொடுக்காமல் ஆங்கிலத்தைப் புகுத்துவது ஏன்? இந்நிலை மாற வேண்டும். தமிழுக்கு முதன்மை கொடுத்துப் பிறமொழிகளுக்கு இரண்டாமிடமே கொடுக்க வேண்டும். உலகத்தோடு ஒட்ட ஒழுகுதலும் அதுதான். இதனைத்தான் பாவேந்தர் வலியுறுத்துகின்றார்.

அடுத்து, நாட்டு மக்கள் அனைவருக்கும் தமிழ்மொழி யுடன் பிறமொழியை, ஆங்கிலத்தை மிக ஆழமாகக் கற்றுத்

தரவேண்டுமா? அல்லது ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரிந்தாலே போதுமா? எனக் கேள்விகள் எழுகின்றன. இவற்றுக்கு விடை,

தமிழ்க்கல்வி தமிழ்நாட்டில்
கட்டாயம் என்பதொரு
சட்டம் செய்க!
ஆங்கில நூல் அறிவுக்குச்
சான்றிருந்தால் அது போதும்
அலுவல் பார்க்க!

— பாரதிதாசன், தமிழியக்கம், ப. 20.

என்கின்றார் பாவேந்தர். பிறமொழி அறிவு அலுவல் பார்க்கும் அளவிற்கு இருந்தால் போதும் என்கின்றார். இத்துடன் பாவேந்தரின் மொழிச் சிந்தனை நின்றுவிடவில்லை. அனைத்து மக்களுக்கும் அலுவல் பார்க்கும் அளவில் மட்டுமே, பிறமொழி அறிவு இருத்தல் போதாது ஒரு குறிப்பிட்ட அளவு மக்களுக்குப் பிறமொழியில் ஆழமான மொழி அறிவு வேண்டும். எதற்கு?

வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாம் கண்டு
தெளிவுறுத்தும் படங்களோடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்திடவும் வேண்டும்.

— பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 95.

அதாவது மொழிபெயர்ப்புக்குப் பிறமொழி அறிவு மிகவும் முக்கியம். பிறமொழியில் இருப்பதை எல்லாம் தமிழுக்குக் கொண்டு வந்து சேர்த்தல் வேண்டும். அப்பொழுதுதான் செந்தமிழ் செழுந்தமிழாக மாறும். வெறும் பழம்பெருமைகளை மட்டுமே பேசிக் கொண்டிருக்கக் கூடாது.

எங்கள்தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பல கழித்தோம்; குறைகளைந்தோ மில்லை
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்

— பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 95.

என்று மொழியில் சீர்திருத்தமும், புதுச்செல்வங்களும் கொண்டுவந்து குவித்தல் வேண்டும். அதற்காகத் தான் குறிப்பிட்ட அளவு மக்களுக்குப் பிறமொழி அறிவு ஆழமாக இருக்க வேண்டும். இதற்காகப் பிறமொழிகளை ஆழமாகக் கற்கும் அனைவருக்கும் பாவேந்தர்,

**ஆங்கிலத்தைக் கற்கையிலும்**
**அயல்மொழியைக் கற்கையிலும்**
**எந்த நாளும்**
**தீங்கனியைச் செந்தமிழைத்**
**தென்னாட்டின் பொன்னேட்டை**
**உயிராய்க் கொள்வீர்**

பாரதிதாசன், தமிழியக்கம், ப. 35.

என்ற வேண்டுகோளை விடுக்கின்றார். இவையே பாவேந்தரின் மொழிச் சிந்தனையாக உள்ளன எனலாம்.

**இசையில் தமிழ்**

பன்னெடுங் காலத்திற்கு முன்பே 'இயல்' 'இசை' 'நாடகம்' எனத் தமிழை மூன்றாகப் பிரித்து 'முத்தமிழ்' என்று வழங்கினர் நம் முன்னோர். இவ்வாறு கலையை அடிப்படையாகக் கொண்டு மொழியைப் பிரிப்பது என்பது நம் தமிழ் மொழியில் மட்டுமே உண்டு இவற்றுள், 'இயல்' என்பது பேச்சு; உலகவழக்கு என்பார் தொல்காப்பியனார். 'இசை' என்ற சொல்லுக்கு 'இசைவிப்பது' 'வயப்படுத்துவது', 'ஆட்கொள்வது' என்பது பொருளாகும்.[6] நாடகம் என்பது விறல்பட நடிப்பது. இம்மூன்றும் தொல்காப்பியனார் காலத்திற்கும் முன்பே தனித்தனித் துறைகளாக வளர்ந்து விட்டமையை,

**அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்**
**உளவென மொழிப இசையொடு சிவணிய**
**நரம்பின் மறைய என்மனார் புலவர்[7]**

என வரும் 'நாடக வழக்கிலும் உலகியல் வழக்கிலும்'[8] தொல்காப்பிய நூற்பாக்களால் அறியலாம். மேலும்

கருப்பொருளில் யாழையும் சேர்த்திருப்பது இதனை வலியுறுத்தும்.

சங்க காலத்தில் இசைத்துறை வளமாக வளர்ந்திருந்தது என்பதனைப் பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை போன்ற நூல்களினால் நன்கு அறியலாம். இசையில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்த குடி பாணக்குடி என்று வழங்கப்பட்டது. பாணன், பாடினி போன்ற சொற்கள் இக்குல ஆண் பெண்களை முறையே உணர்த்துவன. மேலும் பரிபாடலில் பல இசைக் குறிப்புகள் கூறப்பட்டுள்ளன.

சங்கம் மருவிய காலத்தும் தமிழ் இசை நன்கு போற்றப் பட்டமையைச் சிலப்பதிகாரத்தால் அறியலாம். 'அரங் கேற்றுக் காதை' இசைத் தமிழுக்கு இலக்கணம் கூறுகின்றது. இவ்விலக்கணத்திற்கு இலக்கியமாக 'கானல்வரி' 'வேட்டுவ வரி' 'குன்றக்குரவை' 'ஆய்ச்சியர் குரவை' போன்றன திகழ்கின்றன.

இடைக்காலத்தில் தமிழிசை தழைத்து வளர்ந்தது. தாழிசை, துறை, விருத்தங்கள் தோன்றலாயின. திருத்தக்க தேவர் சந்தவிருத்தம் பாடித் தமிழிசையை வளர்த்தார். இவரை அடியொற்றிக் கம்பரும், சேக்கிழாரும் தமிழிசைக்கு வலுவூட்டினர். ''இவ்வனைத்திற்கும் மேலாகச் சமய குரவர்கள் அருளிச் செய்த தேவாரத்தில் தமிழிசையின் முழுமலர்ச்சியினைக் காண்கிறோம். நாளும் இன்னிசை யால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தர், தாண்டக வேந்தராம் திருநாவுக்கரசர், தம்பிரான் தோழராம் சுந்தரமூர்த்திகள் ஆகியோர் கழகமொடமர்ந்த கண்ணுதற் கடவுளை இன்னிசையால் பாடிப் பரவினர்''.[9] ஆழ்வார்களும் பாசுரங் களால் தமிழிசையைப் போற்றிக் காத்தனர். இக்காலத்தில் பெருநாரை, பெருங்குருகு, தாளசமுத்திரம், இசை நுணுக்கம், தாளவகை ஓத்து, இசைத்தமிழ்ச் செய்யுட்டுறைக்

கோவை போன்ற இசைத்தமிழ் இலக்கண நூல்களும் தோன்றின.

பிற்காலத்தில் குறிப்பாக நாயக்க மன்னர்கள் காலத்தில் தமிழிசை நாட்டில் செல்வாக்கிழந்து தெலுங்கிசை சிறப்பிடம் பெற்றது. 'கர்நாடக இசை' என்றாலே தெலுங்குப் பாடல்கள்தாம் என்ற மயக்கம் தரும் அளவிற்குத் தெலுங்கிசையும் தெலுங்குக் கீர்த்தனைகளும் தமிழகத்தில் போற்றப்பட்டன. தெலுங்கிசையில் வடமொழி இசையின் தாக்குரவு மிகுதி. இதனால் தமிழிசையிலும் வடமொழி இசையின் தாக்குரவு ஏற்படலாயிற்று. இவ்வாறு "தமிழிசை வடமொழியின் வாய்ப்பாட்டு, ஏழிசைப் பெயர்களான குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்று இருந்தவை மாறி சட்சம் முதல் நிடாதம் வரையுள்ள சமஸ்கிருதப் பெயர்களைப் பெற்று ச, ரி, க, ம, ப, த, நி என்று இன்று வழங்குகின்றன. அதுபோல தமிழ்ப்பண்கள் வடமொழிப் பெயர்களை ஏற்று, செவ்வழி என்பது யதுகுலகாம்போதி என்றும், சாதாரி என்பது காமவர்த்தினி என்றும், புறநீர்மை என்பது பூபாளம் என்றும், இந்தளம் என்பது மாயாமாளவகௌளை என்றும் அழைக்கப்படுகின்றன".[10] இவ்வாறு தமிழிசை மெல்ல மெல்லத் தெலுங்கிசையாக வடமொழி இசையாக மாற்றப்படுவதை உணர்ந்த பாரதியார், "வித்துவான்கள் பழைய கீர்த்தனைகளைப் பாடம் பண்ணிப் புராதன வழிகளைத் தெரிந்து கொள்வது அவசியம். ஆனால் தமிழ்ச்சபைகளிலே எப்பொழுதும் அர்த்தம் தெரியாத பிற பாஷைகளிலே பழம்பாட்டுகளை மீட்டும் பாடுதல் நியாயமில்லை. அதனால் நமது ஜாதி, சங்கீத ஞானத்தை இழந்து போகும்படி நேரிடும்"[11] என்று எச்சரிக்கை செய்தார். இவ்வெச்சரிக்கை தமிழர்களிடையே தமிழிசையைப் போற்ற வேண்டும் என்ற வேட்கையை உருவாக்கியது. அதற்கான வழிகளைத் தேடத் தொடங்கினர். முதன்

முதலில் தமிழிசைக்குப் புத்துயிர் அளிக்க வேண்டித் தொண்டாற்றிய பெருமை இராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களையே சாரும். அரசர் அவர்களால் 1943 ஆம் ஆண்டு 'தமிழிசை இயக்கம்' தொடங்கப் பெற்றது. (அன்றுமுதல் இன்றுவரை தமிழ்ப்பண்களை ஆய்வு செய்து வருகின்றனர்). இக்காலக் கட்டத்தில்தான் பாவேந்தரும் தோன்றித் தமிழிசைக்குப் புத்துயிர் அளிக்க அரும்பாடுபட்டார். பிறமொழி இசைகளை வெறுத்தார். தமிழ்நாட்டில் தமிழிசை மட்டுமே செல்வாக்குப் பெற்ற இசையாக இருக்கவேண்டும் என்று கூறிப் பற்பல இசைப் பாடல்களை இயற்றினார்.

தெலுங்கிசையும் வடமொழி இசையும் தமிழ்நாட்டில் தமிழிசையை மங்கச் செய்யத் தொடங்கின. தமிழிசையைக் கேட்பதே அரிதாகியது. பாவேந்தர் மனம் தமிழிசையைக் கேட்கவேண்டும் என்று ஏங்குகின்றது.

**என்னருமைத் தமிழ்நாட்டை**
**எழிற்றமிழால் நுகரேனோ**
**செவியால் யாண்டும்**
**கன்னல்நிகர் தமிழிசையே**
**கேளேனோ.**

—பாரதிதாசன், தமிழியக்கம், ப. 10

இவ்வேக்கம் நிறைவேறத் தடையாகத் தெலுங்கிசை இருந்தமையை உணர்ந்த பாவேந்தர் தெலுங்கிசை தெலுங்கு நாட்டில் இருக்கட்டும். அவ்விசைக்கு இங்கென்ன வேலை? என்று கேட்கின்றார்.

**தெலுங்கு நாட்டில் தெலுங்கு வேண்டும்**
**செந்தமிழ் நாட்டில் அதற்கென்ன வேலை?**
**தெலுங்கு நாட்டில் செந்தமிழ்ப்பாட்டைச்**
**சேர்ப்ப துண்டோ? இல்லவே இல்லை.**

—பாரதிதாசன், இளைஞர் இலக்கியம், ப. 11

அதனால் தெலுங்கிசையையும் அத்துடன் பின்னிப் பிணைந்துள்ள வடமொழி இசையையும் தமிழ்நாட்டை விட்டு நீக்குதல் வேண்டும் என்கின்றார்.

தமிழிசையின் பெருமைதனை உணராத சிலர், தமிழ் மொழி அமைப்பு இசைக்கு உதவாது என்றும், இசைப் பாடல்கள் தமிழ்மொழியில் கிடையாது என்றும், இசைக்கு மொழி தேவை அற்றது; இசை மொழியைக் கடந்து மனிதன் மனத்தில் ஒன்றுவது என்றும் கூறித் தமிழிசையை மறுத்துத் தெலுங்கிசையைப் போற்றினர். தமிழ் இலக்கிய வரலாற்றை நன்கு உணர்ந்த பாவேந்தர் இக் கொடுஞ் செயல் கண்டு கொதிப்படைகின்றார். கொதிப்படைந்த பாவேந்தரின் உள்ளத்தில் இருந்து,

> **தெலுங்கிசைத்தால் மறுப்பீர்! தமிழே பாடச்**
> **செய்யுங்கள்! அதற்காகத் திரண்டெழுங்கள்**
> **இலங்குதமிழ் மொழியினிலே பாடல் இல்லை**
> **என உரைத்தால் அறையுங்கள்! தமிழமைப்பு**
> **நலமுள்ள இசைக்கு ஒவ்வாது என்பார் வாலை**
> **நறுக்குங்கள்! இசைக்கு மொழி வேண்டாம் என்னும்**
> **விலங்குகளை வளையுங்கள்**
>
> —பாரதிதாசன், தமிழுக்கு அமுதென்று பேர், ப. 67.

என்று போர்க்காலக் கட்டளை பிறக்கின்றது. இதனைப் போராடியே நீக்கவேண்டும் என்கின்றார். "தமிழ்நாட்டில் நம் தமிழ் பல துறைகளிலும் தாழ்மைப்படுத்தப்பட்டிருக்கின்றது. அத்துறைகளில் சிலவற்றையே இதில் எடுத்துக் காட்டி இருக்கின்றேன். மற்றும் சில துறைகள் பின்னர் ஆகட்டும். இதை நான் எழுதியதின் நோக்கம் என்னவெனில், தமிழார்வம் மிக்க இளைஞர்கள் இத்தகைய துறைகளில் தமிழ் முன்னேற்றம் கருதி இயன்றவாறு கிளர்ச்சி செய்யவேண்டும் என்பதுதான்" என்று வெளிப்படையாகக் கூறுவதையும் இங்குச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியது. அவர் இவ்வாறு கூறியதற்குக் காரணம் தமிழும், தமிழிசையும் நாட்டில் ஒதுக்கப்பட்டதே ஆகும்.

பாவேந்தர், தெலுங்கிசை தெலுங்கு நாட்டிற்கு வேண்டும். தமிழ் நாட்டில் தமிழிசையே வேண்டும், தமிழிசைப் பாடல்களே வேண்டும் என்று கூறுவதுடன் நின்றுவிடவில்லை. பற்பல தமிழிசைப் பாடல்களை இயற்றினார். அவற்றுள் மயிலம் ஸ்ரீசுப்பிரமணியர் துதியமுது, கதர்ப்பாட்டு, முல்லைக்காடு, தாழ்த்தப் பட்டோர் சமத்துவப் பாட்டு, தன்மானத் தாலாட்டு, இசையமுது 1, இசையமுது 2, ஏற்றப்பாட்டு, திராவிடர் திருப்பாடல், இந்தி எதிர்ப்புப் பாடல்கள், தேனருவி முதலியன குறிப்பிடத் தக்கனவாகும்.

பாவேந்தர் நல்ல இசைஞானம் உடையவர். சங்க காலப் புலவர்களாகிய கண்ணாகனார், நல்லச்சுதனாரைப் போன்று தாம் எழுதிய பாடல்களுக்கு இராகம், தாளம் வகுத்துள்ளார். இது அன்னாரது இசை அறிவுக்குச் சான்று பகர்ந்து நிற்கின்றது.

பாவேந்தர் நாட்டை, தேசிகம், சஹானா, இந்துஸ்தான், காபி, தேசிக தோடி, ஆனந்தபைரவி, சங்கராபரணம், அடாணா, செஞ்சுருட்டி, உசேனி, சாவேரி (மயிலம் ஸ்ரீசுப்பிரமணிய துதியமுது), ஹார்மோனிய ஸ்வரம், பியாக் (கதர் இராட்டினப்பாட்டு), சங்கராபரண ஜன்யம், கானடா, பிலஹரி, யதுகுலகாம்போதி, காபி, இந்துஸ்தான் தோடி, நீலாம்பரி, (பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 1), திருஞ்சனி, புன்னாகவராளி, தன்யாசி, சாமா, தோடி, சிந்துபைரவி, மோகனம் (குயில் தொகுப்பு) போன்ற இராக வகைகளைக் குறிப்பிட்டுள்ளார்.

பாவேந்தர் குறிப்பிட்டுள்ள தாளங்கள், ரூபகம், ஆதி, அடசாப்பு, ஏகம், சாப்பு, (மயிலம் ஸ்ரீசுப்பிரமணிய துதியமுது), ஒற்றை (ஸ்ரீசுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம் என்னும் இதழில் வெளிவந்த பாடல்கள்) அடதாளம் (முல்லைக்காடு), சதுஷ்ரரூபகம், மிசிரசாபு, மிஸிரஏகம், திஷ்ரம், ஆதிதொடி, (பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 1) சாபு (குயில்தொகுப்பு) போன்றவை.

இறைவனைத் துதிப்பதற்கு மட்டுமே பயன்பட்ட இசையைப் புதுப்புதுத் துறைகளில் புகுத்தி மக்களைச் சென்றடையச் செய்தார். வண்டிக்காரன், மாடுமேய்ப் பவன், கோடாலிக்காரன், பூக்காரி, குறவர், தபால்காரி, சுண்ணம் இடிக்கும் பெண்கள், பாவோடும் பெண்கள், உழத்தி முதலிய பல்வேறு பாடுபொருட்களைக் கொண்டு இசைப்பாடல்களை யாத்திருப்பது அவர் செய்த பெரும் புரட்சிகளில் ஒன்று. இவ்வாறு இசைப்பாடல்களை எழுதிய பாவேந்தர் இப்பாடல்களைப் பாடகர்கள் நாடெங்கும் பாடுதல் வேண்டும் என்ற வேண்டுதலையும் விடுக்கின்றார்.

தமிழ்நாட்டின் பாடகரே
தமிழ்பாடித் தமிழ்மானம்
காப்பீர் நன்றே!

—பாரதிதாசன், தமிழியக்கம், ப. 38.

தமிழ் இசையைப் போற்றவேண்டும், தமிழ்ப்பாடலையே பாடுதல் வேண்டும் என்று ஏங்கும் பாவேந்தர் அதனைக் குழந்தையை நோக்கிப் பெற்றோர் கூறுவதாக அமைந்த பாட்டின் மூலம் வெளிப்படுத்துகின்றார்.

அப்பாடல்,

துன்பம் நேர்கையில் யாழ்எடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா?—எமக்கு
இன்பம் சேர்க்க மாட்டாயா?—நல்
அன்பிலா நெஞ்சில் தமிழில்பாடி—நீ
அல்லல் நீக்க மாட்டாயா?—கண்ணே
அல்லல் நீக்க மாட்டாயா?—மிக
வன்பும் எளிமையும் சூழும் நாட்டிலே
வாழ்வில் உணர்வைச் சேர்க்க—எம்
வாழ்வில் உணர்வைச் சேர்க்க—நீ
அன்றை நற்றமிழ்க் கூத்தின் முறையினால்
ஆடிக் காட்ட மாட்டாயா?—கண்ணே
ஆடிக் காட்ட மாட்டாயா?

—பாரதிதாசன், இசையமுது, தொகுதி 2. ப. 48

பாடலின் மூலம் தமிழ் இசையையும், தமிழ்ப் பாடலையும் போற்றும் பாவேந்தர் அதனால் ஏற்படும் நன்மைகளையும் எடுத்துக் கூறுகின்றார்.

"திராவிட இயக்கக் கவிஞராகப் பாவேந்தர் மாறிய பிறகு, பாடிய இசைப்பாடல்கள் கைம்மைக் கொடுமை, மொழி இன விடுதலை ஆகிய கருத்துகளை உள்ளடக்கமாகக் கொண்டு விளங்குகின்றன. எனவே சமுதாய மாற்றத்தைத் தூண்டும் வலுவான கருவிகளில் இசையும் ஒன்று என்று பாவேந்தர் கருதினார் என்பது இதன்மூலம் பெறப்படும்."[12]

## அடிக்குறிப்புகள்

1. மு. கோவிந்தசாமி, பாரதிதாசன் கவித்திறன், ப. 62.
2. அ. ஆறுமுகம், தமிழியக்கம் ஓர் ஆய்வு, பக் 1.2.
3. புறநானூறு; 46.
4. தமிழ் விடுதூது, ப. 23.
5. சி. சுப்பிரமணியம், தமிழால் முடியும், ப. 83.
6. சி. பாலசுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 322.
7. தொல்காப்பியம், நூன்மரபு (இளம்பூரணர்), நூற். 33.
8. தொல்காப்பியம், அகத்திணையியல், 56.
9. சி. பாலசுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 325.
10. ச. சு. இளங்கோ, பாரதிதாசன் இலக்கியம், பக். 74-75.
11. பாரதியார், பாரதியார் கட்டுரைகள், பக். 129- 130.
12. ச. சு. இளங்கோ, பாரதிதாசன் இலக்கியம், ப. 83.

# சீர்திருத்த இயக்கம்

நம்பிக்கை ஒன்றினால்தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டு வருகின்றது. நம்பிக்கை இல்லை என்றால் நட்பு இல்லை; காதல் இல்லை; அரசு இல்லை; வாழ்வு இல்லை; எதுவுமே இல்லை. 'உயிருக்கு இறுதி வேண்டு மானால் சந்தேகப்படு' என்பது பழமொழி. தமிழர்களுக்கு நம்பிக்கை உணர்வு மிக மிக அதிகம். 'அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்' என்பதற்கிணங்க அதிக நம்பிக்கை மூடநம்பிக்கையில் சென்று முடிந்தது. மூடநம்பிக்கையால் என்ன பயன் விளையும்? ஒன்று மில்லை. தீமை மட்டுமே விளையும். தமிழர்களின் மூடநம்பிக்கையால் விளைந்த தீமை கொஞ்சமல்ல. கல்வி நாட்டை விட்டு விலகியது; பெண்கள் உரிமை இழந்து அடிமையானார்கள்; காதல் மணம் காற்றாய்ப் பறந்தது; குள்ளத்தனமான குழந்தை மணம் குறைவின்றி நடந்தது; மறுமணம் எண்ணிப் பார்க்கவே கூடாத பாவமாகக் கருதப்பட்டது. மக்கள் தங்கள் உரிமைகளை ஆள்வோர் அடிகளில் காணிக்கையாக்கி அடிமையானார்கள். சமுதாயம், இவ்வாறு சீர்கெட்ட நிலையில்தான் பாவேந்தர் தோன்றினார். மக்களின் அவலத்தைப் பார்த்து மனம் நொந்தார். இவற்றையெல்லாம் நாட்டை விட்டு ஓட்டியே ஆகவேண்டும் என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் கருக்கொண்டது. இவ்வெண்ணம் அவரைப் புரட்சிக் கவிஞராக்கியது. அப்புரட்சி உள்ளத்தில் இருந்து,

சாவைத் தொலைத்தேன் — தமிழ்த்
தாய்க்கு வாழ்கின்றேன்
பா ஒன்றினாலே — தமிழ்ப்
பண்பாடு காப்பேன்
—பாரதிதாசன், வேங்கையே எழுக, ப. 17.

என்ற உறுதிமொழி கனலைக் கக்கிக் கொண்டு வெளி வருகின்றது. தமிழர்கள் சீர்ப்படுதல் வேண்டும். அவர்கள் பண்பாடு பழந்தமிழர் பண்பாடாக மறுமலர்ச்சி அடைதல் வேண்டும். அதற்குப் பண்பாட்டுக் கலப்பு ஒழியவேண்டும். மக்கள் கலந்து வாழலாம். ஒருவர் மொழியை மற்றவர் கற்றுப் பேசலாம். மற்றவர் பண்பாட்டை அறிந்து கொள்ளலாம். ஆனால் அப்பண்பாட்டை அப்படியே பின்பற்ற எண்ணினால் அதனால் தீமை அன்றி நன்மை விளையாது. மேலை நாடுகளில் அவரவர் பண்பாட்டை அவரவர் போற்றி ஒழுகுகின்றனர். நாம் நமது பண் பாட்டை மறந்து யார் யாருக்கோ சொந்தமான பண்பாட்டை எல்லாம் போற்றினோம். அதனால் வந்த கேடு நமது மக்கள் இன்னலிலே வீழ்ந்து துடிக்கின்றனர். இவ் இன்னல்பட்டுத் துடிக்கும் மக்களைப் பாவேந்தர் பார்க்கின்றார்.

இன்னலிலே தமிழ்நாட்டினி லேயுள்ள
என்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்
அன்னதோர் காட்சி இரக்கமுண்டாக்கி என்
ஆவியில் வந்து கலந்ததுவே.
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 93.

அத்துயரக் காட்சி அவர் ஆவியில் வந்து கலந்துவிட்டது என்கின்றார். ஆவி போகும் வேளையிலும் இதனை மறக்கமாட்டேன்; மறக்க முடியாது என்பது இதன் பொருள்.

இன்னலில் இருந்து மக்கள் விடுபட வேண்டுமானால் முதலில் மக்கள் சீர்ப்பட வேண்டும், சீர்திருத்தத்தை

ஏற்றுக் கொள்ள வேண்டும். சீர்திருத்தத்தை நல்ல மாற்றத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கும் மக்கள் நாகரிகம் அடையமுடியாது, இன்னலில் இருந்தும் விடுபடமுடியாது. அதற்குப் பாவேந்தர் பற்பல முறைகளில் சீர்திருத்தம் வேண்டும் என்கின்றார். அவர் காட்டும் சீர்திருத்தங்களுள் பொன்மணிகளாய் விளங்குவன பத்து. அவை 1. கல்வி, 2. பெண் கல்வி, 3. பெண் உரிமை, 4. பெண் விடுதலை, 5. ஆண் பெண் நிகர், 6. காதல் மணம், 7. கலப்பு மணம், 8. மறுமணம், 9. குழந்தை மண ஒழிப்பு, 10. பொதுவுடைமை அரசு இப் பத்து வழிகளிலும் சீர்திருத்தம் ஏற்படுமானால் மக்கள் விடுதலை பெறுவர். நாடு முன்னேறும் என்று கருதினார். இவற்றைத் தம் பாடல்களில் மக்களுக்கு விளக்கினார். தாம் எழுதிய கதைப் பாடல்களில் கூட வாய்ப்பு ஏற்படும் இடங்களில் எல்லாம் விளக்கினார்.

ஏற்படும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்பவன் மனிதன். வாய்ப்பினை ஏற்படுத்திக் கொண்டு அதனைப் பயன்படுத்திக் கொள்பவன் அறிஞன் என்று மனிதனுக்கும் அறிஞனுக்கும் வேறுபாடு கூறுவர். புரட்சி அறிவின்பாற் பட்டது அல்லவா? அதனால் புரட்சிக்கவியும் தாம் பாடிய பாடல்களில் சீர்திருத்தக் கருத்துகளைக் கூறுதற்கு வாய்ப்பில்லாத இடங்களில் கூட வாய்ப்பினை ஏற்படுத்திக் கொண்டு அதனைப் பயன்படுத்திக் கொள்கின்றார். குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, வீரத்தாய், சஞ்சீவி பர்வதத்தின் சாரல், புரட்சிக்கவி போன்ற நூல்களில்—பாடல்களில்; எத்தனை எத்தனை சீர்திருத்தக் கருத்துகளைக் கூறுகின்றார். காதற் பாடல்களில் காதல் நினைவுகளில் எத்தனை கருத்துகள் அவரைச் 'சீர்திருத்தக் கவிஞர்' 'புரட்சிக் கவிஞர்' என்பதற்குச் சான்று பகர்ந்து நிற்கின்றன. அன்னாரது சீர்திருத்தக் கருத்துகளை எல்லாம் முன்பு கூறிய பத்துத் தலைப்புகளில் தொகுத்துக் காணலாம்.

## 1. கல்வி

கல்வியே நாகரிகத்தின் அச்சாணி. உலகில் கல்வியறிவு இல்லா மக்களை நாகரிகமடைந்தவர்களாகக் கருதுவதில்லை. அதனால் பண்டைக்காலந் தொட்டே உலகெங்கிலும் மக்கள் கல்வியைப் போற்றி வந்தனர். அவரவர் கண்டறிந்த எழுத்து முறைகளைக் கொண்டு கல்வி கற்று வந்தனர் என்பதனைக் கிரேக்க நாகரிகம், உரோம நாகரிகம், எகிப்திய நாகரிகம், சுமேரிய நாகரிகம், பாபிலோனிய நாகரிகம், சிந்து சமவெளி நாகரிகம், மஞ்சள் நதி நாகரிகம் போன்ற தொன்மை மிக்க நாகரிகங்கள் எடுத்துக் காட்டுகின்றன. தமிழகத்திலும் பண்டைக் காலந் தொட்டே கல்வி போற்றி வளர்க்கப் பட்டது. "வேண்டிய கல்வி யாண்டு மூன்று இறவாது"[1] என்று தொல்காப்பியம் கூறுகின்றது. இதனால் திருமணம் நடந்த பின்பும் மக்கள் கல்வி கற்கச் சென்றனர் என்பது புலனாகின்றது.

> **எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
> **கண்ணென்ப வாழும் உயிர்க்கு[2]**

என்று வள்ளுவர் கல்வியை மக்களின் கண்களாகப் போற்றுகின்றார். அவ்வளவிற்குக் கல்வி போற்றப்பட்டது. ஆனால் இடைக்காலத்தில் வேற்றுப் பண்பாடு தமிழகத்தில் கலக்கத் தொடங்கியது. இதனை மன்னர்களும் ஆதரித்தனர். 'மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி' என்பதற்கு இணங்க மக்களும் ஏற்கத் தலைப்பட்டனர். இதனால் கல்வி பொதுமக்களுக்குக் கிட்டாத கனியாகியது. ஒரு குறிப்பிட்ட வருணத்தாருக்கே கல்வி உடைமையானது, மக்கள் கல்வி இல்லாமல் கண்ணிருந்தும் குருடர்களானார்கள். இதனால் குருட்டு நம்பிக்கைகளைக் கண்களை மூடிக் கொண்டு ஏற்றனர். அந் நம்பிக்கைகள் அவர்களைப் படுகுழியில் தள்ளின. இந்நிலையில் தோன்றிய பாவேந்தர்,

என்னருந் தமிழ்நாட்டின் கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலை ஞானத்தால்
பராக்கிரமத்தால் அன்பால்
உன்னத இமய மலைபோல்
ஓங்கிடும் கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, 197.

என்று ஏக்கம் கொள்கின்றார். கல்வி எல்லாருக்கும் கிட்டுவதாக இருத்தல் வேண்டும், அது மட்டுமல்ல எல்லாக் கல்வியும் எல்லாருக்கும் கிட்டுவதாக இருக்க வேண்டும். அதற்குத் தாய்மொழியின் மூலமே எல்லாக் கல்வியும் பயிற்றுவித்தல் வேண்டும். மக்கள் அனைவருக்கும் தாய்மொழியாகிய தமிழ் கட்டாயம் தெரிந்திருக்கும். அதனால் அவர்கள் எத்துறையை விரும்புகின்றனரோ அதில் விரும்பிக் கற்பர். இன்று எல்லாத் துறைகளையும் தமிழ் மக்கள் அனைவரும் கற்கும் வாய்ப்பு இல்லாமல் உள்ளது. ஆங்கில மொழி அறிவு இருந்தால்தான் சில முக்கியத் துறைகளைக் கற்க முடியும் என்ற நிலை இருக்கின்றது. இந்நிலை மாறினால்தான் — தமிழ்மொழியிலேயே அனைத்துப் பாடங்களையும் கற்பித்தால்தான் எல்லாக் கல்வியும் எல்லாருக்கும் கிட்டும். இதனைத் தமிழ் இயக்கத்தில் விரிவாகக் கண்டோம். இத்தகைய நிலை இங்கு ஏற்படுமானால் என்னென்ன நடைபெறும் என்று பாவேந்தர் நினைத்துப் பார்க்கின்றார். அதற்கு,

இன்பத் தமிழ்க்கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால்
துன்பங்கள் நீங்கும்! சுகம் வரும்! நெஞ்சில்
தூய்மை உண்டாகிவிடும், வீரம் வரும்
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1. ப. 193.

என்று கூறுகின்றார்.

இன்றைய இந்திய நாட்டின் சட்டத்தில் மக்களுக்கென்று சில உரிமைகள் உண்டு. எழுத்துரிமை, பேச்சுரிமை, எத்தொழிலையும் செய்யும் உரிமை, எச்சமயத்தையும் தழுவும் உரிமை போன்றவை அவற்றுள் சில. ஆனால் பாவேந்தர் காலத்தில் (கல்வியின் தேவை குறித்துப் பாடல் எழுதிய காலத்தில்) கல்வி அனைவருக்கும் உரிய ஒன்றாக இல்லை. ஒருசில மக்களுக்கே கல்வி என்பது இருந்தது. அனைவருக்கும் கல்வி கட்டாயம் என்று சட்டம் செய்யாது அனைவருக்கும் வாக்குரிமை என்று சட்டம் இயற்றப் பட்டது; இதனால் நாட்டிற்குத் தீமை அல்லவா வளரும் என்று பாவேந்தர் சிந்திக்கின்றார். சிந்தித்து,

> **கல்வி இருட்டிற்குக் கலங்கரை விளக்கு**
> **யாவருக்கும் வாக்குரிமை இருக்கும் இந்நாட்டில்**
> **யாவர்க்கும் கல்வி இருக்க வேண்டும்**
> —பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 4, ப. 192.

என்று கூறுகின்றார். கல்வி அறிவு இல்லாத மக்கட்கு வாக்குரிமை தருவதால் தீமையே மிகுதி. அவர்கள் கையில் ஆயுதத்தைக் கொடுத்து கண்ணைக் கட்டிவிட்டதைப் போன்று தீமை விளைக்கும். முதலில் அவர்களுக்குக் கல்வி கட்டாயம் என்று ஆக்கிப் பின்பு வாக்குரிமை கொடுத்தல் நன்று.

இந்திய நாட்டில் 100-க்கு 67 பேர் கல்வி அறிவு அற்றவர் களாக உள்ளனர். உலகத்தில் கல்வி அறிவு அற்றவர்களில் கிட்டத்தட்டப் பாதிப் பேர் இந்தியாவில் உள்ளனர் என்று கணக்கெடுத்துக் கூறியுள்ளனர். அனைவருக்கும் கல்வி, கட்டாயக் கல்வி, இலவசக் கல்வி என்று திட்டங்கள் தீட்டியும் இந்த நிலையில் மக்கள் உள்ளனர். இந்நிலை உடனே மாறவேண்டும் என்று விரும்பிய பாவேந்தர், கல்வியின் இன்றியமையாமையைப் பரக்கக் கூறுகின்றார்; புரட்சிக்கனல் தெறிக்கக் கூறுகின்றார். இதனை,

எல்லா நலமும் ஈந்திடும் கல்வி
இல்லா வீட்டை இருண்ட வீடென்க!
படிப்பில்லார் நிறைந்த குடித்தனம், நரம்பின்
துடிப்பில்லார் நிறைந்த சுடுகாடு என்க
அறிவே கல்வியாம்

—பாரதிதாசன், இருண்ட வீடு, ப. 45.

என்னும் அடிகளின் வாயிலாக அறியலாம். 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்பார் வள்ளுவர். இதனை அடியொற்றியே பாவேந்தர் 'எல்லா நலமும் ஈந்திடும் கல்வி' 'அறிவே கல்வியாம்' என்கின்றார். எனவே எக்குறை வந்தாலும் நிற்காது கற்க வேண்டும் என்கின்றார்.

இல்லார்க் கெல்லாம் ஈண்டுக்
கல்வி வந்ததுஎனில் கடைத்தேறிற்று உலகே[9]

—பாரதிதாசன், இருண்ட வீடு, ப. 45.

என்று உலகம் கடைத்தேற வழியும் கூறுகின்றார்; உறுதியாகக் கூறுகின்றார்.

கல்வி இல்லை என்பதே நாட்டில் இல்லாமல் போக வேண்டும் என்பதனை,

இல்லை என்பது கல்வி இல்லாமையே
உடையர் என்பவர் கல்வி உடையரே![10]

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 4, ப. 127.

என்பதன் மூலம் கூறுகின்றார். எல்லோருக்கு கல்வி உண்டானால் நாட்டில் இல்லாமை ஓடிவிடும் என்று முரசே நீ கொட்டிக் கொட்டி மக்களுக்கு அறிவி என்கின்றார்.

இல்லாமை என்னும் பிணி
இல்லாமல் கல்வி நலம்
எல்லோர்க்கும் என்று சொல்லிக்
கொட்டுமுரசே — வாழ்வில்
பொல்லாங்கு தீர்ந்த தென்று
கொட்டு முரசே[11]

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 2, ப. 136.

என்று கல்வியின் இன்றியமையாமையை எடுத்துக்கூறிச் சமுதாயம் சீர்திருந்த வேண்டுமானால் முதலில் மக்கள் கல்வி அறிவு பெற வேண்டும் என்கின்றார்.

## 2. பெண் கல்வி

பெண்கள் விழிப்புணர்ச்சி அடைந்து உரிமை பெற்று விடுதலை ஆகவேண்டுமானால் அவர்களுக்கு முதலில் கல்வி புகட்ட வேண்டும். கல்வி இல்லாப் பெண்களால் எப்பயனும் இல்லை. பயன் இல்லாதது மட்டுமல்ல அவர்களால் தீமையே ஏற்படும்.

> **படியாத பெண்ணினால் தீமை — என்ன**
> **பயன் விளைப்பாள் அந்த ஊமை?**[14]
> —பாரதிதாசன், இசையமுது, தொகுதி 1, ப. 47.

என்று கேட்கின்றார் பாவேந்தர்.

சங்க காலத்தில் பெண்கள் கல்வி கற்று வந்தனர் என்பதனைச் சங்கப் புலவர்கள் பெயர்களில் பெண்பாற் பெயர்கள் இருப்பதிலிருந்து அறிகின்றோம். ஔவையார், ஆதிமந்தியார், வெள்ளிவீதியார், உலோச்சனார், காக்கை பாடினியார், நச்செள்ளையார் போன்றவர்கள் சிறந்த பெண்பாற் புலவர்களாக விளங்கினர். சங்க காலத்திற்குப் பிறகு வேற்றுச் சமயம், வேற்று நாகரிகம், வேற்றுப் பண்பாடு போன்றவை தமிழகத்தில் பரவியதால் பன்னெடுங் காலமாகப் போற்றி வளர்க்கப்பட்ட பெண்கல்விக்குத் தடை ஏற்பட்டது. கல்வி போனதால் பெண்கள் கண்ணிழந்தவர்களானார்கள். மிக எளிமையாக, அடக்கி யாளும் ஆண் இனத்திற்கு அடிமையானார்கள். சமையற் கட்டிலும் பள்ளி அறையிலுமே அவர்கள் வாழ்க்கை முடிவுற்றது. இதற்குக் காரணம் ஆண் இனத்தின் அடக்கி ஆளும் எண்ணமே என்று பாவேந்தர் கருதினார்.

புவிக்கொன்று உரைப்பேன் புருஷர் கூட்டம்
பெண்களை ஆதிப்பெருநாள் தொடங்கி
திருந்தா வகையிற் செலுத்தலால்
சுருங்கிய உள்ளம் விரிந்த பாடில்லை.
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 54.

பெண்களின் உள்ளம் விரிவடைந்து அவர்கள் நன்மதிப்புப் பெற வேண்டுமானால் அவர்களுக்குக் கல்வி அறிவு மிகமிக இன்றியமையாதது. கல்வி, பெண்களுக்குக் கிடைக்க அவர்களின் பெற்றோர்கள் வழிவகை செய்ய வேண்டும். பெண்பிள்ளை தானே படிக்க வேண்டாம் என்று எண்ணுதலோ அல்லது அதிகம் படிக்க வேண்டாம் என்று கருதுதலோ கூடாது. அவ்வெண்ணத்தை விட்டொழித்தல் வேண்டும். பெண்கள் திருமணம் ஆகும்வரை பெற்றோர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாகவே உள்ளனர். 'இளமையில் கல்' என்பது பழமொழி. எனவே பெண்கள் கற்க அவர்களின் பெற்றோர்கள் பெருமுயற்சி எடுத்தல் வேண்டும் என்று பெண்கல்விக்கு ஆணிவேராக இருக்கும் பெற்றோரிடம் முறையிடுகின்றார் பாவேந்தர்.

பெற்றநல் தந்தைதாய் மாரே — நும்
பெண்களைக் கற்க வைப்பீரே
இற்றைநாள் பெண்கல்வி யாலே — முன்
முன்னேற வேண்டும் வைய மேலே
—பாரதிதாசன், இசையமுது, தொகுதி. 1. ப. 47.

என்று முறையிடுகின்றார் பாவேந்தர்.

மூடநம்பிக்கைகள் நாட்டில் மலிந்து இருப்பதற்குக் காரணம், பெண்களுக்குக் கல்வி இல்லாமையே! நம் நாட்டில் கல்வி அறிவு இல்லாதவர்களில் எழுபது விழுக்காட்டினர் பெண்களே! அதனால்தான் மூடநம்பிக்கைகளைப் பெண்களே போற்றி ஒழுகுகின்றனர். மூடநம்பிக்கைகள் நாட்டிலிருந்து விலக வேண்டுமானால் அதற்குப் பெண்கள் கல்வி கற்றல் வேண்டும். உயர்தரக் கல்வி கற்க வேண்டும்.

கலையினில் வளர்ந்தும், நாட்டுக்
கவிதையில் ஒளி மிகுந்தும்
நிலவிடும் நிலா முகத்து
நீலப்பூ விழி மங்கையர்
தலையாய கலைகள் ஆய்ந்து
தம்வீடு போதல் கண்டேன்
உலவிடு மடமைப் பேயின்
உடம்பின்தோல் உரிதல் கண்டேன்

—பாரதிதாசன், அழகின் சிரிப்பு, ப. 63.

பெண்கள் கல்வி கற்கத் தொடங்கினால் மடமைப்பேயின் தோல் உரியத் தொடங்கிவிடும் என்று பாவேந்தர் கூறுகின்றார்.

சிலர் 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?' என்று எண்ணுகின்றனர். பெண்கள் அடுப்பூதும் வேலையை மட்டும் செய்வார்களானால் அவர்களுக்குப் படிப்பு வேண்டாம். ஆனால் அவர்கள் அதனை மட்டும் செய்வதில்லை குடும்பத்தின் பொறுப்பேற்று அதனைக் காக்கின்றனர். குழந்தைகளைப் பேணிப் பாதுகாக்கின்றனர். இல்லறத்தில் காக்கும் பணிகளை எல்லாம் பெண்களே செய்கின்றனர். அவர்களுக்குக் கல்வி அறிவு இல்லை என்றால் அவற்றைச் செம்மையாகச் செய்ய முடியுமா? பெண்கல்வி எதற்காக வேண்டும் என்பதற்குப் பாவேந்தர்,

பெண்கட்குக் கல்வி வேண்டும்
குடித்தனம் பேணுதற்கே
பெண்கட்குக் கல்வி வேண்டும்
மக்களைப் பேணுதற்கே
பெண்கட்குக் கல்வி வேண்டும்
உலகினைப் பேணுதற்கே
பெண்கட்குக் கல்வி வேண்டும்
கல்வியைப் பேணுதற்கே!

—பாரதிதாசன், குடும்பவிளக்கு, பகுதி2, ப. 22.

என்று பட்டியல் போட்டு விடை கூறுகின்றார். இதில் கல்வியைப் பேணுதற்குப் பெண்கல்வி வேண்டும் என்று அவர் கூறுவது புரட்சிக்கருத்து. சமுதாயத்தைக் கூர்ந்து நோக்கிக் கூறிய கருத்தாகும். ஒரு பொருளை முக்கியமாகப் பாதுகாக்கவேண்டும் என்றால் அதனைப் பெரும்பாலும் மனைவியிடம் கொடுத்து வைப்பர். அவளே அதனைப் பாதுகாத்து வருவாள். எதனையும் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு பெண்களுக்கு அதிகம். கல்வியை நாட்டில் பாதுகாக்க வேண்டுமானால் அதனைப் பெண்களிடம் கொடுங்கள் அவர்கள் செம்மையாகப் பாதுகாப்பர் என்கின்றார். எனவே கல்வி காக்கப்பட வேண்டுமானால் அதற்குப் பெண்கல்வி மிக இன்றியமையாதது என்பது தெரிகின்றது.

பெண்களுக்கு எது அழகு? என்ற கேள்விக்கு ஒரு பழம்பாடல் விடையிறுக்கின்றது.

> **குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
> **மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து**
> **நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்**
> **கல்வி அழகே அழகு.[3]**

புற அழகைவிட அக அழகே உயர்ந்தது. இவ்வக அழகு மெருகு பெற்று ஒளிரக் கல்வி இன்றியமையாதது. கல்வி இல்லாத பெண்களைக் களர் நிலத்துடன் ஒப்பிடுகின்றார் பாவேந்தர்.

> **கல்வியில் லாத பெண்கள்**
> **களர்நிலம்! அந்நிலத்தில்**
> **புல்விளைந் திடலாம்; நல்ல**
> **புதல்வர்கள் விளைவதில்லை!**
> —பாரதிதாசன், குடும்பவிளக்கு, பகுதி 2, ப. 22.

என்கின்றார். புதல்வர்களை வளர்க்கும் பெண்களுக்குக் கல்வி அறிவு இல்லை என்றால் அவர்களால் வளர்க்கப்

பெறும் குழந்தைகள் அறிவுக் குறைபாடு உடையவர்களாக இருப்பர். கல்வி அறிவு உடைய பெண்கள் மேற்கூறிய பெண்களுக்கு எதிரானவர்கள்.

**கல்வியை உடைய பெண்கள்**
**திருந்திய கழனி, அங்கே**
**நல்லறிவு உடைய மக்கள்**
**விளைவது நவிலவோ நான்?**

—பாரதிதாசன், குடும்பவிளக்கு, பகுதி 2, ப. 22.

என்கின்றார் பாவேந்தர். கல்வி அறிவு உடைய பெண்களால் உருவாக்கப் பெறும் குழந்தைகள் நல்லறிவு உடைய அறிஞர்களாக விளங்குவது உறுதி. இதில் ஐயம் வேண்டாம் என்கின்றார். எனவே ஆண்கள் அறிஞர்களாக விளங்கப் பெண்களுக்குக் கல்வி அறிவு இருத்தல் வேண்டும். நம் நாட்டவரால் மேலை நாட்டவரோடு அறிவியலில் போட்டி போட முடியவில்லை. அதற்குக் காரணம் அந்நாடுகளில் பெண்கள் சிறந்த கல்வி அறிவு பெற்றுத் திகழ்கின்றனர். இங்குப் பெண்கல்வி என்பது இல்லை. அதனால் சிறந்த அறிஞர்கள் அங்கு உருவாகின்றனர். அங்குள்ள பெண்களால் சிறந்த முறையில் அறிவு ஊட்டப் பெற்றுக் குழந்தைப் பருவத்திலேயே நுண்மாண் நுழைபுலம் பெற்றவர்களாக விளங்குகின்றனர். ஆனால் இங்கு அதற்கு எதிர்மறையாக அல்லவா உள்ளது. கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம். அங்குப் புல் விளைந்திடலாம், ஆனால் நல்ல புதல்வர்கள் விளைவதில்லை என்று பாவேந்தர் கூறுவது முழுக்க முழுக்க இன்றளவும் உண்மையாக அல்லவா தோன்றுகின்றது. நாம் அறிவியலில் மேலைநாட்டுடன் போட்டியிட்டு வளரவேண்டுமானால் நம் நாட்டுப் பெண்கள் கல்வி அறிவு பெற்றுத் திகழ வேண்டும் என்று பாவேந்தர் கருதினார் போலும். இவ் வெண்ணத்திலேயே இப்பாடல் உருவாகி இருக்க வேண்டும். கல்வி கற்கும் பெண்களைப் போற்றுதல் வேண்டும். கல்வி கற்கும் பெண்கள் அடங்காப் பெண்களாக

இருப்பர் என்றும், கணவனை மதித்தொழுகாப் பெண்களாக இருப்பர் என்றும் எண்ணுதல் கூடாது. பெண்கல்வியை மறுப்பவரே இத்தகைய எண்ணங்களை மக்கள் உள்ளத்தில் ஏற்படுத்துவர். இதனை ஏற்காது கல்வி கற்கும் பெண்களைப் போற்றுதல் வேண்டும் என்று வற்புறுத்துகின்றார் பாவேந்தர்.

கற்ற பெண்களை இந்த நாடு—தன்
கண்ணில் ஒற்றிக் கொள்ளும் அன்போடு.

—பாரதிதாசன், இசையமுது, தொகுதி 2,ப. 48.

எனவே பெற்றோர்கள் பெண்களைக் கல்வி கற்கச் செய்தல் வேண்டும். தம் புதல்வி கல்வி கற்க வேண்டும், இலக்கண இலக்கியங்களிலும் தேர்ச்சி பெறுதல் வேண்டும், அவள் படித்ததை எல்லாம் தமக்குத் தக்க நேரத்தில் எடுத்துக் கூற வேண்டும் என்று ஏங்கும் பெற்றோரின் உள்ளத்தைப் பாடலில் வடிக்கின்றார்.

அறமிதென்றும் மறமிதென்றுமே
அறிகிலாத போது—யாம்
அறிகிலாத போது—தமிழ்
இறைவனாரின் திருக்குறளிலே ஒருசொல்
இயம்பிக் காட்ட மாட்டாயா?—நீ
இயம்பிக் காட்ட மாட்டாயா?
புறமிதென்றும் நல் அகமிதென்றுமே
புலவர் கண்ட நூலின்—தமிழ்ப்
புலவர் கண்ட நூலின்—நல்
திறமை காட்டி உனை ஈன்ற எம் உயிர்ச்
செல்வமாக மாட்டாயா?—தமிழ்ச்
செல்வமாக மாட்டாயா?

—பாரதிதாசன், இசையமுது, தொகுதி 2, ப. 48.

இத்தகைய ஏக்கம் பெற்றோரின் உள்ளங்களில் ஏற்படுதல் வேண்டும். அப்பொழுதுதான் பெண்களைப் பள்ளிக்கும் கல்லூரிக்கும் அனுப்பும் உறுதி ஏற்படும். பெண் கல்வியைப்

போற்றிப் பாவேந்தர் எழுதிய பாடல்கள் மிகப்பல. அவற்றுள் மணிமகுடமாகத் திகழ்வது கீழ்வரும் பாடல்:

தலைவாரிப் பூச்சூடி உன்னைப் — பாட
சாலைக்குப்போவென்று சொன்னாள் உன் அன்னை!
சிலைபோல ஏன் அங்கு நின்றாய்? — நீ
சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்?
விலைபோட்டு வாங்கவா முடியும்? — கல்வி
வேளைதோறும் கற்றுவருவதால் படியும்!
மலைவாழை அல்லவோ கல்வி? — நீ
வாயார உண்ணுவாய் போஎன் புதல்வி.
படியாத பெண்ணாய் இருந்தால் — கேலி
பண்ணுவார் என்னை இவ்வூரார் தெரிந்தால்!
கடிகாரம் ஓடும்முன் ஓடு! — என்
கண்ணல்ல? அண்டைவீட்டுப் பெண்களோடு!
கடிதாய் இருக்கும் இப்போது! கல்வி
கற்றிடக் கற்றிடத் தெரியும் அப்போது!
கடல்சூழ்ந்த இத்தமிழ்நாடு — பெண்
கல்வி பெண்கல்வி என்கிறது அன்போடு.

—பாரதிதாசன், இசையமுது தொகுதி 2, ப. 58.

## 3. பெண்ணுரிமை

"உன் உரிமையை நீ பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால் மற்றவர் உரிமையைப் போற்றக் கற்றுக் கொள்" என்பர் அறிஞர் அதற்கிணங்க ஆண் இனம் தன் உரிமையைப் பாதுகாக்க வேண்டுமானால் பெண்ணுரிமையைப் போற்றுதல் வேண்டும். மேலை நாடுகளில் பெண்கள் முழு உரிமை பெற்றுத் திகழ்கின்றனர். ஆனால் தமிழகத்தில் மட்டும் பெண்களுக்கு எந்த உரிமையும் இல்லை. இதனைக் கண்டு சீறி எழுந்த புரட்சிக்கவி பாவேந்தர் பெண்களுக்கு உரிமை வேண்டும் உரிமை வேண்டும் என்று முரசு கொட்டி ஆர்ப்பரிக்கின்றார். பெண்களுக்குப் பேச்சுரிமை வேண்டும்; காதலிக்க உரிமை

வேண்டும்; இல்லறத்தில் உரிமை வேண்டும்; நாட்டைக் காப்பதில் உரிமை வேண்டும் என்று ஒவ்வொரு கூறிலும் பெண்களுக்கு உரிமை வேண்டும் என்கின்றார்.

பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம் என்கின்றீரோ?
மண்ணுக்கும் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை
.......................................... ..........................
ஊமை என்று பெண்ணை உரைக்கும் மட்டும்
உள்ளடங்கும்
ஆமை நிலைமைதான் ஆடவர்க்கும் உண்டு

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 3.

என்று கொதித்தெழுகின்றார்.

மேலும் பெண்களுக்கு எத்தகைய உரிமையும் கொடுக்காமல் அவர்களை அடிமைகளாக ஆக்கி வைத்திருக்கும் நிலையையும் தூற்றுகின்றனர் என்பதனை,

சித்ரநிகர் பெண்டிர்களைச் சீரழிக்கும் பாரதநற்
புத்ரர்களைப் பற்றியன்றோ பூலோகம் தூற்றுவது?

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 3.

என்பதன் மூலம் இடித்துரைக்கின்றார். பிறர் தூற்றும் செயலை நாம் செய்து அவர்களின் கேளிக்கைக்குரிய பொருளாக அல்லவா ஆகிவிட்டோம். இந்நிலை தீர்தல் வேண்டும். அதற்குப் பெண்களுக்கு முதலில் பேச்சுரிமை வேண்டும் என்கின்றார்.

தான் விரும்பும் ஆண்மகனைக் காதலிக்கும் உரிமை பெண்மகளுக்கு இருத்தல் வேண்டும். இவ்வுரிமை பண்டைக்காலத்தில் பெண்களுக்கு முழுமையாக இருந்தமையை 'இயற்கைப் புணர்ச்சி' என்பது வெள்ளிடை மலையென உணர்த்துகின்றது. பிற்காலத்தில் அவ்வுரிமை பறிக்கப்பட்டது. ஏன் பறிக்கப்பட்டது? புரட்சிக்கவிஞர் உள்ளத்தில் இருந்து அக்கினிப் பிழம்பெனப் பீறிட்டெழு கின்றது.

காதல் உணர்வோ உயிரின் இயற்கை
மாதர் மட்டும் சூளைக் கல்லோ?

—பாரதிதாசன் காதற் பாடல்கள், ப. 161.

காதல் உணர்வு என்பது மனிதர்கட்கு மட்டுமல்லாது உலகத்தில் உள்ள எல்லா உயிர்கட்கும் இயற்கையானது.

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும்[4]

என்பார் தொல்காப்பியனாரும். இந்நிலையில் பெண்கள், காதல் செய்தல் கூடாது என்பது இயற்கையோடு இயைந்த நெறியாகாது. எனவே பெண்களுக்குப் பேச்சுரிமையுடன் காதல் உரிமையும் வேண்டும் என்கின்றார்.

வீட்டில் பெண்கள் நிலை என்ன? வீட்டிற்குள் பெண் களுக்கு எவ்வளவு கட்டுப்பாடு? இலாயத்தில் குதிரை களைக் கட்டிப் போடுவதைப் போல் அல்லவா பெண்களை வீட்டில் அடைத்து வைத்திருக்கின்றோம். இதைக்கண்டு பதைப்பதைப் பாவேந்தர்,

தனித்துக் கிடந்திடும் லாயம் — அதில்
தள்ளி அடைக்கப்படும் குதிரைக்கும்
கனைத்திட உத்தரவு உண்டு — வீட்டில்
காரிகை நாணவும் அஞ்சவும் வேண்டும்

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 112.

என்று கூறுகின்றார். பெண்கள் அடிமையானதற்குக் காரணங்கள் இரண்டு. ஒன்று கல்வி இல்லாமை. மற்றது அச்சமும் நாணமும் மிகையாக இருப்பது. இதனை உணர்ந்த பாவேந்தர் முதலில் கல்வி வேண்டும் என்றார். பின்பு,

அச்சமும் நாணமும் இல்லாப் பெண்கள்
இந்த நாட்டின் இரு கண்கள்

என்று கூறி, தேவையற்ற அச்சத்தையும் நாணத்தையும் பெண்கள் நீக்குதல் வேண்டும் என்கின்றார். பெண்களுக்கு

நாணம் தேவைப்படும் இடத்தையும் கூறுகின்றார். அதனைப் பின்பு காண்போம். இவ்வாறு பெண்கள் வீட்டில் உரிமை பெற்றுத் திகழ வேண்டும் என்கின்றார். நாட்டைக் காக்கும் பணியிலும் பெண்களுக்கு உரிமை வேண்டும் என்கின்றார்.

**தமிழ் காத்து நாட்டினைக் காப்பாய் — பெண்ணே**
**தமிழரின் மேன்மையைக் காப்பாய்**
**தமிழகம் நமதென்று ஆர்ப்பாய்**
**தடையினைக் காலினால் தேய்ப்பாய்**

—பாரதிதாசன் இசையமுது, தொகுதி 1, ப. 53.

என்பதன் மூலம் நாட்டைக் காக்கும் உரிமை பெண்களுக்கு வேண்டும் என்பதனை உணர்த்துகின்றார். பேச்சுரிமை, காதல் செய்ய உரிமை, வீட்டில் உரிமை, நாட்டைக் காப்பதில் உரிமை என்று ஒவ்வொரு நிலையிலும் பெண்களுக்கு உரிமை வேண்டும் என்கின்றார்.

### 4. பெண் விடுதலை

பெண் கல்வி, பெண் உரிமை இரண்டும் பெண் விடுதலையை மையமிட்டதாக இருத்தல் வேண்டும். பெண் விடுதலை பெறா நாடு மண் விடுதலையும் பெறுதல் இயலாது.

**பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு**
**மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே**

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 3.

என்கின்றார் பாவேந்தர் ‘பெண் விடுதலை பெறாத வரையில் நாடு விடுதலை பெற முடியாது’ என்கின்றார் காந்தி அடிகள்.

பெண்களை அடிமைகளைப் போல் நடத்துதலைப் பாவேந்தர் கண்டிக்கின்றார். திருமணம் ஆகும் நிலையில் உள்ள பெண்களுக்கு இந்தச் சமூகம் செய்யும் கொடுமை எவ்வளவு? திருமணத்திற்கு அவள் மன விருப்பத்தை

யாரும் கேட்பதில்லை, திருமணத்திற்கு முன்பு அவளின் எதிர்கால மணவாளனை அவளுக்குக் காட்டுவதில்லை. இதனைக் கண்டு மனம் பொறாத பாவேந்தர் திருமணம் ஆகாத பெண்ணை நோக்கிக் கூறுகின்றார்.

கல்யாணம் ஆகாத பெண்ணே! உன்
கதிதன்னை நீ நிச்சயம் செய்க கண்ணே!
வல்லமை பேசியுன் வீட்டில் — பெண்
வாங்கவே வந்திடுவார்கள் சிலபேர்கள்
நல்லவிலை பேசுவார் — உன்னை
நாளும் நலிந்து சுமந்த பெற்றோர்கள்
கல்லென உனைமதிப்பார் — கண்ணில்
கல்யாண மாப்பிள்ளை தன்னையுங் காட்டார்:
வல்லி உனக்கொரு நீதி — இந்த
வஞ்சகத் தரகருக்கு நீ அஞ்ச வேண்டாம்.
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 116.

அஞ்சாது செய்யத் தக்கதொன்று உண்டு. அது,

கனத்த உன் பெற்றோரைக் கேளே! — அவர்
கல்லொத்த நெஞ்சையுன் கண்ணீரினாலே
நனைத்திடுவாய்; அதன் மேலும் — அவர்
ஞாயம் தராவிடில் விடுதலை மேற்கொள்
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 117.

என்கின்றார்; அடிமை செய்யும் பெற்றோரிடம் இருந்து விடுதலை பெறு என்று கூறுகின்றார். உன்னுடைய உரிமை எங்கெங்குப் பாதிக்கப்படுகின்றதோ அங்கெல்லாம் உரிமைக்காகப் போராடி விடுதலை பெறு. பெற்ற விடுதலையை நன்முறையில் பயன்படுத்திக் கொள் என்று மேலும் கூறுகின்றார். "ஒன்று சிறிதும் நாகரிகமின்றிச் சில இடங்களில் பெண்கள் இருளில் மூழ்கிக் கிடப்பது; மற்றொன்று, 'பழுத்த நாகரிகம்' என்னும் பேய்க்குச் சில இடங்களில் பெண்கள் இரையாகி வாழ்வைக் குலைத்துக் கொள்வது. இருசாராரும் ஒழுங்குபட்டுப்

பெண்மை உடையவராய் உலகிற்குப் பயன்படுதல் வேண்டும்"[5] என்று திரு. வி. க. கூறுவதை இங்கு சிந்தித்தல் நலம். இதனை நன்கு சிந்தித்திருக்கின்றார் பாவேந்தர்.

அத்தகைய நிலைக்குப் பெண்கள் விடுதலை என்ற பெயரால் சீரழிவதைப் பாவேந்தர் விரும்பவில்லை. அதனால் பெண்ணை நோக்கிக் கூறுகின்றார்.

**முத்து வரும் என்று — நீ**
**முறை தவற வேண்டாம்**
**கனியத் தமிழ் பாடு — பெண்ணே**
**கச்சேரி செய்யாதே**
**சினிமாவிற் சேர்ந்து — நீ**
**தீமை அடையாதே!**
**தனித்து வரும் போது — கெட்ட**
**தறுதலை கண் வைத்தால்**
**இனிக்க நலம் கூறு — பெண்ணே**
**இல்லாவிடில் தாக்கு**

—பாரதிதாசன், குடும்ப விளக்கு, பகுதி 3, ப. 13.

என்கின்றார். இல்லையென்றால் உன் பெண்மை பறி போகும். பெண்மையே பெண்களுக்கு ஆபரணம். அது இல்லாதபோது அவள் அழகாக இருப்பது எப்படி? மற்ற நகைகளால் உண்மையான அழகைப் பெற முடியுமா? எனவே பெண்மையைப் போற்றி வாழ் என்கின்றார்.

முன்பு அச்சமும் நாணமும் இல்லாப் பெண்கள் நாட்டின் இரு கண்கள் என்றார். அது தேவையற்ற அச்சத்தையும் தேவையற்ற நாணத்தையும் குறித்தது. ஆனால் இங்கு 'கற்பை' இழப்பதில் அஞ்சவேண்டும் என்றும், அஞ்சவேண்டிய இடமும் கூறினார். மேலும் நாணம் இருக்க வேண்டிய இடங்களைக் கூறுகின்றார்.

குடும்ப விளக்கில், வேடப்பனும் நகைமுத்தும் காதலர்கள். அவர்களின் உரையாடல் மூலம் பெண்கள் நாணப்படும் இடத்தை முதலில் கூறுகின்றார்.

**நகைமுத்தை விரும்புகின்றேன்**
**நாளைக்கே மணக்க வேண்டும்**
**வகை செய்க அப்பா என்று**
**வாய்விட்டு நானா சொல்வேன்?**
**நிகரற்றாய் உன் பெற்றோர் பால்**
**நீ சொன்னால் என்ன! என்றான்**
**மகளுக்கு நாண மில்லை**
**என்பார்கள், மாட்டேன் என்றாள்.**

—பாரதிதாசன், குடும்ப விளக்கு, பகுதி 3; ப 13.

தமது காதலைத் தாமே பெற்றோரிடம் கூறுதற்குப் பெண்கள் நாணப்படுதல் வேண்டும்.

**கிழவன் தன்னொடுங் கிழத்தி தன்னொடும்**
**நற்றாய் கூறல் முற்றத் தோன்றாது**

என்று தொல்காப்பியனார் கூறுகின்றார். அக வாழ்க்கையில் காதலைப் பற்றித் தலைமகனுடனும் தலைமகளுடனும் நற்றாய் கூறாள் என்றால் இவர்களும் அவர்களிடத்துக் கூறுதல் இல்லை என்பது பெறப்படுகின்றது அல்லவா? தொல்காப்பியனார் கூறும் இப்பண்பாட்டைப் பாவேந்தர் குடும்ப விளக்கில் போற்றுகின்றார். அதனால் அன்றோ பெருமாள் தாத்தா வாயிலாக அவர்களின் காதலைப் பெற்றோரிடம் தெரியப்படுத்துவதாகக் காட்சி அமைக்கின்றார்.

பெண்கள் கருவுற்றிருப்பதைத் தங்கள் கணவர்க்கு உணர்த்த மிகவும் நாணப்படுவர். இது தமிழ்ப் பெண்களிடம் தொன்றுதொட்டு இன்றளவும் பயின்று வரும் பண்பாடாகும். இப்பண்பாட்டைக் குலைத்தால் அக வாழ்வில் இன்பம் முழுமையாகக் கிட்டாது. இத்தமிழ்ப்

பண்பாட்டை விளக்கும் ஒரு காட்சியினைக் குடும்ப விளக்கிலேயே காட்டுகின்றார் பாவேந்தர்.

நகைமுத்து சூல் உற்றுள்ளாள். இதனைத் தன் மணவாளனாகிய வேடப்பனுக்கு உணர்த்த வேண்டிய நிலை. தொன்றுதொட்டு வந்த நாணம் தடுக்கின்றது. எனினும் உணர்த்தியே ஆகவேண்டிய நிலை. அந்நிலையில் அவள்,

> **தன் மூன்று விரல்கள் காட்டி**
> **முகநாணிக் கீழ்க் கண்ணாலே**
> **முன் நின்றான் முகத்தைப் பார்த்து**
> —பாரதிதாசன், குடும்ப விளக்கு, பகுதி 4, ப. 15.

நிற்கின்றாள். எனவே புறவாழ்வில் தேவையற்ற அச்சமும் நாணமும் வேண்டாம் என்று கூறியவர், அகவாழ்வில் தமிழர்களின் பண்பாட்டில் கட்டாயம் நாணமும் அச்சமும் வேண்டும் என்கின்றார்.

## 5. ஆண் பெண் நிகர்

> **ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக**
> **வாழ்வம் இந்த நாட்டிலே[6]**

என்றார் பாரதியார். அவர் அடியொற்றிச் சென்ற புரட்சிக்கவி பாரதிதாசனும் இதனை ஒவ்வொரு நிலையிலும் உயிரெனப் போற்றுகின்றார்.

கற்பை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவில் வைப்போம் என்றார் பாரதியார். பாவேந்தர் ஒரு படி மேலே சென்று இடித்துக் கூறுகின்றார். ஆண்கள் பெண்களிடம் கற்பை எதிர்பார்த்து நிற்கின்றனர். ஆனால் தாங்கள் கற்புடன் இல்லையென்றால் அவர்களின் கற்பும் அல்லவா கெடும். அவர்களின் கற்பு இழிவடையும் முறையில் நடந்து கொண்டு ஆண்கள் அவர்களிடம் கற்பை

எதிர்பார்ப்பது வீணே. ஆடவர்கள் நல்லவர்களாக இருந்தால் அல்லவா பெண்களும் நல்லவர்களாக இருப்பர். கற்பைப் பொறுத்தவரையில் ஆண்களும் பெண்களும் நேர்விகிதத்தைப் போன்றவர்கள். ஆண்கள் கெட்டால் பெண்களும் கெடுவர் ஆண்கள் நல்லவர்களானால் பெண்களும் நல்லவர்களே. ஆண்களும் பெண்களும் வாழும் இடத்தைத் தானே நாடு என்கின்றோம். அங்கு ஆண்கள் நல்லவர்களானால் பெண்களும் நல்லவர்களாக இருப்பர் என்று சொல்வதும், அந்நாடே நலமுடன் இருக்கும் என்று சொல்வதும் ஒன்றுதான். இதனை உணர்ந்தே ஔவையார்,

> **எவ்வழி நல்லவர் ஆடவர்**
> **அவ்வழி நல்லை வாழிய நிலனே**[7]

என்றார். இதனை ஆழமாக வலியுறுத்தவே,

> **பெண்களிடம் கற்பை எதிர்பார்க்கும் ஆண்கள்**
> **பெண்களையே கற்பழித்துத் திரியலாமா?**
> **பெண்களுக்கும் ஆண்களுக்கும் கற்புப் பொதுவன்றோ?**
> —பாரதிதாசன், காதற் பாடல்கள், ப. 161.

என்று கடுமையாகக் கூறுகின்றார். கற்பை மட்டும் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவில் வைத்தால் போதும் என்று எண்ணவில்லை பாவேந்தர்.

> **ஆண்உயர் என்பதும் பெண்உயர் என்பதும்**
> **நீணிலத்து எங்கணும் இல்லை**
> ......................................
> **நாணமும் அச்சமும் வேண்டும்—எனில்**
> **ஆணுக்கும் பெண்ணுக்கும் வேண்டும்**
> —பாரதிதாசன், இசையமுது, தொகுதி 1, ப. 52.

என்கின்றார். இங்குத் திரு. வி. க. கூறுவதை ஒப்பிட்டுப் பார்த்தல் நலம். திரு. வி. க கூறுகின்றார்: "ஆண் வடிவில் பெண்மைக்குணம் பெற்ற மக்களே இதுகாறும் உலகில்

அன்பர்கள் என்றும், அடியார்கள் என்றும், அறிஞர்கள் என்றும், வீரர்கள் என்றும், பாவலர்கள் என்றும் போற்றப் படுகிறார்கள் ... ஆண்பிறவி தாங்கினோர் நல்வழியில் முயன்று பெண்மைக்குணம் பெற விழைவாராக.''[8]

ஆண் பெண் நிகர் என்பது கற்பில் மட்டுமல்லாது நாணத்திலும் அச்சத்திலும் வேண்டும். அகவாழ்வில் நாணமும் அச்சமும் வேண்டும் என்று முன்பு கூறினார். அதனால் தமிழரின் அகப்பண்பாட்டைச் சீர்குலைத்தலில் ஆணும் பெண்ணும் நாணப்படுதல் வேண்டும், அச்சப் படுதல் வேண்டும் என்பதனை ஊகித்துக்கொள்ள முடிகின்றது.

அடுத்து, இல்லறத்தில் திருமண நிகழ்ச்சியில் ஆண் களுக்கும் பெண்களுக்கும் சமஉரிமை இருத்தல் வேண்டும் என்று புரட்சிக் கருத்தை வெளியிடுகின்றார். திருமணத் தில், திருமணம் செய்து கொள்ளப்போகும் ஆண் பெண் இருவரின் மனநிலையையும் அறிதல் வேண்டும். ஆணின் விருப்பத்தைக் கேட்டுப் பெண்ணின் விருப்பத்தைக் கேளாமல் இருத்தல் கூடாது. இருவரையும் நிகராகவே கண்டு இருவரின் விருப்பத்தையும் கேட்க வேண்டும் என்பதனை நகைமுத்து வேடப்பன் திருமண நிகழ்ச்சியில் காட்டுகின்றார். திருமண நிகழ்ச்சியின்போது,

> பெரியவர் ஒருவர், ''பெண்ணே நகைமுத்து!
> வேடப்பனை நீ விரும்பிய துண்டோ?
> வாழ்வின் துணையெனச் சூழ்ந்த துண்டோ?
> என்றலும், நகைமுத்து எழுந்து வணங்கி,
> ''வேடப்பனை நான் விரும்பிய துண்டு
> வாழ்வின் துணை என்று சூழ்ந்தேன்'' என்றாள்.
> ''வேடப்பா நீ மின் நகைமுத்தை
> மணக்கவோ நினைத்தாய்? வாழ்க்கைத் துணையென
> அணுக எண்ணமோ அறிவித்திடுவாய்''

**என்னலும் வேடன் எழுந்து வணங்கி**
**மின்நகை துணையாய்ச் சூழ்ந்தேன்'' என்றான்**
—பாரதிதாசன், குடும்பவிளக்கு, பகுதி 3, ப. 43.

என்று இருவரின் விருப்பத்தையும் கேட்டறிந்த பின்பே மணவினையை நடத்துகின்றனர். இதில் பெரியவர் பெண்ணிடம்தான் முதலில் கேட்பதாக அமைக்கின்றார் பாவேந்தர். அவர் புரட்சிக்கவி அல்லவா!

அடுத்து, பெண் பார்க்கும் இடத்தில் ஒரு நிகழ்ச்சி. திருமணத்திற்கு நகைமுத்திடமும், வேடப்பனிடமும் விருப்பம் கேட்கும் முன்னர் தாத்தா பெற்றவரின் விருப்பத்தை முறையாகக் கேட்கின்றார். அதற்கு அவர்கள் தரும் விடை,

**மகிழ்ச்சியுடன் ஒப்புவதாய்**
**மாவரசன் தானுரைத்தான்**
**புகழ்ச்சியுறும் ''வேடப்பன்**
**பூவை'' மணத்தை**
**இகழ்ச்சியா செய்திடுவேன்?**
**என்றாள் மனைவி**
**நகைப்போடு 'நன்றென்று'**
**உரைத்தான் மணவழகே!**
..............................
**மானே, மயிலே**
**மருமகளே என்வீட்டு**
**வான நிலாவே**
**மகிழ்வென்றாள் தங்கமுமே!**
—பாரதிதாசன், குடும்பவிளக்கு, பகுதி 3, பக். 31-2.

என்று தாய் தந்தை இருவரின் விருப்பத்தையும் கூறும் களமாக அக்காட்சியினை அமைக்கின்றார் பாவேந்தர். வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் ஆண் பெண் நிகராக வாழ்தலையே பாவேந்தர் விரும்புகின்றார்.

## 6. காதல் மணம்

பாவேந்தர், காதல்—உயிர் இயற்கை என்று கூறுகின்றார் என்பதனை முன்பு கண்டோம். இல்லறம் நடத்தப் போகும் ஆண்பெண் இருவரும் ஒருவரை ஒருவர் காதலித்தல் வேண்டும். காதலித்துத் திருமணம் செய்து கொள்வது தமிழ்ப்பண்பாடு. பன்னெடுங் காலத்திற்கு முன்பே போற்றி வளர்க்கப்பட்ட பண்பாடு. இப்பண்பாடு இடைக்காலத்தில் வீழ்ச்சி அடைந்தது. இதனால் இல்லறத்தில் இன்பம் நீங்கத் துன்ப இருள் சூழ்ந்தது. இல்லத்தில் துனபம் சூழ்ந்ததால் புறவாழ்வில் இன்பம் ஏது? மனிதனின் வாழ்க்கையை 360 பாகம் (டிகிரி) கொண்ட ஒரு வட்டமாக அமைப்போமானால் அதில் 60 பாகம் அகவாழ்வு, 300 பாகம் புறவாழ்வு. இதில் வேடிக்கை என்ன என்றால் 60 பாகம் சரியாக இருந்தால்தான் மற்ற 300 பாகங்கள் ஒழுங்காக இருக்கும். அதாவது அகவாழ்வு செம்மையுடன் இருந்தால்தான் புறவாழ்வு சீர்மை பெற்று விளங்கும். அகவாழ்வு காதலை மையமிட்டது காதல் இல்லாதது உண்மையான அகமாகாது. எனவே அகத்தைப் போற்றி இல்லறம் நடத்தும் ஆண் பெண் இருவரும் ஒருவரை ஒருவர் காதலித்தல் வேண்டும். பெற்றோர் காட்டும் ஒருவனுக்குக் கழுத்தை நீட்டாமல் தான் காதலித்த ஒருவனையே ஏற்று வாழ்தல் வேண்டும்.

> ஊரில் உள்ள பெண்களெல்லாம் உள்ளத்தைப் பூர்த்தி
> செய்யும்
> சீரியர்க்கு மாலையிட்டுச் சீரடைந்து வாழ்கின்றார்.
>
> —பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 3.

வாழ்க்கை சீரடைய உள்ளத்தை நிறைவு செய்யும் சீரியருக்கு மாலை இடுதல் வேண்டும் என்று கூறும் பாவேந்தரின் ஒவ்வொரு சொல்லும் எத்தகைய உயர்ந்த கருத்துகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது!

இவ்வாறு அமைந்த இல்லறம் ஆண்களுக்கு எத்தகைய ஆற்றலைப் புறவாழ்வில் தருகின்றது. இதனைப் பாவேந்தர்,

**கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்**
**மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுகாம்**

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 4.

என்று உவகையோடு கூறுகின்றார்.

ஒருவனும் ஒருத்தியும் மனம் ஒத்து இணைந்து விட்டதைத் தவறு என்று கூறுதல் காதலை அழிப்பதன்றோ? காதலை அழிப்பதென்பது கூற்றுவனைக் கைகாட்டி அழைப்பதல்லவா? அப்பிழையைச் செய்யாதீர், காதலிப்பது பிழையன்று.

**ஒருவனும் ஒருத்தியுமாய்—மனம்**
**உவந்திடில் பிழையென உரைப்ப துண்டோ?**

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 29.

இல்லை என்கின்றார் பாவேந்தர்.

'காதல்' ஒருவனுக்கும், ஒருத்திக்கும் இடையில் மட்டுமே தோன்றும். ஒருவன் பல பெண்களைக் காதலிக்க முடியாது. அதுபோலவே ஒருத்தி பல ஆண்களைக் காதலிக்க முடியாது. இது தமிழர்களின் அகப்பண்பாட்டுக் கொள்கைகளுள் ஒன்று. இதனை நாகரிகமாகப் போற்றி ஒழுகினர். இதனை,

**ஒருத்தி ஒருத்தனை மணத்தல் எங்கள் நாகரிகம்!**
**ஒருத்தன் ஒருத்தியை மணத்தல் எங்கள் நாகரிகம்!**

என்று கூறி மகிழ்கின்றார். இவ்வாறு அமைந்த வாழ்வில்தான் ஒருவரை ஒருவர் போற்றி வாழமுடியும். ஒரு பெண்ணுக்குக் கணவனைவிட உயர்ந்த ஒரு பொருள் இருக்க முடியாது. கணவனுக்குச் சமமான ஒருபொருள் இருக்கக்கூடாது என்பர். இது ஆணுக்கும் பொருந்தும். இந்நிலை இவர் இடத்தில் ஏற்படக் காதல் மணம்

அல்லவோ வேர்! இதனால்தான் தாம் படைத்த நூல்களில் எத்தனை காதல் இணைகளைக் காட்டுகின்றார். பாவேந்தர். குடும்பவிளக்கில் நகைமுத்து — வேடப்பன் புரட்சிக்கவியில் அமுதவல்லி — உதாரன், இன்னும் எத்தனை எத்தனை இணையான ஆண் பெண்கள்.

காதல், மணத்தில் முடிவடைய வேண்டுமானால் ஆண் பெண் இருபாலரிடமும் உறுதி வேண்டும். பெண்களுக்கு மிக அதிகமாக வேண்டும். பெண்கள் தங்கள் உறவினர்களை நீங்கி உடன்போக்குச் சென்றதாக நம் இலக்கியங்களும் இலக்கணங்களும் கூறுகின்றன. காதலுக்கு எதிர்ப்பு ஏற்படும் நிலையில் அந்த அளவிற்குப் பெண்ணுக்கு உறுதி வேண்டும். அவளை உடன் அழைத்துச் சென்று வாழ்க்கைத் துணையாக ஏற்கும் உறுதி ஆண்மகனுக்கு வேண்டும். உடன்போக்குப் போகாதவர்கள் நேரம் வரும்போது தங்கள் காதலை உறுதியாக எடுத்துக் கூறிவிட வேண்டும். இன்றைய காதலர்கள் பெற்றோருக்குத் தெரியாமல் காதல் செய்ய அஞ்சுவதில்லை. ஆனால் பெற்றோரிடம் தெரிவிப்பதற்கு அஞ்சுகின்றனர். எங்கு அச்சம் வேண்டுமோ அங்கு விடுத்து எங்கு அச்சம் கூடாதோ அங்கு அச்சப்படுகின்றனர்.

**செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமை யானும் கெடும்[9]**

என்று வள்ளுவர் கூறுவதற்கிணங்க அவர்கள் காதல் நிறைவேறாமல் கெடுகின்றது. இதனை உணர்ந்த பாவேந்தர் நகைமுத்து மூலம் உணர்த்துகின்றார்.

பெருமாள் தாத்தா மூலம் தன் காதல் தன் பெற்றோருக்குத் தெரிந்து விட்டதை அறிகின்றாள் நகைமுத்து. அந்நிலையில் அவள்

**வேறே எவனையும் விரும்பேன் என்றும்**
**வேடப்பனைத்தான் விரும்பினேன் என்றும்**
**சட்ட வட்டமாய்ச் சாற்றினாள்**

—பாரதிதாசன், குடும்பவிளக்கு, பகுதி 3, ப. 28.

என்று காட்டுகின்றார். முழுவதும் நனைந்த பின் முக்காடு எதற்கு என்பதற்கிணங்கத் தன் காதல் வெளிப்பட்டவுடன் தன் முடிவை அச்சமில்லாமல் உறுதியுடன் கூறி விடுகின்றாள். இத்தகைய உறுதி பெண்களுக்கு வேண்டும்; ஆண்களுக்கும் வேண்டும்.

பெற்றோரும் காதல் மணத்தை ஆதரித்தல் வேண்டும் என்பதனை,

> எங்கள் பெரிய பிள்ளை
> காதல் நெஞ்சினிலே
> வாழுகின்ற வஞ்சியைஎம்
> சொத்தெல்லாம் தந்தேனும்
> தோதுசெய மாட்டோமா?

—பாரதிதாசன், குடும்பவிளக்கு, பகுதி 3, ப. 25.

என்று வரும் மணவழகன் கூற்றாலும் ''மகிழ்ச்சியுடன் ஒப்புவதாய் மாவரசன் தானுரைத்தான்'' என்று வரும் பகுதியாலும் உணர்த்துகின்றார். தங்கள் பிள்ளைகளின் காதலுக்காகப் பெற்றோர்கள் தங்கள் பகையையும் மறப்பதாக அல்லவா காட்டுகின்றார். இத்தகைய மாற்றம் பெற்றோரிடம் ஏற்படுதல் வேண்டும்.

காதல் மணத்தின் சிறப்பினை எல்லாம் எடுத்துக் கூறிவந்த பாவேந்தர் மனம் பொருந்தா மணத்தைக் கடிகின்றார். அறுபது வயது முதியவருக்கு இருபது வயது மங்கையை மணம் முடித்துவைத்தால் என்ன நிகழும் என்பதனை 'மூடத்திருமணம்' என்ற பாடலில் உள்ளக் கொதிப்புடன் வெளியிடுகின்றார். இம்மூடத்திருமணத்தால் உள்ளக் கொதிப்புண்ட புரட்சிக்கவியின் உள்ளத்தில் இருந்து பீறிட்டெழுகின்றது,

> மண்ணாய்ப் போக! மண்ணாய்ப் போக!
> மனம் பொருந்தா மணம் மண்ணாய்ப் போகவே!
> சமூகச் சட்டமே! சமூக வழக்கமே!

நீங்கள், மக்கள் அனைவரும்
ஏங்காதிருக்க மண்ணாய்ப் போகவே
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, 111.

என்ற சொற்கள். இத்தகைய சமூகச் சட்டமும், வழக்கும் நாட்டை விட்டு ஒழிந்தால்தான் 'காதல் மணம்' எங்கும் மணக்கும்.

காதலின் முன்பு சாதி இல்லை; சமயம் இல்லை; உயர்ந்தோர் தாழ்ந்தோர் வேறுபாடு இல்லை என்று கூறும் பாவேந்தர், காதலில் தமிழ் வேண்டும் என்கின்றார். தான் காதலிக்கும் பெண் தமிழ்ப் பெண்ணாக இருக்க வேண்டும் என்கின்றார். இது ஒரு புரட்சிக் கருத்து.

என்மீதில் ஆசை வைக்காதே—மயிலே
என்னைப் பார்த்தும் சிரிக்காதே
உன்மேல் நான் ஆசை வைக்கவில்லை—நீதான்
உண்மையிலே தமிழ்மகள் இல்லை ஆதலால்
—பாரதிதாசன், காதற்பாடல், ப. 70.

என்று காதலில் தமிழை மட்டும் போற்றுகின்றது அப்புரட்சிக் கவியின் உள்ளம்.

இல்லற வாழ்வில் நீடித்த இன்பம் நிலைக்க வேண்டுமானால் குடும்பக் கட்டுப்பாடு வேண்டும் என்று அன்றே எடுத்துக் கூறினார்.

காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம் இதிலென்ன குற்றம்
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1. ப. 40.

என்கின்றார். "இப்பாட்டில் காதலைக் கட்டுப்படுத்திக் குழந்தையைக் கட்டுப்படுத்துவது, எல்லார்க்கும் கடை போகாது என்பதை அழகாகச் சொல்லிக் காதலைக் கட்டுப் படுத்தாமலே குழந்தையைக் கட்டுப்படுத்த வேண்டும் — முடியும் என்ற எண்ணத்தை உருவாக்கினார்".[10] இன்று

நமது அரசு இதனை ஏற்றுத் தீவிரமாகக் குடும்பக் கட்டுப் பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி மக்கள் வாழ்வில் இன்பம் பெருக வழிவகை செய்கின்றது.

**கலப்பு மணம்**

கலப்பு மணம் காதலை மையமிட்டது. காதல் இல்லாமல் கலப்பு மணம் இல்லை. கலப்பு மணம் காலத்தின் தேவை. தமிழர்கள் சாதி, சமயங்களால் பிளவு பட்டுப் பன்னெடுங்காலமாகவே ஒற்றுமை இல்லாமல் துன்புறுகின்றனர். அவர்களிடையே உண்மையான ஒற்றுமை நிலவ வேண்டின் கலப்பு மணம் நாட்டில் பெருகுதல் வேண்டும்.

அறிவியல் அடிப்படையிலும் கலப்புமணம் சிறந்தது. கலப்பு மணத்தின் மூலம் ஒன்றிணைந்த ஆண் பெண்களின் குழந்தை, உடல் உறுதி உடைய குழந்தையாக, அறிவு வளர்ச்சி மிகுந்த குழந்தையாக விளங்கும் என்று அறிவியல் முறைப்படி மெய்ப்பித்துள்ளனர். ஒரே கல்லில் இரண்டு மாங்கனி என்பதுபோல் கலப்பு மணம் என்ற ஒன்றினால் தமிழர்களின் ஒற்றுமை, அறிவு மிகுந்த குழந்தை என்ற இரண்டு கண்களையும் பெறலாம். எனவே காதல் மணத்திலும் கலப்பு மணமே சிறந்தது. காதல் மணம் சாதி சமயங்களைக் கடக்காமலும் நடைபெறும். ஆனால் கலப்பு மணம் இவற்றைக் கடந்தது. காதல் மணத்தையும் உள்ளடக்கியது. எனவே எந்நிலையில் நோக்கினும் கலப்பு மணம் சிறந்தது, தேவையானது.

பாவேந்தர் கலப்பு மணத்தைப் பெரிதும் ஆதரிக் கின்றார். காதலுக்குச் சாதி மதம் குறுக்கிடுவதை நகைப்புக் குரியது என்கின்றார்.

சந்தனச் சோலைநான் தோழி—தென்றல்
தழுவத் தழுவினேன் தோழி
அந்தச் செயல்கேட்ட பெற்றோர்—அவன்

ஆர்? அவன் எச்சாதி என்றார்
இந்தாடி அன்புள்ள தோழி—எனக்கு
எப்போது அடங்கும் சிரிப்பு?
வந்தவன் ஆண்சாதி என்றால்—அவனை
மணந்தவள் பெண்சாதி தானே?

—பாரதிதாசன், காதற் பாடல்கள், ப. 170.

ஆண் பெண் என்ற வேறுபாடு இன்றி மற்ற வேறுபாடுகள் இருத்தல் கூடாது. "சாதிக் கட்டுப்பாடு, சமயக் கட்டுப்பாடு, பொருள் வேட்கை முதலியவற்றான் எத்தனையோ பொருந்தா மணங்கள் நடைபெறுகின்றன. கட்டுப்பாடுகளுக்குக் கட்டுப்பட்டு எத்துணை நாள் உயிர்வதை செய்துகொண்டிருப்பது! கட்டுப்பாடுகள் என்னென்ன செய்கின்றன! அந்தோ! விரிக்கிற் பெருகும்."[11] எனவே இக்கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து ஆண்களும் பெண்களும் கலப்பு மணம் புரிதல் வேண்டும்.

இந்நிலையில் உலகம் என்ன சொல்லும், ஊரார் என்ன சொல்வர் என அச்சப்படுதல் கூடாது. இது தேவையற்ற அச்சம். இவ்வச்சம் நீங்கிய ஒரு பெண் கூறுகின்றாள்.

காதலை அறியாக் கயவர் கூட்டம்
கண்டதை எல்லாம் கத்தட்டும்!
மோதும் அலையில் உப்பைக் கொட்டும்
மூடர்கள் ஏதும் செய்யட்டும்!
இளமை என்னும் அருவிப் பெண் நான்
இளைஞன் என்னும் பேராற்றில்
உளங்கொண்டாடி என்னை இழந்தேன்
ஊராராம் நாய் குலைக்கட்டும்.

—பாரதிதாசன், காதற் பாடல்கள் ப. 60.

மணவாளனைத் தேர்ந்தெடுக்கும்போது ஒழுக்கம் உடையவனா, கல்வி உடையவனா, உயிர்களிடத்து

இரக்கம் உடையவனா என்று பார்க்க வேண்டுமே ஒழிய அவன் சாதி சமயங்களைப் பார்த்தல் கூடாது. சாதி சமயங்களைப் பார்க்காது காதல் கொள்வதுதான் தமிழ்க் காதல். இதனை,

**யாயும் ஞாயும் யாரா கியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி யறிதும்**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே!**[12]

என்ற குறுந்தொகைப் பாடல் குறிப்பால் உணர்த்து கின்றது. இதனை வலியுறுத்தவே 'கலப்பு மணம் வாழ்க' என்ற தலைப்பில் பாடல் எழுதினார். அதில்,

**அப்பா உண்மையில் அவரும் என்போல்**
**மனித சாதி, மந்தி அல்லர்**
**காக்கை அல்லர், கரும்பாம் பல்லர்**
**... ... ...**
**சாதி சற்றும் என்நினைவில் இல்லை**
**மாதுநான் தமிழனின மகளாத லாலே**

—பாரதிதாசன், காதற்பாடல்கள், ப. 93.

என்ற அடிகள் பாவேந்தர் கலப்பு மணத்தை எந்த அளவிற்கு வரவேற்று வாழ்த்துக் கூறுகின்றார் என்பதனைப் புலப் படுத்துகின்றது.

பாவேந்தருக்குப் 'புரட்சிக்கவி' என்ற பட்டம் அளிப்பதற்கு மூலமாக இருந்ததே கலப்பு மணந்தான். அவர் எழுதிய 'புரட்சிக்கவி' என்ற பாடலில் அரசன் மகளாகிய அமுதவல்லியும், குடிமகனான உதாரனனும் காதலித்து இணைகின்றனர் என்று அவர் காட்டுகின்றார். இக்காட்சி அக்காலத்தில் பெரும் புரட்சியாக இருந்தது. அவருக்கும் அப்பட்டத்தை ஈட்டிக் கொடுத்தது. இன்று நமது அரசு கலப்பு மணத்தை ஆதரித்துச் சட்டம் இயற்றியுள்ளது.

மக்களும் கலப்பு மணத்தின் தேவையையும் பயனையும் உணர்ந்து போற்றத் தொடங்கி விட்டனர். புரட்சிக் கவிஞர் பாவேந்தரின் கனவு நனவாகத் தொடங்கி விட்டது.

**மறுமணம்**

பெண்களுக்கு இழைக்கப்படும் தலையாய கொடுமை, மறுமண மறுப்பு. இக்கொடுமை தொல்காப்பியனார் காலத்திற்கும் முன்பிருந்தே நடைபெற்று வந்திருக்கின்றது என்பது அவர் இதற்கு இலக்கணம் கூறி இருப்பதில் இருந்து அறிந்துகொள்ள முடிகின்றது.

தொல்காப்பியனார் மனைவியை இழந்தபின் கணவன் வருந்துவதையும் கணவனை இழந்தபின் மனைவி வருந்து வதையும்

> **காதலி இழந்த தபுதார நிலையும்**
> **காதலன் இழந்த தாபத நிலையும்**[13]

என்ற இலக்கணத்தால் குறிக்கின்றார். இத்துடன் நில்லாது பெண்மகள் உடன்கட்டை ஏறுதலை,

> **நல்லோள் கணவனொடு நனியழல் புகீஇச்**
> **சொல்லிடை யிட்ட பாலை நிலையும்**[14]

என்று குறிக்கின்றார். ஆனால் ஆண்கள் உடன்கட்டை ஏறியதாகக் கூறவில்லை. எனவே இக்கொடுமை தொல் காப்பியனார் காலத்திற்கும் முன்பே நடைபெற்றிருக் கின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

போரில் பட்ட வீரனுக்கு ஊர்ப்புறத்தே நடுகல் வைப்பது பண்டைய மரபு. அதில் அவனின் உருவத்தைப் பொறித்திருப்பர். இவ்வுருவத்தை அவன் மனைவி வழிபட்டு வருவாள். பலிக்கொடை கொடுத்து வழிபட்டு வருவாள். அவ்வாறு பலிக்கொடை கொடுக்கும் ஒரு பெண்ணைப் புறநானூறு காட்டுகின்றது.

மெழுகும் ஆப்பிகண் கலுழ் நீரானே.[15]

சாணத்தால் மெழுக வேண்டி, அதற்குத் தன் கண்ணீரையே தண்ணீராகக் கொண்டு மெழுகினாள் என்று காட்டுகின்றது. அவள் படும் துன்பத்தைப் பார்த்த மற்றப் பெண்கள் கணவனை இழந்தபின் இக்கொடுமைக்கு ஆளாவதைவிட அவனுடன் உயிர் துறக்கலாம் என்ற முடிவுக்கு வந்திருப்பர். இதனால் கணவன் இறந்ததும் அவனுடன் உடன்கட்டை ஏறி இருப்பர். இவ்வாறுதான் உடன்கட்டை ஏறும் வழக்கம் தோன்றி இருக்க வேண்டும். மேலும், கோப்பெரும்பெண்டு கூறுவதாக அமைந்த 'பல்சான்றீரே' பல்சான்றீரே? என்ற பாடல் (புறம்.246) கணவனை இழந்த பெண்ணுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பட்டிய லிட்டுக் காட்டுகின்றது.

இடைக்காலத்தில் இஃது அறமாகக் கொள்ளப்பட்டுக் கட்டாயம் பின்பற்ற வேண்டிய ஒன்று என்றாக்கப்பட்டதை,

காதலர் இறப்பிற் கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்காது
இன்னுயிர் ஈவர் ஈயா ராயின்
நன்னீர்ப் பொய்கையுள் நளியெரி புகுவர்
நளியெரி புகாராயின் அன்பரொடு
உடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடன் படுவர்
பத்தினிப் பெண்டிர்

எனவரும் மணிமேகலை அடிகள் உணர்த்துகின்றன. இக் கொடுமை கிட்டத்தட்ட ஆங்கிலேயர் வரும் வரையில் இருந்தது. அவர்கள் வந்ததாலும், இராஜாராம் மோகன்ராய் போன்ற தேசத்தலைவர்களின் போராட்டத் தாலும் இப்பழக்கம் சட்ட அடிப்படையாக நீக்க வழிகோலப்பட்டது. சட்டம் இயற்றினாலும் அது எளிதாக நடைமுறைக்கு வரவில்லை. இந்நிலையில்தான் பாவேந்தர் தோன்றி அதன் கொடுமைகளை எடுத்துக்கூறி

பெண்கள் மறுமணம் செய்துகொள்ளவேண்டும் என்ற தமது புரட்சிக் கருத்தை வெளியிடுகின்றார்.

மணவாளனைப் பறிகொடுத்த ஒரு மங்கை அழுதலை முதலில் காட்டுகின்றார்.

**கண்ணுக்கே மையானீர்**
**கார் குழலில் பூவானீர்**
**மண்ணாகிப் போனதுவே என்வாழ்வு.**

— பாரதிதாசன், காதற்பாடல்கள், ப. 153.

கண்ணுக்கு மை எழுதல் கூடாது; கார்குழலில் பூச்சூடுதல் கூடாது. "அவள் எதிரில் வரக்கூடாதாம்! கூட்டங்களில் போகக் கூடாதாம்! உடையையும் உணவையும் சுருக்கல் வேண்டுமாம்! அப்பெண் மூதேவியாய் விட்டாளாம்!"

**தரையிற் படுத்தல் வேண்டும்**
**சாதம் குறைத்தல் வேண்டும்**
**தாலி யற்றவள் மேல் அழுந்திடும்**
**வேலின் அக்ரமம் ஞாலம் ஒப்புமோ?**

— பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 118.

அறுபது வயதிற்கு மேல் ஒருத்தி கணவனை இழந்தபின் தனிமையில் வாழலாம். வாழ முடியும். அது இயற்கையுங் கூட. ஆனால் கட்டிளங்குமரி கணவனை இழந்து தனித்து வாழ்தல் கூடுமோ? அது இயற்கையாகுமோ? ஆனால் நிலை என்ன? 'அறுத்தவள்' மணத்திற்கு உரிமை உடையவள் அல்லள் என்ற எண்ணந்தானே அனைவரிடமும் இருந்து வருகின்றது.

**கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே—இங்கு**
**வேரில் பழுத்த பலா—மிகக்**
**கொடியதென்று எண்ணப்பட்ட தண்ணே — குளிர்**
**வடிக்கின்ற வட்ட நிலா**

— பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 106.

என்று அப்பெண்களின் நிலைக்கு இரங்கி இரத்தக்கண்ணீர் வடிக்கின்றார் பாவேந்தர். கணவனை இழந்தபின் அவளை யாரும் எதற்கும் அணுகுவதில்லை. அவள் உள்ளம் விரும்பும் சிறு ஆசையைக் கூட யாரும் நிறைவேற்றுவதில்லை.

மாண்டவன் மாண்டபின்னர்—அவனின்
மனைவியின் உளத்தை
ஆண்டையர் காண்பதில்லை—ஐயகோ
அடிமைப் பெண்கதியே
— பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 109.

என்று கைம்மைப் பெண்களுக்காக மனவேதனை அடைகின்றார். அவ்வேதனை அறிவைத் தொட்டுச் சிந்தனையைத் தூண்டுகின்றது. அவரது சிந்தனையில் இருந்து கிளம்பும் முதல் வினா இதுதான்.

வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால்பின் மணத்தல் தீதோ?
பாடாத தேனீக்கள், உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?
— பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 82.

இக் கேள்விக்கு விடையென்ன? விடை காண முயல்கின்றார் பாவேந்தர். இதுபோன்ற சிக்கல் வேறு எங்கு நடைபெறுகின்றது. அச்சிக்கலைத் தீர்க்க அங்கு எந்த வழி மேற்கொள்ளப்படுகின்றது. அதனைப் பின்பற்றி இச்சிக்கலுக்குத் தீர்வு காணலாம் என்ற முடிவுக்கு வருகின்றார் பாவேந்தர். அத்தகைய சிக்கல் ஆண் இனத்தில் இருப்பதை அறிகின்றார். அதற்கு அங்குச் சிக்கல் தீர்க்கும் வழி யாது?

ஆடவரின் காதலுக்கும், பெண்கள் கூட்டம்
அடைகின்ற காதலுக்கும் மாற்றமுண்டோ?
பேடகன்ற அன்றிலைப்போல், மனைவி செத்தால்
பெருங்கிழவன் காதல்செய்யப் பெண் கேட்கின்றான்
— பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 82.

நிலையே உள்ளது. அதனைப்போன்று கணவனை இழந்த பெண்ணும் வேறொரு ஆடவனை மணந்து கொண்டால் சிக்கல் தீர்ந்துவிடும் என்று எண்ணுகின்றார். அவ் வெண்ணத்தையே,

துணைவி இறந்தபின் வேறு துணைவியைத்
தேடுமோர் ஆடவன் போல்—பெண்ணும்
துணைவன் இறந்தபின் வேறு துணை தேடச்
சொல்விடுவோம் புவிமேல்

— பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 107.

என்று வெளியிடுகின்றார். கணவனை இழந்த பெண்கள் மறுமணம் புரிந்து கொள்ளுதல் வேண்டும். 'மறுமணம் புரிவது சிறுமை என்றறைவது குறுகிய மதியென அறிஞர்கள் மொழிகுவர்' அதனால்,

காதல் சுரக்கின்ற நெஞ்சத்திலே—கெட்ட
கைம்மையைத் தூர்க்காதீர்—ஒரு
கட்டழகன் திருத்தோளினைச் சேர்ந்திடச்
சாத்திரம் பார்க்காதீர்

— பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 107.

என்கின்றார். இவ்வாறு கைம்பெண்களின் நிலையையும், அது நீங்க வழியையும் கூறிய பாவேந்தர் இறுதியாக அவளை மணக்கப் போகும் ஆணிடம்,

கற்கண்டு போன்றபெண் கணவனை இழந்தால்
கசந்தபெண் ஆவது விந்தைதான் புவிமேல்
சொற்கண்டு மலைக்காதே உன் பகுத்தறிவால்
தோஷம் குணம் அறிந்து நடப்பாய்—துயர் கடப்பாய்
துணை பிடிப்பாய்—பயம் விடுப்பாய்

— பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 193.

என்று கூறுகின்றார்.

## 9. குழந்தை மணம் மறுப்பு

பிற பண்பாட்டுக் கலப்பால் விளைந்த மற்றொரு கொடுமை 'குழந்தை மணம்'. பால்மணம் மாறாத பருவத்தில் மணம் முடிக்கப்பட்டு காதல் உணர்வு தோன்றும் பருவத்தில் கணவனைப் பறிகொடுத்துத் துடிக்கும் கன்னிப் பெண்களின் அவலநிலை பார்ப்பதற்கு எத்தகைய கொடூரக் காட்சி. அதுவும் இந்திய நாட்டில் இக்கொடுமை மிகுதியாக நடைபெறுகின்றது. இது எவ்வளவு பெரிய அநியாயம்? "நம் நாட்டவரின் அநியாயம் என்ன? சிறுகுழந்தை — ஓராண்டுக் குழந்தை — அதற்கு மணமென்ன தெரியும்? பச்சிளங் குழவிக்குப் பெண் ஆண்பால் வேற்றுமையாதல் தெரியுமா? அக் குழந்தைக்குத் திருமணம். அது கைம்மை எய்தினால் அதற்குக் கட்டுப்பாடு! இல்லையே! அது தாய்மை என்னும் சீரிய நிலையை அடையாமல் அன்றோ ஒழிகிறது! இது கடவுள் கருத்தாகுமா? நமது நாட்டில் எத்தனை பெண்மக்கள் பால்மணம் மாறா இளங்குழந்தைப் பருவத்தில் கைம்மை எய்தி வருந்துகின்றனர்".[18] இன்று இக்கொடுமை குறைந்திருக்கலாம். ஆனால் அறுபது எழுபது ஆண்டுகளுக்கு முன்பு இக்கொடுமை எவ்வளவு மலிந்திருந்தது. 1921ஆம் ஆண்டு கணக்கீட்டின்படி கைம்மைப் பெண்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது நம் மனம் எவ்வளவு துடிக்கின்றது. துடிக்காத உள்ளங்கள் இருக்குமா? இராது. அப்பட்டியல் வருமாறு:

**1921ஆம் ஆண்டின்படி ஒருவயது முதல் பதினைந்து வயது வரை—கைம்பெண் விவரம்**

| வயது | 0-1 | 1-2 | 2-3 | 3-4 | 4-5 | 5-10 | 10-15 |
|---|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 759 | 612 | 1600 | 3475 | 8693 | 102293 | 279124 |
| ஹிந்து | 597 | 494 | 1257 | 2837 | 6707 | 85037 | 232147 |

(இவ்வட்டவணை 'பெண்ணின் பெருமை' என்ற திரு. வி. க. நூலில் இருந்து எடுக்கப்பட்டது, பக். 298.)

இதனைக் கண்ட பாவேந்தர் கொதித்தெழுகின்றார். அக்கொதிப்பின் விளைவே 'குழந்தை மணத்தின் கொடுமை' (தொகுதி 1, பக். 34) என்ற பாடலாக உருப்பெற்றது. அப் பிஞ்சுக் குழந்தையின் நிலையையும் உள்ள எண்ணத்தையும் வெளியிடுகின்றார். அது,

> கூவத் தெரியாக் குயிலின் குஞ்சு
> தாவாச் சிறுமான் மோவா அரும்பு
> தாலியறுத்துத் தந்தை வீட்டில்

இருந்திடும் நிலையைக் காட்டி, அதே வீட்டில் அவளைப் பெற்றெடுத்த தந்தை, மனைவி இறந்ததால் மறுமணம் செய்து மனைவியோடு இன்ப வாழ்வினை ஏற்று மகிழ்ந் திடும் நிலையினையும் காட்டுகின்றார். தந்தையின் இச் செயலை அனுமதிக்கும் சமுதாயம், இல்லற இன்பத்தின் இயல்பினையே அறியாத நிலையில், இல்லறம் ஏற்கும் தகுதியை இழந்ததாகச் சிறுமி ஒருத்தியைச் சிறுமைப் படுத்தும் சிந்தையற்ற செயலை எப்படி அனுமதிக்கின்றது என்பதுவே பாவேந்தர் எழுப்பும் வினா. வயது முதிர்ந்த நிலையிலும் இளைய மனைவியோடு இன்ப வாழ்வு நடத்தத் துடிக்கும் தந்தை, தன் மகளின் இந்த அவல நிலையினை எந்த அடிப்படையில் அனுமதிக்கின்றான்? இல்லற வாழ்வின் நுட்பத்தை அறியமுடியாத குழந்தைப் பருவத்திலேயே, சிற்றன்னைக்குப் பூச்சூட இன்ப இரவை எதிர்பார்க்கும் தந்தையின் இழிசெயல் கண்டு வெறுப் படைகின்ற இக்குழந்தை, வாழ்வுக்குரிய பக்குவம் வந்த பிறகு தனிமைத் துன்பத்தை எப்படித் தாங்கப் போகின்றாள் என அவள் பாட்டி அழுது புலம்புவதாகக் கூறிக் கவிதையை முடிக்கின்றார்''.[19] குழந்தைப்பருவம் இல்லறத்திற்கு ஏற்றதன்று என்பதனை,

> தீயன நல்லன காணாத இப்பருவத்தே—ஒரு
> சேயிழையோடு அறம் செய்வது எவ்வாறு உளம்ஒத்தே
>
> —பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3. ப. 21.

என்பதன் மூலம் உணர்த்துகின்றார்; குழந்தை மணத்தை மறுக்கின்றார்.

## பொதுவுடைமை அரசு

வரலாற்றுக் காலத்திற்கும் முற்பட்ட காலத்தில் மனிதன் தனித்தனியாக வாழ்ந்து கொண்டு வந்தான். பின்பு சிறிது சிறிதாகச் சேர்ந்துவாழக் கற்றுக் கொண்டான். முதலில் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்ந்தனர். பின்பு குடும்பமானார்கள். குடும்பங்கள் இணைந்து ஊராகியது. ஊர்கள் இணைந்து நாடாகியது. இவ்வாறு படிப்படியாக ஒன்று சேர்ந்து வாழக் கற்றுக் கொண்டான். இன்று நாட்டு எல்லையையும் தாண்டி உலகம் தழுவி வாழக் கற்றுக் கொண்டான்.

மக்கள் கூட்டம் கூட்டமாக வாழத் தலைப்பட்ட அந் நிலையில் அரசு தோன்றியது. அதாவது ஊர்கள் தோன்றியவுடனேயே அதனைப் பாதுகாக்க அரசும் தோன்றியிருக்க வேண்டும். இதனைத் தொன்மை மிக்க கிரேக்கத்தில் நிலவிய ஸ்பார்ட்டா, ஏதன்ஸ் போன்ற நகர அரசுகள் உணர்த்துகின்றன. இவ்வாறு தோன்றிய அரசுகளே பின்பு நாட்டரசானது. அதனை வரலாறு தெளிவாக உணர்த்துகின்றது.

முற்காலத்தில் அரசு செய்யும் ஆள்வோனை அடிப் படையாகக் கொண்டு அரசுகளைப் பல்வேறு முறையில் பாகுபாடு செய்தனர். வரம்பிற்குட்பட்ட முடியாட்சி, வரம்பில்லா முடியாட்சி, சர்வாதிகார ஆட்சி, இராணுவ ஆட்சி, பிரபுத்துவ ஆட்சி என்பன அவற்றுள் சில. அரசியல் பற்றிய சிந்தனை வளரவளர ஆள்வோனை அடிப்படை யாகக் கொண்டு பாகுபாடு செய்வதை விடுத்து ஆளும் முறையை அடிப்படையாகக் கொண்டு பாகுபாடு செய்தனர். பொதுவுடைமை அரசு, குடியரசு, கம்யூனிச அரசு, அதிபர் அரசு (முதலாளித்துவ அரசு) போன்றவை அவற்றுள் சில.

பாவேந்தர் அவர்கள் பொதுவுடைமை அரசையும் குடியரசையும் ஆதரிக்கின்றார். அதாவது பொதுவுடைமைக் குடியரசு (சோசலிச ஜனநாயக அரசு) வேண்டும் என்கின்றார். நடைமுறையில் இருக்கும் ஆண்டான் அடிமை முறையையும் தனியுடைமையால் ஏற்படும் தீமையையும் எடுத்துக்காட்டி அதனால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் துன்பங்களை எடுத்துக் கூறுகின்றார். இத்துன்பங்களில் இருந்து தொழிலாளர் விடுபட வேண்டுமானால் அவர்கள் முதலில் ஒன்றுபடுதல் வேண்டும் என்று கூறி, ஒன்றுபட்ட பின்பு புரட்சி செய்து நாட்டில் பொதுவுடைமைக் குடியரசை ஏற்படுத்த வேண்டும் என்கின்றார்.

### ஆண்டான் அடிமை

பண்ணையில் வேலையாட்களை அடிமைகள் போல் நடத்தினர். அவர்கள் உழைப்பை உறிஞ்சித் தன் நிலையை உயர்த்திக் கொண்டனர் பண்ணையார்கள். இந்நிலை நீடித்திருந்தால் அம்மக்களின் நிலை என்ன? அதனை, தங்கள் வாழ்வையும் ஆண்டானின் வாழ்வையும் ஒப்பிட்டு ஒரு வேலையாள் பாடுவதாக அமைந்த பாடலில் அமைத்துக் காட்டுகின்றார் பாவேந்தர்.

பாடே படுவர்க்குக் காடோ கரிக்கலோ கண்
மூடாமல் களம் காப்பே—ஆண்டை மனைவி
போடட்டும் பவுன் காப்பே
..............................
பாதிரத்தம் சுண்டு மட்டும்
பாடுபட்டுச் சாகும் மக்கள்
மீது வைக்க ஏது காசு—நல்லாண்டியாரின்
மோதிர மெல்லாம் நகாசு
..............................
கையலுத்துக் காலலுத்துக்
காலமெல்லாம் உழைப்பவர்
கண்ட தில்லை ஒரு தானம்

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 4, பக். 169-70

உழைத்து உழைத்துச் சலித்த அவனின் வாயிலிருந்து வெளிப்படும் இப்பாடல் ஆண்டை அடிமையின் வாழ்வை எவ்வாறு சித்திரிக்கின்றது. இக்கொடுமையை எண்ணி எண்ணிப் பாவேந்தர்,

**உழைப்பவர் என்றே ஓரினம் உண்டோ**
**பழிப்பிலாது உலகின் பயனை நுகரும்**
**ஓரினம் உண்டோ பிறவியில்**

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 28.

என்ற கேள்வியை எழுப்புகின்றார். அடுத்துத் தனியுடைமையால் உண்டாகும் கொடுமையினைக் கூறுகின்றார்.

**தனியுடைமை**

அரசின் நேரடிப் பராமரிப்பில் இருக்கும் சொத்து மதிப்பை விடத் தனியாரிடத்தில் இருக்கும் சொத்து மதிப்பு அதிகமாகிவிட்டால் அவ்வரசினால் முழுமையாகச் செயல்பட முடியாது. தனியாரிடத்தில் இருக்கும் சொத்து மதிப்புக் குறையக் குறையத்தான் 'அரசு' என்ற இயந்திரம் பழுதில்லாமல் இயங்கும். அரசு பழுதுபட்டால் நல்லவர்கள் தீமையையும், தீயர் நன்மையையும் அடைவர். இந்நிலை மாறி நல்லவர்களுக்கு நன்மையும் தீயவர்க்குத் தீமையும் என்ற முறையில் அரசு செயல்பட வேண்டுமானால் சொத்துக்கள் எல்லாம் அரசுடைமையாக வேண்டும். தொழில்களை எல்லாம் அரசே ஏற்று நடத்துதல் வேண்டும். வணிகத் தொழில் பொருள் ஈட்டச் சிறந்ததொரு துறையாகும். இதில் முறைகேடுகளைச் செய்து வணிகர்கள் பொருள் ஈட்டத் தொடங்கி விட்டனர். இதனைக் கண்டு வெகுண்ட பாவேந்தர்,

**தனியாரிடத்தில் வாணிகம் இருந்தால்**
**சரிவிலைக்குச் சரக்கு அகப்படுமோ?**
**இனியும் அரசினர் கண்மூடி இருந்தால்**
**ஏழை மக்களை மண்ணிற் புதைத்தலே**

..............................................

பெருங்காயம் ஒரு பெட்டி வைத்திருப்போன்
பிள்ளை பெற்றவளுக்கும் இல்லையே என்பான்
ஒரு கிழமை போனால் விலையேறிற் றென்பான்
ஒழிய வேண்டும் தனித்துறை வாணிகம்

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 154.

என்று தனியாரிடத்து இருக்கும் வணிகத்தை ஒழித்து,

எள் முதல் அரசினர் கொள்முதல் செய்க
எப்பாங்கும் கடைவைத்து விற்பனை செய்க
கண்படாது சரக்கைப் பதுக்கும்
கயவர் எதிர்ப்பைக் கழன்றுமிழ்ந் திடுக

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 4, ப. 154.

என்று கூறுகின்றார். இன்று அரசு இதனை ஏற்று ஒவ்வோர் ஊருக்கும் 'கூட்டுறவுப் பண்டகசாலை' வைத்தும், 'ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்' வைத்தும் பாவேந்தரின் கனவை நனவாக்கிக் கொண்டு வருகின்றது.

வீடுகள்தோறும் சென்று மக்களுக்குத் தேவையான வினைகளை முடித்து அவர்கள் தரும் கூலியைப் பெற்று சிலர் வாழ்கின்றனர். வீடுகள்தோறும் சென்று வணிகம் நடத்தியும் சிலர் வாழ்கின்றனர். இவர்களில் ஒருவர் 'எவர்சில்வர்' பாத்திரம் விற்பவர். இவர்கள் வீடுகளுக்குச் சென்று பழந்துணிகளை வாங்கிக்கொண்டு அதற்குத் தக்க 'எவர்சில்வர்' பாத்திரங்களைத் தருவர். பண்டமாற்று முறையில் நடைபெறும் வணிகம் இது. இவ்வணிகத்தில் நடைபெறும் சீர்கேட்டினை எடுத்துக் கூறுகின்றார்.

எவர்சில்வர் என்று கூறி
இல்லாத வரிடம் உலாவித்
தவறாமல் சொக்குப்பொடித் தூவிக் — கேட்பான்
தட்டைக் கொடுத்துப் பட்டுச்சேலையைப் பாவி.

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 4, ப. 163.

தனியார் கோவில்களில் நடைபெறும் சீர்கேட்டிற்கு மட்டும் குறைவா என்ன? ஆண்டவனைத் தரிசிப்பதற்கு எத்தனை வழிகள். ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு 'கட்டணங்கள்'. ஆண்டவன் முன்னிலையில் சாதி மதங்கள் கூடாது என்றார் பாவேந்தர். இன்று அரசு அதனைச் செயல்படுத்திவிட்டது.

உலகம் அறிவியலில் எவ்வளவோ முன்னேறி விட்டது. ஆனால் மக்களை ஏமாற்றுவது மட்டும் குறைந்தபாடில்லை. அறிவியல் வளர வளர மக்களிடையே நீதி, நியாயம் ஏதும் இல்லாமல் போய்விட்டது. உயிரினும் ஓம்பப்பட்ட ஒழுக்கம் கூடச் சீர்குலையத் தொடங்கி விட்டது. அறிவியல் இந்த அளவிற்கு முன்னேறியும் மக்களிடையே ஏன் இந்தக் குறைபாடு? இக்குறைபாட்டினை நையாண்டி செய்வதுபோல்,

**அறிவு வளரவளரத் தருமம் அரோகரா — ஒழுக்கம்**
**அரோகரா**

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 4, பா. 164.

என்று கூறுகின்றார். எனவே இந்நிலைகளில் இருந்து மக்கள் விடுதலை பெற வேண்டுமானால் நாட்டில் தனியுடைமை ஒழிதல் வேண்டும் என்கின்றார்.

### தொழிலாளர் நிலை

ஆண்டானின் கொடுமையாலும் தனியுடைமையினால் விளைந்த சீர்கேட்டினாலும் துயரப்படுபவர் தொழிலாளர்கள், ஏழைகள், வாழ்க்கை என்பது துன்பந்தான் என்பதனை ஏற்றுக் கொண்ட அபலைகள். அவர்களின் துயரநிலையினை எண்ணி எண்ணி வேதனைப்படுகின்றார் பாவேந்தர்.

**காண்ப தெல்லாம் தொழிலாளி செய்தான் — அவன்**
**காணத் தகுந்தது வறுமையாம் — அவன்**
**பூணத் தகுந்ததும் பொறுமையாம்**

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 155,

**ஏழைகள் அனைவரும் கூழைக் குடிக்க**
**வாழை இலையில் வார்த்த நெய் ஓடையில்**
**மிதக்கும் பல்கறிச் சோறு விழுங்கும்**
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 84.

மற்றவர்கள் எத்தனை நாளைக்குத்தான் அதே நிலையில் இருப்பர். தொழிலாளர்களின் — ஏழைகளின் இவ் ஏழ்மை நிலை நீங்கி இன்ப வாழ்வு அவர்களுக்குக் கிட்ட வேண்டுமானால் தொழிலாளர்கள் புரட்சி செய்தல் வேண்டும். புரட்சியால் மட்டுமே புரையோடியுள்ள இந் நிலை மாறமுடியும். அதற்குத் தொழிலாளர்கள் ஒன்று படுதல் வேண்டும், ஒற்றுமையே வெற்றிக்கு வழி.

**தொழிலாளர் ஒற்றுமை**

ஒற்றுமை வெற்றிக்கு வேர். தொழிலாளர் ஒன்றுபட ஓர் இயக்கம் வேண்டும். சங்கம் வேண்டும். சங்கம் வைத்துக் கொண்டால்தான் 'சங்கம்' என்ற பெயரால் தொழிலாளர் ஒன்றுபடுதல் முடியும். ஒற்றுமை, சங்கம், வெற்றி மூன்றும் ஒன்றை ஒன்று பிரிந்து செயல்பட முடியாதன.

**சிங்கங்கள் போல் — இளஞ்**
**சிங்கங்கள் போல் — பலம்**
**சேர்ந்திடும் ஒற்றுமை சார்ந்திடலாலே**
**சங்கங்களால் — நல்ல**
**சங்கங்களால் — மக்கள்**
**சாதிக்கக் கூடும் பெறாப் பெருங்காரியம்**
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 2, ப. 114.

என்றும்,

**ஒற்றைக் கை தட்டினால் ஓசை பெருகிடுமோ?**
**மற்றும் பலரால் வளம் பெறோமோ தோழர்களே**
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 135.

என்றும் கூறுகின்றார் பாவேந்தர்.

## தொழிலாளர் புரட்சி

'புரட்சி' என்ற சொல் புரட்டு என்ற சொல்லில் இருந்து உருவாகியது. புரட்டுதல் என்றால் ஒன்றை தலைகீழாகச் செய்தல் என்று பொருள். எனவே புரட்சி என்பதற்கு ஒன்றைத் தலைகீழாக மாற்றுவது என்று பொருள்.

சீர்திருத்தத்திற்கும் புரட்சிக்கும் சிறிது வேறுபாடு உண்டு. சீர்திருத்தம் என்பது ஒன்றில் உள்ள குறைகளை நீக்கி அதனைப் பயன்படுத்திக் கொள்வது. புரட்சி என்பது ஒன்றினைத் தூக்கி எறிந்துவிட்டு வேறொன்றை அங்கு வைப்பது. அரசாங்கத்தில் குறைகள் இருந்தால் அக்குறை களை நீக்குதல் சீர்திருத்தம். அவ்வரசாங்க முறையையே தூக்கி எறிந்துவிட்டு வேறொரு ஆட்சிமுறையை மேற் கொள்வது புரட்சி. இப்புரட்சியினைத் தொழிலாளர்களே செய்தல் வேண்டும். எத்தனை காலத்திற்குத்தான் அவர்கள் பொறுமையுடன் இருப்பர்.

> ஆள்பவர் சிற்சிலர்; ஆட்பட்டிருப்பவர் பல்லோர்—எனில்
> அல்லல் அடைபவர் அப்படியே என்றும் நில்லார்.
>
> —பாரதிதாசன் கவிதைகள், தொகுதி, 2, ப. 33.

அதனால் அவர்களுக்கும் சமஉரிமை கொடுத்து நன் முறையில் வாழ வழிகோல வேண்டும். ஆனால் இங்கு யாரும் அதனைச் செய்வதாய் இல்லை. அவர்கள் செயலால் வெகுண்டெழுந்த பாவேந்தர்,

> சுருட்டுகின்றார் தம்கையில் கிடைத்தவற்றைச்
> சொத்தையெல்லாம் தமக்கென்று சொல்வார் தம்மை
> வெருட்டுவது பகுத்தறிவே! இல்லை யாயின்
> விடுதலையும் கெடுதலையும் ஒன்றே யாகும்
>
> — பாரதிதாசன், பாண்டியன் பரிசு, ப. 99.

என்கின்றார். நாடு விடுதலை பெற்றுவிட்டது. அயலான் ஆங்கிலேயனிடமிருந்து நாம் விடுதலை அடைந்து

விட்டோம். ஆனால் இத்தகைய ஆண்டான்களிடமிருந்து நாம் இன்னும் விடுதலை அடையவில்லை. இத்தகைய கொடியோரிடமிருந்து நமக்கு விடுதலை கிடைக்காத வரையில் ஆங்கிலேயரிடம் இருந்து கிடைத்த விடுதலையும் ஒன்றுதான்; கேடும் ஒன்றுதான். விடுதலை கிடைத்தும் பயன் ஏதும் இல்லை. 'புளிக்காத சோறும், கிழியாத ஆடையும், ஒழுகாத வீடும் இந்தியாவில் உள்ள அனைவருக்கும் என்று கிடைக்கின்றதோ அன்றே நாம் பெற்ற சுதந்திரத்தின் முழுப்பயனையும் அடைந்தவர்கள் ஆவோம்'' என்று ஒருமுறை காமராஜர் அவர்கள் கூறினார். அந்நிலையை எய்த முடியாத அளவிற்கு ஆளும் வர்க்கம் — முதலாளி வர்க்கம் தொழிலாளர்களுக்கு இன்னல் கொடுத்துக் கொண்டே வருகின்றது. இதனால் வெறுப்புற்ற பாவேந்தர் கொதித்தெழுந்து தொழிலாளர்களிடம் கூறுகின்றார்.

கொலை வாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே
குகைவாழ் ஒரு புலியே உயிர்
குணமேவிய தமிழா!

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 173.

புறப்படு, கொலைவாளை எடுத்துக் கொண்டு புறப்படு.

கட்டா தென்று கதறுகின்ற
தொழிலாளர்க் கெலாம் வழிசெய வேண்டும்.

—பாரதிதாசன், குறிஞ்சித்திட்டு, ப. 8.

புறப்படு உங்கள் உழைப்பை உறிஞ்சி உயிர்வாழும் அட்டைகளை ஒழிக்கவேண்டும்.

சடுகுடு என்றே நெய்வீர் கந்தையில்லை
தார்வேந்தன் கட்டுவது சரிகைவேட்டி
கடல் நடுவில் முத்தெடுப்பீர் கஞ்சி இல்லை
கடனறியா வேந்தனுக்கு முத்துத் தொங்கல்

தோன்றுமா? பாவேந்தரின் பொதுவுடைமைக் குடியரசில் நாடு எப்படியெல்லாம் நிருவகிக்கப்பட்டு வருகின்றது என்பதனைச் சுருக்கமாகக் காண்போம். எல்லாருக்கும் எல்லாம் என்பது அவரது அரசின் உயிர்நாடி.

எல்லாருக்கும் தேசம் எல்லாருக்கும் உடைமையெலாம்
எல்லாருக்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே
எல்லாருக்கும் கல்வி சுகாதாரம் வாய்த்திடுக
எல்லாருக்கும் நல்ல இதயம் பொருந்திடுக
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 50.

போன்றவையும்,

கல்லாரைக் காணுங்கால் கல்விநல்காக்
கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டாம்
இல்லாரும் ஆங்கில்லை; பிறன் நலத்தை
எனதென்று தனியொருவன் சொல்லான் அங்கே
— பாரதிதாசன், பாண்டியன் பரிசு, ப. 99.

போன்றவையும்,

நாட்டினிலே குடியரசை நாட்டிவிட்டோம் இந்நாள்
நல்லபல சட்டங்கள் அமைத்திடுதல் வேண்டும்
காட்டாமே சாதிமணம்! கலப்பு மணம் ஒன்றே
நல்வழிக்குக் கைகாட்டி! கட்டாயக் கல்வி
ஊட்டிடுவோம் முதியவர்க்கும் மாணவர்க்கும்நன்றே
உழையானை நோயாளி ஊர்திருடி என்போம்
கேட்டைஇனி விலைகொடுத்து வாங்கோம்; சாதி
கீழ்மேல் என்றுரைப்பவர்கள் வாழ்வது சிறையே
— பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 86.

போன்றவையும் அவர் காட்டும் அரசின் கொள்கைகளாக உள்ளன.

இவ்வாறு, தமிழ் இயக்கத்திலும், தன்மான இயக்கத்திலும் சீர்திருத்த இயக்கத்திலும் புதியபுதிய புரட்சிகளைச் செய்து புரட்சிக் கவிஞராகக் காட்சி அளிக்கும் பாவேந்தர்

அழகின் சிரிப்பில் இயற்கையை நுகருபவராகவும், ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பதன் மூலம் உருவ வழிபாடு அற்ற ஓர் கடவுளை ஏற்றுக்கொள்பவராகவும், காதல் மணம், கலப்பு மணம், மறுமணம் முதலான பல இடங்களில் பெண்மையைப் போற்றுபவராகவும் இருந்து இயற்கை நுகர்தல், கடவுள் வாழ்த்தல், பெண்மை போற்றல் என்ற மூன்று இலக்கணங்களும் அமையப் பெற்ற பச்சைத் தமிழனாகவும், நம் இச்சைக்குரிய பச்சைத் தமிழனாகவும் காட்சி அளிக்கின்றார்.

### அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம், 'கற்பியல்' (இளம்பூரணம்), நூற். 47.
2. திருக்குறள் 392.
3. நாலடியார், 'கல்வி', 1.
4. தொல்காப்பியம், 'பொருளியல்' (இளம்பூரணம்) நூற். 27.
5. திரு. வி. கல்யாணசுந்தரனார், 'பெண்ணின் பெருமை', முன்னுரை.
6. பாரதியார், பாரதியார் பாடல்கள், ப. 42.
7. புறநானூறு, 187.
8. திரு. வி. கலியாணசுந்தரனார், பெண்ணின் பெருமை, பக். 20-21.
9. திருக்குறள் 467.
10. மு. அப்துல் கறீம், பாரதிதாசன் பாட்டுத்திறம், ப. 39.
11. திரு. வி. கலியாணசுந்தரனார், பெண்ணின் பெருமை, ப. 208.

12. குறுந்தொகை, 40.

13. தொல்காப்பியம், புறத்திணையியல், (இளம்பூரணம்), நூற். 19.

14. மேற்படி, நூற். 19.

15. புறநானூறு, 249.

16. மணிமேகலை, 2-42-48.

17. திரு. வி. கல்யாணசுந்தரனார், பெண்ணின் பெருமை, ப. 297.

18. மேற்படி.

19. மு. அப்துல் கறீம், பாரதிதாசன் பாட்டுத்திறம், பக். 36-37.

# தன்மான இயக்கம்
# (சுயமரியாதை இயக்கம்)

மனிதனை மனிதனாக மதிக்க வேண்டும் என்பதே தன்மான இயக்கத்தின் உயிர்நாடி. அதாவது, பிறந்த சாதி அடிப்படையிலோ அல்லது செய்யும் தொழில் அடிப்படையிலோ மனிதனைப் பாகுபடுத்தி இவன் உயர்ந்தவன் இவன் தாழ்ந்தவன் என்று பேசுதலோ, செயல் படுத்தலோ கூடாது. இவ்வடிப்படையிலேயே பாவேந்தரின் தன்மான இயக்கம் இயங்குகின்றது. பாவேந்தரின் இவ் வியக்கத்தில் மூன்று முக்கியக் கூறுகள் வேறென மிளிர் கின்றன. ஒன்று, சாதி மத மறுப்பு, பிறிதொன்று கடவுள் மறுப்பு, மற்றது மானுடத்தைப் போற்றல். இப்பகுப்பின் வழி அன்னாரது இவ்வியக்கத்தை விரிவாகக் காண்போம்.

### சாதி மதங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மனிதன் தனித்தனி யாக வாழ்ந்து கொண்டிருந்தான் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுவர். இந்நிலையில் அவன் வாழ்க்கை இயற்கையை எதிர்த்துப் போராடுவதாகவே இருந்தது. விலங்குகள், தீ, புயல், அடைமழை போன்ற இயற்கையின் சீற்றத்தை எதிர்த்துப் போராடியே வாழ்ந்து வந்தான். இப்போராட்டத்தின் முடிவில் அவன் தோல்வி காணும் போது அவற்றை அச்சத்தின் காரணமாக வணங்கத் தலைப்

பட்டிருப்பான். நாக வழிபாடு, இந்திர வழிபாடு, அக்கினி (தீ) வணக்கம், சூரிய (ஞாயிறு) பகவான் வழிபாடு போன்றவை அவ்வாறுதான் தோன்றியிருக்க வேண்டும். எனவே மனிதன் தனித்தனியாக வாழ்ந்த அக்காலத்திலேயே இயற்கை வழிபாடு தோன்றிவிட்டது எனலாம்.

பின்பு மனிதர்கள் கூடி வாழக் கற்றுக் கொண்டனர். அவ்வாறு கூடி வாழ்ந்த காலத்தும் 'இயற்கை வழிபாடு' மக்கள் வாழ்க்கையில் முதலிடம் பெற்றிருந்தது. 'இந்திர விழவூரெடுத்த காதை' இதனை உணர்த்தும். மேலும் இக்காலத்தில் தமிழர்கள் தை மாத முதலில் ஞாயிற்றையும் காளையையும் வழிபடுகின்றனர். தீயை — தீபத்தை வழிபடுதலே கார்த்திகை தீப வழிபாடாக, கார்த்திகைச் சாறாக மலர்ந்தது.

மனிதர்கள் கூடிவாழத் தலைப்பட்டதும் வாழும் இடத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்பத் தங்கள் தொழிலை நடத்தி வந்தனர். அந்நிலையில் அவர்கள் செய்யும் தொழில் அடிப்படையில் பெயர் பெற்றனர். வேட்டுவன், பொதுவன், ஊரன் (அல்லது) உழவன், நுளையர் (அல்லது) பரதவர் போன்ற திணை அடிப்படையிலான பாகுபாடே தொல்காப்பியனார் காலத்திற்கு முன்பு இருந்தது. மக்கள் பெருக்கம் மிகுந்ததாலும், மக்களுக்கிடையே போக்குவரத்து மிகுதியானதாலும், மக்களுக்கிடையே ஒருதிணை மக்கள் பிறதிணையில் வாழத் தலைப்பட்டனர். அந்நிலையில் அவர்கள் எத்தொழில் செய்கின்றனரோ அதன் அடிப்படையில் பாகுபாடு செய்யப்பட்டனர். ஒருவன் எத்தொழிலையும் செய்யலாம் என்ற முறை பழந்தமிழகத்தில் இருந்தது.

இத்தருணத்தில்தான் ஆரியர்களின் இந்திய வருகை அமைந்தது — மத்திய ஆசியாவில் இருந்து இந்தியாவிற்கு வரும் வரையில் அவர்களது வாழ்க்கை நாடோடி வாழ்க்கையாகவே இருந்தது. அவர்களின் பாகுபாடு

நான்கு பெரும்பிரிவாக இருந்தது. அவர்கள் வேதங்களைப் படிப்பவன் 'பிராமணன்' என்றும், போர்த்தொழில் செய்பவன் 'சத்திரியன்' என்றும், வணிகம் செய்பவன் 'வைசியன்' என்றும், பிற தொழில்களைச் செய்து வாழ்பவன் 'சூத்திரன்' என்றும் மனிதர்களைப் பாகுபாடு செய்தனர்.

பிராமணர்கள் தங்களைத் தவிர்த்து, அரசன், வணிகன், வேளாளன், என்ற மூவரையும் 'சூத்திரன்' என்று பிரித்தனர். இவர்களுக்கு இன்னின்ன தொழில்தான் என்றும் வரையறுத்தனர்.

> **வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது**
> **இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி**[1]

என்பதைத் தொல்காப்பியம் காட்டுகின்றது. தொழில் அடிப்படையிலான இப்பாகுபாடு நாளடைவில் பிறப்பு அடிப்படையிலான பாகுபாட்டிற்கு வழிவகுத்தது.

இத்தகைய பாகுபாட்டிற்குச் சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று கூறி மக்களை ஒன்று சேர்த்துப் பார்த்தனர். ஆனால் இவற்றையும் மீறிச் சாதிப்பாகுபாடு வேகமாகப் பரவி வேரூன்றத் தொடங்கியது.

சங்க காலத்திற்குப் பிறகு பல்லவர் காலத்தில் மதமும், சாதியும் மன்னர்களையும், மக்களையும் ஆட்டிப் படைத்தன. புலவர்களும் இதன் அடிப்படையிலேயே பாடல்களைப் புனைந்தனர். பிற்காலச் சோழர் காலத்தும் சாதிமத பேதங்கள் மிகுந்தன; ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தும் இவ்வகைப் பேதங்கள் தொடர்ந்தன. இந்நிலையில்தான் தன்மான இயக்கம் தோன்றுகின்றது.

### பாவேந்தரும் தன்மான இயக்கமும்

தொடக்கக் காலத்தில் பாவேந்தர் கடவுட் பாடல்கள் எழுதிவந்தார். தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள

மயிலம் என்ற ஊரில் உள்ள சுப்பிரமணியக் கடவுள் மீது 'மயிலம் ஸ்ரீசுப்பிரமணியர் துதியமுது' என்ற நூலை எழுதினார். பிற்காலத்தில் பகுத்தறிவுப் பகலவன் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தால் ஈர்க்கப்பட்டுத் தன்மானக் கவிஞராக, புரட்சிக் கவிஞராக, மாறினார். புதுச்சேரியில் பெரியாரின் உரையைக் கேட்ட பின்புதான் கடவுள் மறுப்புப் பாடல்களை எழுதத் தொடங்கினார்.

"சங்க மருவிய காலம் முதல் புதுமைக் கவிஞர் என்று போற்றப்படும் சுப்பிரமணியக் கவிஞர் காலம் வரையில் தமிழ் இலக்கியத்தை அடக்கி ஆண்டு வழி நடத்திய மத வழிச் சிந்தனைகளையும் நம்பிக்கைகளையும் மீறிச் சமயச் சார்பற்ற கருத்துக்களை அந்த இடத்திலே அமர்த்தினார் என்பதே சுப்புரத்தினக் கவிஞர் செய்த முதல் புரட்சி.[2]". அத்துடன் நில்லாமல் சமயங்களையும் சாதிகளையும் சாடினார். சாதி என்பதே தமிழுக்கில்லை, தமிழருக் கில்லை என்று உறுதியாகக் கூறுகின்றார்.

**மிக்குயர்ந்த சாதி கீழ்ச் சாதி என்னும்**
**வேற்றுமைகள் தமிழ்க்கில்லை தமிழர்க் கில்லை**
**பொய்க்கூற்றே சாதி எனல், ஆரியச்சொல்**
**புதுநஞ்சு! பொன்விலங்கு! பகையின் ஈட்டி**

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 57.

என்று சாதி என்பது ஆரியச்சொல் என்றும், அது தமிழர்க்கு நஞ்சு போன்றது, விலங்கு போன்றது, பகையின் ஈட்டி போன்றது என்றும் ஒப்புமை காட்டுகின்றார். இதன் நோக்கம் சாதி என்ற நஞ்சு அழிக்கப்பட வேண்டியது, சாதி என்ற விலங்கு நொறுக்கப்பட வேண்டியது, சாதி என்ற ஈட்டி ஒடிக்கப்படவேண்டியது என்பதேயாகும்.

### சாதி ஒரு பழிச்சின்னம்

ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு சின்னம் இருக்கும். அது தேசியச் சின்னம் என்று அழைக்கப்படும். இந்தியாவின்

தேசியச் சின்னமாக அசோகச் சக்கரம் விளங்குகின்றது. மேலும் தேசியப் பூ, தேசியப் பறவை, தேசிய விலங்கு என்று ஒவ்வொரு நாட்டிற்கும் உண்டு. இவை மட்டுமல்லாது பாரத நாட்டிற்கு அமைந்த வேறொரு சின்னம் உண்டு. அது,

**பஞ்சமர் பார்ப்பனர் என்பதெல்லாம் என்ன?**
**பாரதநாட்டுப் பழிச்சின்னத்தின் பெயர் தோழா**

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 163.

என்று, சாதி 'என்பது பாரத நாட்டின் பழிச்சின்னமாக விளங்குகின்றது என்கின்றார். அப்பழியை நீக்குவது நமது கடமையல்லவா? ஆனால் இன்று நாம் அப்பழிச்சின்னத்தை அழிக்க முனையாமல் போற்றிக் கொண்டல்லவா இருக்கின்றோம். இவ்வுலகத்தின் இன்றைய நிலை என்ன? சாதியால் சண்டைகள் மலிந்து கிடக்கின்றன. இதனை எண்ணியே பாவேந்தர்,

**இருட்டறையில் உள்ளதடா உலகம், சாதி**
**இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே!**
**மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே**
**வாயடியும் கையடியும் மறைவதெந்நாள்?**

—பாரதிதாசன், பாண்டியன் பரிசு, ப. 99.

என்று கேட்கின்றார். சாதியால் வரும் கேடு கொஞ்சமா? சாதியின் பெயரால் எத்தனை காதல் உள்ளங்கள் பிரிக்கப்படுகின்றன. எத்தனை உள்ளங்கள் மேல் சாதியை நோக்கி ஏங்கித் தவிக்கின்றன. எத்தனை இள உள்ளங்களில் கொந்தளிப்புப் பொங்கிப் பொங்கி அடங்குகின்றது. இத்தகைய கேடுகள் இல்லாமல் சாதி இருப்பதால் என்ன பயன்? மேலும்,

**சாதியால் சமயங்களால்**
**அறிவு தழைக்காது**
**தமிழ் நூலில் மடமையே**
**இருக்காது**

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 4, ப. 145.

என்கின்றார். அறிவு வளராத ஓர் இனம் எந்தப் பயனை எய்திவிட முடியும். மக்கள் அனைவரும் அறிவு பெற வேண்டுமானால் இந்தச்சாதி சமயங்களை நாட்டைவிட்டு ஓட்டவேண்டும். சாதி சமயங்களால் ஏற்படும் தீமைகளை எடுத்துக் கூறும் பாவேந்தர் அதற்கான வழியையும் கூற வேண்டாவா?

"சமுதாயத்தின் புண்களுக்கு மருந்திடாமல் தாண்டி ஓடுவோர் உருப்படியாக என்ன சாதிக்க இயலும்? குறைகளைக் கடிந்திடாமல், குற்றங்களைச் சாடிடாமல், சமுதாயக் கோளாறுகளைக் கண்டித்திடாமல், இவற்றிற்குத் தக்கவழி காட்டிடாமல் கவிதைகளை எழுதிக் குவித்திடுவோர் இடிப்பாரை இல்லாத மன்னனைப்போல் சமுதாயத்துக்குக் கேடுதான் செய்வர்[3]" அவர்களால் எப் பயனும் இல்லை. பாவேந்தரும் மாற்றத்திற்குத் தக்க வழியையும் காட்டுகின்றார்.

சாதியும் சமயமும்தான் நோய் என்று கண்ட பின்பு அந்த நோயின் மூலம் எது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நோயை முழுமையாக நீக்க முடியும்.

**நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்[4]**

என்பார் வள்ளுவர். அதற்கிணங்கப் பாவேந்தரும், சாதி நோயின் மூலம்—வேர்— ஆரிய ஆதிக்கமே என்று உறுதியாகக் கூறுகின்றார்.

"தம்மை உயர்வாகக் கருதிக்கொண்டு பிறரைத் தாழ்த்தும் மனப்பான்மை எல்லாரிடமும் உள்ளது. எனினும் ஆரியருக்கு அது மிகுதி எனலாம். அவர்கள் சென்று தங்கிய இடங்களில் எல்லாம், அங்குள்ளவர்களோடு கலந்து பழகி அவர்களின் நாகரிகப் பழக்க வழக்கங்களையும், கலைகள் முதலியவற்றையும் தம்முடையனவாக ஆக்கிக் கொண்டு, பிறகு உயர்வெல்லாம் தமக்கே என்றும்,

அங்கு வாழ்வோர் அனைவரும் காட்டுமிராண்டிகள் என்றும் தூற்றும் இயல்பினராக விளங்கினர்''[5] இவ்வாறு தங்களை அறிஞர்களாக மாற்றிக்கொண்ட ஆரியர்கள் தமிழக மன்னர்களை ஆட்டிப்படைக்கும் சக்தியாக மாறினர். அல்லது அதற்குத் தமிழக மன்னர்கள் இடம் கொடுத்தனர். அவர்கள் மன்னனுக்குக் கூறும் அறிவுரை,

ஓராயிரம் பேர் ஒழிந்துபோ கட்டுமே
மற்றவர் வழிக்கு வருவா ரன்றோ?
திருத்த வேண்டும் திருந்துவர்
மக்களைத் திருத்தல் மன்னன் கடமை
மனுநூல் நாட்டில் வழங்க வேண்டுமே
அதற்குப்
பார்ப்பனர் காப்பாற்றப் படுதல் வேண்டும்
ஆள்வோர் பார்ப்பனர் சொற்படி
ஆள வேண்டும்
விளைபொருள் விற்பவர் வேண்டும்
... ... ... ... ... ...
திருவடி தொழுது நம் பெருமை காக்கவும்
வரும்படி நமக்கு வைத்து வணங்கவும்
நாலாம் வகுப்பு நமக்கு வேண்டுமே
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 63.

என்பதாகும். இவ்வாறு நான்கு வருணக் கோட்பாட்டை உண்டாக்கி, சாதிக்கொரு நீதி சொல்லும் மனுநீதியைக் காக்க வேண்டுவது மன்னனின் கடமையாம் என்று கூறிக் கூறி மன்னர்களின் சிந்தனையைக் குருடாக்கி வந்தனர். மன்னர்களை மட்டுமல்லாது பொதுமக்களையும் ஏமாற்ற எத்தனித்தனர்

அகத்தியக் குள்ளன் ஆரியர் கொள்கையைப்
புகுத்தினான் செந்தமிழ்ப் பொன்னா டதனில்!
ஆதலால் ''குள்ளனை அணுவும் நம்பாதே''
என்ற பழமொழி அன்று பிறந்தது

... ... ... ... ... ... ...
இராத தொன்றில்லை திராவிட நாட்டில்
இந்த நிலையில் வந்தான் அகத்தியன்
... ... ... ... ... ... ...
செல்வம் முற்பிறப்பிற் செய்தநல் வினைப்பயன்
என்று புதுக்கரடி ஒன்றை ஏவினான்
... ... ... ... ... ... ... ...
'ஆன்மா என்றும் அழியா' தென்று
மற்றொரு புதுக்கரடி தெற்றென விட்டான்.

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப.110.

இவ்வாறு மக்களை ஏய்த்து அவர்களிடம் பொய்கூறி மடமையை உண்டாக்கினர். இவர்களின் வேலை தமிழர்களைப் பின்னுக்குத் தள்ளுவதே. இதனைத் தமிழன் நன்கு உணர்தல் வேண்டும் எனப் பாவேந்தர் வலியுறுத்து கிறார்.

'இப்பார்ப்பனரும் செங்கோல் ஏந்தும் பிறரும்' மக்களைச் சார்ந்து மக்களோடு மக்களாக ஒன்றாதல் வேண்டும்.

... ... பார்ப்பனரும், கையில்
செங்கோல் ஏந்தும் பிறரும் மக்களைச் சார்ந்தாரே
பெருவாழ்வுக்கு இவையெல்லாம் அடிப்படைத்
திட்டங்கள்.

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 87.

சாதி சமயம் ஒழிந்து நல்வாழ்வு ஏற்பட வேண்டுமானால் அந்தணரும் ஆள்வோரும் மக்களோடு மக்களாய்ச் சேர்ந்து ஒன்றாதல் வேண்டும். வணிகரையும் வேளாளரையும் விட அந்தணரும், ஆள்வோரும் பிறப்பால் உயர்ந்தவர் என்ற எண்ணம் மிகுதியாக இருந்ததால் இவ்விருவரை மட்டும் குறிக்கின்றார்.

### மூடநம்பிக்கையை ஒழித்தல்

சாதி சமயங்களை ஒழித்துவிட்டால் மட்டும் அறியாமை நீங்கி அறிவு வளர்ந்துவிடாது. சாதி சமயங்கள் ஒழிவதுடன் அவற்றால் உண்டாகிய மூட நம்பிக்கைகளும் ஒழிய வேண்டும். கண்மூடித்தனத்தால் நாம் என்ன சொல்கின்றோம், எதைச் செய்கின்றோம் என்று தெரியாமலேயே மக்கள் வாழ்கின்றனர். அவர்களின் எழுச்சிக்கு, அறிவின் வளர்ச்சிக்கு மூடநம்பிக்கை ஒழிதல் வேண்டும். இம்மூட நம்பிக்கைகளைப் பெரும்பாலான மக்கள் பின்பற்றுகின்றனர் என்ற காரணத்திற்காகவோ, தொன்றுதொட்டு வரும் ஒன்று என்பதற்காகவோ அதனை நாம் போற்ற வேண்டிய தேவையில்லை. அவ்வாறு இருப்பதில் ஒன்று 'சாதகம்' (சோதிடம்). தமிழர்களிடம் சிறந்த வானவியல் கலையாக இருந்த இக்கலை பிற்காலத்தில் பொய்க்கலையாகி விட்டது. பாவேந்தர் காட்டும் இருவரைக் காணுங்கள். அவர்களின் உரையாடல் வருமாறு. முதலில் சோதிடம் கேட்க வந்தவர் சாதகத்தைச் சோதிடரிடம் கொடுக்கின்றார். அதனைப் பார்த்துச் சோதிடர் கூறுவதில் உரையாடல் தொடங்குகின்றது.

இந்த வைகாசி எட்டுத் தேதிக்கு
முந்தியே திருமணம் முடிந்திட வேண்டும்

அத்தனை விரைவிலா? அத்தனை விரைவிலா?

நடுவில் ஒரேஒரு தடையிருப்பதால்
ஆடியில் திருமணம் கூடுதல் உறுதி

ஆடியில் திருமணம் கூடுமோ ஐயரே?

ஆடிக் கடைசியில் ஆகும் என்றால்
ஆவணி முதலில் என்றுதான் அர்த்தம்

—பாரதிதாசன், தொகுதி 3, ப. 121.

இவ்வாறு வாய்த்திறனில் மட்டுமே இக்கலையை வளர்த்து விட்டனர். எனவே இத்தகைய பொய்யான — மனித மனத்திற்குச் சாதகமாகக் கூறப்படும் சாதகம் போன்ற அனைத்து மூடநம்பிக்கைகளும் ஒழியவேண்டும்.

"மனித நம்பிக்கைகளுக்கு மதிப்பளிக்காமல் மதம் மூடத்தனத்தை வளர்ப்பதால் அல்லவா பிழைக்க வழியின்றி வாடுகின்றோம்; பிறருக்கு அடிமையாகி வாழ்ந்திருக் கின்றோம்; சாத்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள் என்பவை சமயம் போட்ட குட்டிகள். இவை தூயவை எனச் சமயம் இட்டுக் கட்டுகின்றது."[6]

பேடி வழக்கங்கள் மூடத்தனம் — இந்தப்
பீடைகளே இங்குச் சாத்திரங்கள்.
—பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 1, ப. 69.

இச்சாத்திரங்கள் எல்லாம் தொலைதல் வேண்டும். இவை யெல்லாம் தமிழரின் நாகரிகம் என்பதற்கு,

சாதியில்லை என்பதுதான் எங்கள் நாகரிகம்
சமயமில்லை என்பதுதான் எங்கள் நாகரிகம்
—பாரதிதாசன், குறிஞ்சுத்திட்டு, ப. 131.

என்றுஆர்ப்பரிக்கின்றார் பாவேந்தர். தமிழ் நாகரிகத்தின் மணிமுடியை இரண்டே அடிகளில் கூறிவிட்டார். தமிழ் நாகரிகத்தைக் கூறிய பாவேந்தர், தமிழ்வாழ்வு எது என்பதற்கு,

ஆயிரம் சாதிகள் ஒப்பி — நரி
அன்னவர் காலிடை வீழ்ந்து
நாய்களைப் போல் தமக்குள்ளே — சண்டை
நாளும் வளர்க்கும் மதங்கள்
தூயனவாம் என்று நம்பிப் — பல
தொல்லை அடைகுவ தின்றி
நீஎனல் நான்எனல் ஒன்றே — என்ற
நெஞ்சில் விளைவது வாழ்வு
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 2, ப. 159.

என்ற விளக்கத்தைத் தருகின்றார் பாவேந்தர். இவ்வாறு 'கட்டில்லாமல் கீழ் மேல் என்னும் கண்மூடித்தன வழக்கம் இல்லாமல் தமிழகம் விளங்க வேண்டும். இத்தகைய கட்டில்லா நாட்டில்தான் மட்டில்லா மகிழ்ச்சி நிலவும்; அம்மாற்றம் நிகழ்தல் வேண்டியே தாம் படைத்த நூல்களில், காப்பியங்களில், இருவேறுபட்ட சாதியில் பிறந்த இருவரை மணமக்களாக இணைத்துக் காண்கின்றார். 'புரட்சிக் கவி' அதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டு.

**வந்தவன் ஆண்சாதி என்றால் — அவனை**
**மணந்தவள் பெண்சாதி யன்றோ?**

—பாரதிதாசன், காதற்பாடல்கள், ப. 13.

என்று சாதிப்பாகுபாடு அற்ற மணவாழ்க்கையை ஆதரிக்கின்றார். இம்மண வாழ்க்கையைச் சுயமரியாதை இயக்கத்தார் கூறும் வகையில் முடித்தல் வேண்டும் என்று கூறி அம்முறையினையும் விளக்குகின்றார்.

**இந்நாட்டின் முன்னேற்றம் எண்ணி உழைக்கின்ற**
**நன்னோக்கம் நண்ணும் சுயமரியாதைக் காரர்**
**காட்டும் நெறியே சுயமணத்தை நீ முடிப்பாய்.**

—பாரதிதாசன், காதல் நினைவுகள், ப. 46.

**அமிழ்தைத் தமிழென்று பேசும் அழகிய**
**தமிழ்மண வீட்டில் உமிழத் தக்க**
**வடமொழிக் கூச்சலா? இன்பவாழ்வு**
**தொடங்கையில் நடுவிற் சுடுநெருப்பா?**

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 215.

என்று தமிழர் மணமுறையில் இருக்கக் கூடாததை எடுத்தியம்புகின்றார். திருமணம் என்பது ஆயிரங் காலத்துப் பயிர். காதலுற்ற இரு உயிர்களின் உள்ளங்கள் ஒன்றாவது போல் ஈருடலும் ஒருடலாய் இழையும் நாள்.

எவ்வளவு புனிதமான நாள். இந்நாளில் கெட்ட சகுனம் போல் அங்கு வடமொழி எதற்கு? அந்த அபசகுனத்தைத் தூக்கி வெளியில் எறி. இன்பம் பொங்கும்; மணநாள் சிறப்படையும். வாழ்நாள் அந்நாளை அடைய நாம் சாதிமத பேதங்களை மறந்து ஒன்றுபட வேண்டும். ஒன்று பட மறுக்கும் மக்களை ஒன்றுபடுத்தல் வேண்டும்.

பன்மதம் சேர்ந்த பலகோடி மக்களும்
நாங்கள் ஒன்றுபட்டோம் என்று நவின்றார்
மதங்களின் தலைவர் விரைந்து வந்து
பிரிந்திருங்கள் என்றா பிதற்றுவார்?
அவர்கள் அருள்உள்ளம் கொண்டவர் அல்லவோ?

என்று, மக்கள் அனைவரும் ஒன்றுபடுதலை மென்மையாக எடுத்துக் கூறுகின்றார். ஒன்றுபட மக்கள் மறுத்தார் பாவேந்தரின் உள்ளத்திலிருந்து புரட்சி பீறிட்டெழுகின்றது.

சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள்
தாங்கிநடை பெற்றுவரும் சண்டை உலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலக்கழிப்போம்; பின்னர்
ஒழித்திடுவோம்; புதியதோர் உலகம் செய்வோம்!
பேதமிலா அறிவுடைய அவ்வுலகத் திற்குப்
பேசு சுயமரியாதை உலகெனப் பேர் வைப்போம்
ஈதே காண், சமூகமே யாம் சொன்னவழியில்
ஏறுநீ, ஏறுநீ, ஏறுநீ, ஏறே!

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 146.

இப்பாட்டில் பாவேந்தரின் சாதிமத பேதம் பற்றிய அவரின் கொள்கையை முழுமையாகக் காணமுடிகின்றது.

### கடவுள் மறுப்பு

மிகப் பழங்காலத்திலிருந்தே இறைவழிபாடு உலகெங் கிலும் இருந்து வருகின்றது. கி.மு. 10ஆம் நூற்றாண்

டிற்கும் முன்பே பல உருவங்களை உடைய கடவுள்களை மக்கள் வழிபட்டு வந்தனர் என்பதனைப் பண்டைய கிரேக்கக் காவியங்களான இலியட்டும் ஒடிசியும் உணர்த்துகின்றன. இந்தியாவில் கூடச் சிந்துசமவெளி நாகரிக மக்கள் 'பசுபதி' 'லிங்கம்' போன்ற வடிவங்களைக் கடவுள்களாக வழிபட்டனர் என்பதை அகழ்பொருள் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இன்றளவிலும் உலக நாகரிகத்துடன் இணையாத பழங்குடி மக்களிடமும் உருவ வழிபாடு இருந்து வருகின்றது என்பதனை நீலகிரியிலும், சோட்டா நாகபுரியிலும், நாகலாந்திலுமுள்ள பழங்குடி மக்களின் வாழ்க்கையைக் கொண்டு அறிந்துகொள்ள முடிகின்றது.

## உருவ வழிபாட்டின் தோற்றம்

மிகத் தொன்மையான காலத்திலேயே மக்கள் உருவ வழிபாட்டை மேற்கொண்டனர், என்று முன்பு கண்டோம். இவ்வுருவ வழிபாடு இயற்கை வழிபாட்டிலிருந்து தோன்றிய தாகும். முதலில் மனிதன் இயற்கையையே வழிபட்டான். நாகரிகம் வளர வளர இயற்கையின் வடிவங்களைக் கற்களில் வடித்து அதனை வழிபட்டான். மனிதன் கூடி வாழத் தலைப்பட்ட பின்பு மனிதனையும் வழிபடும் வழக்கம் ஏற்பட்டது.

மக்கள் கூடிவாழத் தலைப்பட்ட பின்பு தங்களுக்குள் ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்து அவனது சட்ட திட்டங் களுக்குக் கீழ்ப்பட்டு நடந்தனர். அத் தலைவனுக்குத் துணையாகப் பலர் இருந்தனர். இவர்கள் போர்க் காலத்தும், இயற்கையின் சீற்றத்தின் போதும் மக்களைப் பாதுகாத்தனர். போரில் வீழ்ந்துபட்ட வீரனுக்கு நடுகல் நட்டு அவனை வழிபட்டனர். இப்பழக்கம் தொல் காப்பியனார் காலத்திற்கு முன்பே தொடங்கிவிட்டது என்பதனை,

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபிற் பெரும்படை வாழ்த்தலென்று
இருமூன்று மரபிற் கல்லொடு புணர[7]

என்று வரும் தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம். இப்பழக்கம் சங்ககாலத்தில் மிகுதியாக இருந்தது. அதியமான் நெடுமான் அஞ்சி போரில் வேல்பாய்ந்து பட்டான். அவனுக்கு நடுகல் எடுக்கப்பட்டதை ஔவையார்,

இல்லா கியரோ காலை மாலை
அல்லா கியர்யான் வாழு நாளே
நடுகற் பீலி சூட்டி நார்அரி
சிறுகலத் துகுப்பவுங் கொள்வன் கொல்லோ
கோடுயர் பிறங்குமலை கெழீஇய
நாடுடன் கொடுப்பவும் கொள்ளா தோனே[8]

—புறநானூறு, பாடல் 243.

என்ற புறப்பாட்டின் மூலம் கூறுகின்றார். "போரில் இறந்துபட்டவர்களுக்கு மட்டுமின்றி, பிற துறைகளிலும் வீரம் விளைத்து இறந்துபட்ட வீரர்களுக்கும் நடுகல் எடுப்பது மரபு. கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து இறந்தான். அவனுக்கு நடுகல் எடுக்கப்பட்டது என்று புறநானூறு கூறுகின்றது".[9] இவ்வாறு பண்டைக்காலத்து மனிதனையும் வழிபட்டனர்.

தீயை வழிபட்ட மனிதன் அதற்கு உருவம் கொடுத்து வணங்கத் தொடங்கும்போது தீயில் உள்ள 'செம்மை' 'நீலம்' என்ற இரண்டனையும் மனித உருவில் வடிக்க எண்ணினான். உடலில் பிங்கலநாடி உடலின் வலப் புறத்திலும், இடகலை நாடி உடலின் இடப் புறத்திலும் ஓடுகின்றது. பிங்கலநாடி ஆணுக்கும், இடகலைநாடி பெண்ணுக்கும் உரியது. இவ்விரண்டையும் ஒன்று சேர்த்து உருவம் சமைக்கும்போது வலப்புறம் செம்மையான ஆண் உருவத்தையும் இடப்புறம் நீலமான பெண் உருவத்தையும்

சமைத்து மாதொருபாகனாக இறைவனை முதன் முதலில் உண்டாக்கினர் என்பார், திரு. வி. கலியாணசுந்தரனார்.[10] பின்பு மக்கள் அவரவர் தேவைகளுக்கு ஏற்பக் கடவுளின் உருவங்களைச் சமைத்துக் கொண்டனர். அவ்வாறு எழுந்த கடவுள்களைத் தொல்காப்பியமும் குறிக்கின்றது.

> **மாயோன் மேய காடுறை உலகமும்**
> **சேயோன் மேய மைவரை உலகமும்**
> **வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
> **வருணன் மேய பெருமணல் உலகமும்**[11]

என்று நான்கு கடவுள்களைக் குறிக்கின்றார் தொல்காப்பியனார். மேலும் 'கொற்றவை' என்ற பெண்பாற் கடவுளையும் கூறுகின்றார். இவற்றின் உருவம் எவ்வாறு இருந்தன என்று அவர் குறிப்பிடவில்லை. ஆனால் சங்க காலத்தில் உருவ வழிபாடு வந்துவிட்டமையை 'நீலமணி மிடற்றோன்' என்ற தொடர் உணர்த்துகின்றது. இவ்வாறு உருவ வழிபாடு தோன்றி வளர்ந்தது.

### கடவுள் மறுப்பு ஏற்படக் காரணம்

மனிதனின் மனஅமைதியை முன்னிட்டுக் கடவுள் வழிபாடு தோன்றியது. மனத்தை எளியமுறையில் விரைவில் ஒருமுகப்படுத்த உருவ வழிபாடு தோன்றியது. சாதியும் மதமும் கடவுள் கொள்கையில் புகத்தொடங்கிய பின், மனித மனத்தில் இருந்து அமைதி மறையத் தொடங்கியது. இதனால் மக்கள் பல பிரிவுகளாகப் பிரிந்து மதத்தின் பெயரிலும் சாதியின் பெயரிலும் போரிட்டு மாய்ந்தனர். இந்நிலையில் கடவுட் கொள்கைதான் அமைதியின்மைக்குக் காரணம் என்று சிலர் எண்ணத் தொடங்கினர். தமிழ்நாட்டில் இத்தகைய எண்ணத்திற்கு முதன்முதலில் வித்திட்டவர்கள் சித்தர்களே. இவர்கள் கடவுள் கொள்கையை மறுக்காமல் உருவ வழிபாட்டை மட்டுமே மறுத்தனர். இவர்கள் எதிர்ப்பையும் மீறி உருவ வழிபாடு மக்களிடம் பரவியது. இதனால், சமயம்,

சமயஞ்சார்ந்த துறைகளில் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரின் மேலாதிக்கம் தொடர்ந்து நிலைபெற்றது. தமிழர்களின் நிலை தாழ்ச்சியுற்றது. தமிழரிடையே ஏற்றத் தாழ்வு பெருகியது.

இந்நிலையிலிருந்து தமிழர்கள் விடுபடுவதற்கும் மீண்டும் எழுச்சி பெற்று மற்றவர்களுடன் சரிநிகர் சமானமாக வாழ்வதற்கும் உரியன செய்யவேண்டும் என்று 20-ஆம் நூற்றாண்டு நல்லறிஞர் பெருமக்கள் எண்ணத் தொடங்கினர். அவர்களுக்குத் தலைமை வகித்தவர்தான் 'தந்தை பெரியார்' அவர்கள். அவர் 'சுயமரியாதை இயக்கம்' தொடங்கித் தமிழர்களை ஒன்றுபடுத்திப் பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்தார். தமிழர்களின் ஒற்றுமைக்குத் தடையாக இருப்பது சாதி சமயங்கள் என்று எடுத்துக் கூறினார். சாதி சமயங்கள் நாட்டைவிட்டுத் தொலைய வேண்டுமானால் அவற்றின் வேராக இருக்கும் கடவுளை அழித்தாக வேண்டும் என்று எண்ணிக் கடவுள் மறுப்புக் கொள்கையைப் பரப்பலானார். சுயமரியாதை இயக்கத்தால் ஈர்க்கப்பட்டவர் பாவேந்தர் ஆதலால் கடவுள்களாலும் கோயில்களாலும் ஏற்படும் கேடுகளைத் தமக்கே உரிய புரட்சிக் குரலில் பாடுகின்றார்:

**சிந்தனா சக்தி சிறிதுமின்றி மக்களுக்குத்**
**தம்தோள் உழைப்பிலே நம்பிக்கை தானுமின்றி**
**ஊறும் பகுத்தறிவை இல்லாதொழித்து விட்டுச்**
**சாறற்ற சக்கையாய்ச் சத்துடம்பைக் குன்றவைத்துப்**
**பொற்புள்ள மாந்தர்களைக் கல்லாக்கியே அந்தக்**
**கற்கள் கடவுள்களாய்க் காணப்படும் அங்கே.**

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 6.

கடவுள் நம்பிக்கையால் மக்கள், உழைப்பின் மேல் நம்பிக்கை இல்லாமல் சாறற்ற சக்கையாய்க் கிடக்கின்றார்களே என்று கடவுள் நம்பிக்கையால் ஏற்படும் தீமையை எடுத்துக் கூறுகின்றார்.

இன்னமும் எல்லாவற்றுக்கும் கடவுளே காரணம் என்ற மூடநம்பிக்கையை மக்களிடம் சிலர் பரப்பி வருகின்றனர். இம்மூட நம்பிக்கையை விலக்கிப் பகுத்தறிவு பெறுதல் வேண்டும்.

பச்சை விளக்காகும்—உன்
பகுத்தறிவு தம்பி!
பச்சை விளக்காலே—நல்ல
பாதை பிடி தம்பி
பத்துடனே மூன்று—நீ
பகுத்தறிவைப் போற்று
—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 157.

என்று குழந்தைக்குப் பகுத்தறிவைப் புகட்டுகின்றார்.

'எல்லாம் அவன் செயல்' என்று சொல்லிச் சொல்லி நம்மை மடையர்களாக்கிவிட்டு நமது உழைப்பை உறிஞ்சும் அம்மனிதர்களுக்கு நம் தோளின் வலிமையைக் காட்ட வேண்டும் என்பதனை,

எல்லாம் அவன் செயலே என்று பிறர் பொருளை
வெல்லம் போல்அள்ளி விழுங்கும் மனிதருக்கும்
காப்பார் கடவுள்உமைக் கட்டையில்நீர் போகுமட்டும்
வேர்ப்பீர் உழைப்பீர் எனஉரைக்கும் வீணருக்கும்
மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்டவந்த
தேனின் பெருக்கே, என் செந்தமிழே கண்ணுறங்கு
— பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, பக். 125-126.

என்பதன் மூலம் உணர்த்துகின்றார்.

### கோயிலின் கேடுறவு

பண்டைக் காலத்தில் கோயில்களுக்கு இருந்த சிறப்பே தனி. கோயில்கள் ஊரின் நடுவில் இருக்கும். ஊரின் வரவு செலவுக் கணக்கை எல்லாம் சரிபார்க்கும் இடமாகக் கோயில் இருந்தது. ஊரில் விலை மதிப்பில்லாப் பொருள்கள்

கோயிலில் வைத்துக் காக்கப்பட்டன. கோயில் பொருட்களைக் களவாடுதலைப் பெரிய பாவமாகக் கருதினர். 'சிவன் சொத்துக் குலநாசம்' என்பது பழமொழி. ஊர்ப் பஞ்சாயத்து கோயிலில்தான் நடைபெற்றது. வறுமைக் காலத்தில் ஊர் மக்கட்குக் கோயிலே தஞ்சம் கொடுத்துக் காத்து வந்தது. இதனால் மக்கள் தங்கள் ஊரைக் காப்பதினும் கோயிலைக் காப்பதிலே பெரும் கவனம் செலுத்தினர். இத்தகைய சிறப்புப் பெற்ற கோயில்கள் சில புல்லர்களின் வருகையால் சிறப்பிழந்து போயின. இத்தகைய நிலையில் கோயிலைப் போற்றி வணங்குதல் என்பது ஏது ஏன்? கோயில், திருப்பணிச் செயல்களைச் சாடியே பாவேந்தர்,

**சுயமரியாதை கொள் தோழா!—நீ**
**துயர் கெடுப்பாய் வாழ்வில் உயர்வடைவாய்**
**உயர்வென்று பார்ப்பனன் சொன்னால்—நீ**
**உலகினில் மக்களெலாம் சமம் என்பாய்**
**காசைப் பிடுங்குதற்கே—பலர்**
**கடவுளென்பார் — இரு காதையும் மூடு!**
**கூசி நடுங்கிடு தம்பி—கெட்ட**
**கோயிலென்றால் ஒரு காதத்தில் ஓடு**
**கோயில் திருப்பணி என்பார்—அந்தக்**
**கோவில் விழாவென்று சொல்லியுன் வீட்டு**
**வாயில் வந்துன்னைக் காசு—கேட்கும்**
**வஞ்ச மூடரை மனிதர் என்னாதே!**

— பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 139.

என்கின்றார்.

பாவேந்தரின் கடவுள் மறுப்புக் கொள்கைக்குக் காரணம் கடவுள் பெயரால் சாதி மதங்கள் இந்நாட்டில் போற்றப்படுகின்றன. சாதி மதங்களால் மக்கள் பிளவுண்டு ஒற்றுமை ஏற்பட வழியின்றி அல்லல் உறுகின்றனர். இவர்கள் ஒன்றுபட்டு அல்லலில் இருந்து மீள வேண்டு

மானால் முதலில் சாதி சமயங்கள் ஒழிய வேண்டும். சாதி சமயங்களோ கடவுளுடன் இரண்டறக் கலந்து காணப் படுகின்றன. கடவுளை மறுக்காமல் சாதி சமயங்களை மறுக்க முடியாது; அழிக்க முடியாது என்ற நிலை; அதனால் கடவுளை அழித்தால் சாதி சமயங்கள் அழிந்துவிடும். எரிகின்றதைப் பிடுங்கிவிட்டால் கொதிக்கின்றது தானாக அடங்கிவிடும் அல்லவா? அதனால்தான் அவர் கடவுளை மறுக்கின்றார். 'கடவுளின் முன் அனைவரும் சமம்' என்ற கருத்தை ஏற்காத சமூகத்திற்குக் கடவுள் ஏன்? என்னும் வினா எழுப்பித் தமது கடவுள் மறுப்புக் கொள்கையை வலியுறுத்தினார்.

பாரதத் தாய் முப்பது கோடி முகமுடையாள் எனினும் சிந்தை ஒன்றுடையாள் என்கின்றார் பாரதியார். அதாவது தேசிய விடுதலை நோக்கில் அனைவரும் சமம், அவர்களின் சிந்தனை எல்லாம் நாட்டு விடுதலை பற்றியதே. நாட்டு விடுதலை இயக்கத்தில் பிராமணன், முதலியார், ஆதி திராவிடன் என்ற சாதிப் பாகுபாடுகள் இல்லை. இந்து, முசுலீம், கிறித்தவன் என்ற மதப்பாகுபாடுகள் இல்லை. நாட்டு விடுதலை அனைவருக்கும் பொது. அங்கு பிரித்துவைகைய பாகுபாட்டிற்கு இடமில்லை என்பதனை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். அதுபோலத் தானே கடவுள் என்பதும் மக்கள் அனைவருக்கும் பொது. அக் கடவுளைச் சென்று வழிபடச் சாதியும் மதங்களும் குறுக்கே நிற்கலாமா! இன்னின்ன சாதியைச் சார்ந்தவன்தான் கோயிலுள் சென்று வழிபடலாம் என்ற கட்டுப்பாடுகள் ஏன்? தேசிய ஒற்றுமை தேசிய ஒற்றுமை என்று தேசிய ஒற்றுமைக்குப் பாடுபடும் மனிதர்கள் கோயிலின் முன் மக்கள் அனைவரும் ஒன்று என்பதனை ஏன் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர்? ஒரே மக்கள் ஒருபுறத்தில் ஒற்றுமையாக இருத்தல் வேண்டும்; மறுபுறத்தில் வேற்றுமை பாராட்டிக் கொள்ளலாம் என்றிருந்தால் அதனால் என்ன பயன் விளையும்.

முப்பது கோடியர் பாரதத்தார் இவர்
முற்றும் ஒரே சமூகம்—என
ஒப்பும் தலைவர்கள் கோயிலில் மட்டும்
ஒப்பா விடில் என்ன சுகம்?

— பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 199.

இதனால் கோயிலினால் கிடைக்கும் பயனை அல்லவா இழந்து விடுகின்றோம். பயனற்ற ஒரு பொருள் நமக்கு எதற்கு? மேலும் அறங்கள் மதிக்கப்படுவதில்லை. அறமற்ற இடம் அறநிலையமாக முடியுமா? எனச் சிந்தித்த பாவேந்தர்,

அறம் சொன்ன வள்ளுவர் தாம்
கோயிலை அறிவித் தாரா?

— பாரதிதாசன், குறிஞ்சித்திட்டு, ப. 122.

என்று கேட்டு நம் சிந்தனையைத் தூண்டி விடுகின்றார்.

சாதி, மதம், கடவுள், கோயில் என்ற கட்டுக்களில் இருந்து மனிதன் விடுதலை பெறவேண்டுமானால் எதனையும் பகுத்தறிவுக் கொண்டு சிந்தித்தல் வேண்டும் என்கின்றார் பாவேந்தர்:

பழைய நூற்கள் இப்படிப் பகர்ந்தன
என்பதால் எதையும் நம்பிவிடாதே
உண்மை என்று நீ ஒப்பிவிடாதே!
பெருநாளாகப் பின்பற்றப்படுவது
வழக்கமாக இருந்து வருவது
என்பதால் எதையும் நம்பி விடாதே
உண்மை என்று நீ ஒப்பிவிடாதே
பெரும் பான்மையினர் பின்பற்று கின்றனர்
இருப்பவர் பலரும் ஏற்றுக் கொண்டனர்

என்பதால் எதையும் நீ நம்பிவிடாதே
பின்பற்று வதால் நன்மை இல்லை
ஆண்டில் முதிர்ந்தவர் அழகியர் கற்றவர்
இனிய பேச்சாளர் என்பதற்காக
எதையும் நம்பிடேல்! எதையும் ஒப்பேல்!
ஒருவர் சொன்னதை உடன் ஆராய்ந்துபார்
அதனை அறிவினால் சீர் தூக்கிப் பார்
அறிவினை உணர்வினால் ஆய்க! சரி எனில்
அதனால் உனக்கும் அனைவருக்கும்
நன்மை உண்டெனில் நம்ப வேண்டும்
அதையே அயராது பின்பற்றி ஒழுகு!
இவ்வுண்மைகளை ஏற்று நீ நடந்தால்
மூடப்பழக்கம் ஒழியும்
சமயப் பொய்கள் அறிவினாற் சாகும்.

— பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 4, பக். 137-38.

### பாவேந்தரின் கடவுள் கொள்கை

பாவேந்தர் முழுக்க முழுக்கக் கடவுள் மறுப்புக் கொள்கையாளர் இல்லை. கடவுளின் பெயரால் நடத்தப் பெறும் அட்டூழியங்களையே சாடுகின்றார். ஊருக்கொரு கோயில், ஆளுக்கொரு கடவுள், ஊருக்கொரு மதம் ஆளுக்கொரு சாதி என்பனவற்றையே கடிகின்றார். அவற்றால் வரும் துன்பங்கள் பல. எனவே சாதிமத வேறு பாட்டைத் தாண்டி 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமூலரின் கோட்பாட்டை ஏற்றுக் கொள்கின்றார். இக்கோட்பாட்டை ஏற்காததால் நாம் பிளவுபட்டுத் துன்பம் அடைகின்றோம் என்கின்றார்.

ஒன்றே அல்லால் குலமில்லை
ஒருவ னல்லால் தெய்வமில்லை

**என்றதோர் தமிழரின் சொல்லை**
**மறந்ததால் அல்லவா வந்ததித் தொல்லை?**

—பாரதிதாசன், தேனருவி, ப. 24.

உருவ வழிபாடே மதத்தைத் தோற்றுவித்தது. மதம் மக்களிடையே பிளவை ஏற்படுத்திச் சண்டைகளைத் தோற்றுவித்தது. எனவே, கடவுளை ஒழிக்காமல் கடவுளின் உருவத்தை ஒழித்துவிட்டால் மதம் ஒழிந்து விடும், மதத்தின் பெயரால் நடக்கும் சண்டைகளும் ஒழிந்துவிடும்.

**ஒருகடவுள் உண்டென்போம்! உருவணக்கம் ஒப்போம்**
**உள்ளபல சண்டையெல்லாம் ஒழியும் மதம் ஒழிந்தால்**
**திருக்கோயில் தொழிற்சாலை**

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப, 87.

என்கின்றார். மேலும் கடவுள் பற்றிய கட்டுக்கதைகளும் அவற்றை நம்பும் மூடப் பழக்கமும் தொலைதல் வேண்டும்.

**ஓர் கடவுள் உண்டு — தம்பி**
**உண்மை கண்ட நாட்டில்**
**பேரும் அதற்கில்லை — தம்பி**
**பெண்டும் அதற்கில்லை**
**தேரும் அதற்கில்லை — தம்பி**
**சேயும் அதற்கில்லை**
**ஆரும் அதன் மக்கள் — அது**
**அத்துணைக்கும் வித்து!**
**உள்ளதொரு தெய்வம் — அதற்கு**
**உருவமில்லை தம்பி!**
**அள்ளி வைத்த ஆப்பி — தம்பி**
**அதிற் கடவுள் இல்லை**
**குள்ளமில்லை தெய்வம் — அது**
**கோயில்களில் இல்லை.**

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3, ப. 151.

என்று வரும் பாவேந்தரின் அடிகள் அன்னாரின் கடவுட் கொள்கையை நன்கு விளக்குகின்றன.

## மானுடத்தைப் போற்றல்

'கடவுளை மற; மனிதனை நினை' என்றார் தந்தை பெரியார். இதற்குக் காரணம், கடவுள் ஏற்புக் கொள்கையாளர்கள் மனிதர்களை முழுக்க முழுக்க மறந்துவிட்டுத் தங்கள் சிந்தனை எல்லாவற்றையும் கடவுளிடம் செலுத்தினர்.

> **செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
> **செய்யாமை யானும் கெடும்**[12]

என்பதற்கிணங்க மக்கள், நினைத்துப் போற்ற வேண்டிய மானுடத்தை மறந்தனர். மாறாக, கடவுளை மட்டுமே எண்ணிக் கொண்டிருந்தனர். இந்நிலை கண்டு பாவேந்தர் வேதனை உறுகின்றார்.

> **செல்வக் குழந்தை தாய்ப்பால் இன்றித்**
> **திடுக்கிடும் போதே — அப்பனே**
> **துடித்தழும் போதே — கோயிலின்**
> **கல்லின் தலையில் பாலூற்றினால்**
> **உலகம் ஒப்பாதே — திருந்திடு**
> **வாயோ இப்போதே!**
>
> —பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 4, ப. 158.

வேதனை மிக மிக அவர் பாட்டில் ஓர் உறுதி உருவாகின்றது. புரட்சி தலைகாட்டுகின்றது. மெல்ல மக்களைத் தூண்டுகின்றார் பாவேந்தர்.

> பாதிக்குதே பசிஎன்றுரைத்தால், செய்த
> பாபத்தைக் காரணம் காட்டுவார் — மத
> வாதத்தை உம்மிடம் நீட்டுவார் — பதில்
> ஓதிநின்றால் படை கூட்டுவார்
>
> —பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 159.

அவர் கூட்டும் படை கண்டு அஞ்சாமல் எதிர்த்து மானுடத்தைப் போற்ற வகை செய்ய வேண்டும். அதுவே மக்கள் அனைவருக்கும் இனிமை பயக்கும். இதனைப் பகுத்தறிவால் உடனே செய்து முடிக்க வேண்டும். வெற்றி உறுதி என்று புரட்சி வேகத்தில் ஆர்ப்பரிக்கின்றார்.

மானிடம் என்றொரு வாளும் — அதை
வசத்தில் அடைந்திட்ட உன்இரு தோளும்
வானும் வசப்பட வைக்கும் — இதில்
வைத்திடும் நம்பிக்கை வாழ்வைப் பெருக்கும்

..................................................

மானிடம் போற்ற மறுக்கும் — ஒரு
மானிடம் தன்னைத்தன் உயிரும் வெறுக்கும்
மானிடம் என்பது குன்று — தனில்
வாய்ந்த சமத்துவ உச்சியில் நின்று
மானிடருக்கு இனிதாக — இங்கு
வாய்த்த பகுத்தறிவாம் விழியாலே
வான்திசை எங்கணும் நீ பார் — வாழ்வின்
வல்லமை 'மானிடத் தன்மை' என்றதோர்

—பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 145.

என்று மானுடத்தைப் போற்றுவதன் தேவையையும் பயனையும் கூறுகின்றார்.

## அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம், மரபியல் (பேராசிரியர்), நூற் 80.
2. சாலை இளந்திரையன், புரட்சி முழக்கம், ப. 32.
3. மா. செல்வராசன், பாரதிதாசன் கனல்கள், ப. 41.
4. திருக்குறள்: 948.
5. மு. வரதராசன், மொழி வரலாறு, ப. 254.
6. மா. செல்வராசன், பாரதிதாசன் கனல்கள், ப. 30.
7. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற் 60.
8. புறநானூறு, பாடல் 243.
9. இரா. நாகசாமி (கட) "நடுகல்", கல்வெட்டியல், ப. 125.
10. திரு. வி. கலியாணசுந்தரனார், பெண்ணின் பெருமை, ப. 123.
11. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற் 5.
12. திருக்குறள்: 416.


# பாரதிதாசன் பற்றி டாக்டர் மு. வ.

இருபதாம் நூற்றாண்டில் தமிழில் பாரதியாருக்கு அடுத்தபடி புகழ்பெற்று விளங்கும் கவிஞர் 'புரட்சிக் கவிஞர்' எனப்படும் பாரதிதாசன் (1891—1964). அவருடைய பெயர் கனகசுப்புரத்தினம். புதுச்சேரியில் பாரதியார் அரசியல் காரணத்தால் ஒதுங்கியிருந்த காலத்தில் அவருடன் நெருங்கிப் பழகி அன்பையும் பாராட்டையும் பெற்று, அதனால் பாரதிதாசன் என்று புனைபெயர் வைத்துக் கொண்டார். அவருடைய வாழ்வில் அரசியல் கட்சிகளின் தொடர்பும் ஏற்பட்டது; தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்; இதழ் ஆசிரியராகப் பணிபுரிந்தார்; திரைப்படத் துறையிலும் தொடர்பு இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக அவருக்குத் தமிழ் மக்களின் உள்ளத்தில் வாய்த்த இடம் 'புரட்சிக் கவிஞர்' என்பது ஆகும்.

அவருடைய கவிதைகளில் இனிய இசை நயம் உண்டு; உணர்த்தும் கருத்துகளில் உணர்ச்சிப் புயல் வீசும். அவர் கையாளும் சொற்கள் மக்களுக்கு நன்கு பழக்கமான எளிய சொற்களே. ஆனால் அந்தச் சொற்கள் அவருடைய கவிதையில் அமையும்போது, நிகரற்ற வேகம் கொண்டு நிற்கும்; ஆற்றல் மிகுந்த கூரிய கருவிகளாகிவிடும்; உணர்த்த விரும்பியவற்றை அழுத்தமாக, திட்பமாக உணர்த்தும் வன்மை அந்தச் சொற்களுக்குப் பிறந்துவிடும். தமிழில் மரபாக வந்துள்ள யாப்பைப் பெரும்பாலும் பயன்படுத்தியுள்ளார்; நாட்டுப் பாடலில் பயின்ற சிந்து முதலியவற்றையும் கையாண்டுள்ளார்; இசையுலக மெட்டுகளையும் எடுத்தாண்டிருக்கிறார். புதுவகையான செய்யுள் வகைகளையும் இயற்றியிருக்கிறார்.

வெளியீடு: தமிழ் இலக்கிய வரலாறு, இரண்டாம் பதிப்பு: பக்கம் 349. புதுதில்லி, சாகித்திய அக்காதெமி.

---



**சி. பா.**

தேசிங்கு ஆண்ட செஞ்சியில் பிறந்தவர் (3-5-1935) இந்தச் செந்தமிழ்ச் செல்வர். கண்டாச்சிபுரமும் திருவண்ணாமலையும் இந்த இலக்கியப் பொழில் கற்ற இடங்கள். பைந்தமிழ் வளர்க்கும் பச்சையப்பன் கல்லூரிப் பாசறை மறவருள் ஒருவர். அன்னைத் தமிழில் பி.ஏ. ஆனர்சு. அங்கு! முதல் வகுப்பில் தேறிய முதல்வர். 'குறுந்தொகை' பற்றிய ஆய்வுரைக்கு 1963ல் எம். லிட்., பட்டமும், 'சேரநாட்டுத் தமிழ் இலக்கியங்கள்' பற்றிய ஆய்வுரைக்கு 1970ல் டாக்டர் (பிஎச்.டி) பட்டமும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இவர் பெற்ற சிறப்புகள். நல்லநடை கொண்ட இந்த நாகரிகர் பேர் சொல்ல நாளும் மாணவர் படை உண்டு நாட்டில்! சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தவர் பேராசிரியராகத் துறைத் தலைவராகச் சிறந்திருக்கிறார். முன்னாள் தமிழக ஆளுநருக்குத் தமிழை முறையாகப் பயிற்றுவித்த ஆசிரியர், இந்த முற்றிய புலமையாளர்!

இருபது நூல்கள் படைத்துள்ள இவர் ஒப்பருந் திறனுக்கும் உயர் தமிழ் அறிவுக்கும், 'தமிழ் இலக்கிய வரலாறு' ஒன்றே சான்று! அண்மையில் வந்துள்ள அணிகலன் 'பெருந்தகை மு. வ. 'ஆங்கிலத்தில் ஒரு நூல், 'சங்ககால மகளிர் நிலை' பற்றிய ஆராய்ச்சி. 'இலக்கிய அணிகள்' என்ற நூல் தமிழக அரசின் இரண்டாயிரம் உரூபா முதல் பரிசைப் பெற்றது. படித்துப் பல பட்டம் பெற்ற இந்தப் பைந்தமிழ் வேந்தர்க்குப் பலரும் கொடுத்துள்ள புகழ் மகுடங்கள்: புலவரேறு (குன்றக்குடி ஆதீனம்) செஞ்சொற்புலவர் (தமிழ் நாட்டு நல்வழி நிலையம்), சங்கநூற் செல்வர் (தொண்டை மண்டல ஆதீனம்). சங்கத் தமிழ்ச் செல்வர் (தருமை ஆதீனம்).

பெருந்தகை மு.வ.வின் செல்லப்பிள்ளை சி.பா. அவர் புகழ் பாடும் அந்தமிழ்த் தும்பி; அயராது உழைக்கும் அருஞ்செயல் நம்பி! இலக்கியப் பேச்சில் இன்ப அருவி! எழுத்தில் நல்ல இலக்கியப் பிறவி!

சி. பா. இந்த ஈரெழுத்து ஒரு மொழி, இளைஞர்க்குச் சொல்வது சிறக்கப் பாடு படு!

—மா.செ.